# "குர்ஆன்"

# தமிழ் மொழி பெயர்ப்பு

முதல் மூன்று அத்தியாயங்கள்

Dr. U. V. S. IYER LIBRARY

ஆசிரியர்:

அல்ஹாஜ் பா. தாவூத்ஷா ஸாஹிப் பி.ஏ.,

(சென்னை நகரசபை ஆல்டர்மேன்)

அவர்களால் வெளியிடப்பட்டது.

**ஷாஜஹான் புக் டெப்போ:**

தபாற்பெட்டி நெ. 15,

சென்னை

இதன் விலை] [redacted] [ரூ. 1-8-0

THE GUARDIAN PRESS LTD.
BROADWAY, MADRAS

*All rights registered*

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-9 23409

# முகவுரை

தமிழ் நாட்டு நண்பீர் !

எம்மால் இதற்குமுன் வெளியிடப்பட்டு வந்த "ஜவாஹிருல் புர்க்கான்" என்னும் குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழிபெயர்ப்பும், அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியனவாய், நந்திருவேதத்தின் முப்பது பாகங்களுள் முதலிரண்டு பாகங்கள் முடியப் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வேதத்தின் இறுதிப் பகுதியாகிய முப்பதாவது பாகம்—அம்மயத் என்னப்படுவதும் விரிவான வியாக்யானத்துடன் எம்மால் முன்னம் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனால், நந்தென்னாட்டு முஸ்லிம் பொதுமக்களின் ஊக்கக் குறைவாலும், இக்காலத்தில் எங்கும் பரந்து காணப்படும் வியாபார மந்தமென்னும் பொருளாதார நெருக்கடியாலும் அம்மொழிபெயர்ப்புவேலை, விரிவான வியாக்யானத்துடன் வெளியிடப்பட வேண்டுவது, இது பொழுது சிறிதே தடைபட்டு நிற்கவேண்டியதாயிருக்கிறது. ஆண்டவன் நாட்டம் நேரும்போது அவ்விரிவான வேலை மீட்டும் அவனுதவி கொண்டு எடுத்துக் கொள்ளப்படுமென்று எல்லார்க்கும் அறிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆயின், அதற்கு முன்பே குர்ஆன் ஷரீபின் மூல சுலோகங்களுக்கு மட்டுமேனும் சரியான மொழிபெயர்ப்பை எழுதித் தயார் செய்துகொள்ளலாமென்னும் நல்லெண்ணத்துடனே இவ்வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. இதற்கு, "குர்ஆன்" தமிழ் மொழிபெயர்ப்பு என்று நாமமிடப்பட்டிருக்கிறது. எம்மால் கூடியவரை, எமதாசிரியர் மௌலவீ ஸாஹிபவர்களின் உதவி கொண்டு ஒழுங்கான தமிழில் சரியான மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு இருக்கிறது. மூல சுலோகங்களின் முழுத் தாத்பரியமும் நன்கு விளங்குவான் வேண்டி அவசியமான இடங்களில் இப்பாதிரியான ( ) பிறைஅடையாளங்களுள் அத்தியாவசியப் பதங்கள் வருவித்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னமும் அவசியமான இடங்களில் அடிக் குறிப்புக்களாலும் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது.

இவ்வண்ணமாக மூல சுலோகங்களின் நேரான—சரியான—மொழிபெயர்ப்பை நந்தமிழ்நாட்டு மக்கள் ஆதரிக்க முன்வருவார்களாயின், அவர்களது ஊக்கத்தை உறுதுணையாய்க் கொண்டு எம்மால் இம்மொழிபெயர்ப்பு வேலை மேலும் மேலும் நடைபெற்று வரக்கூடுமென்றே எண்ணுகின்றேம். பொதுமக்களும் பிரமுகர்களும் இத்தகைய மூல சுலோக மொழிபெயர்ப்பையேனும் முற்றிலும் ஆதரித்து எமக்கு வேண்டிய எல்லாவித உற்சாகத்தையும் ஊட்டிவைக்கக் கடவார்களாக ! யாம் இம்மொழிபெயர்ப்பு வேலையை மேற்கொண்டு நடத்தலாம்; அதனை அச்சிட்டும் வெளிப்படுத்தலாம். ஆனால், பொதுமக்கள் தங்கள் இஸ்லாமிய வேதக்கருத்தை உணர்ந்துகொள்ள ஆவல் மிக்

குன்றினாய் இராமற் போய்விடுவார்களாயின், அப்பால் இத்தகைய சிரமசாத்தியமான வேலையால் யாருக்கென்ன நன்மை விளைதல் சாலும் ?

ஆண்டவனுதவிகொண்டும் பொதுமக்களின் ஊக்கத்தைக்கொண்டும் இம் மூல சுலோக மொழிபெயர்ப்பு வேலை முப்பது பாகத்துக்கும் முடிவுபெற்று விடுமாயின், அதன்பின்பு விரிவான வியாக்யானத்தை எழுதி வெளியிடலாம்; அதுபோது அந்த அந்த மூலசுலோகத்துக்குமுரிய அரப் ஆயத்தையும் அச்சிட்டுச் சேர்க்கலாம். அவ்விருகாரியங்களும் எப்பொழுதும் எவராலும் செய்து முடிக்கப்படுதல் கூடும். ஆனால், மூலசுலோகங்களின் சரியான—நேரான—கருத்து வேற்றுமையற்ற—செந்தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்துமுடிப்பதே சிரமசாத்தியமான காரியமா யிருந்துவருதலினால், அவ்வேலையையே இப்பொழுது முதன்முதலில் முப்பது பாகங்களுக்கும் செய்துமுடிக்கத் துணிந்து நிற்கின்றோம். எல்லாவற்றிற்கும் அல்லாஹ் ஒருவனே போதுமானவன் !

அவ்வேகவல்லோனது கருணைகொண்டும், நம்நேயர்களின் ஆசீர்வாதத்தைக் கொண்டும் இம்மொழிபெயர்ப்புவேலை சீக்கிரம் வெளிவரக்கூடுமென்றே நம்பிக்கை வைக்கின்றோம். இம்முதல் வெளியீட்டில் குர்ஆன் ஷரீபின் முதல் மூன்று அத்தியாயங்கள்—அஃதாவது, மூன்றேமுக்கால் பாகங்கள்—மட்டுமே வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டுப் பெருமக்களின் போதிய ஆதரவிருக்குமாயின், ஏனைப்பகுதிகளும் இறைவனருளால் சமீபத்தில் வெளியாகலாம். வஸ்ஸலாம்.

சென்னை.
9—4—'38

தங்களூழியன் :
**பா. தாவூத்ஷா.**

بسم الله الرحمن الرحيم

# "குர் ஆன்"

# தமிழ் மொழி பெயர்ப்பு

## பாகம்—ஒன்று

## அத்தியாயம் 1

திறப்பு—(பாத்திஹா)

*மக்காவில் வெளியானது; திருவாக்கியம் 7.*

ஸங்கிரஹம்:

*திருவாக்கியம்-1. அல்லாஹ்வாகிய ரக்ஷகன் சகல சிருஷ்டிகளையும் படைத்துக் காத்துப் பரிபூரணமடையச் செய்கிறவனாக இருக்கிறான். 2. மனிதன் தன்னைச் சன்மானம் பெற அருகதை யுள்ளவனாக ஆக்கிக் கொள்ளா முன்னும், அவ்வாறு ஆக்கிக்கொண்ட பின்னும் அவனுக்கு வேண்டிய சகல போகபாக்கியங்களையும் அவன் தன்னுடைய சுயக்கருணை யென்னும் தயையினால் கொடுத்தளிக்கிறான். 3. ஆண்டவனுக்கும் அடியானுக்குமுள்ள தொடர்பானது உடையவன் உடைமைக் கிடையிலுள்ள சொந்தத் தொடர்பைப்போ லிருத்தலினால் அவனுடைய நீதியில் மன்னிக்குந் தன்மையும் அதிகம் கலந்திருக்கிறது. 4. அடியான் அவன்மீது சார்ந்திருக்கிறான்; அவன் அடியானுக்கு உதவிபுரிகிறான். 5—7. நேராக அல்லது மத்திபமாக இருக்கின்ற பாதையிலே நிலைநிறுத்தப் படும்பொருட்டும், அப் பாதையின் இரு மருங்கிலும் சாயாமலிருக்கும் பொருட்டும் செய்ய வேண்டிய பிரார்த்தனை ஈண்டுக் காணப்படுகின்றது.*

---

அருளாளனும் அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்
(ஆரம்பம் செய்கின்றோம்).

1. சர்வ லோகங்களுக்கும் ரக்ஷகனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் (உரித்தா யிருக்கின்றது).

2. (அவன்) அருளாளன், அன்புடையோன் ;

3. (மேலு மவன்) நியாயத் தீர்ப்புநாளின் எஜமான்.

4. (ஏ ரக்ஷக !) உன்னையே வணங்குகிறோம்; மேலும் (இவ் வுலக மறு உலக சம்பந்தமான எல்லாத் தேவைகளுக்கும்) உன் னிடத்திலேயே உதவி தேடுகிறோம்.

5. (எம திரக்ஷக !) எங்களை (ஜயம் பெறுதற்குரிய) நேரான பாதையில் (சீராக) நடத்திவைப்பாய் ;

6. எவருக்கு நீ அருட்கொடை யளித்தனையோ, அவருடைய பாதையிலே (நடத்திவைப்பாய்) ;

7. (உன்னுடைய) கோபத்துக் குள்ளானவர்களுடைய (தீய) வழியிலும், வழிவிலகிச் சென்றோர்களுடைய (கோடிய) வழியிலு மன்று.

## அத்தியாயம் 2

பசு—(பகரா)

மதீனாவில் வெளியானது ; பிரிவு 40 ; திருவாக்கியங்கள் 286.

### பிரிவு—1

**இஸ்லாத்தின் மூலக் கொள்கைகளும், அவற்றை ஒத்துக்கொள்வதா லும் உதறித் தள்ளுவதாலும் உண்டாகும் பலா பலன்களும்.**

அருளாளனும் அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (ஆரம்பம் செய்கின்றேம்).

1. நானே அல்லாஹ்! பரிபூரண ஞானமுள்ளவனாக இருக் கின்றேன்.

2. இஃது (அல்லாஹ்வின்) கிரந்தமாகும் ; இதில் (எவ்விதச்) சந்தேக(மு)மில்லை. (தீமையைவிட்டு) அஞ்சி நடப்பவர்களுக்கு (இது ஜயமடைவதற்கான) நேரான வழி(காட்டி)யாக இருக்கிறது.

3. (அஞ்சி நடப்பவர்களான) அவர்கள் மறைவான (விஷ யத்)தில் நன்னம்பிக்கை கொள்பவர்களும், தொழுகையை நிலைக் கச்செய்பவர்களும், நாம் அவர்களுக்கு அருளியதிலிருந்து (ஜீவ னோபாயப் பொருளை நேரான வழியில் தாராளமாகச்) செலவு செய்பவர்களுமாக இருக்கின்றார்கள் ;

4. மேலும், அவர்கள், (ஓ முஹம்மத் !) உமக்கு வெளியாக்கப்பட்டதின்மீதும், உமக்குமுன் வெளியாக்கப்பட்டத(ான வேதங்களி)ன் மீதும் நன்னம்பிக்கை வைப்பவர்களாக இருக்கிறார்கள். மேலும் (மரணத்துக்குப் பின்னுள்ள) இறுதி (நாள் வாழ்க்கை)யின் மீது(ம்) அவர்கள் உறுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

5. (இப்படிப்பட்ட) அவர்கள் தங்களுடைய ரக்ஷகன்பாலிருந்துண்டாயிருக்கும் நேர்வழியி லிருக்கின்றார்கள் ; இன்னமும், அவர்கள்தாம் ஜயம்பெற்றவர்க ளாக(வும்) இருக்கின்றார்கள்.

6. (ஆனால்,) நிச்சயமாக (ச் சத்தியத்தை) நிராகரித்தவர்கள் (தங்கள் நன்மையான சக்தியையே இழந்துவிட்டார்கள். ஆதலால்) நீர் அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், நீர் (அவ்வாறு) அவர்களுக்கு எச்சரிக்கை செய்யாம விருப்பதும் சரிதான். (அவர்கள் எப்பொழுதுமே) நன்னம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

7. (எனவே, இப்படிப் பட்டவர்களின் இறுதிப் பலன் யாதாகுமெனின்) அவர்களுடைய ஹிருதயங்களின் மீதும், அவர்களுடைய கேள்வியின்மீதும் அல்லாஹ் முத்திரையிட்டிருக்கிறான் ; இன்னமும், அவர்களுடைய பார்வைகளின்மீது திரையொன்று ஏற்பட்டிருக்கிறது. மேலும் (அவர்கள் ஜயம்பெறுவதற்கீடாக) அவர்களுக்குப் பெரிய தண்டனை(யே) இருக்கிறது.

## பிரிவு—2

அம் மூலக்கொள்கைகளை உதட்டால் மட்டும் ஒத்துக்கொண்டு உள்ளத்தால் ஒத்துக்கொள்ளா திருத்தல்.

8. மேலும் (அவ்விருவித மனிதர்களைத் தவிர்த்து) மனிதர்களுள், "அல்லாஹ்வின் மீதும் இறுதி(த் தீர்ப்பு) நாளின் மீதும் (நாங்கள்) நன்னம்பிக்கை கொண்டோம்," என்று சொல்லுகிறவர்கள் சிலர் உளர் ; ஆனால், அவர்கள் (உண்மையிலேயே ஹிருதயங்களுள்) நன்னம்பிக்கை கொண்டவர்க ளில்லர்.

9. (அவர்கள் "நன்னம்பிக்கை கொண்டோ"மென்று கூறி) அல்லாஹ்வையும் நன்னம்பிக்கை கொண்டவர்களையும் ஏமாற்றப் பார்க்கின்றனர் ; (ஆனால், ஏனைய மக்களை எங்கு ஏமாற்றப்போகின்றனர்? (மேலும், அவர்கள் தங்களையேயன்றி(மற்றெவரையும்) ஏமாற்றுகின்றன ரில்லை ; மேலும் (தங்கள் மூர்த்தன்யத்தாலும் மூடத்தனத்தாலும் இதை) அவர்கள் உணர்ந்துகொள்ள வில்லை.

10. (அவர்கள் "நன்னம்பிக்கை கொண்டோ"மென்று கூறுகின்றார்கள். ஆனால்) அவர்களுடைய இருதயங்களுள் (நம்பிக்கையற்ற) வியாதி இருக்கின்றது. எனவே, அல்லாஹ் (சத்தியத்தை ஜயம் பெறும்படி செய்து) அவர்களுடைய வியாதியை அதிகப் படுத்தினன்; மேலும், அவர்கள் (மெய்யைப்) பொய்யாக்கியதால் நோவுண்ட தண்டனை அவர்களுக் குண்டு.

11. இன்னமும், "பூமியின்மீது நீங்கள் விஷமத்தன(மான காரிய)ம் செய்யாதீர்கள்," என்று அவர்களுக்குச் சொல்லப்படும் போது, "நாங்கள் (விஷமத்தனம் எங்குச் செய்கின்றோம்?) சீர் திருத்தம் செய்கிறவர்களாகவே இருக்கின்றோம்," என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

12. அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அவர்கள்தாம் விஷம(த்தனமான காரிய)ம் செய்கிறவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் (தங்கள் மூர்த்தன்யத்தால்) அவர்கள் (அதை) உணர்ந்து கொள்ள வில்லை.

13. மேலும், "(நன்மையான முறையில் மற்ற) மனிதர்கள் நன்னம்பிக்கை கொண்டதேபோல் (நீங்களும்) நன்னம்பிக்கை கொள்ளுங்கள்," என்று அவர்களுக்குச் சொல்லப்படும்போது, "(அந்த) அறிவிலிகள் நன்னம்பிக்கை கொண்டதே போலவா நாங்களும் நன்னம்பிக்கை கொள்ளவேண்டும்?" என்று (எதிர்த்துச்) சொல்லுகிறார்கள். அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக (ப்புத்திசாலிகளென்று கூறிக்கொள்ளும்) அவர்களேதாம் அறிவிலிகளாக இருக்கிறார்கள்; ஆனால் (அறியாமையாலும் அகம்பாவத்தாலும் தங்கள் நிலைமையை) அவர்கள் தெரிந்துகொள்ள வில்லை.

14. இன்னம் (உண்மையிலேயே) நன்னம்பிக்கை கொண்டவர்களை அவர்கள் சந்திக்கும்போது, "நாங்களும் நன்னம்பிக்கை கொண்டுள்ளோம்," என்று சொல்லுகிறார்கள்; ஆனால், அவர்கள் தங்களுடைய (நேயர்களான) ஷைத்தான்களுடனே தனித்திருக்கும் போது, "நிச்சயமாக நாங்கள் (மனப்பூர்வமாய்) உங்களுடனேதான் இருக்கிறோம்; நாங்கள் (அந்த நன்னம்பிக்கை கொண்டவர்களை) ஏளனமாகப் பரிஹாஸம்அல்லவோ பண்ணுகிறோம்?" என்கிறார்கள்.

15. அல்லாஹ் அவர்களைப் பரிஹஸிக்கிறான்; மேலும், அவர்களை (நன்மை தீமைக்குரிய நாயன் சட்டப்படி) தங்களுடைய வழிக்கேட்டிலே(யே) குருடர்களாக(க் கெட்டலையும்படி) விட்டுவிடுகிறான்.

16. (நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்!) அவர்கள்தாம் சன்மார்க்கத்திற்குப் பதிலாகத் துன்மார்க்கத்தை வாங்கினவர்களாக இருக்கின்றார்கள்; ஆதலின், அவர்களுடைய வாணிப

மானது இலாபத்தைத் தரவில்லை; மேலும், அவர்கள் நேரான பாதையைப் பின்பற்றினவர்களாக இருக்கவுமில்லை.

17. அவர்களுடைய உவமையாகிறது—ஒருவன் (காரிருளில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தான்; அவன் பிரகாசத்திற்காகத்) தீயை மூட்டினான்; பின்னர்த் தீ மூண்டவுடன் (அதனால்) அவனைச் சுற்றியுமுள்ளவற்றை அது பிரகாசிக்கச் செய்தபோது (இயற்கையாகவே அத் தீ அணைந்து விட்டது. மேலும்) அவர்களுடைய பிரகாசத்தை அல்லாஹ் அப்புறப்படுத்தி, மேலும் அவர்கள் பார்க்க முடியாத அடர்ந்த இருள்களில் (அல்லாஹ்) அலையவிட்ட ஒருவனுடைய உவமானத்தையே ஒத்திருக்கிறது.[1]

18. (அவர்களுக்குச் செவிகளும், நாவும், நேத்திரங்களுமிருந்தும், அவர்கள் அவைகளைக்கொண்டு உண்மையை உணர்ந்து கொள்ளாத) செவிடாகவும், ஊமையாகவும், குருடாகவும் (இருக்கின்றனர்; ஆகலின்) அவர்கள் (எப்பொழுதும் நேர்வழியிலே) திரும்பமாட்டார்கள்.

19. அல்லது (அவர்களுடைய உவமையானது) அடர்ந்த இருள்களும் இடியும் மின்னலும் நிறைந்துள்ள மேகத்தினின்று (பொழியும்) சோனைமாரியை நிகர்த்ததாகும்; (எப்படிப்பட்ட மாரியெனின்) மரணத்திற்கு அஞ்சி இடியோசைகளி(ன் பயத்தி)னால் அவர்கள் தங்களுடைய செவிகளுக்குள் தங்கள் விரல்களை வைத்துப் பொத்திக்கொள்ளுகிறார்கள்; ஆனால், அல்லாஹ் (சத்தியத்தை) நிராகரிப்பவர்களை (த் தன் சக்தியைக் கொண்டு என்றும்) சூழ்ந்தவனாக(வே) இருக்கிறான்.[2]

20. அந்த மின்னலானது அவர்களுடைய பார்வைகளைப் பறிக்க முடுகிக்கொண்டது; அது அவர்களுக்குப் பிரகாசிக்கும் போதெல்லாம் அவர்கள் அதில்(சிறிது தூரம்)நடப்பார்கள்; ஆனால்,

1. எனவே, அவர்களுடைய நிலைமை இப்படிப்பட்டதாகவே இருக்கிறது: அவர்கள் அல்லாஹ்வின் ஒளியைப் பெற்றார்கள். அதனால், அவர்களுக்குப் பிரயோஜன முண்டாகவில்லை. ஆதலின், பின்னரும் அவர்கள் இருள் சூழ்ந்த வழியிலேயே சிக்குண்டு சுழலத் தலைப்பட்டுவிட்டனர்.

2. அஃதாவது: இருளே போலுள்ள குப்ரின் விஷயத்தையும், இடிக்கொப்பான வேதனையையும், மின்னலுக்கொப்பான உண்மையான ஆதாரங்களையும் குர்ஆன் எடுத்துக்காட்டும்போது, இதனைக்கேட்டால் தாங்கள் கொண்டிருக்கும் மார்க்கத்திற்கு மரண மேற்படுவதுடன், அல்லாஹ்வின் மீது கொள்ளற்குரிய நன்னம்பிக்கையின் பக்கல் திரும்பிவிடவேண்டி வருமென்பதை அஞ்சி, குர்ஆன் போதனைகளைக் கேட்காமலிருக்கும் பொருட்டு அவர்கள் தம்விரல்களைத் தங்கள் காதுகளுக்குள்ளே வைத்துக்கொள்ளுகிறார்கள்.

அஃது அவர்கள்மீது அந்தகாரத்தைச் சொரியும்போது (அவர்கள் உண்மையான மார்க்கத்தைக் கண்டுகொள்ள இயலாது, அசைவற்று அப்படியே) நின்றுவிடுவார்கள்; இன்னம், அல்லாஹ் நாடுவானாயின் (அவர்கள் தங்கள் விரல்களைக் காதுள் வைத்துக் கொள்ளவேண்டிய அவசியமே யில்லாது) அவர்களுடைய கேள்வியையும் பார்வைகளையும் (அறவே இல்லாமல்) போக்கிவிடுவான். நிச்சயமாகவே அல்லாஹ் எல்லா வஸ்துக்களின் மீதும் ஆண்மை பெற்றவனாக இருக்கிறான்.

---

## பிரிவு—3

**இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை உள்ளவாறே ஒத்துக்கொள்வதால் விளையும் பயனும், முக்கியமாக அல்லாஹுதஆலாவின் ஏகத்துவமும், அவனாலே படைக்கப்பட்டுள்ள சிருஷ்டியிலிருந்தே உதஹரித்துக் காட்டப்படுகின்றன.**

21. ஏ மானிடர்காள்! (தீமையினின்று) நீங்கள் தப்பும் பொருட்டு, நுங்களையும் நுங்களுக்கு முன்னுண்டானவர்களையும் சிருஷ்டித்த நுங்கள் ரக்ஷகனை(யே) வணங்கு வீர்களாக;

22. (அந்த ரக்ஷகனாகிய சிருஷ்டிகர்த்தா) நுங்களுக்குப் பூமியை (இருப்பிடமான) விரிப்பாகவும், வானத்தை (ஒரு) கட்டுக் கோப்பாகவும் செய்தவன்; இன்னம், ஆகாயத்தினின்று மழையை இறக்கிப் பிறகு அதனால் உங்களுக்கு இரணமாயிருக்கும் பொருட்டுக் கனிகளை(ப் பூமியினின்று) வெளிப்படுத்தியவன் ; ஆதலின், நீங்கள் (அவனே சிருஷ்டிகர்த்தாவாகவும், இரண மளிப்பவனாகவும் இருக்கிறான் என்பதை) அறிந்திருந்தும் அல் லாஹ்வுக்கு (மற்றெதையும்) இணைகள் வைக்காமல் இருப்பீர்களாக.

23. மேலும் (கவனியுங்கள்!) நம்முடைய அடியாருக்கு நாம் வெளிப்படுத்திக் கொடுத்திருப்பதைக் குறித்து (இஃது அல்லாஹ் வினால் அருளப்பட்ட தன்று; ஆனால், மனிதர்களாலேயே இவ் வேத வாக்கியங்கள் உண்டு பண்ணப் படுகின்றன வென்று) நீங்கள் சந்தேகத்துள் ளிருப்பீர்களாயின், (நீங்களும் மனிதர் களே யாதலால்) அதைப்போன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள் ; இன்னம், நீங்கள் உண்மையுள்ளவர்க(ளே) யானல் (இதைச் செய்துமுடிக்க) அல்லாஹ்வைத் தவிர்த்து உங்களுடைய (ஏனை) உதவியாளரையும் துணைக்கழைத்துக் கொள்ளுங்கள்.

24. பின்னர் நீங்கள் (அப்படிச்) செய்யவில்லை யானலும் (ஆச்சரிய மொன்றுமில்லை. ஏனெனின், நீங்கள் அப்படிச்)

செய்யவே மாட்டீர்கள். எனவே (நீங்கள் சத்தியத்தை நிராகரிப்பதை விட்டு விலகிக் கொள்ளுங்கள். இல்லையேல்) மனிதர்களும் கற்களும் விறகாயிருக்(கப்போ)கின்ற அந்த அக்கினியை (நினைத்து) அஞ்சிக்கொள்ளுங்கள்; (சத்தியத்தை) நிராகரிப்பவர்களுக்காக (அது) சித்தமாக்கப்பட்டிருக்கிறது.

25. மேலும் (சத்தியத்தை நிராகரிக்காமல் அதன்மீது) நன்னம்பிக்கை கொண்டு நற் கருமங்களைச் செய்கிறவர்களுக்கு (அந்த அக்கினிக்குமாறாக அதிக உல்லாசந் தரக்கூடிய முறையிலே) அவற்றின் கீழே நீரருவிகள் ஓடுகின்ற உத்தியான வனங்கள் அவர்களுக்கு உண்டென்று நற்செய்தி கூறுவீராக; அவற்றின் கனிவர்க்கங்களினின்று ஒன்று (அவர்களுக்குப்) புசிக்கக் கொடுக்கப்படும்போதெல்லாம், "முன்னமே நமக்குக் கொடுக்கப்பட்டிருந்ததும் இதுதானே"—(அஃதாவது, நம்முடைய நற்காரியங்களுக்காக உலகத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததும் இதுதானே!) என்றுசொல்லுவார்கள்; மேலும், அதைப்போன்றது அவர்களுக்குக் கொண்டு வரப்படும்; மேலும், அவர்களுக்காக அவற்றில் பரிசுத்தமாக்கப்பட்ட ஜோடிகளுண்டு; இன்னமும், அவர்கள் அதிலேயே (சாசுவதமாய சுகத்துள்ளே என்றென்றும்) நிலைத்திருப்பார்கள்.

26. நிச்சயமாகவே அல்லாஹ் (மனிதர்களுடைய புத்திக்குத் தக்கவிதமாக உபதேசம் பண்ண எண்ணும்போது) எப்படிப்பட்ட உவமையும் (எடுத்துச்) சொல்ல வெட்கப்படமாட்டான்—(அஃது) ஒரு மசகம், அல்லது அதைக் காட்டினும் மேலா யிருப்பதும் (சரிதான்)—ஆதலின், நன்னம்பிக்கை கொண்டவர்களோ (இப்படிப்பட்ட உவமான உபதேசங்களில் தங்கள் ஞானத்தைச் செலுத்தி) அது தங்களுடைய ரக்ஷகனிடத்திலிருந் துண்டாயிருக்கும் உண்மையென்றே அறிகிறார்கள்; ஆனால் (இதற்கெதிராகச் சத்தியத்தை) நிராகரித்தவர்களோ (தங்கள் அறியாத்தன்மையால்) இந்த உவமையால் அல்லாஹ் நாடியதென்ன வென்று சொல்லுகிறார்கள். இதனால் அனேகரை (அவன்) வழிகெடும்படி செய்கிறான்; இன்னமும், இதனால் அனேகருக்கு (அவன்) நேர்வழியைக் காட்டுகிறான்.[3] ஆனால், அவன் ஹறத்து மீறியவர்களைத் தவிர்த்து (வேறொருவரையும்) இதனால் வழிகெடும்படி செய்கிறதில்லை.

3. இதர எல்லாப்போதனைகளையும்போல் உவமானமும் ஒருவிதமான போதனைக்குரிய விஷயமேயாகும். எனவே யார் அதில் தங்களுடைய நேர்மையான புத்தியைக்கொண்டு ஆழ்ந்து சிந்திக்கின்றார்களோ, அவர்கள் நேர்வழி யடைவார்கள்; யார் தங்களுடைய குறுகியபுத்தியாலும் அறியாத்தன்மையாலும் அவ்வுவமைக்கதையையே ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கின்றார்களோ, அவர்கள் தீயவழியில் வீழ்ந்து விடுவார்கள்.

27. (ஹத்துபிறியவர்கள் யாரெனின்) அவர்கள் அல்லாஹ்வின் உறுதிப்பாட்டை அதன் வாக்குறுதிக்குப் பின் முறித்துவிடுகிறார்கள்; மேலும், அல்லாஹ் எதைப் பிணைத்துவைக்கும்படி கட்டளையிட்டானோ, அதைத் தறித்துவிடுகிறார்கள்; இன்னம் (அவர்கள் தங்களுடைய தீய நடக்கையால்) பூமியில் விஷம(க் காரிய)ம் செய்கிறார்கள்; (இப்படிப்பட்ட தீமையான வழியில் நடந்து செல்பவர்களாய) அவர்கள்தாம் நஷ்டவாளிகளா யிருக்கின்றார்கள்.

28. (ஏ மானிட இனங்காள்!) அல்லாஹ்வை — (அவன் வணக்கத்தை நீங்கள்) எப்படி நிராகரிக்கின்றீர்கள்? நீங்களோ (ஆதியில்) மரித்துக்கிடந்தீர்கள்; பிறகு உங்களுக்கு (அவன்) உயிர் கொடுத்தான்; பின்னர் உங்களை மரிக்கச்செய்வான்; மீண்டும் உங்களை (இரண்டாம் முறையாக) உயிர்ப்பிப்பான்; மறுபடியும் அவனிடமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள்.

29. (இன்னமும் கவனியுங்கள்!) பூமியிலுள்ள எல்லாவற்றையும் (நீங்கள் நாடியபடி அவற்றினின்று பிரயோஜனமடையும் பொருட்டு) உங்களுக்காகப் படைத்தவன் அவன்தான்; இன்னம், அவன் வானத்தைச்சிருஷ்டிக்க முன்வந்தான்; எனவே, அவற்றை ஏழு வானங்களாகப் பூர்த்தியாக்கினன்; (அவைகளால் உங்களுக்குப் பற்பலவிதமான பிரயோஜனங்களுண்டாகின்றன.) மேலும், அவன் எல்லா வஸ்துக்களையும் அறிந்தவனாக இருக்கிறான்.

## பிரிவு—4

**இதில், மனிதனுக்கு எத்தனை அளவிறந்த அபாரசக்தி அளிக்கப்பட்டுள்ளதென்றும், அச்சக்தியை அவன் செவ்வனே செலவு செய்யாவிடின் அதனால் அவனடையும் நஷ்டம் இத்தனை யென்பதும் ஆதத்தின் சரிதையிலிருந்து உதாஹரணம் காட்டப்பட்டுள்ளது.**

30. இன்னம் (ஏ நபியே, இவ்விஷயத்தைக் கவனிப்பீராக!) "பூமியில் நிச்சயமாக நான் ஒரு பிரதிநிதியை உண்டாக்கப்போகிறவனாக இருக்கிறேன்," என்று உம்முடைய ரக்ஷகன் வானவரை நோக்கிச் சொன்னபோது, அவர்கள் சொன்னார்கள்: "என்ன! அதில் விஷமம்செய்து உதிரத்தைச் சிந்துகிறவனையா-(படைப்பையா) அதில் உண்டாக்கப் போகின்றாய்? மேலும், நாங்கள் உன்னுடைய புகழைத் தூய்மையுடன் கொண்டாடியும் உன்னுடைய (திவ்விய) பரிசுத்தத் தன்மையைப் (பெரிதும்) பாராட்டியும் வருகின்றோமே!" (இதற்கு) அவன் சொன்னான்: "நிச்சயமாக நீங்கள் அறியாததை(யெல்லாம்) நான் மிகவாக அறிவேன்."

31. (பின்னர் ஆண்டவன் நாடியபடியே காரியம் முடிந்து விட்டது.) இன்னம் (அவன்) ஆதத்துக்கு எல்லா (வஸ்துக்களின்) நாமங்களையும் கற்றுக்கொடுத்தான்; பிறகு அவற்றை (அந்த) வானவர்களிடம் எடுத்துக்காட்டி, அப்பால் கூறினன்: "நீங்கள் உண்மையாளரா யிருப்பின், இவற்றின் நாமங்களை எனக்கு அறிவியுங்கள் (பார்ப்போம்)!"

32. (அதற்கு வானவர்கள்) சொன்னார்கள்: "நீ தூய்மையுள்ளவன்! நீ எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருப்ப தல்லாமல் வேறெந்த அறிவும் (சுயமே) எங்களுக் கில்லை; நிச்சயமாக நீயே அறிவுள்ளவனும் ஞானமுள்ளவனுமாக இருக்கின்றாய்."

33. (வானவர்கள் இவ்வாறு வணங்கி வந்ததன் பின் அல்லாஹ்) சொன்னான்: "ஏ ஆதம்! அவர்களுக்கு அவற்றின் நாமங்களை அறிவிப்பீராக. அப்பால் அவர்—(ஆதம்) அவர்களுக்கு அவற்றின் நாமங்களை அறிவித்தபோது (அல்லாஹ்) சொன்னான்: "வானங்களிலும் பூமியிலும் மறைவா யிருப்பதை நிச்சயமாக நான் அறிவே னென்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும் நீங்கள் மறைத்து வைப்பதையும் (நான்) அறிவே னென்றும் உங்களுக்கு நான் சொல்ல வில்லையா?"

34. மேலும் (கவனிப்பீராக!) "ஆதத்துக்குச் சிரஞ்சாயுங்கள்!" என்று நாம் வானவருக்குச் சொன்னபோது, (அவ்வாறே அவர்கள்) சிரஞ் சாய்த்தார்கள்; (ஆனால்) இப்லீஸ் தவிர. அவன் (அல்லாஹ்வின் ஆணையை) ஒத்துக்கொள்ள வில்லை; மேலும் (அவன்) கர்வங் கொண்டிருந்தான்; இன்னமும் (அவன்) நிராகரிப்பவர்களுள் ஆய்விட்டான்.

35. பின்னர் (யாதாயிற் றெனின்) நாம் சொன்னோம்: "ஏ ஆதம்! நீரும் உம்முடைய (துணைவியான) ஜோடியும் உத்தியான வனத்தில் வசித்திருங்கள்; இன்னம், அதிலிருந்து நீங்களிருவரும் இஷ்டமான இடத்திலெல்லாம் வளமாகப் புசியுங்கள். ஆனால், (என் உத்தரவுக்காகக் குறிப்பிட்ட) இந்த விருக்ஷத்தி னருகிலே (நீங்கள்) இருவரும் நெருங்காதீர்கள்; (அப்படிச் செய்வதனால்) நீங்களிருவரும் அநியாயக்காரர்களுள் ஆய்விடுவீர்கள்."

36. பின்னர் (யாதாயிற் றெனின்) ஷைத்தான் (தன்னுடைய தீய எண்ணத்தால்) அதினின்று அவர்களிருவரையும் தூண்டி, அதனால் அவ்விருவருமிருந்த அந்த நிலைமையிலிருந்து அவர்களிருவரையும் அப்புறப்படுத்தி விட்டான்; மேலும், நாம் சொன்னோம்: "வெளிப்படுங்கள்! உங்களுள் சிலர் (வேறு) சில

ருக்குப் பகைவர்களா யிருக்கின்றீர்கள் ; இன்னம், உங்களுக்காகப் பூமியில் ஒரு (சிறிது) காலம் வரை (அல்லாஹ்வின் 'விருப்பப் பிரகாரம்) ஸ்திரவாஸமும் பய னனுபவித்தலும் உளவாகும்."

37. பிறகு ஆதம் தம்முடைய ரக்ஷகனிடத்திருந்து சில வசனங்களைத் தெரிந்துகொண்டார். ஆதலின் (நம்முடைய தவற்றை மன்னிக்க வேண்டினர்; அவ்வாறே ஆண்டவனும் அவருடைய பச்சாதாபத்தை ஒப்புக்கொண்டு கருணையுடன்) அவர் பக்கல் திரும்பினன் ; நிச்சயமாக அவனே அதிகமதிகம் பாபத்தை மன்னிப்பவனுகவும் அன்புடையோனுகவும் இருக்கின்றான்.

38. (ஆதத்தின் பாப மன்னிப்பு வேண்டுகோள் ஒப்புக் கொள்ளப்பட்டது ; ஆனல், அம் மேலான வாழ்க்கை மட்டும் கிடைப்பதா யில்லை. ஆகவே) நாம் சொன்னேம்: "அ(வ்விடத்)தை—(நிலைமையை) விட்டு எல்லோரும் வெளிப்படுங்கள் ! (ஆனல், ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள் !) பிறகு என்னிடத்திலிருந்து உங்களிடத்திற்கு நேர்வழி யொன்று வந்து, அப்பொழுது யார் என்னுடைய வழியைப் பின்பற்றி நடக்கிருரோ, அவர்களுக்கு (யாதொரு விதமான) அச்சமு மில்லை ; மேலும், அவர்கள் (எவ்விதத்தும்) துயருறவு மாட்டார்கள்."

39. மேலும், யார் நம்முடைய அத்தாக்ஷிகளை நிராகரிக்கின்றுர்களோ, மேலும் பொய்ப்படுத்து கின்றுர்களோ, அவர்கள்தாம் அக்கினியில் வசிப்பவர்களாக இருக்கின்றுர்கள் ; அவர்கள் அதிலேயே எப்பொழுதும் தங்கியிருப்பார்கள்.

---

## பிரிவு—5

**பனீஇஸ்ராயீல் கூட்டத்தவருக் களிக்கப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்கள் குர்ஆன் ஷரீபால் எவ்வாறு பூர்த்தியாயின வென்பது இதில் விவரிக்கப் படுகின்றது.**

40. ஏ இஸ்ராயீலின்[4] மக்காள் ! நான் நுங்களுக் களித்த என்னுடைய அருட்கொடைகளை நினைத்துப்பாருங்கள் ! மேலும், என்னுடைய உடன்படிக்கையை (நீங்கள்) நிறைவேற்றிவையுங்கள்; நான் நுங்களுக்குச் செய்து கொடுத்த உடன் படிக்கையை நிறை

**4 இப்ராஹீம்[அலை] அவர்களுடைய பேரரான ஹஜ்ரத் யஃகூப்[அலை] அவர்களையே இஸ்ராயீல் எனும் இப் பெயர் சுட்டிக் காட்டுகின்றது. இஸ்ராயீல் என்னும் இப்பதத்திற்கு, அல்லாஹ்வால் ஒப்புக்கொள்ளப்பட்டவன், உண்மையான பரம பக்தன் என்பன பொருளாம்.**

வேற்றுவேன் ; இன்னம், எனக்காக மட்டுமே (நீங்கள்) பயந்து கொள்ளுங்கள்.

41. மேலும், உங்களிடம் இருக்கின்ற (வேதத்)தை உறுதிப் படுத்துமாறு யான் வெளியாக்கியதன்மீது நன்னம்பிக்கை கொள்ளுங்கள் ; மேலும், அதை நிராகரிப்பவருள் முந்தியவர்களாய்ப் போகாதீர்கள் ; மேலும், என்னுடைய அத்தாக்ஷிகளுக்கு ஈடாக அற்பத்தொகையைப் பெறாதீர்கள் ; இன்னம், எனக்காக மட்டுமே (நீங்கள்) அஞ்சிக்கொள்ளுங்கள்.

42. மேலும், நீங்கள் உண்மையை ஒளித்தும், மெய்யைப் பொய்யுடனே கல(ந்தும் உண்மை விஷயத்தைச் சந்தேகத்துள்ளா)க்காதீர்கள் ; மேலும், நீங்களோ (உண்மையை) அறிந்தவர்களா யிருக்கின்றீர்கள்.

43. மேலும், தொழுகையை நிலைக்கச் செய்யுங்கள் ! (அதன் தாத்பரியத்தை நீங்கள் இழந்து விட்டீர்கள்.) இன்னம், ஏழை விகிதத்தையும் கொடுங்கள் ; மேலும் (வணக்கத்தின் பொருட்டுக்) குனிகிறவர்களுடனே (நீங்களும்) குனியுங்கள்.

44. (என்ன !) நீங்கள் உங்களை(யே) மறந்துவிட்டு (மற்றை) மனிதர்களுக்கு நன்மையைக்கொண்டா ஏவுகின்றீர்கள் ? மேலும், நீங்களோ (அல்லாஹ்வின்) வேதத்தைப் படிக்கின்றீர்கள். (வேதத்தை நீங்கள் படித்துக்கொண்டு பகிரங்கமான உங்கள் தீய எண்ணத்தையும் பாதையையும்) நீங்கள் உணர்ந்து கொள்ளுகிறதில்லையா ?

45. மேலும் (கவனியுங்கள் !) பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (நுங்கள் நிலைமையைச் சீர்படுத்திக் கொள்ளும் விஷயத்தில்) உதவி தேடுங்கள் ; இன்னமும் (மகா) நிச்சயமாக உள்ளொடுக்கக் காரர்களுக்கல்லாமல் (மற்றவர்களுக்கெல்லாம்) அஃது அதிக பெரிய (பளுவுள்ள) தாகவே யிருக்கும்.

46. (அவர்கள்) எப்படிப்பட்ட (உள்ளொடுக்க முள்ள)வர்களென்றால், தங்களுடைய (ஹிருதயங்களுள்) ரக்ஷகனைச் சந்திக்கிறவர்களாக இருக்கிறார்களென்றும், அவர்கள் அவன்பால் மீண்டு செல்பவர்களாக இருக்கிறார்க ளென்றும் எண்ணி (உறுதி) கொண் டிருக்கிறார்கள்.

## பிரிவு—6

*பனீஇஸ்ராயீல் கூட்டத்தவருக்கு ஆண்டவ னளித்த அனுக்கிரகமும் அவர்களுடைய அழுத்தமான பிடிவாதமும்.*

47. ஏ இஸ்ராயீலின் மக்காள்! நான் நுங்களுக் களித்த என்னுடைய அருட்கொடையையும் (குறிப்பாக) உலகத்தி(ன் ஏனை ஜாதியி)னர்களின் மீது நுங்களை நான் மேன்மைப்படுத்தினே னென்பதையும் (நன்கு) நினைத்துப் பாருங்கள்.

48. மேலும், ஓர் ஆன்மாவுக்கு மற்றோர் ஆன்மா எக்காரியத் திற்கும் பிரயோஜனப் படாததும், (யாதொரு விதமான) பரிந்து பேசுதலும் அதனிடத்திருந்து ஒத்துக்கொள்ளப் படாததும், அதனிடத்திருந்து (எப்படிப்பட்ட) பதில் பரிகாரமும் வாங்கப்படா ததும், அவர்கள் (எவ்விதமான) உதவியும் புரியப்படாததுமா(ய்ப் போய் முடியக்கூடி)ய அந்த (இறுதி) நாளைக் குறித்து (அதிக மதிகம்) அஞ்சிக் கொள்ளுங்கள்.

49. மேலும், உங்களை மகாகொடிய வேதனைக்குள் ளாக்கிய வர்களும், உங்களுடைய குமாரர்களை (யெல்லாம்) கொலைசெய்(து உங்களுடைய சந்ததியார்களே யில்லாமல் ஒழிந்துபட்டுப் போகச் செய்)தவர்களும், உங்களுடைய ஸ்திரீகளை (யெல்லாம்) உயிருடன் வைத்து(த் தங்கள் பணியாட்களாகக் கொண்டு)வந்தவர்களு மாய பிர்அவ்னுடைய ஆட்களி(ன் கொடுமையி)னின்று நாம் உங்களை ஈடேற்றிக்கொண்ட சமயத்தை (நினைத்துப் பாருங்கள்); மேலும், அதில் உங்களுடைய ரக்ஷகனிடத்திலிருந்து ஒரு பெரிய சோதனை உண்டாயிருந்தது.

50. மேலும் (நீங்களெல்லீரும் எகிப்தைவிட்டுப் புறப்பட்டீர் கள்; உங்களுக்குப் பின்னே பிர்அவ்னும் துரத்திக்கொண்டு வந்தான்; அது சமயம்) உங்களுக்காக நாம் கடலை (நடுவாக)ப் பிரித்ததையும், அதனால் உங்களை நாம் ஈடேற்றிக் கொண்டோ மென்பதையும் (நினைத்துப்பாருங்கள்.) பின்னே பிர்அவ்னுடைய ஆட்களை(க் கடலுக்குள்ளே) ஆழ்த்தி விட்டோம்; நீங்களோ, (அக் கடலோரத்தில் நின்றுகொண்டு அதனைப்) பார்த்துக் கொண்டே யிருந்தீர்கள்.

51. மேலும் (மற்றொரு விஷயத்தையும் நினைத்துப்பாருங் கள்:) நாம் மூஸாவுக்கு நாற்பது இரவைத் திட்டப்படுத்தியபோது, (அவர் அந்த நாற்பது இரவுக்காக ஸீனாய் மலைக்குப் புறப்பட்டுச் சென்றார்.) பிறகு அவருக்குப் பின்னே நீங்கள் (ஒரு) கன்றுக்

குட்டியை(த் தெய்வமாக)ப் பற்றிக் கொண்டீர்கள் ; மேலும், நீங்கள் அக்கிரமக்காரர்களா யிருந்தீர்கள்.

52. பிறகு நீங்கள் நன்றிகூறும் பொருட்டு, அதன் பின்னே நாம் (நமது அருளால் துன்மார்க்கத்தி னின்று) நுங்களை மன்னித்து விட்டோம்.

53. மேலும், நீங்கள் நேர்வழியடையும் பொருட்டு நாம் மூஸாவுக்கு (த் தவ்ராத் தென்னும்) வேத புத்தகத்தையும், விசேஷணப் பாகுபாட்டையும் அளித்த சமயத்தையும் (நினைத்துப் பாருங்கள்.)

54. மேலும், அது சமயம் மூஸா (அல்லாஹ்வின் வேதத்தைப்பெற்றுத் திரும்பிவந்து, தம்முடைய கூட்டத்தார்கள் வழி கெட்டுப் போயிருப்பதைக் கண்டு) தம்முடைய கூட்டத்தார்களுக்குச்சொன்னார்: "ஏ என்னுடைய கூட்டத்தார்களே ! (ஒரு) கன்றுக் குட்டியை (நுங்கள் தெய்வமாக)ப் பற்றிக்கொண்டமையால் நீங்கள் நிச்சயமாக(வே) நுங்கள் ஆன்மாக்களுக்கு அநியாயம் செய்து விட்டீர்கள் ; ஆதலின், உங்களுடைய நிர்மாண கர்த்தாவின் பக்கல் பச்சாதாபத்துடன் (பாபமன்னிப்பைத் தேடித்) திரும்புங்கள் ; ஆதலின், உங்களுடைய (துன்மார்க்க எண்ணம் குடிகொண்ட) ஆன்மாக்களைக் கொல்லுங்கள் ; இஃதுங்களுடைய நிர்மாண கர்த்தாவினிடத்தில் உங்களுக்கு நல்லதாயிருக்கும்." ஆகவே (அவன்) உங்கள் மீது (கிருபையுடன் பாபத்தை மன்னிக்கத்) திரும்பினான். நிச்சயமாக அவன் (பாபமன்னிப் பென்னும் கிருபையின் பக்கல்) திரும்புகிறவனுகவும் அன்புடையோனுகவு மிருக்கிறான்.

55. மேலும் (அந்தச் சமயத்தை ஞாபகம்செய்து பாருங்கள்!) அப்பொழுது (நீங்கள்) சொன்னீர்கள்: "ஓ மூஸா ! அல்லாஹ்வை நாங்கள் நிதரிசனமாக (வார்த்தையாட)க் காணும்வரை உமக்காக நாங்கள் ஒரு போதும் நம்பிக்கை கொள்ளோம்." (பின்னர் என்ன நடந்த தென்பதையும் நினைத்துப்பாருங்கள்!) எனவே (திடீரென) இடிமுழக்கம் உங்களைப் பற்றிக்கொண்டது ; மேலும், நீங்கள் (அதைப்) பார்த்துக்கொண்டே யிருந்தீர்கள்.

56. பின்னர் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு, உங்களுடைய மரணத்துக்கு(ள் ளாக்கக்கூடிய அவ்வாபத்தை நீக்கியதற்கு)ப் பின் நாம் உங்களை எழுப்பினோம்.

57. மேலும் (நீங்கள் புற்பூண்டுகளே யற்ற அந்த ஸீனய் வனாந்தரத்தில் வெயிலின் வெப்பத்தாலும், உணவுப்பொருள்களே கிடைக்காமையாலும் மாண்டுமடிந்து போகக்கூடியவர்களா யிருந்தீர்கள். ஆகவே, அது சமயம் நாம்) நுங்கள் மீது மேகத்தின்

நிழலை உண்டுபண்ணினோம்; இன்னம், நுங்கள் மீது மன்னையும் ஸல்வாவையும் (நாம்) இறக்கினோம்;[5] (பின்னர் உங்களுக்குச் சொல்லப்பட்டது:) "நாம் உங்களுக்களித்த பரிசுத்தமானவை(களாய—உணவுப்பொருள்)களைப் புசியுங்கள்." (எனினும், அவர்கள் தங்கள் அநியாயத்தினின்று நீங்கவில்லை.) இன்னம் (இப்படிப்பட்ட நன்றியில்லாத் தன்மையால்) அவர்கள் நமக்கொன்றும் அக்கிரம மிழைக்கவில்லை; ஆனால், தங்களுடைய ஆன்மாக்களுக்கே அக்கிரம மிழைப்பவர்களா யிருந்தார்கள்.

58. இன்னம் (அந்தச் சமயத்தின் நினைவாலேனும் நீங்கள் நல்வழியில் திரும்பமாட்டீர்களா?) எப்பொழுது (வளம்பொருந்திய பசுமையான நகரமொன்று நுங்களுக்குத் தென்பட்டதோ, அப்பொழுது) நாம் சொன்னோம்: "(ஜயம்பெற்றவர்களாய்) இந்நகருக்குள் பிரவேசியுங்கள்; பின்னர் இந்நகரத்தினின்று (உண்டாயிருக்கின்ற) உங்களுக்கு இஷ்டமான இடத்திலெல்லாம் (சென்று) வேண்டியமட்டும் புசியுங்கள்; மேலும் (அதன்) வாயிலில் (அல்லாஹ்வின் அருட்கொடையை நினைந்து அவனுக்குத்) தலைவணங்கிய வர்களாய் நுழையுங்கள்; இன்னம் (உங்களுடைய நாவால்) 'எங்களுடைய பாபச்சுமையானது பரிகரிக்கப் படட்டும்' என்று சொல்லுங்கள்; (இங்ஙனம் நீங்கள் செய்வீர்களாயின், நாம்) உங்களுக்காக உங்களுடைய பிழைகளை (யெல்லாம்) மன்னித்துவிடுவோம்; மேலும் (நம்முடைய சட்டப்படி) நன்றி செய்பவர்களுக்கு அதிகமாகவும் (நாம் பிரதிபலனைக்) கொடுப்போம்."

59. ஆனால், அநியாயம் செய்துகொண் டிருந்தவர்கள் (ஆண்டவன்) வார்த்தையைப் புரட்டி அவர்களுக்குச் சொல்லப்பட்டிருந்ததற்கு மாற்றமாகச் செய்துவிட்டார்கள்; ஆதலின், அவர்கள் வரம்பை மீறிக்கொண் டிருந்தார்க ளாதலால், அநியாயம் செய்து கொண்டிருந்த(அ)வர்கள் மீது ஆகாயத்திலிருந்து ஒரு வேதனையை நாம் இறக்கினோம்.

---

5 பனிசலையைப்போல் உறைந்துபோகக்கூடிய ஒரு மரத்தின்பாலுக்கு 'மன்'னென்று சொல்லப்படுகின்றது. இங்ஙனமே ஒருவிதப் பறவைக்கு 'ஸல்வா'வென்று பெயர் கொள்ளப்படுகிறது. இப்படிப்பட்ட இரண்டுவிதமான வஸ்துக்களும் 'தூர்' என்னும் மலைக்குச் சுற்றுப்புறங்களில் அதிகமாக உண்டாகின்றன.

## பிரிவு—7

***முன் பிரிவின் விஷயமே ஈண்டும் தொடர்ந்து சொல்லப்படுகின்றது.**

60. மேலும் (இதையும் நினைத்துப் பாருங்கள் :) மூஸா தம்முடைய கூட்டத்தாருக்காகத் தண்ணீர் (வேண்டு மென்று) கேட்ட போது, நாம் சொன்னோம் : "(மலைப்) பாறையின் மீது உம்முடைய தண்டத்தால் அடிப்பீராக!" (மூஸா அப்படியே அடித்தார்.) ஆகவே, அதிலிருந்து பன்னிரண்டு ஊற்றுக் கண் வெடித்துக் கிளம்பிற்று ; (பின்னர்) நிச்சயமாக எல்லா மனிதரும் தத்தம்முடைய நீரருந்தும் துறையைத் தெரிந்து கொண்டார்கள் ; (அதுசமயம் உங்களுக்குச் சொல்லப்பட்டது: "வளமற்ற இப்பொட்டற் பாலைவனத்தில் உங்களுக்கு வேண்டியவெல்லாம் தையார் செய்து கொடுக்கப்பட் டிருக்கின்றன." ஆகவே, நீங்கள்) அல்லாஹ்வினுடைய இரணத்திலிருந்து அருந்துங்கள்; மேலும் பருகுங்கள்; இன்னம், பூமியில் (நீங்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஜீவித வாழ்க்கையை நன்கு நடாத்த வேண்டு மென்னும் சுயநல எண்ணங் கொண்டு) விஷமம் செய்கிறவர்களாய்த் திரியாதீர்கள்.

61. மேலும், "ஓ மூஸா ! (மன்னு ஸல்வா வென்னும்) ஒரே (வித) ஆகாரத்(தைப் புசித்துக்கொண்டிருப்ப)தின் மீது ஒருபோதும் நாங்கள் சகித்திருக்க மாட்டோம் ; ஆதலின், (எகிப்தில் நாங்கள் உண்டு களித்ததேபோல்) பூமி முளைப்பிக்கின்ற (அஃதாவது) அதன் சாக பதார்த்தத்தி னின்றும், அதன் வெள்ளரிக்காயினின்றும், அதன் உள்ளிப்பூண்டினின்றும், அதன் (ஒருவகைப்) பருப்பினின்றும், அதன் வெண்காயத்தினின்றும் எங்களுக்கு(க் கிடைக்குமாறு) வெளியாக்கித் தரும்படி உம்முடைய ரக்ஷகனிடம் எங்களுக்காகப் பிரார்த்தனை புரியக் கடவீர்," என்று நீங்கள் சொன்னபோது ; (அவர்) சொன்னார்: "(உங்களுடைய மறதிக்கும் உணர்ச்சியற்ற தன்மைக்கும் இரங்கவேண்டிய திருக்கின்றது.) நல்லதற்கு ஈடாகக் கேவலமாயிருக்கின்றதை மாற்றிக்கொள்ளத் தேடுகின்றீர்களோ ? (உங்களுடைய கொடிய மனப்பான்மை இங்ஙனமே யிருக்குமாயின்) ஒரு நகரத்துள் இறங்குங்கள் ; பின்னர் நீங்கள் கேட்டது (அனைத்தும்) உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். (இப்பொருள்களெல்லாம் நீங்கள் அன்னியர்களிடம் தாழ்மையாலும், ஏழ்மைத்தனத்தாலுமே பெறவேண்டி யிருக்கும்.)" மேலும், தாழ்மையும் ஏழ்மைத்தனமும் அவர்கள்மீது (கொண்டு வந்து) கவிழ்க்கப்பட்டன.

இன்னம், அல்லாஹ்வின் கோபத்திற்குப் பாத்திரராய்விட்டார்கள் ; இஃது (ஏனென்றால்) அவர்கள் அல்லாஹ்வின் (இடத்திலிருந்து வெளியான) அத்தாக்ஷிகளை நிராகரித்துக் கொண்டும் அநியாயமாக நபிமார்களைக் கொலை புரிந்துகொண்டும் இருந்தார்கள் என்பதனால்தான் ; (இன்னம்) இஃது (ஏனென்றால்) அவர்கள் கீழ்ப்படியாமலும் எல்லையைக் கடந்தும் வந்தார்கள் என்பதனால்தான்.

## பிரிவு—8

**பனீ இஸ்ராயீல் கூட்டத்தாரின் க்ஷீணதசையும் கௌரவ ஹானியும் இதில் கூறப்படுகின்றன.**

62. நிச்சயமாக (ஆண்டவன் சட்டப்படி ஜயம் பெறுவதென்பது, அவன்மீது நன்னம்பிக்கை கொள்வதாலும், நன்னடக்கைகளாலுமே யுண்டாம் ; பிறப்பினாலோ, அன்றி வம்சத்தின் உயர்வினாலோ, அன்றி மார்க்க சம்பந்தமான ஒரு கூட்டத்தை உண்டுபண்ணிக் கொள்வதனாலோ உண்டாய்விட மாட்டாது. எனவே, முஹம்மது ஸல் அவர்கள் மூலம்) நன்னம்பிக்கை கொண்டவர்களும், எஹூதிகளாய்ப் போனவர்களும், கிறிஸ்துவர்(களாய்ப் போனவர்)களும், (யூதர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் இடையிலுள்ள ஒரு கூட்டத்தாராய) ஸேபியர்களும் (அல்லது வேறு எவ்வர்க்கத்தைச் சார்ந்தவரா யிருப்பினும்) எவ(ரொருவ)ர் அல்லாஹ்வின்மீதும் இறுதி(த்தீர்ப்பு)நாளின்மீதும்நன்னம்பிக்கை வைத்து, மேலும் நன்மையான காரியங்களைச் செய்கின்றாரோ, அவர்களுக்கு அவர்களுடைய ரக்ஷகனிடத்தில் (நன்மைகளுக்காக) அவர்களுடைய சன்மானம் இருக்கின்றது;அவர்களுக்கு(யாதொரு விதமான) அச்சமு மில்லை ; மேலும் அவர்கள் (ஒரு சிறிதும்) துயருறவு மாட்டார்கள்.

63. மேலும், நாம் உங்களிடமிருந்து உறுதிமொழி வாங்கி (நீங்களெல்லாம் கீழே நின்றபோது) மேலும் (மலையின் சிகரமாய) தூரை உங்களுக்குமேலே உயர்த்தியபோது (நடந்ததை நினைத்துப் பாருங்கள். அது சமயம் நாம் சொன்னோம்:) "நீங்கள் (தீமையை விட்டுத்) தப்பிக்கொள்ளும் பொருட்டு, நாம் உங்களுக்குக் கொடுத்திருப்ப(தான வேதத்தின் நல்லுபதேசத்)தை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள் ; இன்னம், அதில் சொல்லப்பட்டிருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள்."

64. பிறகு நீங்கள் அதற்குப் பின் (உங்களுடைய உறுதிமொழியை விட்டுத்) திரும்பிவிட்டீர்கள் ; ஆனால், அல்லாஹ்வின்

அனுக்கிரஹமும் அவனுடைய கிருபையும் உங்கள்மீது உண்டாகாமலிருந்திருக்குமாயின், நீங்கள் (உங்களுடைய துர் நடக்கையின் பயனாக) நிச்சயமாகவே நஷ்டவாளிகளுள் ஆயிருப்பீர்கள்.

65. மேலும், ஸப்த்[6] விஷயத்தில் உங்களுள் வரம்பைக் கடந்து நடந்து வேதக் கட்டளைகளைப் பற்பலவித உபாயங்களைக் கொண்டு புரட்டிவிட வேண்டுமென்று பிரயத்தனப்பட்டு மனித நிலையிலிருந்து இழிந்து விழுந்தவர்களையும், பின்பு, "நீங்கள் சிறுமையுற்ற வானரம(ானவர்கள)ாய் விடுங்கள்!" என்று நாம் அவர்களுக்குச் சொன்னோமென்பதையும் நிச்சயமாக நீங்கள் அறிந்தேயிருக்கின்றீர்கள்.

66. ஆகவே (அவர்கள் மனித நிலையினின்று ஈர்க்கப்பட்டு இழிவாக்கப்பட்டார்கள் என்னுமிவ் விஷயத்தை, அல்லது) அதற்கு—(அக்கூட்டத்திற்கு) எதிரிலிருந்தவர்களுக்கும், அதற்குப் பின்னே வருபவர்களுக்கும் அச்சப்பாடடையும் இடமாகவும், (தீமையினின்று) தப்பிக்கொள்பவருக்கு உபதேசமடையும் ஸ்தானமாகவும் (இருக்குமாறு நாம்) அவ்விஷயத்தைச் செய்தோம்.

67. மேலும், "நீங்கள் ஒருபசுவை அறுக்கவேண்டுமென்று அல்லாஹ் (நிச்சயமாக) உங்களுக்குக் கட்டளையிடுகிறான்," என்று மூஸா (சர்வ சாதாரணமாகத்) தம்முடைய கூட்டத்தாருக்குச் சொன்னபோது; (அதன்படியே நேர்மையுடன் நடந்து செல்லாது) "என்ன! நீர் எங்களை ஏளனமா செய்கின்றீர்? (இப்படிப் பட்ட இழிவான கட்டளைகளையெல்லாம் எப்படி ஆண்டவன் ஏவுவான்?)" என்று (அவர்கள்) சொன்னார்கள். (அதற்கு மூஸா, "அல்லாஹ்வின் கட்டளைகளைப் பரிகாசமாகக் கொள்ளும்) அறிவிலிகளுள் நான் (ஒருவனாக) இருப்பதை விடுத்து அல்லாஹ்வினிடம் பாதுகாப்பைத் தேடுகிறேன்," என்று சொன்னார்.

68. "(அப்படியே) அது (மெய்யாயிருக்குமாயின், அப் பசு) எப்படிப்பட்டதென்று எங்களுக்கு அவன் விளக்கிக் காட்டும்படி உம்முடைய ரக்ஷகன்பால் எங்கள் நிமித்தம் (நீர்) பிரார்த்தனை புரிவீராக," என்று (அவர்கள்) சொன்னார்கள். (அதற்கு மூஸா) "நிச்சயமாக அது கிழமுமல்லாத குட்டியுமல்லாத இவற்றின் மத்திய பருவத்தை யெய்திய ஒரு வாலிபப் பசுவாயிருக்கிறதென்று அவன் சொல்லுகிறான். (இப்பொழுது உங்களுக்கு விவரமான விடை கிடைத்துவிட்டது.) ஆதலின், உங்களுக் கிடப்பட்ட கட்டளையை (நீங்கள் நிறைவேற)ச் செய்யுங்கள்," என்று சொன்னார்.

6. ஸப்த்—வேலையினின்று விடுபட்டிருக்கும் ஓய்வு நாள்; அல்லது சனிக்கிழமை.

69. (ஆனால், அவர்கள் அவ்வளவுடன் நில்லாது, மற்றொரு வினாவையும் விடுக்கத் துணிந்து) "அதன் நிறம் என்ன வென்று எங்களுக்கு அவன் விளக்கிக் காட்டும்படி உம்முடைய ரக்ஷகன்பால் எங்கள் நிமித்தம் (நீர்) பிரார்த்தனை புரிவீராக," என்று அவர்கள் சொன்னார்கள். (அதற்கு மூஸா நிச்சயமாக) "அஃதொரு அதிக மஞ்சள்நிறமான பசு; அதன் நிறம் காண்போரைக் களிகூருமாறு செய்கின்ற (அத்தனை அதிகமான மஞ்சள்) நிறமா யிருக்கிற தென்று அவன் உறுத்திக் கூறுகிறான்," என்று சொன்னார்.

70. (நிறத்தின் விஷயத்தையும் அவர்கள் தெரிந்துகொண்டு மீண்டுமொரு சந்தேகத்தை விளைத்துக்கொண்டு) "அஃது— (அந்தப்பசு இன்னம்) எப்படிப்பட்ட தென்று அவன் எங்களுக்கு விளக்கிக் காட்டும்படி உம்முடைய ரக்ஷகன்பால் எங்கள் நிமித்தம் (நீர்) பிரார்த்தனை புரிவீராக; (ஏனெனின், அப்படிப்பட்ட) பசு (வெல்லாம் எத்தனையோ நிறங்க ளுடையனவா யிருக்கின்றன. ஆனால், அப்படிப்பட்ட பசுவைக் கண்டு பிடிப்பது) நிச்சயமாக எங்களுக்குச் சந்தேகமானதா யிருக்கிறது. ஆனால் (இன்னமும் சிறிது விளக்கிக் காட்டப்படின்) அல்லாஹ் நாடுவானாயின் நிச்சய மாக 'நாங்கள் (எங்கள் முயற்சியில்) நேர் வழியைப் பெறுகிறவர்க ளாவோம்," என்று அவர்கள் சொன்னார்கள்.

71. (அதற்கு மூஸா) "அது நிலத்தை உழும் வேலையில் பண்படாததும் உழுபடைச் சாலுக்கு நீர் பாய்ச்சாததுமான ஒரு பசுவாயிருக்கிறது; சுகதேக முள்ளது; அதில் எந்தகைய வடு வுமில்லை என்று அவன் சொல்லுகிறான்," என்று சொன்னார். (அப்பொழுது அவர்கள்,) "நீர் இப்பொழுது(தான்) உண்மையை —(சரியான குறிப்பை)க் கொணர்ந்தீர்," என்றார்கள். பின்னர், அவர்கள் (அவ்விஷயத்தைச்) செய்ய மனமில்லா திருந்தும், அதை (அவர்கள்) அறுத்(துத்தீர்த்)தார்கள்.

---

## பிரிவு—9

***ஆகவே, அவர்கள் கடினசித்த முள்ளவர்களாக மாறிவிடுகிறார்கள்.***

72. மேலும், நீங்கள்—(உங்கள் கூட்டத்தார்கள்) ஒரு ஜீவ னைக் கொன்றுவிட்டபோது (நடந்ததை நினைத்துப் பாருங்கள்! பிறகு) அ(ந்தக் கொலை விஷயத்)தில் (நீங்கள்) உங்களுக்குள்ளே மாறுபட்டு வாது புரிந்தீர்கள்; இன்னம், நீங்கள் ஒளித்து வைக்

கின்ற (பாபமான காரியத்)தை அல்லாஹ் வெளிக்குக் கொண்டு வருபவனாக இருக்கிறான்.

73. ஆகவே, அவனை—(உண்மையிலே கொலை செய்தவனை, கொல்லப்பட்ட) அதனுடைய ஒரு பகுதியைக் கொண்டு அடியுங்களென்று நாம் சொன்னோம்; (அவ்வாறு செய்யப்பட்டபோது உண்மை வெளியாய்விட்டது; கொன்றவனுடைய குறிப்பும் தெரிந்துவிட்டது.) இவ்வண்ணமாகவே அல்லாஹ் மரித்தோரை உயிர்ப்பிக்கிறான்; மேலும், நீங்கள் (சத்தியத்தை) ஓர்ந்து கொள்ளுகின்றவர்களாகும் பொருட்டுத் தன்னுடைய அத்தாக்ஷிகளை உங்களுக்குக் காண்பிக்கிறான்.

74. அப்பால் அ(தையெல்லாம் கண்ட)தன்பின் (நெடுங்காலமாக நீங்கள் செய்துகொண்டு வந்த தீமைகளின் பயனாக) உங்களுடைய ஹிருதயங்கள் கடினமாய்விட்டன; ஆதலின், அவை—(அந்த ஹிருதயங்கள் கடினத்தில்) கற்பாறைகளேபோல் (இல்லை!) இன்னம் (அவற்றைக்காட்டினும்) அதிகம் கடினமாய்விட்டன. மேலும், நிச்சயமாகக் கற்பாறைகளுள் நீரருவிகள் வெடித்து வெளியாகும்படியான சில பாறைகளு(மு)ண்டு; இன்னம், நிச்சயமாகவே (சில பாறைகள்) வெடித்தால் அவற்றினின்று நீரானது (பீறிட்டு) வெளிப்படும்படியான அப்படிப்பட்டவைகளு(மு)ண்டு; மேலும், சந்தேகமில்லாமல் (சில பாறைகள்) அவற்றினின்று அல்லாஹ்வின் அச்சத்தினால் (நடுங்கி உருண்டு) வீழக்கூடியவைகளு(மு)ண்டு; மேலும், நீங்கள் செய்வது குறித்து அல்லாஹ் பராமுகமுள்ளவனா யில்லை.

75. (ஏ உண்மையை ஒத்துக்கொண்ட என் உத்தம அடியார்காள்! எந்த யூதர்களின் தௌர்ப்பாக்கியம் இங்ஙனமிருக்கின்றதோ, அவர்கள்பா லிருந்து என்னவிதமான நன்மையை எதிர்பார்த்தல் முடியும்? எனவே) அவர்கள் உங்கள் (வார்த்தையின்மீது தங்கள் ஆலோசனையைச் செலுத்தி, அதில் காணப்படும் உண்மையின்) மீது நன்னம்பிக்கை கொள்ளுவார்களென்று நீங்கள் ஆசை வைக்கின்றீர்கள்? இன்னம், அவர்களுள்ளே அல்லாஹ்வின் வசனத்தைச் செவி மடுத்துப் பிறகு, அதை (நன்கு) தாங்கள் ஓர்ந்துகொண்ட பின்னர் அதில் மாறுபாடு செய்கின்ற ஒரு கூட்டத்தார் இருந்தே யிருக்கிறார்கள்; அவர்களோ (உண்மையைச் செவ்வனே) அறிகின்றார்கள்.

76. இன்ன(மு)ம் அவர்கள் (நிலைமையைச் சற்றே உற்று நோக்குங்கள். அல்லாஹ்வின்மீது) நன்னம்பிக்கை கொண்டவர்

களுக்கும் நன்மைபுரிய வேண்டுமென்றும், (மற்ற) மனிதர்களுக்கு(ம்) நல்ல வசனம் நீங்கள் சொல்லவேண்டு மென்றும், தொழுகையைக் கடைப்பிடியுங்க ளென்றும், ஏழை வரியைக் கொடுங்களென்றும் நாம் பனீஇஸ்ராயீலிடமிருந்து உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்டபோது (நடந்த விஷயத்தை நினைத்துப் பாருங்கள். இவையே இறைவன் மீது நன்னம்பிக்கை கொள்வதற்கும் நற்கருமங்களைச் செய்வதற்கும் மூல அஸ்திபார உண்மைகளாயிருக்கின்றன. எனவேதான் இதைப்பற்றி நாம் அவர்களிடம் உறுதிப்பாட்டை வாங்கினோம்.) பிறகு உங்களுள் ஒரு சில (மனித)ரைத் தவிர்த்து (மற்றைய நீங்கள் எல்லோரும் உறுதிப்பாட்டின் மீது நிலைத்திராமல்) திரும்பிவிட்டீர்கள்; இன்னம், நீங்கள் (நேரான பாதையை விட்டுத் தூரத்தில் விலகி) முகந்திரும்பக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள்.

84. மேலும், நீங்கள் உங்கள் (மக்களின்) உதிரங்களை (அக்கிரமமாக)ச் சிந்த வேண்டாமென்றும், உங்கள் மக்களை உங்களுடைய இல்லங்களைவிட்டு (அக்கிரமமாக) நீங்கள் அப்புறப்படுத்த வேண்டாமென்றும் நாம் உங்களிடமிருந்து உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொண்ட போது (நடந்த விஷயத்தையும் நினைத்துப் பாருங்கள்.) பிறகு நீங்கள் (அதற்குச்) சாக்ஷியம் கூறியவர்களாய் உறுதிப்பாடு செய்தீர்கள்.

85. பிறகு (ஏ இஸ்ராயீலின் கூட்டத்தவர்காள்!) நீங்கள் தாமே நும்மவ(ருள் சிலர் சில)ரைக் கொலைபுரிகிறவர்க ளாகவும், நுங்களுள் ஒரு (சில) கூட்டத்தை அவர்களுடைய இல்லங்களிலிருந்து வெளிக்கிளப்புகிறவர்க ளாகவும், அவர்களுக்கு (இடர்ப்பாடு செய்வதில்) பாபமும் அதிக்கிரமுமான செய்கைகளைக்கொண்டு நீங்கள் (நுங்களுள்) ஒருவருக் கொருவர் உதவிபுரியும் கூட்டத்தார்களாகவும் இருக்கின்றீர்கள். (இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆண்டவனுடைய சட்டத்தில் யாது தண்டனையுள தென்பதை நுங்களுள் ஒருவரும் ஞாபகப்படுத்திக் கொள்ளவே யில்லை.) மேலும் (நுங்களால் நாடு கடத்தப்பட்ட) அவர்கள் (அன்னியர்வயம்) சிறைபட்டவர்களாக உங்களிடம் வந்தால் (நுமது மார்க்கச் சட்டப்படி அவர்களை விடுவிக்க வேண்டுமென்று சொல்லி) அவர்களுக்குப் பரிக்கிரயம் கொடு(த்து அவர்களை மீட்பி)க்கிறீர்கள்; (இப்படி நீங்கள் செய்வதற்கு முன்) அவர்களை(த் தங்கள் இல்லங்களைவிட்டு) வெளிக் கிளப்புவது ஆகாதென்று உங்களுக்கு விலக்காக்கப் பட்டதா யிருக்கிறது (என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வில்லை. இஃது ஏன்? என்ன) நீங்கள் வேதத்தின் (போதனையின்படி,

சிறையாளர்களை விடுவிப்ப தென்னும்) ஒரு பகுதியில் (மட்டுமே) நன்னம்பிக்கைவைத்து, (அநியாயம் செய்யக்கூடாதென்ற) மற்றொரு பகுதியை நிராகரித்தும் விடுகிறீர்களா? எனவே (நீங்களே கூறுங்கள்!) உங்களுள் இப்படிச் செய்பவர்களின் சிக்ஷையானது, இவ்வுலக வாழ்க்கை(யான இம்மை)யில் (சிறுமையும்) மானக்கேடும், நியாயத் தீர்ப்புநாளில்—(மறுமையில்) மிகக்கொடூர வேதனையின் பக்கல் அவர்கள் திருப்பப் படுவதுமே யன்றி வேறென்ன இருக்கின்றது? இன்னம், நீங்கள் செய்துகொண்டிருப்பது குறித்து அல்லாஹ் பராமுகமுள்ளவனு யில்லை.

86. இவர்களே (மரணத்துக்குப் பின்னுள்ள) இறுதி (வாழ்க்கை)க்கு ஈடாக இவ்வுலக வாழ்க்கையைக் கிரயத்துக்குப் பெற்றுக் கொண்டவர்களா யிருக்கிறார்கள். ஆகலின் (இப்படிப்பட்ட மனிதர்கள் நன்மையைப் பெற்று ஜயமடைவார்களென் றெதிர் பார்ப்பதற் கில்லை. எனவே) அவர்களுக்கு வேதனை இலேசாக்கப் படமாட்டாது; இன்னம், அவர்கள் (வேறு எவராலும்) உதவியும் புரியப்பட மாட்டார்கள்.

---

*யஹூதிகள் நபி பெருமானை ஏற்க மறுத்துக் கிளப்பிய ஆட்சேபங்கள் இதில் கூறப்படுகின்றன.*

87. மேலும் (நுங்களுடைய நேர்வழிக்காக முதலில் மகா) நிச்சயமாக மூஸாவுக்கு(த் தவ்ராத்)வேதத்தைக் கொடுத்தோம்.(பிறகு) அவருக்குப் பின்னே ஒருவருக்குப் பின் மற்றொருவராகத் தூதர்களை அனுப்பிவைத்துக்கொண்டு மிருந்தோம்; மேலும் (இறுதியாக) மர்யத்தின் மகனான ஈஸாவுக்குத் துலக்கமான அத்தாக்ஷிகளைக் கொடுத்துப் பரிசுத்தமான ஆன்மாவைக் கொண்டும் அவரைப் பலப்படுத்தினோம். (ஆனால், அவைகளுள் ஒவ்வோர் அழைப்பையும் நீங்கள் மறுத்துக்கொண்டே யிருந்தீர்கள்.) உங்கள் ஹிருதயங்கள் இச்சிக்காத (ஒரு விஷயத்)தை ஒரு தூதர் உங்களிடம் கொண்டுவரும்போதெல்லாம் ஏன் நீங்கள் கர்வம் பாராட்டினீர்கள்? பின்பு (அத் தூதர்களுள்ளிருந்து) ஒரு கூட்டத்தைப் பொய்யரென் றாக்கினீர்கள்; இன்னம், ஒரு கூட்டத்தைக் கொலை(யும்) செய்கின்றீர்கள்.

88. மேலும் (இந்த மனிதர்கள் தங்களுடைய அறிவற்ற, உணர்ச்சியற்ற தன்மையின்மீது பெருமை கொண்டவர்களாய்)

"எங்களுடைய ஹிருதயங்கள் (மூடிகளால்)மூடப்பட்டிருக்கின்றன," என்று கூறுகிறார்கள்; (அவ்வாறில்லை!) ஆனால், அவர்களுடைய நிராகரிக்கும் தன்மையின் காரணத்தினால் அல்லாஹ் அவர்களை (முனிந்து) சபித்தான். (எனவே, உண்மையான உபதேசத்தைச் செவியேற்று, அதனால் நற்பயனடையும் சக்தியே அவர்களிடம் இல்லாமலழிந்துவிட்டது.) ஆதலின், அவர்கள் மிகக் கொஞ்சமாகவே நன்னம்பிக்கை கொள்ளுகிறார்கள்.

89. மேலும், அவர்களுடன் இருக்கின்ற (வேதத்)தை உறுதிப்படுத்திக்கொண்டு அல்லாஹ்விடத்திலிருந்து ஒரு வேதமானது அவர்களிடம் வந்தபோது, அவர்களுமே இதற்கு முன் நிராகரித்தவர்கள்மீது (தங்களுக்கு) வெற்றி கிடைக்க வேண்டுமென்று (அஃதாவது, தவ்ராத்தின் முன்னெச்சரிக்கையின்படி அவ்வேதம் வெளியாக வேண்டுமென்று) வேண்டிக்கொள்பவராக இருந்தார்கள்—(ஆனால்) எப்பொழுது அவர்கள் அறிந்திருந்த அவ்(வேத) விஷயமானது அவர்களிடம் வந்ததோ (அப்பொழுது) அதை (அவர்கள்) நிராகரித்து விட்டார்கள்; ஆதலின் (உண்மையை உணர்ந்திருந்தும் அதை) நிராகரிப்பவர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டா யிருக்கின்றது.

90. (அவர்களது அபாக்கியசாலித்தனத்தின்மீது ஐயகோ!) அல்லாஹ் தன்னுடைய அடியார்களுள்ளிருந்து தான்நாடியவர் மீது தன்னுடைய அனுக்கிரகத்தினின்று—(வேத போதனையை) இறக்கி வைத்ததை(க் கண்டு) கலகத்துக்காக, அல்லாஹ் இறக்கி வைத்ததை(த் தாங்கள் அறிந்தவர்களா யிருந்தும்) நிராகரிப்பதனால் தங்களுடைய ஆத்மாக்க(ளின் நன்மைக)ளை எதற்கீடாக விற்றுவிட்டார்களோ, அது(வே) கெட்டதாய் விட்டது.[9] ஆதலின், அவர்கள் (அல்லாஹ்வின்) கோபத்திற்குமேல் கோபத்திற்குப் பாத்திரர்களாய் விட்டார்கள். இன்னம் (சத்தியத்தை) நிராகரிப்பவர்களுக்கு அவமானமான வேதனை(தான் நிரந்தரமா) யுண்டு.

91. மேலும், "அல்லாஹ் இறக்கி யிருப்பதன்மீது நீங்கள் நன்னம்பிக்கை கொள்ளுங்கள்," என்று அவர்களுக்குச் சொல்லப்படும்போது, "எங்களுக்கு வெளியாக்கப்பட்டத(ா யுள்ள

9. இங்ஙனம் வேத போதனையையும் நபித்துவத்தையும் அல்லாஹ் பனீ இஸ்ராயீல்களான இவர்களுடைய சந்ததியார்களுக்கு மட்டுமேதாம் கொடுக்க வேண்டுமென்பதில்லை. எனவே இவர்கள், முன்னமேயே தங்கள் கெட்ட நடக்கைகளின் பயனாய்க் கேவலமானவர்களாகவும் இழிவாக்கப்பட்டவர்களாகவும் மாறிப்போயிருந்தனர். ஆனால், இப்பொழுது செய்த இந்நிராகரிப்பால் தங்களுடைய நிலைமையை இன்னமும் அதிக சீர்கேடடையும்படி செய்துகொண்டுவிட்டார்கள்,

தவ்ராத்தி)ன்மீதேதான் நன்னம்பிக்கைகொள்ளுகிறோம்," என்று சொல்லுகிறார்கள்; மேலும், அஃதல்லாத மற்ற (வேதத்)தை நிராகரிக்கிறார்கள்; அ(ந்த மற்ற)தோ உண்மையுள்ளதாயும் அவர்களிடமிருக்கிற (வேதத்)தை உண்மைப்படுத்துவதாயு மிருக்கிறது. (எவ்வாறாயினும், ஏ நபியே!) சொல்வீராக: "அவ்வாறாயின், நீங்கள் (உங்கள் வேதத்தின் மீது) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருந்தீர்களேல், (இதற்கு) முன்னே ஏன் நீங்கள் அல்லாஹ்வின் நபிமார்களைக் கொலை புரிந்தீர்கள்? (அந் நபிமார்களோ தவ்ராத்தில் கூறிய வண்ணம் நடக்கும்படி தானே உங்களுக்கு உபதேசம் செய்தார்கள்? நீங்களோ அவர்கள் வார்த்தையைக் கேளாமல் முகந் திருப்பிக்கொண்டீர்கள்.)"

92. மேலும், நிச்சயமாகவே உங்கள்பால் மூஸா துலக்கமான அத்தாக்ஷிகளுடனே வந்தார்; பிறகு (அவர் நாற்பதுநாள் உங்களை விட்டுத் தூரமா யிருந்தார். அதுசமயம்) அவருக்குப் பின்னே(யே நீங்கள்) கன்றுக்குட்டியை(த் தெய்வமாக)ப் பற்றிக்கொண்டீர்கள்; மேலும், நீங்கள் (அப்படிச் செய்து உங்கள் நன்னம்பிக்கைக்கு விரோதமாக நடந்துகொண்டதால்) அக்கிரமக்காரராய் இருக்கின்றீர்கள்.

93. மேலும், நாம் உங்களிடமிருந்து உறுதி மொழி வாங்கி, மேலும் உங்களுக்குமேலே தூரை—(அந்த மலைச் சிகரத்தை) உயர்த்தினபோது, (நடந்ததை மீண்டும் நினைத்துப் பாருங்கள். அது சமயம் உங்களுக்குக் கட்டளை இடப்பட்டது:) "நாம் உங்களுக்குக் கொடுத்திருப்பதை உறுதியாகப் பற்றிப் பிடியுங்கள்; மேலும், கேளுங்கள் (அஃதாவது, தாழ்மையுடன் அதற்கு வழிபடுங்கள்.)" (அதற்கு உங்கள் வர்க்கத்தார்கள் நாவினால் மட்டுமே) "(நாங்கள்) கேட்டுக்கொண்டோம்" (என்று) சொன்னார்கள். மேலும் (ஹிருதயங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்:) "நாங்கள் (அதற்குக்) கீழ்ப்படியவில்லை." மேலும், (அவர்கள்) தங்கள் நிராகரிப்பின் பயனாகக் கன்றுக் குட்டியை—(அதன் பிரியத்தை)த் தங்களுடைய ஹிருதயங்களுக்குள்ளே நிரப்பிக்கொள்ளப் பெற்றார்கள். (எனவே, ஏ நபியே!) சொல்வீராக: "நீங்கள் (உண்மையழைப்பைப் பொருட்படுத்தாமல் இதுவிரு கொண்டு) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பின் (இப்படிப்பட்ட) உங்களுடைய நன்னம்பிக்கை உங்களுக்கு எதை ஏவுகின்றதோ, அது கெட்டதாகவே யிருக்கின்றது."

94. (அதுவேயு மன்றி, இறுதி நாளின் ஈடேற்றமானது அவர்களுக்கு மட்டுமேதா னிருக்கின்றது என்று அவர்கள

கூறுகின்றார்கள். எனவே, (ஏ நபியே! நீர்) சொல்வீராக: "மற்றைய மனிதர்களுக்கில்லாமல் அல்லாஹ்வினிடத்திலிருக்கும் (மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கையின் இன்பமயமான) இறுதி வீடானது உங்களுக்காகமட்டுமே இருக்குமாயின், பின்னர் (நீங்கள் இவ்வுலகத்திற்கிடாக மறு உலகத்தையே அதிகமதிகம் விரும்பிநிற்றல் வேண்டும். ஆதலால்) நீங்கள் (கூறுவதில்) உண்மையாளராயிருப்பின் (அச்சமற்று) மரணத்தை ஆசிப்பீர்களாக." (ஏ நபியே! அவர்கள் செய்துகொண்டிருக்கும் கெட்ட நடக்கையின் பயனாக இங்ஙனம் அவர்கள் செய்ய முற்படவே மாட்டார்கள்.)

95. மேலும், அவர்களுடைய கரங்கள் முன்னரே அனுப்பியிருப்பத(ன பாபத்தி)ன் காரணத்தால் அவர்கள் ஒருபோதும் (தங்கள் வார்த்தையின்படி) அ(ந்த மரணத்)தை ஆசிக்க மாட்டார்கள்; மேலும், அல்லாஹ் அநியாயக்காரர்களை அறிகிறவனா யிருக்கின்றான்.

96. (இது மட்டுமா?) மேலும், மனிதர்களுள் (ளெல்லாம் நீண்ட காலம்) உயிருடனிருப்பதில் (அளவுகடந்த) அதிக ஆர்வமுள்ளவர்களாகவும், (அல்லாஹ்வுக்கு) இணைவைப்பவர்களைக் காட்டினும் (அதிக ஆவலுள்ளவர்களாகவும்) அவர்கள் இருப்பதை நீர் (மகா) நிச்சயமாகக் காண்பீர்; அவர்களுள் ஒவ்வொருவரும் தமக்கு ஆயிரம் ஆண்டு(ள்ள நீண்ட ஆயுள்) கொடுக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார்; (அவர்கள் எத்தனை நாள் ஜீவித்திருப்பினும் இறுதியாக ஒருநாள் மரணமடைந்தே தீரல் நேரும். எனவே, அவர்கள் இஷ்டப்படி) அவருக்கு (ஒரு நீண்ட) ஆயுள் கொடுக்கப்படுவது, அவரை வேதனையைவிட்டு அப்பால் ஒருவகையாலும் ஒதுக்கிக் (காப்பாற்றி)விட மாட்டாது. மேலும், அல்லாஹ் அவர்கள் செய்வதைக் காண்கிறவனா யிருக்கின்றான்.

---

## பிரிவு—12

**நபி பெருமானிடத்து அந்த யூதர்கள் காட்டிய விரோதப்பான்மையும், அவர்கட்கு எதிராக அன்னார் செய்த சூழ்ச்சிகளும்.**

97. (ஏ நபியே!) "எவனேனும் ஜிப்ரீலுக்குப் பகைவனா யிருப்பின்—(அவன் அல்லாஹ்வுக்கே பகைவனா யிருக்கிறான்" என்று) சொல்வீராக; ஏனெனின், நிச்சயமாக அவர் இதற்கு முன்னிருந்த (வேதத்)தை உறுதிப்படுத்திக்கொண்டு, மேலும், நன்னம்பிக்கை கொண்டோருக்கு நல்வழி (காட்டி)யாகவும் நற்செய்தி

யாகவும் இருக்கின்ற இ(வ்வேதத்)தை அல்லாஹ்வின் உத்தரவைக்கொண்டு உம்முடைய ஹிருதயத்தில் இறக்கினார்.

98. (பின்னரும் அம்மனிதர்கள் நபித்துவத்தை மறுத்து, அறியாத்தனத்தாலும் முரட்டுப் பிடிவாதத்தாலும், "நாங்கள் ஜிப்ரீலால் வெளியாக்கப்பட்ட வசனங்களை ஒப்புக்கொள்ளமாட்டோம்," என்று கூறுவார்களாயின், நீர் சொல்வீராக:) "எவனேனும் அல்லாஹ்வுக்கும் அவனுடைய வானவருக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஜிப்ரீலுக்கும் மீக்காலுக்கும் பகைவனாயிருந்தால், நிச்சயமாக அல்லாஹ்(வும் சத்தியத்தை) நிராகரிப்பவர்களின் பகைவனாயிருக்கிறான்."

99. மேலும் (ஏ நபியே!) திட்டமாக நாம் நும்பால் துலக்கமான அத்தாக்ஷிகளை வெளியாக்கினோம்; மேலும், (மார்க்க) ஹத்தை மீறியவர்களல்லாமல் (மற்றெவரும்) அவற்றை நிராகரிப்பதில்லை.

100. (அவர்கள் இது சமயம் சத்திய அழைப்பை மறுத்து நிராகரிப்பதில் ஆச்சரியமென்ன விருக்கிறது? இதற்கு முன்னம் அவர்கள் மனப்பான்மை எப்படியிருந்த தென்பதை நினைத்துப் பாருங்கள்.) அவர்கள் ஏதேனு மோர் உறுதி மொழியைச் செய்து கொடுத்தபோ தெல்லாம் அவர்களுள் ஒரு கூட்டம் அதை அப்பால் எடுத்தெறிந்து விட்டதா? (இல்லையா? ஆம்! அவர்கள் எறிந்தேவிட்டார்கள்.) ஆனால் (உண்மைவிஷய மென்னவெனின்) அவர்களுள் பெரும்பான்மையோர் (தங்கள் ஹிருதயங்களைக்கொண்டு) நன்னம்பிக்கை கொள்ளுகிறவர்களாக இல்லை.

101. மேலும் (உதாஹரணமாகப் பார்ப்பீர்!) அவர்களிடத்திலிருப்பதை—(தவ்ராத் வேதத்தை) உறுதிப்படுத்தியவராய், அல்லாஹ்வினிடத்திலிருந்து அவர்களிடம் தூதர்—(முஹம்மத்) வந்தபோது, வேதத்தை அருளப்பெற்றவர்களுள்ளிருந்தே ஒரு கூட்டத்தார் அல்லாஹ்வுடைய வேதத்தை (அறிந்திருந்தும், ஒன்றையும்) அறியாதவரேபோல் அவர்களுடைய புறமுதுகுகளின்பக்கல் எறிந்துவிட்டார்கள்.

102. மேலும் (கூர்ந்து நோக்குங்கள்! அவர்கள்) ஸுலைமானுடைய அரசாங்கத்தின்மீது ஷைத்தான்கள் ஓதியதை(யே) பின்பற்றி யொழுகினார்கள்; (ஆனால், உண்மையிலே ஸுலைமான்மீது பொய்ம் மொழியையே அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.) மேலும், ஸுலைமான் (சத்தியத்தை) நிராகரிக்கவில்லை; ஆனால் (உண்மையை மறுக்கும்) ஷைத்தான்க(ளே)

நிராகரிப்பைச் செய்து(ம்), மனிதர்களுக்கு மாயத்தைக் கற்றுக் கொடுத்தும் வந்தார்கள்; (அதுவேயுமன்றி அவர்கள்பால் பிரா பல்யமா யிருப்பதேபோல், சூன்யமும் மாயமுமாய்) அது பாபிலி லுள்ள ஹாரூத் மாரூத் என்னும் இரண்டு வானவர்மீதும் இறக்கப் படவில்லை; ஆனால் (உண்மையில் நடப்ப தென்னவெனின்) "நாங் கள் ஒரு வெறும் சோதனையாகவே யிருக்கிறோம்; ஆதலின் (நீங் கள் இதைக்கற்றுக்கொண்டு) நிராகரிப்பவராய்ப்போகாதீர்(கள்)," என்று சொல்லும்வரை அவர்களிருவரும் ஒருவருக்கும் (அதைக்) கற்றுக் கொடுக்க வில்லை;[10] ஆதலின் (பின்னரும் ஷைத்தான்கள்) அவ்விருவரிடத்திருந்து கணவனுக்கும் அவன் மனைவிக்குமிடையே எதைக்கொண்டு பிரிவினையை உண்டு பண்ணுவார்களோ அதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்; (ஆனால்) அல்லாஹ்வின் அனுமதியி ருந்தா லொழிய, அவர்கள் அதைக்கொண்டு ஒருவருக்கும் துன்பம் விளைவிப்பவர்களல்லர்; மேலும், (அவர்கள்) தங்களுக்கே துன்பம் தருவதையும் தங்களுக்கு (யாதொரு விதமான) இலாபந்தராததை யுமே கற்றுக்கொள்ளுகிறார்கள்; மேலும், நிச்சயமாகவே அதைக் கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டவன் இறுதி(வாழ்க்கை)யில் யாதொரு (நன்மையின்) விகிதத்தையும் பெறமாட்டா னென்று (அவர்கள்) அறிந்திருக்கிறார்கள்; மேலும், நிச்சயமாகவே எதற் கிடாகத் (தங்களின் நன்மைக்குரிய) ஆன்மாக்களைத் தாங்கள் கிரயத்திற்குப் பெற்றுக் கொண்டார்களோ, அதுவானது கெட்டதா(கவே) யிருக்கின்றது. ஆ! அவர்கள் (இதை) அறிந் திருத்தல் வேண்டுமே!

103. மேலும், அவர்கள் (அல்லாஹ்வின் மெய்யான சத்தியத் தின்மீது) நன்னம்பிக்கைகொண்டு (தீமையினின்று தம்மைக்)காத் துக்கொண் டிருப்பார்களாயின், (நிச்சயமாகவே) அல்லாஹ்வினி டத்திலிருந் துண்டாகும் சன்மானமானது மிக மேலானதாயிருக் கும். ஆ! அவர்கள் (இதை) அறிந்திருத்தல் வேண்டுமே!

---

10. இதனால் விளங்கக் கிடப்பதாவது: மாயமந்திரங்களைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களும் அவை அல்லாஹ்வின் ஆணைக்கும் அவனுக்கு அடிபணிந்து நடப்பதற் கும் முற்றமுற்ற முரணானவையாகவே யிருக்கின்றனவென்றே ஏற்றுக்கொள்ளுகின்ற னர். ஆதலால், இத்தகைய ஞானம் மக்களுக்கு நன்மையைக் கொடுப்பதைக் காட்டி லும் தீமையையே அதிகம் கொடுக்கத்தக்கதாயிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

## பிரிவு—13

**பழைய வேதங்களெல்லாம் எவ்வாறு மாற்றப்பட்டுக் கிடக்கின்றன வென்றும், அல்லாஹ்வுக்கு முற்றும் தலைசாய்த்த லென்னும்—இஸ்லாத்தில் எவ்வாறு மிக்க விரிவான பரிபூரணச் சட்டங்களெல்லாம் அருளப்பட்டிருக்கின்றனவென்றும் இப்பிரிவு எடுத்தோதுகின்றது.**

104. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! (நீங்கள் இஸ்லாத்தின் நபியை விளிப்பீர்களாயின், சத்தியத்தை நிராகரிப்பவர்களே போல்) "ராஇனா" என்று (சந்தேகத்துக் குரியதான பதத்தைச்) சொல்லாதீர்கள். ஆனால் "உன்ளுர்னா" என்று (சந்தேகமற்ற நேர்மையான பதத்தைச்) சொல்லி (அவர் செப்புவதை) உற்றுங்கேளுங்கள்;[11] மேலும், நிராகரிப்பவர்களுக்கு நோவுண்ட தண்டனை யுண்டு.

105. வேதத்தை யுடையவர்களுள் (சத்தியத்தை) நிராகரித்தவர்களும், இணைவைப்பவர்களும் உங்களுடைய ரக்ஷகனிடத்திருந்து உங்கள் மீது யாதொரு நன்மையான—(தேவஞான வெளிப்பாடாய) காரியமும் இறக்கப்படுவதை விரும்புகிறதில்லை; (எனவே, அவர்கள் பற்பலவிதமான சந்தேகங்களை உண்டுபண்ணி, உங்களை நேரான பாதையினின்று விலக்கி வைக்க எண்ணுகின்றார்கள்.) ஆனால், அல்லாஹ் தான் நாடியவரைத் தன் கருணைக்கு உரிமையாக்கிக் கொள்ளுகிறான்; மேலும், அல்லாஹ் பெருங்கொடையாளியாக விருக்கிறான்.

106. (நம்மிடம் வேத வெளிப்பாட்டின் சட்டமானது எவ்வாறுள தென்பதையும் தெரிந்துகொள்ளுங்கள்:) யாதோர் அத்தாக்ஷியை(யும்) யாம் மாற்றிவிட்டோமாயின், அல்லது அதனை மறக்கச்செய்து விட்டோமாயின், அதைக்காட்டிலும் மேலானதை(யே) அல்லது அதற்கொப்பானதை(யே) கொண்டுவருகிறோம். (எனவே, இப்பொழுது ஒரு புதிய மார்க்கம் வெளியாகுமாயின், அதில் ஆச்சரியப் படுவதற் கொன்றும் காரணமில்லை. என்ன!) எல்லா வஸ்துக்களின் மீதும் அல்லாஹ் ஆண்மைபெற்றவனாக விருக்கிறானென்று நீர் அறியவில்லையா?

---

11. ராஇனா என்பது, எங்களைப் பார்ப்பீராக, எங்களுக்குச் செவி சாய்ப்பீராக, என்ற அர்த்தங் கொண்டிருந்தபோதினும், யூதர்கள் இப்பதத்தை இடித்துக்கூறுமிடங்களிலேயே அநேகமாய் உபயோகிப்பது வழக்கமாதலின், இதைச் சர்வ சாதாரண முஸ்லிம்களும் கபடமற்ற மனத்துடன் நபிகள் நாயகம்ஸல் அவர்களை அழைக்கும்போது உபயோகப்படுத்தி வந்தார்கள். இதைக்கொண்டு யூதர்கள் கழிபே ருவகை எய்தினர். எனவேதான் இவ்வார்த்தையைச் சொல்லி அழைக்கவேண்டாமென ஆண்டவன் முஸ்லிம்களுக்குக் கூறினான்.

107. வானங்களின், இன்னம் பூமியின் ராஜ்யாதிகாரமானது அல்லாஹ்வுக்குரியதா யிருக்கிறதென்பதை நீர் அறியவில்லையா? அல்லாஹ்வைத்தவிர்த்து உங்களுக்கு (வேறொருவ) பாதுகாவலன் இல்லை; (வேறோர்) உதவியாளனும் இல்லை.

108. (என்ன! இதற்கு) முன் மூஸா (தங்கூட்டத்தார்களால்) கேட்கப்பட்டதே போல் நீங்கள் நுங்களுடைய தூதரிடத்தில் (மார்க்க சம்பந்தமாகக் குயுக்தியான) கேள்வி கேட்க நாடுகிறீர்களோ? மேலும், எவனொருவன் நன்னம்பிக்கைக் கீடாக நிராகரிப்பை(ப் பண்ட மாற்றாக) மாற்றிக்கொள்ளுகிறானோ, அவன் நிச்சயமாகவே (ஐயம் பெறுவதற்கான) நேர் வழியை விட்டு(க் கோடிய) வழிக்கேட்டி லாயினன்.

109. (நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்:) வேதத்தையுடையவர்க ளுள்ளிருந்து அதிகமானவர்கள், தங்கள்பாலுள்ள பொறாமையால், நீங்கள் நன்னம்பிக்கைகொண்ட பிறகு (நீங்கள் செய்ததே சரியானதென்று) அவர்களுக்கு உண்மை வெளியான பின்னரும் (அந் நன்னம்பிக்கையின் மீது நிலைத்திராமல்) உங்களை நிராகரிப்பவராகத் திருப்பிவிடலா மென்று விருப்பங் கொள்ளுகின்றார்கள்; எனவே, அல்லாஹ் தன்னுடைய கட்டளையைக் கொண்டு வருமட்டும் நீங்கள் (அன்னாருடன் வாளா சண்டையிட்டுக்கொண்டு நேரத்தை வீணாக்காது அவர்களுடைய தவற்றைப்) பொறுத்துக் கொள்வீர்களாக; மன்னித்தும் விடுவீர்களாக. நிச்சயமாகவே அல்லாஹ் எல்லா வஸ்துக்களின் மீதும் ஆண்மை பெற்றவனாக விருக்கின்றான்.

110. மேலும் (நீங்கள், உங்களுடைய நன்னம்பிக்கையால் மேன்மேலும் அதிகமான ஆன்மசக்தியைப் பெறுவதற்காகத்) தொழுகையைக் கடைப்பிடியுங்கள்; ஏழை விகிதத்தையும் கொடுங்கள்; இன்னம், உங்களுக்காக எப்படிப்பட்ட நன்மையை (மரணமடையுமுன்) முற்படுத்தி வைக்கிறீர்களோ, அதை அல்லாஹ்வினிடத்தில் (மரணமடைந்த பின்) பெற்றுக்கொள்வீர்கள்; நிச்சயமாகவே அல்லாஹ் நீங்கள் செய்வதை (யெல்லாம்) பார்க்கிறவனா யிருக்கிறான்.

111. மேலும் (யூதர்களும் கிறிஸ்துவர்களும் தங்கள்வெற்று நம்பிக்கையின் பிரகாரம்) எஹூதியாகவோ, அல்லது நஸாராவாகவோ இருப்பவரைத்தவிர்த்து (வேறு ஒருவனும்) சுவர்க்கத்துள் புகமாட்டானென்று சொல்லுகிறார்கள்; இவை அவர்களின் வெறும் (மனோராஜ்யமான) எண்ணங்களா யிருக்கின்றன. (இஃது

உண்மையாயின், ஏ நபியே!) சொல்வீராக: "நீங்கள் உண்மையாளர்களா யிருப்பீர்களாயின், உங்களுடைய நியாயப் பிரமாணத்தைக் கொண்டு வாருங்கள் (பார்ப்போம்)!"

112. அவ்வா றில்லை! (ஈடேற்றத்திற்குரிய சன்மார்க்கம் இன்னம் திறந்தே யுளது; ஆனல், அது குறிப்பிட்ட எந்த ஒரு வர்க்கத்திற்கும் சொந்தமான தன்று. நன்னம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்பவர் எவ்வகுப்பைச் சார்ந்தவரா யிருப்பினும், அன்னவர் நன்மையையே பெறுவர். எனவே) எவரொருவர் அல்லாஹ்வுக்கு முற்றிலும் தலைசாய்த்து அவர் (மனிதர்களுக்கு அதிக) நன்மையைச் செய்கிறவராயு மிருக்கின்றாரோ, அவருக்கு அவருடைய ரக்ஷகனிடத்து அவரது சன்மான மிருக்கின்றது; மேலும், அவர்களுக்கு (யாதொருவிதமான) அச்ச(மு) மில்லை; அவர்கள் (எவ்விதத்தும்) துயருறவு மாட்டார்கள்.

## பிரிவு—14

எல்லாச் சமயங்களிலும் சிற்சில நன்மைகள் காணப்படினும், இஸ்லாத்தில் மட்டுமேதான் சன்மார்க்க மென்பது பரிபூரண மாக்கப்பட்டிருக்கிறது. இதனல்தான் இங்கு அல்லாஹ்வுக்கு முற்றிலும் சிரஞ்சாய்த்த லென்பது, 2:285, 286-வது வாக்கியங்களின் கருத்தைச் சுட்டிக் காட்டி நிற்கின்றது.

113. மேலும் (அவர்களுள்ளேயே ஒருவரை யொருவர் பொய்ய ராக்கிக்கொண்டு, தாம்தாமே நேரான பாதையைப் பின் பற்றி நிற்பவர்களென் றெண்ணிய வண்ணம்) கிறிஸ்துவர்கள் (நேரான) ஒரு வஸ்துவின்மீது இல்லையென்று யூதர்கள் சொல்லுகிறார்கள்; இன்னம் (இப்படியே) யூதர்கள் (நேரான) ஒரு வஸ்துவின் மீது இல்லையென்று கிறிஸ்துவர்கள் சொல்லுகிறார்கள்; அவர்களுமோ (இருவரும் ஒரே ஆண்டவனிடமிருந்து வந்த) வேதத்தை(யே) ஓதுகிறார்கள்; (இதுமட்டுமா?) இதே விதமாக அவர்களுடைய வார்த்தையைப்போலவே (பரிசுத்த போதனையை) அறியாதவர்களும்[12] சொன்னர்கள்; ஆகலின், அல்லாஹ் அவர்கள் எதில் விகற்பம் செய்துகொண் டிருந்தார்களோ அதில் நியாயத் தீர்ப்பு நாளன்று அவர்களுக்கிடையே தீர்ப்புச்செய்வான்.[13]

12. அஃதாவது, அரப்நாட்டி லிருந்துவந்த பலதெய்வ வணக்கக்காரர்களும் இப்படியேதான் கூறிநின்றனர். என்னெனின், அவர்களிருந்த மார்க்கமே சரியானதென்றும், இதர எல்லா மார்க்கங்களும் தவறான வென்றுமே மனோராஜ்யம் செய்து கொண்டிருந்தனர்.

13. ஒருவர் மற்றவர்மீது மார்க்க சம்பந்தமான பொறாமையை அதிகம்கொண்டு சென்று, ஒவ்வொரு வர்க்கத்தாரும் தத் தமக்கெனத் தனித்தனியே தொழும் ஆலயங்

114. மேலும் (ஊன்றிப்பாருங்கள்:) அல்லாஹ்வின் ஆலயங்களில் அவனுடைய (திரு) நாமம் ஞாபகப்படுத்தப்ப(ட்டு வணங்கப்ப)டுவதைத் தடுக்கிறவனை, இன்னம், அவற்றை நாசமாக்குவதில் முயற்சியெடுத்துக் கொள்ளுகிறவனைக்காட்டினும் பெரிய அநியாயக்காரன் (வேறு) யாவன் (உளன்)? (நன்னம்பிக்கைகொண்ட) அவர்கள் (அக்கிரம மேலீட்டால்) அச்சமுள்ளவர்களாகவே யல்லாமல் அவற்றுள் நுழைவதற்கு (இது சமயம்) தகுதியில்லை.* (அநியாயக்காரர்களான) அவர்களுக்கு இவ்வுலகில் இழிவுண்டு; மேலும், அவர்களுக்கு (மரணத்திற்குப் பின்னுள்ள) இறுதி (நாளின் வாழ்க்கை)யில் பெரிய தண்டனை யுண்டு.

115. மேலும் (உற்று நோக்குங்கள்:) கிழக்குத் திசையும் மேற்குத் திசையும் (ஆகிய வெல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன ; எனவே (அவனை வணங்குவதற்கு ஒரே திசை, ஒரே இடம்தானிருக்கவேண்டு மென்பதில்லை. ஆனால்) எத்திசை (யை நோக்கித்) திரும்புகிறீர்களோ, அங்கு அல்லாஹ்வின் (திருச்ச)முக மிருக்கின்றது ; நிச்சயமாக அல்லாஹ் (தன் சக்தியால்) விசாலமுடையவனாயிருக்கிறான். (சர்வ விஷயங்களையும் தெரிந்து கொள்வதில் அவற்றினை நுண்மையுடனே) அறிகிறவனா யிருக்கிறான்.

116. மேலும் (கிறிஸ்துவர்களைப் பாருங்கள்! அவர்கள்) அல்லாஹ் (மனிதவர்க்கத்தின் பாபத்தை மன்னிப்பதற்காகப்) பிள்ளையை-(மஸீஹை)ப் பெற்றுக்கொண்டானென்று சொல்லுகிறார்கள்; (ஆனால் அதைவிட்டு) அவன் தூய்மையானவன் ; (தனக்கென்ன தேவையை முன்னிட்டு அவன் ஒருவரைத் தன்னுடைய குமாரனாக எடுத்துக்கொள்ள ஆவசியக மிருக்கிறது?) ஆனால், வானங்களிலும் பூமியிலு முண்டாயிருப்பவை (அனைத்தும்) அவனுக்கே உரியன(வா யிருக்கின்றன) ; சர்வமும் அவனுக்கே அடிபணியக் கூடியனவாக(வும்) இருக்கின்றன

117. வானங்களையும் பூமியையும் அற்புதமாகச் சிருஷ்டிப்பவன் ; மேலும் (ஒரு) காரியத்தை(ச் செய்ய)த் தீர்மானிப்பானாயின், (அவனுக்கு எவ்வித உதவியாளரும் மத்தியஸ்தரும் தரகரும் வேண்டுவ தவசியமில்லை ; ஆனால்) அவன் அதற்குச் சொல்வதெல்

களை நிர்மாணித்துக் கொண்டார்கள் ; ஆதலின், ஒருவர்க்கத்தார் மற்றொருவரின் ஆலயத்துக்குள் சென்றுவிட்டால், அங்கு ஆண்டவனை வணங்கவிடாமல் தடைசெய்கின்றனர்; அன்றியும், அவ்வாறு வந்தவருக்குரிய வேறு ஆலயத்தை நாசப்படுத்திவிட வேண்டுமெனவும் நாடுகின்றனர். ஆனால், இவர்களெல்லாரும் ஒரே ஆண்டவனுக்கே வணக்கம் புரிவதாகத்தான் பின்னும் கூறிக்கொள்ளுகின்றனர்.

லாம், "ஆய்விடு !" என்பதே(யாகும்); பிறகு (அக்காரியம் உடனே வெளித்தோற்றத்தில் அவ்வண்ணமே) ஆய்விடுகின்றது.

118. "(நீர் கூறும் இப்போதனையானது உண்மையிலேயே ஆண்டவனிடமிருந்து வந்திருக்குமாயின்) அல்லாஹ் நம்முடன் ஏன் (நேராகப்) பேசுகிறதில்லை ? அல்லது ஏன் நமக்கு (நேரே) ஓர் அத்தாக்ஷியும் வருகிறதில்லை ?" என்று (பரிசுத்த வேதபோதனையைப் பெற்றுக்கொள்ளாத முஷ்ரிகீன்களாய) அறியாத அம்மாக்கள் சொல்லுகின்றார்கள். (இவர்களுடைய அறியாத்தனத்தையும் வழிக்கேட்டையும் கூர்ந்து நோக்குங்கள் !) இவ்விதமே, அவர்களுடைய வார்த்தையைப் போல(வே) அவர்களுக்கு முன்னிருந்தவர்களும் சொன்னார்கள் ; அவர்களுடைய ஹிருதயங்கள் (அனைத்தும் இவ்விஷயத்தில்) ஒன்றுக்கொன்று ஒப்பாய் விட்டன. (அவர்கள் உண்மையிலேயே அத்தாக்ஷிகளை வேண்டுவார்களாயின், ஊன்றிப் பார்க்கட்டும்:) திட்டமாகவே உறுதிகொண்டவர்களின் கூட்டத்திற்கு யாம் (எத்தனையோ) அத்தாக்ஷிகளை விளக்கமாக்கியிருக்கின்றோம்.

119. (ஏ நபியே !) நிச்சயமாக(நாம்)உம்மை (நன்னம்பிக்கை கொண்டு, நற்கருமங்களைச் செய்பவருக்கு) உண்மையைக்கொண்டு சுபசெய்தி கூறுகிறவராகவும் (சத்தியத்தை நிராகரிப்பவருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறவராகவும் அனுப்பியிருக்கிறோம் ;[14] மேலும் (தங்கள் துர்ப்பாக்கியத் தன்மையால்) நரகவாசி(களாய்ப் போனவர்)களைப் பற்றி (நீர்) கேள்வி கேட்கப்படமாட்டீர்.

120. இன்னம், நீர் அவர்களுடைய மதத்தைப் பின்பற்றுகிற வரையில் யூதர்களும் கிறிஸ்துவர்களும் நும்முடனே ஒருபோதும் திருப்தியாக இருக்க மாட்டார்கள். (எனவே, நீர்) "நிச்சயமாக

---

14. உண்மையை உணர்ந்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கு, நபிமார்களுடைய போதனையும் அவர்களுடைய வாழ்க்கையுமே பெரிய அத்தாக்ஷிகளாயிருக்கின்றன. இவ்வாறில்லாது, மனிதர்கள் மூடத்தனமாக வினவும் வினாக்களுக்கெல்லாம் அவர்களிஷ்டப்படி அத்தாக்ஷிகளையும் ஆதாரங்களையும் அற்புதங்களையும் அனுப்பிக்கொண்டிருப்பதென்பது ஆண்டவனுடைய இயற்கைச் சட்டத்திற்கு நேர் விரோதமாகும். எனவே, "ஏ நபியே ! நீர் சத்தியமான நேரான பாதையின் பக்கல் அழைக்கின்றீர்; அன்றியும் தீய நடக்கையின் பயங்கரமான கொடிய பயன்களைச் சொல்லி அவர்களுக்கு அச்சமூட்டுகின்றீர். பின்னரும் அவர்கள் தங்களுடைய கொடிய மனப்பான்மையை மாற்றிக்கொள்ளாமல் அச்செய்கையிலேயே நிலைத்திருக்கின்றனர். ஆதலால், அவர்களை அப்படியே விட்டுவிட்டு, உம்முடைய சத்தியமான நேர்மையான சன்மார்க்க பிரசாரத்தைச் செய்துகொண்டே செல்வீராக !" என்று, எமதிரக்ஷகன் கூறுகின்றான்.

அல்லாஹ்வின் நேர் வழிதான் (உண்மையிலே) நேர்வழி—(நீங்கள் செய்து கொண்டிருக்கும் பற்பல பிரிவுகளும் கூட்டங்களு மல்ல)" என்று சொல்வீராக. (அன்றியும், நீர் ஜாக்கிரதையாயிருப்பீராக !) மேலும் (மெய்யான) ஞானம் நும்பால் வந்ததற்குப் பின்னே நீர் அவர்களுடைய (கேவல) இச்சைகளைப் பின்பற்றுவீராயின், நுமக்கு அல்லாஹ்வினின்று (வேறு யாரும்) காப்பாற்றுகிறவ னில்லை, உதவிபுரிகிறவனு மில்லை.

121. நாம் எவருக்கு வேதத்தைக் கொடுத்தோமோ, அவர்க (ளுள் பல மனிதர்க)ள் அதன் ஓத வேண்டிய முறைப்படி அதனை ஓதுகிறார்கள். (அதுவேயுமன்றி, அவர்கள் அதில் தங்கள் கவன த்தை நன்கு செலுத்துகிறார்கள். எனவே, இதன்பயனாக) அவர்கள் அதைக்கொண்டு நன்னம்பிக்கை கொள்ளுகின்றார்கள்; மேலும், யார் (தமது வேதத்தை ஓத வேண்டிய முறைப்படி ஓதாமலும் அதில் தமது சிந்தனையைச் செலுத்தாமலும்) அதை நிராகரிக்கின் றாரோ, அவர்கள்தாம் நஷ்டவாளிகளாக இருக்கின்றார்கள்.

---

## பிரிவு—15

இதில், இப்ராஹீம் நபியுடன் செய்யப்பட்ட உடன்படிக்கை பனீ இஸ்மாயீல்களுக்கு ஞாபக மூட்டப்படுகிறது ; அதன் பிரகாரம் பனீ இஸ்மாயீல் வர்க்கத்திலும் ஒரு நபி அவதரிக்க வேண்டிய ஆவசியகம் காணப்படா நின்றது.

122. ஏ இஸ்ராயீலின் மக்காள் ! நான் நுங்களுக் களித்த என்னுடைய அருட்கொடையை(யும், குறிப்பாக) உலகத்தின் (மற்றை) ஜாதியார்கள்மீது நுங்களை நான் மேன்மைப் படுத்தினே னென்பதையும் நினைத்துப்பார்க்கக் கடவீர்.

123. இன்னம், ஓர் ஆன்மாவுக்கு மற்றோர் ஆன்மா ஒரு வஸ் த்துவுக்கும் பிரயோஜனப்படாமலும், அதனிடத்திலிருந்து எப்ப டிப்பட்ட பதில் பரிகாரநீதமும் ஒப்புக்கொள்ளப் படாமலும், யாதொரு விதமான பரிந்து பேசுதலும் அதற்குப் பயன் படாமலும், (சிலரைப் பற்றிக்கொண்டு அவர்கள் மூலமாய்த் தாங்கள் ஜயம்பெற்றுவிடலாமென் றெண்ணிக்கொண் டிருந்த அவர்களிடத்திருந்து) அவர்கள் (எவ்வித) உதவியும் புரியப்படா மலும் போகக்கூடிய அந்நாளை(க்குறித்து) அஞ்சிக்கொள்ளுங்கள்.

124. இன்னம் (ஒரு விஷயத்தை நினைத்துப்பாருங்கள்:) இப் ராஹீமை அவருடைய ரக்ஷகன் சில வசனங்களைக்கொண்டு சோதித்தபோது, அவர் அவற்றைப் பூர்த்தி செய்தார். "(நிச்சய

மார்க) நான் (ஏ இப்ராஹீம் !) உம்மை மனிதர்களுக்காகத் தலைவராகச் செய்கிறவனு யிருக்கிறேன்—(அஃதாவது, உமக்குப்பின் உலகத்தில் தோன்றும் மனிதர்களெல்லாம் உம்முடைய நேர்மையான மார்கக அழைப்பை ஏற்றுக்கொண்டு உம்முடைய அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடப்பார்கள்)" என்று (அல்லாஹ்) சொன்னன். (அதற்கு இப்ராஹீம்) "மேலும், என்னுடைய சந்ததியார்களிலிருந்து ?— (தோன்றுபவர்கள் விஷய மென்னவாகும் ?) " என்று சொன்னர். (இதற்கு விடையில் இரக்ஷகன்) "என்னுடைய (இப்படிப்பட்ட) அறுதிப்பாடானது அநியாயக்காரர்களைச் சாரமாட்டாது," என் றுரைத்தான்.

125. இன்னம் (நாம் மக்காவிலுள்ள கஃபா வென்னும்) வீட்டை மனிதர்களுக்கு (அவர்கள் ஒருங்கே திரண்டு) வந்து சேரும் ஸ்தலமாகவும், அச்ச மற்றதா(ன ஸ்தானமா)கவும் செய்தபோது (நாம் மேலும் சொன்னேம்:) " இப்ராஹீம் நின்ற இடத்தை (எப்பொழுதும் நீங்கள்) தொழும் ஸ்தலமாக (ஏற்று)க் கொள்ளுங்கள் ! மேலும், என்னுடைய (இந்த) வீட்டை(ச்சுற்றி) வலம் வருகிறவர்களுக்காகவும், (இதில்) தங்கித் தியானம் செய்கிறவர்களுக்காகவும், சரீரத்தைச் சாய்த்துச் சிரம் பணிந்து வணக்கம் புரிகிறவர்களுக்காகவும் (இதைப்) பரிசுத்தம் செய்யுங்கள் ; (அக்கிரமம், பாபம் முதலிய அசுசியைக் கொண்டு இதனை அசுத்தப்படுத்தி விடாதீர்கள்) ! " என்று யாம் இப்ராஹீமின் பாலும் இஸ்மாயீலின்பாலும் உறுதி(மொழி) பெற்றேம்.

126. இன்னம், "(என்னுடைய) இரக்ஷகா! இதை அச்சமற்ற பட்டணமாகச் செய்து, இதில் வசிப்பவர்களுள் அல்லாஹ்வின் மீதும் இறுதி(த் தீர்ப்பு) நாளின்மீதும் நன்னம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கு, (பசேரென்ற பசுமையும் வளமும செழிப்பு மற்ற இந்த ஸ்தலத்தில் பற்பல விதமான) கனிவர்க்கங்களி லிருந்து இரண மளிப்பாயாக !" என்று இப்ராஹீம் சொன்னபோது, (அல்லாஹ்) கூறினன்: "(உம்முடைய வேண்டுகோள் ஒப்புக் கொள்ளப்பட்டது ; ஆனல், இப்பட்டணத்தில் வசிப்பவர்களுள்) எவன் (சத்தியத்தை) நிராகரிப்பவனயைப் போனுலோ, அவனுக்கு(ம் இவ்வுலகி லிருக்குமட்டும்) சிறிது (பொழுது வரை) சுகானுபவத்தை அளிப்பேன்; (அவன் மரணமடைந்தபின் அவனுடைய பாபத்தின் பயனய்ப்) பிறகு அவனை நெருப்பின் வேதனையின் பக்கல் கட்டாயம் ஏகும்படி செய்வேன்; இன்னம் (அவன் சென்று) சேரும் ஸ்தலம் (மிகக்) கெட்டதா யிருக்கிறது."

127. மேலும் (மஹா பெரிய ஒரு நிகழ்ச்சியைக் குறித்து ஆழ்ந்து சிந்திப்பீர்களாக:) இப்ராஹீமும் இஸ்மாயீலும் அவ் வீட்டின் அஸ்திபாரங்களை உயர்த்தும்போது (சொன்னார்கள்:) "எங்கள் இரக்ஷகா! (இயலாத்தன்மையுள்ள உன்னுடைய இரண்டு அடியார்களான நாங்கள் உனது பரிசுத்த நாமத்தைக்கொண்டு இதனை எழுப்புகின்றோம்; எனவே, இக்காரியத்தை) 'எங்களிடத்தி லிருந்து ஏற்றுக்கொள்வாயாக; நிச்சயமாக நீயே (சகல விஷயங் களையும்) கேட்கிறவனாக(வும் உலகத்தின் காரியங்களை யெல்லாம் அதிகம்) அறிகிறவனாக(வும்) இருக்கின்றாய்.

128. "எங்கள் இரக்ஷகா! (உன்னுடைய நல்லுதவியைக் கொண்டு) இன்னம், எங்களிருவரையும் உனக்கு (முற்றிலும்) தலை சாய்ப்பவராகச் செய்து வைப்பாயாக! மேலும், எங்களுடைய சந்ததியிலிருந்து(ம்) உனக்கு(ப் பரிபூரணமாக)த் தலைசாய்க்கக் கூடிய கூட்டத்தை(யும் எழச்செய்வாயாக!) மேலும், எங்கள் வணக்கங்(களின் நேரான முறை)களை எங்களுக்குக் காட்டிக் கொடுப்பாயாக! மேலும், எங்கள் மீது (பரிபூரணக் கருணையுடனே முகந்)திரும்புவாயாக! நிச்சயமாக நீயே (கருணையின் பக்கல்) அதி கம் திரும்புகிறவனாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கின்றாய்.

129. "எங்கள் இரக்ஷகா! இன்னம் (நீ உன்னுடைய பேரரு ளால்) அவர்களுக்குள்ளிருந்து, அவர்களுக்கு உன்னுடைய அத்தா க்ஷிகளை ஓதிக்காட்டுகிறவரும், அவர்களுக்கு (நபித்துவத்தின் சட் டப்படி) வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக்கொடுக்கிறவரும், அவர்களைப் (பாபத்தின் மாசினின்று) பரிசுத்தமாக்குகிறவரு மாய ஒரு தூதரை அவர்களுள்ளே எழுப்புவாயாக! நிச்சயமாக நீயே (சர்வ) வல்லமையுள்ளவனாக(வும் பரிபூரண), ஞானமுள்ளவனாக (வும்) இருக்கின்றாய்."

---

## பிரிவு—16

*அந்த மகா நபியாகிய இப்ராஹீம்அலை அவர்களின் மார்க்கத்தைப் பற்றிய விவரம் இதில் கூறப்படுகின்றது.*

130. (இஃதே இப்ராஹீமின் நேர்மையான சன்மார்க்க மாகும். எனவே) இன்னம் தன்னைத்தானே அறிவீனனாகச் செய்து கொண்டவனைத் தவிர்த்து (வேறு) யார் இப்ராஹீமின் (நேர்மை யான) மார்க்கத்திலிருந்து முகந்திரும்புகிறவன்? மேலும், திட்டமா கவே (நாம்) அவரை (இப்ராஹீமை மேலான மார்க்கத்தவராகவே)

இவ்வுலகில் தெரிந்தெடுத்தோம்; மேலும், அவர் நிச்சயமாகவே (மரணத்திற்குப் பின்னுள்ள) இறுதி (நாளின் வாழ்க்கை)யில் நல்ல மனிதர்களுள்(ளே சேர்ந்தவராக) இருக்கின்றார்.

131. அவருக்கு அவருடைய ரக்ஷகன் "தலைவணங்குவீராக!" என்று சொன்னபோது, "ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகனாயிருப்பவனுக்கு (நான் முற்றும்) தலைவணங்கினேன்," என்று கூறினார்.

132. இன்னம், இப்ராஹீம் தம்முடைய குமாரர்களுக்கும், யஃகூபு(தம்முடைய சந்ததியார்களுக்கு)ம் அதை(யே) அறிவுறுத்தினார்கள். (அஃதென்ன வெனின்:) "ஏ என்னுடைய குமாரர்காள்! நிச்சயமாகவே அல்லாஹ் (நேரான இம்)மார்க்கத்தை உங்களுக்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறான்; ஆதலின், நீங்கள் (இம்மார்க்கத்துக்குத்) தலைசாய்க்கிறவர்களாகவே ஆனாலொழிய மரணமடைய வேண்டாம்!" (என்பதே யாகும்.)

133. [15](அல்லது) யஃகூபுக்கு மரணம்வந் தடுத்தபோது, (அதுசமயம்) அவர் தம்முடைய புத்திரர்களை (விளித்து) "எனக்குப் பின்னே எதை வணங்குவீர்கள்?" என்று வினவியபோது, நீங்கள் ஹாஜிராய் இருந்தீர்களா? (அவர்கள்) "உமது ஆண்டவனும், உம்முடைய பிதாமகராகிய இப்ராஹீம் இஸ்மாயீல் இஸ்ஹாக் ஆகிய அவர்களுடைய ஆண்டவனுமாகிய ஒரே ஆண்டவனையே வணங்குவோம்," என்றும், "நாங்கள் அவனுக்கே தலை சாய்ப்பவர்களாயிருக்கிறோம்," என்றும் சொன்னார்கள் (என்பதை நீங்கள் பார்த்துக்கொண்டு இருந்தீர்களா?)

134. (அவ்விஷயம் எவ்வாறாயினும்) அது சென்றுபோன ஒரு கூட்டமாகும்; (அவர்களுடைய நற்காரியங்கள் உங்களுடைய பாபங்களுக்காகப் பரிகாரமாகப் போவதில்லை; இவ்வண்ணமே அவர்களுடைய தீய நடக்கைகளைப் பற்றி நுங்களிடம் கேள்வி கேட்கப்படவு மாட்டாது.) அது சம்பாதித்தது அதற்காகும்; இன்னம், நீங்கள் சம்பாதித்தது நுங்களுக்காகும்; இன்னம், அவர்கள் செய்துகொண் டிருந்ததைப் பற்றி (நீங்கள்) கேள்வி கேட்கப்பட மாட்டீர்கள்.

---

15. ஏ வேதத்தை யுடையவர்காள்! கிறிஸ்துவர்களின் கூட்டங்களுள்ளும், அல்லது யூதர்களுடைய குழாத்தினருள்ளும் நுழைந்து கொண்டவர்களுக்குத்தாம் நேரான மார்க்கமும் ஈடேற்றமு முண்டென்று கூறிக்கொண் டிருக்கின்றீர்கள். அப்படியாயின், இப்ராஹீம் எந்தக் கூட்டத்தவரைச் சார்ந்தவரா யிருந்தார்? இதுவுமல்லாது, நுங்கள் மூல பிதாவான யஃகூபின் நேரான வழி எப்படியிருந்தது? என்பதை நீங்கள் விளக்கிக்காட்ட முடியுமா? இல்லையெனின், அந்த யஃகூபின் மார்க்கம் எப்படி இருந்த தென்பதைத் தெரிந்துகொள்வீர்களாக.

135. இன்னம் (எஹூதி நஸாராக்களுடைய தஃவாவை உற்றுநோக்குவீர்களாக. அவர்கள்) சொல்லுகிறார்கள்: "யூதர்களாகவோ அல்லது கிறிஸ்துவர்களாகவோ ஆய்விடுங்கள்; (நீங்கள்) நேர்வழி யடைவீர்கள்." "அவ்வா றில்லை! (அல்லாஹ்வின் ஏகத்துவ உண்மை இத்தகைய வகுப்புப் பிரிவினையுள் சிக்குண்டில்லை; நாங்கள்) சன்மார்க்கராயிருந்த இப்ராஹீமின் மார்க்கத்தை(ப்பின் பற்றுவதே உத்தமம்; அதைத்தான் நாங்கள் பின்பற்றுகிறோம்). மேலும், அவர்—(இப்ராஹீம்) இணைவைப்பவர்களுள் சேர்ந்தவரல்லர்," என்று சொல்வீராக.

136. (குர்ஆனை ஏற்றுக்கொண்ட என் உண்மைப் பக்தர்காள்! நீங்கள்) சொல்வீர்களாக: "நாங்கள் அல்லாஹ்வைக்கொண்டும், எங்களுக்காக இறக்கப்பட்ட தன் மீதும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், இன்னம், அவர் சந்ததியார் ஆகியவர்கள்மாட்டு இறக்கப்பட்டத(ான வேதங்களி)ன் மீதும், மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதன் மீதும், (இவ்வளவுடன் நில்லாது மற்றுமுண்டான) நபிமார்களுக்கு(ம்)அவர்களுடைய ரக்ஷகன்பாலிருந்து கொடுக்கப்பட்டத(ான வேதங்களி)ன் மீதும் நன்னம்பிக்கை கொண்டிருக்கிறோம்; நாங்கள் அவர்களுள் ஒரு(வரை விடுத்து வேறொரு)வரிடத்தும் பாகுபாடு செய்வதில்லை; மேலும், அவனுக்கே நாங்கள் தலைசாய்க்கிறவர்களா யிருக்கிறோம்."[16]

137. ஆதலின், எதைக்கொண்டு நீங்கள் நன்னம்பிக்கை கொண்டீர்களோ, அப்படியே (வேதத்தையுடைய இதர மக்களான அவர்களும்) நன்னம்பிக்கை கொள்வார்க ளாயின், திட்டமாகவே நேர்வழி யடைந்தவர்க ளாவார்கள். (பின்னர் உங்களுக்குள்ளே சண்டையும் குதர்க்கமும் உண்டாகமாட்டா.) மேலும்

16. இத்திருவாக்கியத்தின் கருத்தாவது:—முஸ்லிம்களாய நாங்கள் சகல தூதர்களையும், சகல வேதங்களையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகின்றேம். அன்றியும், அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவைக ளெல்லாம் உண்மையானவைக ளெனவே நம்புகின்றேம். அஃதாவது, ஒவ்வொன்றும் அது அதற்குரிய காலத்தில் பின்பற்றி நடக்கத் தக்கதாகவே யமைந்திருந்தது. நாங்கள் அல்லாஹ்வுக்கே வழிபடுபவர்கள். எச்சமயத்தில் அல்லாஹ்வின்மாட் டிருந்து நபிமார்கள் தோன்றினார்களோ, அவர்களை அவ்வப்பொழுதும் பின்பற்றி நடக்கவேண்டியதே அத்தியாவசியமாகும் என்றும் நம்புகிறோம். ஆனால், ஏனைய வேதமுடையவர்கள் ஒவ்வொரு வர்க்கத்தாரும் தங்கள் தங்கள் மார்க்கத்தைத் தவிர்த்து இதரமார்க்கங்கள் உண்மையானவைக ளல்லவென்றும், தெய்வீகத் தன்மையற்றவை யென்றும் பொய்ப்படுத்தி நிராகரிக்கின்றனர். இதனாலும், இதர மார்க்கங்களைக் காட்டினும் இஸ்லாத்தில் எத்துணை விரிந்த தாராளமும் பரந்த நோக்கமும் உண்டென்பதை நன்குணர்ந்து கொள்ளலாம்.

(அவர்கள் நேரான இம்மார்க்கத்தி னின்று) திரும்பிவிடுவார்க ளாயின், அவர்கள் விகற்பம் பண்ணுவதிலேயே (மூழ்கி)யிருக் கின்றார்கள். (பின்னர் அவர்கள் ஆண்டவனது சத்தியத்தை ஏற் றுக்கொண்டு ஒற்றுமையாவார்களென் றெதிர்பார்ப்பதற் கில்லை.) ஆகவே, அவர்களுக் கெதிரில் அல்லாஹ்வே உமக்குப் போது மானவனா யிருப்பான்; மேலும், அவனே (சர்வமும்) கேட்கிறவ னாக(வும்) அறிகிறவனாக(வும்) இருக்கிறான்.

138. (இன்னம் நீங்கள் சொல்லுங்கள்: "நேர்வழிக்காகவும் ஈடேற்றத்திற்காகவும், கிறிஸ்துவர்களுடைய வழக்கம்போல ஒரு பிரிவினைக்குரிய நிறமாய் மக்களைச் செய்யவேண்டிய ஆவசியக மில்லை. ஆனால், நாங்கள் சொல்லுகின்றபடி) அல்லாஹ்வின்(மீது நன்னம்பிக்கைகொண்ட) நிறமே(தான் மேலானதா யிருக்கிறது). மேலும், நிறத்(தைக் கொடுப்ப)தில் அல்லாஹ்வைக் காட்டிலும் அதிக அழகுள்ளவர் (வேறு) யார் (உளர்)? மேலும், நாங்கள் அவனுக்கே (பரிபூரணமாய்) வணங்குகிறவர்களாக விருக்கிறோம்."

139. (இன்னம், ஏ நபியே! நீர்) சொல்வீராக: "(எங்கள் மார்க்கம் அல்லாஹ்வின் மார்க்கமாயிருக்கிறது. பின்னும் நீங்கள்) அல்லாஹ்வின் விஷயமாக எங்களுடன் வாதாடுகின்றீர்களோ? மேலுமவன் எங்களுடைய ரக்ஷகனாகவும் உங்களுடைய ரக்ஷகனாக வும் இருக்கிறான். இன்னம், எங்கள் கிரியைகள் எங்களுக்கும், உங் கள் கிரியைகள் உங்களுக்குமாக விருக்கின்றன. மேலும், நாங்கள் அவனுக்கே கலப்பற்றவர்களா(ய பக்தர்களா) யிருக்கிறோம்."

140. அல்லது (யூதர்களும் கிறிஸ்துவர்களுமாய நீங்கள்) இப்ராஹீமும், இஸ்மாயீலும், இஸ்ஹாக்கும், யஃகூபும், அவரு டைய சந்ததியாரும் யூதர்களாகவேனும் அல்லது கிறிஸ்துவர்களா கவேனும் இருந்தார்க ளென்று கூறுகின்றீர்கள்? (இங்ஙனம் நீங்கள் கூறுவீர்களாயின், உங்கள் மனப்பான்மைக்கு இரங்க வேண்டியே யிருக்கின்றது! எனவே, மீண்டும் ஏ நபியே!) சொல் வீராக: "மிக்க அறிந்தவர்கள் நீங்களா? அல்லது அல்லாஹ்வா? (அல்லாஹ்வேயென்று கூறுவீர்களாயின், உங்கள் வார்த்தைக்கு விரோதமாக அல்லாஹ்வால் வெளியாக்கப்பட்ட வேதம் உங் கள்வய மிருந்து வருகின்றது. இதை நீங்கள் தெரிந்திருந்தும் மறைத்து வைக்கின்றீர்கள். ஆதலால்) இன்னம், அல்லாஹ்வி னிடத்திலிருந்து தன்னிடத்தில் (வந்து) இருக்கின்ற சாக்ஷியத்தை மறைப்பவனைப் பார்க்கினும் அதிக அநியாயக்காரன் யார்?

மேலும், நீங்கள் செய்(துவரு)கிறது குறித்து அல்லாஹ் பராமுக மானவனு மில்லை."

141. (அவ்விஷயம் எங்ஙனமாயினும்) அது சென்று போன ஒரு கூட்டமாகும்; (அவர்களுடைய நற்காரியங்கள் உங்களுடைய பாபங்களுக்குப் பரிகாரமாகப் போவதில்லை; இன்னணமே அவர்களுடைய தீய நடக்கைகளைப் பற்றியும் நுங்களிடம் கேள்வி கேட்கப்பட மாட்டாது.) அது சம்பாதித்தது அதற்காகும்; இன்னம், நீங்கள் சம்பாதித்தது நுங்களுக்காகும்; மேலும், அவர்கள் செய்துகொண் டிருந்ததைப்பற்றி (நீங்கள்) கேள்வி கேட்கப்பட மாட்டீர்கள்.

# பாகம்—இரண்டு

## பிரிவு—17

*இப்ராஹீம் நபியவர்களால் புதுப்பிக்கப்பட்ட கஃபத்துல்லாவே மானிடர்களின் பாரமார்த்திகத்துக்குரிய மத்திய ஸ்தலமா யிருத்தல் வேண்டும்.*

142. எதன்மீது அவர்கள் (முகந் திரும்பி நின்று தொழுது கொண்டு) இருந்தார்களோ, அத்தகைய அவர்களுடைய தொழுந் திசையினின்று அவர்களை எது திருப்பிவிட்ட தென்று மானிடர்களுள் அறிவிலிகளா யிருப்பவர்கள் (பைத்துல் முகத்தஸின் பக்கலிலிருந்து மக்காவிலுள்ள கஃபாவின் பக்கல் ஏன் முகந் திரும்பி நின்று தொழும்படி கட்டளை யிடப்பட்ட தென்பதன் உண்மைக் காரணத்தை உணர்ந்து கொள்ளாமலே) சொல்லுவார்கள்; (எனவே, ஏ நபியே! நீர்) சொல்வீராக: "கிழக்குத் திசையும் மேற்குத் திசையும் (ஆதிய வெல்லாம்) அல்லாஹ்வுக்கே உரியன. (அல்லாஹ்வுக்குக் குறிப்பிட்ட இடமும், திசையும், எல்லையும் இல்லை. பைத்துல் முகத்தஸின் பக்கல் நின்று தொழுதுகொண் டிருந்ததும் அவனுக்கே; மக்காவிலுள்ள கஃபாவின் பக்கல் திரும்பி நின்று தொழுதுகொண்டு வருவதும் அவனுக்கே. ஆனால், ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கித் தொழவேண்டு மென்பது ஒருலெளகிக நன்மையை உத்தேசித்தே யாகும். எனவே) அவன் நாடியவரை நேரான வழியில் நடாத்திச் செல்லுகிறான்.

143. மேலும் (ஏ குர்ஆனின் அழைப்பிற் கிணங்கிய என் உத்தம அடியார்காள்! பைத்துல் முகத்தஸினின்று கஃபாவின் பக்கலே நோக்கித் தொழும்படி செய்த) அஃதே போல் ஜனங் களின்மீது நீங்கள் (உண்மையை உணர்த்தும்) சாக்ஷிகளா யிருக் கும்பொருட்டு (நாம்) உங்களை நடுநிலை (வகிக்கும் உயரிய) கூட்டத் தினராக ஆக்கினேம்; மேலும், உங்கள்மீது (அல்லாஹ்வின்) தூதர் (அத்தகைய உண்மைக்குச்) சாக்ஷியா யிருக்கின்றார்.— (அஃதாவது: நீங்கள் அல்லாஹ்வின் தூதரிடத்திருந்து சன்மார்க்க உபதேசம் பெறுவீர்கள்; உலகத்திலுண்டான மற்றைக் கூட் டத்தார்கள் உங்களிடத்திருந்து அவ்வுபதேசத்தைப் பெறுவார் கள். நான் முன்னமே பைத்துல் முகத்தஸை ஏன் தொழுந் திசையாகச் செய்தே னெனின், அத் தொழுந் திசையைக் கஃபா வின் பக்கல் நான் மாற்றியபின்) எந்த மனிதன் (அல்லாஹ்வின்) தூதரைப் பின்பற்று(ம் விஷயத்தில் உண்மையாளனு யிருக்)கின் றான்? எந்த மனிதன் (தன் உறுதியற்ற ஹிருதயத்தால் சோதனை யுள் சிக்குண்டு நந்தூதருடைய வார்த்தையைப் பின் பற்றாது) தன்னிரு குதிக்கால்களின் மீது திரும்பி விடுகின்றான்? என்று பிரித் துக் காட்டும் பொருட்டே யல்லாமல், நீர் (முன்னமே தொழுது கொண்டு) இருந்த அதை நாம் தொழுந்திசை யாக்க வில்லை. மேலும், நிச்சயமாகவே, அல்லாஹ் நேர்வழி காட்டியவருக் கல்லாமல் (மற்றையோருக் கெல்லாம்) இஃதொரு பெரிய (பளு வான)தாகவே யிருந்தது. மேலும், அல்லாஹ் உங்களுடைய நன் னம்பிக்கையை(ப் பிரயோஜன மின்றி) வீணுக்குகிறவனு யில்லை. நிச்சயமாக அல்லாஹ் மனிதர்கள் மீது தயாளுவாக(வும்) அன் புள்ளவனுக(வுமே) இருக்கிறான்.

144. (ஏ நபியே! அல்லாஹ்வின் அனுமதியை எதிர் பார்க் கும் சந்தோஷத்தால்) திட்டமாக வானத்தின் மாட்டு உம்முடைய முகம் (அடிக்கடி) திரும்புவதை (நாம்) பார்க்கிறோம்; ஆதலின், நிச்சயமாகவே நீர் பிரியம் வைக்கின்ற அதை (உமக்கு நாம்) தொழுந்திசை யாக்கி உம்மை (நாம்) திருப்பப்போகிறோம். (அதற் குரிய சமயம் இப்பொழுது வந்துவிட்டது.) ஆதலின், பரிசுத்த மஸ்ஜித்—(கஃபாவின்) பக்கல் உம்முடைய முகத்தைத் திருப்பு வீராக; மேலும், நீங்கள் எங்கிருந்த போதினும் (தொழும் சமயத் தில்) அதன் பக்கல் உங்களுடைய முகங்களைத் திருப்புங்கள்; மேலும், வேதத்தை அருளப் பெற்றவர்கள், அஃது அவர்களு டைய ரக்ஷகனிடத்தினின்று (வந்து)ள்ள உண்மை யென்பதை

நிச்சயமாகவே அறிகின்றார்கள்; [17] மேலும், அல்லாஹ் அவர்கள் செய்வதுபற்றி (யெல்லாம்) பராமுகமானவனு மில்லை.

145. இன்னம், நீர் வேதத்தை அருளப் பெற்றவர்க(ளான யூத கிறிஸ்துவப் பாதிரியார்க)ளிடம் எல்லா (விதமான) அத்தாக்ஷிகளை(யும்) கொண்டுவந்த போதிலும், (அவர்கள்) உம்முடைய தொழுந்திசையைப் பின்பற்ற மாட்டார்கள். மேலும், நீர் அவர்களுடைய தொழுந்திசையைப் பின் பற்றுகிறவரா யில்லை; மேலும், அவர்களுள் சிலர் (வேறு) சிலரின் தொழுந்திசையைப் பின்பற்றுகிறவ ராக(வும்) இல்லை. மேலும் (யூதர்களுடைய தொழுந்திசை வேறாகவும், கிறிஸ்துவர்களுடைய தொழுந்திசை வேறாகவு மிருக்கின்றன. எனவே, இது விஷயத்தில் உண்மையான) ஞானம் உம்மிடம் வந்த பின்னரும் (நீர்) அவர்களுடைய (கேவல) இச்சைகளைப் பின் பற்றுவீராயின், நிச்சயமாகவே நீவிர் அதுசமயம் அநியாயக்காரர்களுள் ஆய்விடுவீர்.

146. (உண்மையிலே நாம்) எவருக்கு வேதத்தை அருளினோமோ, அவர்கள் தங்களுடைய குமாரர்களை அறிந்திருப்பதே போல் (அல்லாஹ்வின் நபியான) அவரை(யும்) அறிகிறார்கள். (ஆனால், அப்படியிருந்தும்) நிச்சயமாகவே இன்னம் அவர்களுள் ஒரு கூட்டத்தார் தாங்கள் உண்மையை அறிந்தவர்களா யிருந்தும், சத்தியத்தை ஒளிக்கின்றார்கள்.

147. (தொழுந்திசையின் மாற்றலான இக்காரியத்தின்) உண்மையானது உம்முடைய ரக்ஷகனினின்று முள்ளதா யிருக்கின்றது; எனவே, நீர் சந்தேகிப்பவருள் (ஒருவராக) ஆய்விட வேண்டாம்.

---

## பிரிவு—18

*முஸ்லிம்உலகுக் கெல்லாம் கஃபாவையே மத்திபஸ்தலமாக ஏற்படுத்தியதன் காரணம்.*

148. இன்னம், ஒவ்வொருவருக்கும் ஒரு (தொழும்) திசையுண்டு; அவர் (தொழும்போது) அதன் பக்கல் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகின்றார். (மார்க்கத்துக்கு முக்கியமாக வேண்டப்

17. என்னெனின், அவர்களிடமிருக்கும் பரிசுத்தவேதத்தில் இதைப்பற்றிய முன்னெச்சரிக்கை செய்யப்பட்டே யிருக்கின்றது. ஆனால், அவர்கள் தாங்கள் செய்துகொண்டிருக்கும் பிரிவினையால் பொறாமைகொண்டு உண்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். எனவே, நீர் அவர்களுடைய விரோதத்தைப் பொருட்படுத்த வேண்டுவதின்று.

படும் காரியம் இஃதன்று; சத்தியத்துக்கும் அசத்தியத்துக்கும் உள்ள பிருபாடு இதனால் விளங்கி விடுவதில்லை; ஆனால், நற் காரியங்களைச் செய்வதே முக்கியமாக வேண்டப் படுவதாகும்.) ஆதலின், நன்மைகளில்—(அவற்றைச் செய்வதில்) முந்திக்கொள் ளுங்கள்; நீங்கள் எங்கிருப்பினும்—(எந்தப் பக்கம் திரும்பி நின்று நீங்கள் வணக்கம் புரியினும்) அல்லாஹ் உங்களெல்லோ ரையும் ஒன்று சேர்(த்து வை)ப்பான்; நிச்சயமாகவே அல்லாஹ் எல்லாவஸ்துக்களின் மீதும் ஆண்மை பெற்றவனா யிருக்கிறான்.

149. மேலும் (ஏ நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்டபோதி னும் (தொழும் சமயத்தில்) பரிசுத்த மஸ்ஜிதின்—(கஃபாவின்) பக்கல் உம்முடைய முகத்தைத் திருப்புவீராக; மேலும், நிச்சய மாக இதுவே—(இக்கட்டளையே) உம்முடைய ரக்ஷகன்பா லுள்ள உண்மையா யிருக்கின்றது. மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வது குறித்துப் பராமுகமானவனா யில்லை.

150. இன்னம் (ஏ நபியே!) நீர் எங்கிருந்து புறப்பட்ட போதினும் (தொழும் சமயத்தில்) பரிசுத்த மஸ்ஜிதின் பக்கல் உம்முடைய முகத்தைத் திருப்புவீராக; மேலும் (ஏ குர்ஆனை ஏற்றுக்கொண்ட என் அடியார்காள்!) நீங்கள் எந்த இடத்திலிருப் பினும், மனிதர்களுள் அநியாயக்காரர்க ளல்லாமல் மற்றவர்க ளுக்கு உங்கள்மீது விவாதத்துக்கு இடமுண்டாகாதவாறு அதன் பக்கல் (தொழும்போது) உங்கள் முகங்களைத் திருப்புங்கள்: (ஆனால், அவர்கள் உங்களுடன் விவாதித்துக்கொண்டேதா னிருப் பார்கள்.) ஆதலின், அவர்களுக்கு அஞ்சாதீர்கள்; மேலும், என் னுடைய அருட் கொடையை உங்கள் மீது நான் பரிபூரணமாக்கு வதற்கும், நீங்கள் நேர்வழி பெறுகிறவர்களாகும் பொருட்டும் எனக்கே அஞ்சிக்கொள்ளுங்கள்!

151. உங்களுக்கு நம்முடைய (வேத) அக்ஷரங்களை ஓதிக் காட்டுகிறவரும், உங்களைப் பரிசுத்த மாக்குகிறவரும், உங்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறவரும், நீங்கள் அறியாதிருந்ததை உங்களுக்கு அறிவித்துக் கொடுக்கிறவருமான ஒரு தூதரை உங்களுக்குள் ளிருந்து உங்களுக்கு நாம் அனுப்பி யதேபோல (நம்முடைய அருட்கொடையை யளித்து, அதன் பயனாக நீங்கள் நேரான பாதையைப் பின்பற்றி உன்னதமான ஸ்தானத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டு மென்றே நாம் நாடுகின்றோம்.)

152. ஆதலின் (இது சமயம் என்னுடைய நேர்வழியை யடைவதற்குரிய மார்க்கங்க ளெல்லாம் தையாரா யிருக்கின்றன.

எனவே, நற் காரியங்களைச் செய்ய, முற்படுங்கள்.) என்னை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்; நான் உங்களை நினைவு கூருவேன்; இன்னம், எனக்கு நன்றி செலுத்துங்கள்; மேலும், என்பால் நன்றி கெட்டவர்களாய்ப் போகாதீர்கள்.

## பிரிவு—19

*முஸ்லிம்கள் அந்தப் பரிசுத்த ஆலயத்தைக் கைவரப் பெறுமுன் கடுமையான சோதனைகளுக் கெல்லாம் ஆளாக நேருமென்னும் விஷயம் இதில் முன்னெச்சரிக்கையாகக் கூறப்படுகிறது.*

153. ஏ (உண்மையிலே) நன்னம்பிக்கை கொண்டவர்காள்! பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் 'கொண்டும்—(மறைவாயிருக்கும் மாபெரும் சக்தியைக்கொண்டு) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் (தன் உதவியுடனே) பொறுமையாளருடனிருக்கிறான்.

154. மேலும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்படுகிறவர்களை மரித்தவர்க ளென்று சொல்லாதீர்கள்; இல்லை! (அவர்கள்) உயிருள்ளவர்கள்; ஆனால், நீங்கள் (அதை) உணர்ந்து கொள்வ தில்லை.[18]

155. மேலும் (நீங்கள் எந்தப் பாதையைக் கைப்பற்றியிருக்கின்றீர்களோ, அந்தப் பாதையில் அனேக விதக் கஷ்டங்களுண்டு.) நிச்சயமாகவே நாம் உங்களைச் சிறிது அச்சத்தைக் கொண்டும், பசியைக் கொண்டும், பொருள்கள் உயிர்கள் கனிவர்க்கங்கள் (ஆகியவற்றின்) நஷ்டத்தைக் கொண்டும் சோதிப்போம்; பின்னர் (அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ஆண்டவன் ஆணையே பெரிதென் றெண்ணிப்) பொறுமையுடனிருப்பவர்களுக்கு (ப் பூரணஜயத்தைக் கொண்டு) நற்செய்தி கூறுவீராக.

156. (இன்னம், என்னுடைய உண்மைப்பக்தர்களாய) அன்னவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேருங்கால் (தங்கள் தைரியத்தைக் கைவிடாது தம்முடைய ஆன்மாக்களுக்கு அல்லாஹ்வின் ஞாபகத்தால் அதிக பலத்தைக் கொடுத்துக் கொண்டு) "நிச்சயமாகவே நாம் அல்லாஹ்வுக்கே (உரியவர்களாக) இருக்கிறோம்;

18. சத்தியமான பாதையில் தியாகமரண மடைவது மரணமன்று. ஆனால், அது முற்றமுற்ற ஜீவிப்பாகவும் நேர்வழியாகவுமே யிருக்கின்றது. எனவே, மரணத்தின் அச்சத்தினின்று தங்கள் ஹிருதயங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வீர்களாக.

மேலும், நிச்சயமாகவே நாம் அவன் பக்கலே மீளுகிறவர்களா யிருக்கிறோம்," என்று கூறுகின்றார்கள்.

157. அவர்களே தங்களுடைய இரக்ஷகனிடத்திருந்து தங்கள்மீது நற்பேறுகளும் (நற்)கிருபையும் உண்டாகப் பெற்றவர்கள்; இன்னம், அவர்களே நேர்வழி பெற்றவர்களா யிருக்கிறார்கள்.

158. நிச்சயமாகவே ஸபாவும் மர்வாவும்* அல்லாஹ்வின் அடையாளங்களினின்று முள்ளவையாகும்;[19] ஆதலின், அவ்வீட்டினிடம்—(கஃபாவின்பால்) ஹஜ்ஜை—(அதன் வணக்கத்தை) யாவது (சாதாரணமாய்ச் செய்யக்கூடிய) உம்ராவையாவது ஒருவன் செய்தால், அவன் அவ்விரண்டையும் சுற்றி (இடம்) வருவதில் ஒன்றும் குற்றமில்லை; மேலும், எவனேனும் நன்மையான காரியத்தை அதிகப்படுத்தினால், பின்னர் (அவனுடைய நற்காரியம் வீண் போகாதெனத் திண்ணமாக நம்பலாம். ஏனெனின்) நிச்சயமாக அல்லாஹ் நல்லோரை மதிக்கிறவனாக(வும்) (அதிகம்) அறிகிறவனாக(வும்) இருக்கிறான்.

159. நிச்சயமாக, மனிதர்களுக்காக வேதத்தில் எதை விளக்கிக் காட்டினோமோ அதன் பின்னர், துலக்கமான அத்தாக்ஷிகளினின்றும், நேர் வழியி(ன் உபதேசங்களி)னின்றும் நாம் இறக்கியதை மறைக்கின்றார்களே அவர்களை அல்லாஹ் சபிக்கின்றான்; மேலும், சபிக்கிறவர்களும் அவர்களைச் சபிக்கின்றார்கள்.

160. ஆனால் (பிழை பொறுத்த லென்பதன் வாயில் ஒவ்வொரு பாபத்துக்குப் பின்னரும் திறந்தே யிருக்கிறது. எனவே, யார் தாம் இழைத்த தவற்றை யுணர்ந்து) பச்சாதாபப் பட்டும் (கெட்டுப் போன தங்கள் கிரியைகளைச்) சீர்படுத்திக் கொண்டும் (உண்மையை மறைத்து வைக்காமல் அதை) விளக்கிக் காட்டிக் கொண்டு மிருக்கின்றார்களோ, அவர்கள் பக்கமேதான் (நான் கருணையுடன்) திரும்புகிறேன். மேலும், நான்(தான் உண்மையிலே கருணையுடன் மக்கள்பால்) அதிகம் திரும்புகிறவனாக(வும்) அன்புடையோனாக(வும்) இருக்கிறேன்.

161. நிச்சயமாகவே (வேத போதனையை) நிராகரித்தவர்களும், (அவ்வண்ணமே) நிராகரித்தவர்களாகவே யிருந்து மரித்

* ஸபாவும் மர்வாவும் மக்காவின் அருகிலுள்ள இரு சிறு குன்றுகளாகும்.

19. கிப்லாவானது கஃபாவாகச் செய்யப்பட்டதன் பின் அந்தக் கஃபாவில் என்ன வணக்கம் செய்யவேண்டும்? எப்படி வணக்கம் செய்ய வேண்டும்? என்பனவற்றை அல்லாஹ் அறிவிக்கிறான்.

துப் போனவர்களுமாய அவர்கள் மீதுதான் அல்லாஹ்வினுடைய தும், வானவர்களுடையதும், மனிதர்களுடையதும் (ஆகிய) எல்லோரின் சாப(மு)ம் (ஒருங்கே இறங்கி) இருக்கின்றன.

162. அதிலேயே (அவர்கள் தங்கி) யிருப்பார்கள்; அவர்களைவிட்டும் வேதனையானது இலேசாக்கப்பட மாட்டாது; மேலும், அவர்கள் ஓய்வு(ம்) கொடுக்கப்பட மாட்டார்கள்.

163. மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும்! மனிதர்கள் தங்கள் இச்சைக்கும் எண்ணத்துக்கும் தக்கபடி எத்தனையோ ஆண்டகைகளை உண்டு பண்ணிக்கொண் டிருக்கிறார்கள். ஆனால்) உங்களுடைய (வணக்கத்துக்குரிய) ஆண்டவன் ஒரே ஆண்டவனா(கவே) யிருக்கிறான்! அருளாளன், அன்புடையோனாகிய அவனைத் தவிர்த்து (இப்பிரபஞ்சத்தில்) வேறோர் ஆண்டகை(யும்) இல்லை.

---

## பிரிவு—20

*இறுதியாக ஏகதெய்வக் கொள்கையே என்றென்றும் நிலைநிறுத்தப்படும்.*

164. (மகா) நிச்சயமாக வானங்களையும் பூமியையும் படைத்திருப்பதிலும், இரவும் பகலும் மாறிமாறி வருந் தன்மையிலும், மனிதர்களுக்குப் பிரயோஜனம் தரத் தக்க (பொருள்களான)தைக்கொண்டு கடலில் செல்லும் கப்பலிலும், அல்லாஹ் வானத்தினின் றிறக்கும் (மழை) நீரிலும்;—பிறகு அதனால், மரித்துக் கிடந்தபின் பூமியை உயிர்ப்பித்தான்; இன்னமும், அதில் சகல (விதமான) உயிர்ப் பிராணிகளையும் பரத்தி வைத்தான்;—மேலும், காற்றுக்களின் மாறுபாட்டிலும், வானத்துக்கும் பூமிக்குமிடையே (அதற்குக் குறிப்பிட்டபடியே அடக்கி) வைக்கப்பட்டிருக்கும் மேகத்திலும் அறிஞர்களான கூட்டத்தாருக்கு (அல்லாஹ் இருக்கிறான்; அவன் தனித்தவன்; நிகரற்றவன்; அவனுடைய மேன்மையான சட்டங்களுக்குச் சரியான) அத்தாக்ஷிக ளிருக்கின்றன.

165. மேலும், மனிதர்களுள் சிலர் (அல்லாஹ்வால் அருளப்பெற்ற பகுத்தறிவைச் செவ்வனே உபயோகிக்காமல்) அல்லாஹ்வைத் தவிர்த்து (மற்றையவர்களை அவனுக்கு) ஒப்பானவர்களாகப் பற்றிக்கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதே போல் நேசிக்கின்றனர்; மேலும், (உண்மையில்) நன்னம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வையே அதிகமதிகம் நேசிக்கின்றனர்; இன்னம், அநியாயக்காரர்கள் (தீமைக்குரிய) வேதனையைக் காணுங்கால், சகல சக்தியும் அல்லாஹ்வுக்கே உரியன

வென்றும், (உண்மையிலே) அல்லாஹ்வே வேதனை கொடுப்பவர்களுள் (எல்லாம்) கொடியவனென்றும் (எண்ணுவதை விடுத்து, அது சமயமே இதையெல்லாம்) அறிந்துகொண் டிருந்தாலோ! (அக்கிரம மொன்றும் செய்ய மாட்டார்கள்.)

166. (பிறரால்) பின்பற்றப்பட்டவர்(களான பொய்யான தெய்வங்களெல்லாம் தங்களைப் பின்பற்றியவர்களுக்குப் பிரயோஜனம் ஒரு சிறிதும் அளிக்காமல் தங்களைப்) பின்பற்றியவர்களை விட்டு விலகிக்கொள்ளும்போது, (நடக்கப்போகும் விஷயத்தைக் கூர்ந்து நோக்குங்கள்!) மேலும் (அப் பொய்யான தெய்வங்கள்) வேதனையைக் கண்கூடாகக் காண்பார்கள்; மேலும், அவர்களிடையே உண்டாயி தொடர்புகளும் தறிபட்டுப் போம். (ஒருவர்க்கொருவர் ஆங்கு உதவி செய்துகொள்வ தென்பது ஒருபோதும் முடியாது.)

167. மேலும் (அப் பொய்யான தெய்வங்களைப்) பின்பற்றியவர்கள் (அதைக் கண்டவுடனே) கூறுவார்கள்: "மீண்டும் (பூலோகத்துக்குத்) திரும்பிச் செல்வதென்பது எங்களுக்குக் கிட்டுமாயின், (பொய்யான உபயோகமற்ற தெய்வங்களாய) அவர்கள் (இது சமயம்) எங்களை விட்டு விலகியதேபோல் நாங்களும் அவர்களை விட்டு விலகிக்கொண்டு விடுவோம்." இவ்வண்ணமே அல்லாஹ் அவர்களுடைய செய்கை(களின் தீய பலன்)களை வியசனிக்கத் தக்கவைகளாகவே அவர்களுக்குக் காண்பிப்பான்; (பின்னர் அவர்கள் எத்துணைத் தூரம் பச்சாதாபப் படினும்) அன்னவர்கள் தீ(யின் கொடிய வேதனை)யை விட்டு வெளிப்பட்டவர்களாகமாட்டார்கள்.

---

## பிரிவு—21

*அனுமதிக்கப்பட்ட, விலக்கப்பட்ட ஆகார விஷயம்.*

168. ஏ மானிடர்காள்! பூமியினின்று (சட்டப்படி) அங்கீகரிக்கப் பட்டதாகவும் பரிசுத்தமானதாகவு மிருக்கும் வஸ்துக்களை உட்கொள்வீர்களாக. (ஆனால், ஒரு சிலர் தங்கள் இச்சையின்படியே இதைத் தின்னலாம், இதைத் தின்னக்கூடாதெனக் கூறுகின்றனர். அது ஷைத்தானின் மார்க்கமாகும். எனவே) மேலும், ஷைத்தானுடைய அடிச்சுவட்டைப் பின் பற்றாதீர்கள்; நிச்சயமாகவே அவன் உங்களுக்குப் பஹிரங்கமான விரோதியா யிருக்கிறான்.

169. உங்களுக்கு அவன் ஏவுவதெல்லாம், தீமையைக் கொண்டும் லஜ்ஜையற்ற செய்கைகளைக் கொண்டுமே (தான்; அதுவேயுமன்றி, வழிக்கேட்டை நீங்கள் அதிகப்படுத்திக் கொள்ளும்பொருட்டு) நீங்கள் அறியாததை(ப் பொய்யாக) அல்லாஹ்வின்மீது கூறுவல்தக் கொண்டுமே யாம்.

170. மேலும், அல்லாஹ் வெளியாக்கிய (வேதத்)தைப் பின்பற்றுங்களென்று அவர்களுக்குச் சொல்லப்படும்போது, (அவர்கள்) சொல்லுகிறார்கள்: "இல்லை! எங்கள் பிதாமஹறை எதன்மீது (யாங்கள் கண்டு) பெற்றுக் கொண்டோமோ, அதையே (தான்) நாங்கள் பின் பற்றுகிறோம்." (என்னே அவர்களுடைய அறியாமை!) என்னே! அவர்களுடைய பிதா மஹறர்கள் ஒன்றுமறியாதவர்களாகவும் நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா? (இப்பொழுதும் அவர்களையேதாமா இவர்கள் பின்பற்றுவார்கள்?)

171. மேலும், (உண்மையை உற்று நோக்கின், நன்னம்பிக்கை கொள்ளாது) நிராகரிப்பவர்களுடைய உவமையானது, ஒரு (வெறும்) கூப்பாட்டையும் கூச்சலையும் காட்டினும் வேறொன்றையும் செவிமடுக்காதத(ான உயிர்ப் பிராணிகளி)ன் பக்கல் கூப்பிடுகிறவனுடைய நிலைமையை ஒத்ததாகும்;[20] (இவ்வாறாய அவர்கள்) செவிடர்கள்; ஊமையர்கள்; குருடர்கள்; ஆதலின், அவர்கள் (சத்தியத்தை) அறிவதில்லை.

172. ஏ நன்னம்பிக்கை கொண்ட (என் பக்தராய)வர்காள்! நீங்கள் அவனையே வணங்குகிறவர்களா யிருப்பின் (யூதர்களும் கிறிஸ்துவர்களும் கட்டி வைத்திருக்கும் கட்டுக்கதைகளை நீங்கள் நம்பாதீர்கள்.) நாம் பரிசுத்தமாக உங்களுக்குக் கொடுத்திருக்கும் வஸ்துக்களைப் புசிப்பீர்களாக; மேலும், அல்லாஹ்வுக்கே நன்றி செலுத்துவீர்களாக.

---

20. ஈமானென்னும் நன்னம்பிக்கை கொள்வது புத்திக்கும் ஞானத்துக்கும் சரியான துலக்கத்தைத் தருவதா யிருக்கின்றது. உண்மையை ஒத்துக்கொள்ள மறுப்பது மற்றவரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதன் அடையாளமாக விருக்கிறது. தங்களுடைய பகுத்தறிவைக்கொண்டு ஒன்றையும் சரியாயப் பரிசீலனை பண்ணாமல் ஆன்றோரின் வழியை அப்படியே கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதும், பின்னர் அதன்மீது அப்படியே பிடிவாதமாக விருப்பதும், உண்மையான அத்தாக்ஷிகளையும் ஆதாரங்களையும் செவ்விதாக ஆராயாமல் ஆன்றோர் வார்த்தைகளையே மேலானவையென எண்ணுவதும் மனிதர்கள் நேர்வழி யடைவதற்குப் பெரிதும் தடையா யிருக்கின்றன. எனவே, இப்படிப்பட்ட மனப்பான்மை யுள்ளவர்களிடம் உண்மையை உரைப்பது நாற்காற் பிராணிகளிடம் ஓதுவதற் கொப்பாகவே யிருக்கின்றது.

173. தானாக மரித்ததையும், உதிரத்தையும், பன்றியிறைச்சியையும், அல்லாஹ்வின் திருநாமமல்லாது வேறு நாமங்களைச் சொல்லி அறுக்கப்பட்ட(உயிர்ப்பிராணிகளான)வஸ்துக்களையுமே நுங்களுக்காக வென்று (அல்லாஹ்)விலக்கியிருக்கின்றான்; ஆனால், (பரிசுத்தமான வஸ்துக்கள் கிடைக்காமலும், மார்க்க எல்லையைக் கடந்து) அநியாயம் செய்யாமலும், வரம்பைக் கடவாமலும், (வேறு வழியில்லாமலும்) நிர்பந்திக்கப்பட்ட அவன்மீது (மேற்கூறியவைகளைப் புசிப்பதால்) பாபமொன்று மில்லை; நிச்சயமாக அல்லாஹ் (பாபங்களை அதிகம்) பொறுப்பவனாகை(வும்) அன்புடையவனாகை(வும்) இருக்கின்றான்.

174. நிச்சயமாகவே அல்லாஹ் வெளியாக்கித் தந்த வேதத்தை—(அதன் போதனைகளை) மறைத்து (அங்ஙனம் மறைப்பதால்) அதற்கீடாகக் குறைவான கிரயத்தைப் பெற்றுக் கொள்பவர்களான அவர்கள் தங்களுடைய வயிற்றினுள் நெருப்பைத் தவிர்த்து (வேறொன்றையும்) தின்னுகின்றார்களில்லை; (என்னெனின், அத்தகைய கிரயங்களே இறுதித் தீர்ப்பு நாளன்று அக்கினியின் ஜுவாலைகளாக வெளிவருவனவா யிருக்கின்றன. எனவே) மேலும், நியாயத் தீர்ப்பு நாளன்று அல்லாஹ் அவர்களுடனே வசனிக்க மாட்டான்; (இன்னம்) அவர்களைப் (பாபத்தினின்றும் மன்னித்துப்) பரிசுத்தமாக்கவு மாட்டான்; மேலும், அவர்களுக்கு நோவினையுண்ட வேதனை யுண்டு.

175. அவர்கள் நாம் நேர்வழிக் கீடாகக் கோடிய மார்க்கத்தையும், மன்னிப்புக் கீடாக(க் கொடிய) வேதனையையும் கிரயம் பெற்றவர்களா யிருக்கின்றார்கள். ஆதலின், அவர்களை அக்கினியின்மீது பொறுமையாகச் சகித்துக்கொண் டிருக்குமாறு என்ன செய்துவிட்டது!

176. என்னெனின் (யூதர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும்) அல்லாஹ் நிச்சயமாகச் சத்தியத்தைக் கொண்டே வேதத்தை வெளிப்படுத்தினான்; (அச் சத்தியத்தைக் கொண்ட பிரகாசம் வெளியானவுடன் தங்கள் குருட்டு நம்பிக்கைகளையும் துன்மார்க்க சந்தேகங்களையும் நிவாரணம் பண்ணிக் கொள்ள வேண்டிய ஆவசியக மிருந்தது. ஆனால்) மேலும், நிச்சயமாக(ச் சத்திய) வேதத்தில் விகற்பம் பண்ணிக் கொள்ளுபவர்கள் தூரமான பிளவுக்குள்ளாழ்ந்(து காரூருமலே மறைந்)திருக்கின்றார்கள்.

## பிரிவு—22

*பதிலுக்குப் பதில் வாங்குவதும் மரண சாஸனமும்.*

177. நீங்கள் (தொழும்போது) உங்கள் முகங்களைக் கிழக்குத் திசையை நோக்கியும் மேற்குத் திசையை நோக்கியும் திருப்பிக் கொள்வது (மட்டும்) சன்மார்க்கமாக மாட்டாது; ஆனால், அல்லாஹ்வைக் கொண்டும், இறுதி(த் தீர்ப்பு) நாளைக் கொண்டும், அமரர்களைக் கொண்டும், வேதத்தைக் கொண்டும், நபிமார்களைக் கொண்டும் நன்னம்பிக்கை கொண்டு; (அல்லாஹ்வான) அவன்மீது வைத்த அன்பினிமித்தம் சுற்றத்தார், அகதிகள், வறுமையுற்றோர், வழிப்போக்கர், யாசகர் ஆகியோருக்கும், அடிமைகளை உரிமை விடுதற்கும் (தம்பாலுள்ள) ஐசுவரியத்தை அள்ளிக் கொடுத்து; தொழுகையைக் கடைப்பிடித்தும், ஏழை வரியைக் கொடுத்தும் நடப்பவர்களே சன்மார்க்கர்களாவார்கள்; மேலும் (அவர்கள்) வாக்குறுதி செய்வார்களாயின், தங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றி வைப்பார்கள்; மிடிமையிலும், நோய்வாய்ப்பாட்டிலும், சங்கட வேளையிலும் (தங்கள் மன உறுதியை மாற்றிக்கொள்ளாமல்) பொறுமையுடனிருப்பார்கள்; இவர்கள் தாம் (தங்கள் நன்னம்பிக்கையின் உறுதியை) மெய்ப்பித்தவர்கள்; மேலும், இவர்கள்தாம் (தீமையை விட்டு) அஞ்சிக் கொள்ளுகிறவர்கள்.

178. ஏ நன்னம்பிக்கை கொண்டவர் (களாய, என் உண்மைப் பக்தர்)காள்! கொலை யுண்டவனுக் கீடாகப் பதில் வாங்கும் விஷயம் உங்களுக்கு(ச் சம அந்தஸ்துடனே) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது: எஜமானுக்கு—(யதேச்சை யுடைவனுக்கு) ஈடாக, எஜமானும்—(யதேச்சை யுடையவனும்), அடிமைக்கீடாக அடிமையும், பெண்பிள்ளைக் கீடாகப் பெண்பிள்ளையும் (பதிலுக்குப் பதிலாகக் கொல்லப்படுவர்.) ஆனால், கொல்லப்பட்டவன் வாரிஸான தன் சகோதரன்மூலம் (மானிடர்களென்ற முறையிலே) கொன்றவன் மன்னிக்கப்படுவானயின் (கொலைக்கு மாற்றமாக ஈட்டுப் பொருளேதேனும் பெற்றுக்கொள்ளச் சம்மதப்படுவானயின், வாரிஸ்கள்) நல்ல முறையில் வழக்கத்துக் கொத்ததை — (பொருளைக்) கேட்கலாம்; (கொன்றவன்) நன்றியுடன் (அப்பொருளை) வாரிஸிடம் கொடுத்துவிடல் வேண்டும். (எனவே, கொலை செய்ததற்கீடாகப் பொருள் பெற்றுக் கொள்ளலாம் என்னும்) இஃது உங்களுடைய இரக்ஷகனால் இலேசாக்கி வைக்கப்பட்டதும், அன்பு (மயமானது)மாகும்; ஆதலின், இதன் பின்னும் எவனேனும் வரம்

யைக் கடப்பானாயின், அவனுக்கு நோவினை யுண்ட வேதனை யுண்டு.[21]

179. மேலும், ஏ அறிஞர்காள்! பதிலுக்குப் பதில் வாங்குவதில் (சாதாரணமாக ஓர் உயிர் போவதாகவே தோன்றும்; ஆனால், அங்ஙனம் செய்வதால் உண்மையிலே) உங்களுக்கு உஜ்ஜீவிப்பே யிருக்கிறது; (இஃதேனெனின்) நீங்கள் (பாபத்தின் தீமையினின்றும்) தப்பிக் கொள்ளுதற்காக.

180. உங்களு ளொருவனுக்கு மரணம்வந் தடுக்கும்போது (அதை அவன் உணர்ந்து கொண்டு விடுவானாயின், மேலுமவன்) ஐசுவரியத்தை விட்டுச் செல்வானாயின், தாய் தந்தையருக்கும், சுற்றத்தாருக்கும் நல்லவிதமாக வஸிய்யத் செய்யுமாறு உங்கள் ஒவ்வொருவன்மீது (ஒவ்வொரு) கடமை விதிக்கப்பட் டிருக்கிறது; இது தீமையினின்றும் விலகிக் கொள்பவருடைய பாத்தியதைக்காக (விருக்கும்.)

181. பின்னர், எவரேனும் அதை—(வஸிய்யத்தை நேரில் நன்கு) கேட்டதன்பின் அதை (வேறு விதமாக) மாற்றி விடுவாராயின், அதன் பாபமான (பளுவான)து அதை மாற்றுபவர்மீதே தான் சாரும்; நிச்சயமாகவே அல்லாஹ் (அக்கிரம மிழைக்கப் பட்டவர்களின் பர்யாதைக்) கேட்பவனாக(வும், நீங்கள் செய்யும் காரியங்களை யெல்லாம்) அறிகிறவனாக(வும்) இருக்கிறான்.

---

21. இவ்வாக்கியத்தின் வாயிலாய் அரப் நாட்டின்கண் மலிந்து கிடந்த அக்கிரமத்தை அல்லாஹ் நிவாரணம் பண்ணுகின்றான். அரப் தேயத்தில் தலைவனொருவன் அல்லது தனவந்தனொருவன் கொல்லப்பட்டு விடுவானாயின், அவனுடைய கவுரவத்துக்காகவும் பணத்துக்காகவும் இரண்டு மனிதர்கள் கொல்லப்படுவ துண்டு. அன்றியும், பெண்களுக்கீடாக ஆண்கள் கொல்லப்படுவதும் உண்டு. அடிமைக்குப் பதிலாக எஜமான் கொல்லப்படுவதும் உண்டு. எஜமானுக்கீடாக அடிமை கொல்லப்படுவதும் வழக்கத்தி லிருந்துவந்தது. எனவே, இத்தகைய கொடிய வழக்கத்தை இவ்வாக்கியம் மாற்றுகின்றது. அஃதாவது, மானிடரென்ற முறையில் உலகின்பாலுள்ள சர்வ மக்களும் சமத்துவமுடையவர்க ளென்பதை எடுத்துக் காட்டுகின்றது; மானிடர்களிடத்து நீதத்துக்கு முட்டுக்கட்டையாய் நின்று விளங்கும் குலப்பெருமை, ஜாதித் திமிர், பணக் கொழுப்பு ஆகியவற்றால் மனிதன் மேம்பட்டவனாவா னென்னும் எண்ணத்தைத் திரஸ்கரிக்கின்றது. உரிமையுடையவனாயினும், அடிமையாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், சிறியவனாயினும், பெரியவனாயினும், சிறப்புற்றவனாயினும், சிறப்பற்றவனாயினும் எல்லாரும் மானிடர்களென்னும் முறையில் சமத்துவமானவர்களாகவே யிருக்கின்றனர். எனவே, பதிலுக்குப் பதிலாகக் கொல்லப்படுவதில் கொலையாளியே கொல்லப்படுதல் வேண்டும் என்பதைக் கண்டிப்புடன் இவ்வாக்கியம் அறிவுறுத்துகின்றது.

182. இன்னும்; வஸிய்யத் செய்பவனால் பக்ஷபாதம் அல்லது பாபம் விளையுமென்பதை எவனேனும் அஞ்சி(த் தக்க சமயத்தில் வந்து கலந்து) அவர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தி வைப்பானாயின், அவன்மீது குற்றமொன்று மில்லை; (இது வஸிய்யத் விஷயத்தில் வீணே தலையிடுவதாக மாட்டாது.) நிச்சயமாகவே அல்லாஹ் (பாபத்தைப்) பொறுப்பவனாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கிறான்.

---

## பிரிவு — 23

நோன்பு நோற்றலும் நோன்பு நோற்கும் மாதமும்.

183. ஏ (என் சன்மார்க்கத்தின்மீது) நன்னம்பிக்கை கொண்டவர்காள்! நீங்கள் (தீமையினின்றும் தப்பிக்கொண்டு) நன்மையின் சக்தியை அதிகம் பெற்றுக் கொள்ளும் பொருட்டும், (ஆண்டவனுக்கு) அஞ்சிக் கொள்ளுகிறவர்களா யிருக்கும்பொருட்டு(ம்) உங்களுக்கு முன்னுண்டானவர்கள்மீது கடமையாக்கப் பட்டதேபோல் உங்கள் மீது(ம்) நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது.

184. (இந்த நோன்புக்காகக்) குறிப்பிட்ட சில தினங்களுள; (சகிக்கக்கூடாத அத்தனை நீண்ட நாள்களல்ல.) பின்னர், உங்களுள் எவனேனும் வியாதியஸ்தனாகவேனும், பிரயாணத்திலேனும் இருப்பானாயின் (அவன் அதைக் குறிப்பிட்ட நாட்களில் நிறைவேற்ற அசௌகரிய முடையவனா யிருப்பின்) வேறு நாட்களில் (சொஸ்தமடைந்த பிறகும், சொந்த ஊருக்குத் திரும்பிய பிறகும்) பூர்த்திசெய்து கொள்ளக்கடவன்; மேலும், அ(ந்தக் குறிப்பிட்ட காலத்)தில் நோன்பு நோற்கக் கூடாத (வயோதிகத்தை யெய்தி, பின்னர் அதைப் பூர்த்தி செய்யவும் இயலாதென்று திண்ணமாக எண்ணுப)வர்கள் ஓர் ஏழைக்கு (ஒவ்வொரு நாளும்) அன்னமளித்தல் வேண்டும்; ஆதலின், எவனொருவன் (ஓர் ஏழைக்கல்லாமல் ஒவ்வொரு நாளும் பல ஏழைகளுக்கு அன்னமளித்து) அளவுக்கு மீறிய நன்மையைச் செய்கிறானோ, அஃது அவனுக்கு நன்மை பயக்கும்; மேலும், நீங்கள் அறிவீர்களாயின், நோன்பு நோற்பதென்பது (மற்றவைகளைக் காட்டினும்) நுங்களுக்கு மேலானதாயிருக்கிறது.

185. மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும், வழிகாட்டியின் பிரத்தியக்ஷ பிரமாணங்களாகவும், (நேர்வழி மாறுவழி இன்ன

இன்ன வென்று) வேறு பிரித்துக் காட்டக்கூடிய தாகவு முள்ள (இந்தக்) குர்ஆன் (முதன் முதலாக) வெளியாக்கப்பட்டது ரமலான் மாதமேயாகும்; ஆதலின், உங்களுள் எவன் அந்த (ரமலான்) மாதத்தில் (நோயில்லாது) ஹாஜிரி லிருக்கிறானோ (அவன்) அதில், நோன்பு நோற்கக் கடவன்; மேலும், ஒருவன் வியாதியஸ்தனாக வேனும் அல்லது பிரயாணத்திலேனு மிருப்பானாயின் (அவன் அதை) வேறு நாட்களில் (சௌஸ்த மடைந்த பிறகும், சொந்த ஊரை யடைந்த பிறகும்) பூர்த்தி செய்து கொள்ளக்கடவன்; (சத்தியமாய இச்சன்மார்க்கமானது குறுகியதாகவும் கொடுமை யுள்ளதாகவு மில்லை;) அல்லாஹ் உங்களுக்கு இலேசையே நாடுகிறான்; மேலும், உங்களுக்குக் கஷ்டத்தை (அவன்) நாடுகிறானில்லை; மேலும், குறிப்பிட்டதை—(முன் தவறவிட்ட நுங்கள் நோன்பை வேறு தினங்களில்) நீங்கள் பரிபூரண மாக்கிக் கொள்ள வேண்டுமென்றும், நுங்களுக்கு நேர்வழி காட்டியதன் பொருட்டு அல்லாஹ்வின் மாண்பைப் பெருமைப்படுத்த வேண்டுமென்றும், மேலும், நீங்கள் நன்றி செலுத்த வேண்டுமென்பதற்காகவும் (அல்லாஹ் இதை ஏற்பாடு செய்திருக்கிறான்.)

186. மேலும் (ஏ நபியே!) நும்பால் என்னைக் குறித்து என்னடியார்கள் வினவுங்கால் (நீர் சொல்வீராக:) நிச்சயமாகவே நான் (அவர்களுக்கு மிகச்) சமீபத்தி லிருக்கிறேன்; (பக்தன்) என்னை நோக்கி விளிப்பானாயின், விளிப்பவனது விளிப்புக்கு (நான்) விடையிறுக்கின்றேன்; ஆதலின் (அவர்கள் உண்மையிலேயே என்னைத் தேடுபவர்களாயின், அவர்கள்) சன்மார்க்க மடைதற்காக என்னழைப்பிற்கு விடையிறுக்கக் கடவர்; மேலும், என்மீது நன்னம்பிக்கை கொள்ளக்கடவர்.

187. நோன்புநாட்களின் இரவில் நுங்கள் மனைவியரிடம் நெருங்குவது நுங்களுக் கனுமதிக்கப்பட் டிருக்கிறது; அவர்கள் நுங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவு மிருக்கின்றீர்கள்;[22] நீங்கள் நுங்கள் ஆன்மாக்களுக்கு மோசஞ்

22. அஃதாவது, அவர்களுடைய வாழ்க்கை ரஹஸ்யங்கள் உங்களைக் கொண்டும், உங்களுடைய வாழ்க்கை ரஹஸ்யங்கள் அவர்களைக் கொண்டும் லௌகிகத்தில் கட்டுப்படுத்தப்பட்டனவா யிருக்கின்றன. எனவே, அவர்களின்றியே நீங்களும், நீங்களின்றியே அவர்களும் இவ்வுலக வாழ்க்கையை இனியமுறையிலே நடாத்திச் செல்வது ஒரு சிறிதும் முடியாது; ஆதலின், ஒவ்வொரு காரியத்தையும் நன்கு பரியாலோசனை செய்து சந்தேகமற்ற முறையிலேயே செய்தல் வேண்டும். உங்கள் மனத்துள்ளே ஒரு விஷய சம்பந்தமாகச் சந்தேக மிருக்கும்போது அதனை நிவாரணம் பண்ணிக்கொள்ளாது அப்படியே நீடித்துக்கொண்டு செல்லாம லிருப்பீர்களாக.

செய்கின்றவர்களா யிருந்தீர்க ளென்பதை அல்லாஹ் அறிந்து கொண்டான்;[23] பிறகு நுங்கள்பால் (கருணைகூர்ந்து) திரும்பினான்; மேலும், நுங்க(ள் பாபங்க)ளை மன்னித்தருளினான்; ஆதலின் (நீங்கள் எவ்வித அச்சமுமின்றி) அவர்களிடம் நெருங்குவீர்களாக; மேலும், அல்லாஹ் நுங்களுக்கு (விவாக பந்தத்தால்) ஏற்படுத்தி யிருப்பதை—(அச்சுகத்தையே) விரும்புவீர்களாக. மேலும், (அங்ஙனமே இராவேளையில்) வைகறையில் இரவின் இருளைவிட்டுப் பகலின் வெளிச்சம் வேறுபட்டுக் காணப்படும்வரை புசிப்பீர்களாக; மேலும், பருகுவீர்களாக; பிறகு (அற்றை) இரவுவரை நோன்பைப் பூர்த்திசெய்வீர்களாக; மேலும், நீங்கள் மஸ்ஜிதுகளில் (இறைவணக்கத்தின் பொருட்டுத்) தாமதித்திருக்கும (இஃதிகாபின்)போது அவர்களிடம்—(நும் மனைவியரிடம்) நெருங்காதீர்கள்; இவை அல்லாஹ்வின் வரைகளாகும்; எனவே, அவற்றினிடம் நெருங்காதீர்கள்; அவர்கள் (தீமையினின்று) அஞ்சி(த் தப்பி)க் காள்வதற்காக அல்லாஹ் தன்னுடைய அத்தாக்ஷிகளை மானிடர்களுக்கு இவ்வாறு விவரிக்கின்றான்.

188. மேலும் (உற்று நோக்குங்கள்:) உங்களுக்குள் (ஒரு சிலர் மற்றவர்களின்) முதல்களைப் பொய்க்காரணம் காட்டி உங்களுள் தின்னுகிறீர்கள்; இன்னம், மனிதர்களின் முதல்களினின்றும் ஒருபாகத்தை அநியாயமாக (ஒரு கூட்டத்தார்) தின்னும் பொருட்டு அவற்றினின்றும் நீங்கள் நியாயாதிபதிகள் வரை போய்ச் சேராதீர்கள்; மேலும் (இது தகாதென்பதை) நீங்கள் அறிந்தவர்களா யிருக்கின்றீர்கள்.[24]

---

23. உண்மையில் உங்கள் ஆன்மாக்களுக்கே மோசம் செய்துகொண்டிருக்கின்றீர்கள்; என்னெனின், நீங்கள் செய்யும் காரியங்கள் தவறில்லாதனவா யிருந்தும், அவற்றினை நீங்கள் தவறென்று எண்ணிக்கொண்டு ஒளிவாகவும் மறைவாகவும் அக்காரியங்களைச் செய்துகொண்டு, மேன்மேலும் உங்கள் ஆன்மாக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்துக்கொண்டே யிருந்தீர்கள்; ஆகவே, அல்லாஹ் அதற்கு உங்களை ஜவாப்தாரிகளாகவும் பாபிகளாகவும் செய்யவில்லை யென்பதைப் பிரகடனப் படுத்தியிருக்கிறான்.

24. மானிடர்கள், மன்பதைகள் பால் மிக்க நல்ல முறையிலே நடந்து கொள்ளாம லிருக்குமட்டும் அவர்கள் தங்களுடைய ஆன்மாக்களுக்காகச் செய்துகொள்ளும் எந்த நல்ல காரியமும் பிரயோஜனம் தரத்தக்கதா யில்லையென்று ஆண்டவன் இவ்வாயத்தில் சுட்டிக் காட்டியுள்ளான்.

## பிரிவு — 24

*நற்காப்பி னிமித்தம் யுத்தத்தின் அவசியம்.*

189. (ஏ நபியே!) உம்மிடம் (மாதங்களைக் காட்டும்) சந்திரனின் விஷயமாக (அவர்கள்) வினவுகின்றார்கள். (எனவே, நீவிர், சொல்வீராக:) அவை மனிதர்களுக்கும் ஹஜ்ஜுக்கும் (ஏற்படுத்தப்பட்டுள்ள) நேரங்களாயிருக்கின்றன. (ஆனால், அவர்கள் மனம் போனபடியெல்லாம் எதை எதையோ நினைத்துக்கொண்டு அது அதன்படி ஒழுகியும் வருகின்றனர். ஆனால், அதற்கொன்றும் ஆதாரமில்லை.) மேலும், நீங்கள் விடுதிகளுக்குள் அவற்றின் புழைக்கடை வழியே நுழைவது (நுங்கள் எண்ணப்படி) நன்மையாகாது ;[25] ஆனால், நன்மையானது (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடப்பவன் (வயமிருக்கிறது ;) மேலும் (நீங்கள் எவ்வித மனக்குழப்பமுமின்றி) விடுதிகளுள் அவற்றின் (சரியான) தலைக்கடை வாயில்களின் வழியே நுழையுங்கள் ; (ஏன் வீணான எண்ணங்கொண்டு கஷ்டப்படுகின்றீர்கள் ?) மேலும், நீங்கள் ஜயம்பெறுகின்றவர்களாகும்பொருட்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்துகொள்ளுங்கள்.

190. நுங்களிடம் யுத்தம் செய்பவர்களான அவர்களுடன் (நீங்களும்) அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்யுங்கள் ;[26] (புறமுதுகு காட்டாதீர்கள். ஆனால், நீங்கள்) மேலும் (இவ்விஷயத்தில்) வரம்பைக் கடவாதீர்கள் ; (என்னெனின்) நிச்சயமாகவே அல்லாஹ் வரம்பு கடப்பவரை நேசிப்பதில்லை.

191. (மக்காவின் குப்பார்கள் உங்களுக்கு விரோதமாகப் பகிரங்க யுத்த அறிவிப்புச் செய்துவிட்டனர். ஆதலின், நீங்களும்) அவர்களைக் கண்ட இடத்தில் வெட்டுங்கள் ; உங்களை அவர்கள் அப்புறப்படுத்திய இடத்தினின்று (இப்பொழுது நீங்கள்) அவர்களை அப்புறப்படுத்துங்கள் ; புரட்சி செய்வது வெட்டுவதைக்

25. ஹஜ்ஜுடைய மாதத்தின் பிறையைக்கண்டு ஹஜ்ஜுக்காக இஹ்ராம் கட்டிக்கொண்டு விடுவார்களாயின், பிறகு தங்கள் விடுதிகளுள் நுழையும்போது தலைக்கடைவழியே நுழைவது தவறான காரியமென்றெண்ணி, அவற்றின் புழைக்கடை வழியேதான் அரபிகள் நுழைந்துகொண்டிருந்தார்கள். எனவே, தவறாய இவ்வெண்ணத்தை அல்லாஹ் இவ்வாயத்தால் நிவாரணம் பண்ணியிருக்கிறான்.

26. மக்காவின் குப்பார்கள், அக்கிரமங்களும் அநியாயங்களும் அளவுக்கு மீறிச் செய்து கொண்டும், முஸ்லிம்களுக்கு மத்திய நடுநாயகமாய கிப்லாவும் கஃபாவுமான ஸ்தலங்களை நெருங்கவொட்டாது பலாத்கார முறையால் தடை செய்துகொண்டுமிருந்தார்களாதலால், இவ்வாயத்தில் கண்டபடி அனுமதி யளிக்கப்பட்டது.

காட்டினும் மிகக் கடுமையானதாகும்;[27] மேலும் (பரிசுத்த ஆலயமான) அதில் அவர்கள் உங்களை வெட்டும்வரை பரிசுத்த ஆலயத்தினிடத்தில் (நீங்கள்) அவர்களை வெட்டாதீர்கள்; ஆதலின் (அவர்கள், அதில்) உங்களை வெட்டுவார்களாயின் (நீங்களும்) அவர்களை வெட்டுங்கள். (சத்தியத்தை) நிராகரிப்பவர்களின் கூலி— (தண்டனை) இவ்வாறுதானிருக்கிறது.

192. பின்னர் (அவர்கள் யுத்தத்தினின்று) விலகிக்கொண்டு விடுவார்களாயின்—(பாபமன்னிப்பின் வாயில் அடைபட்டில்லை.) நிச்சயமாகவே அல்லாஹ் (பாபத்தை) மன்னிப்பவனாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கிறான்.

193. மேலும் (மனிதர்களின் அக்கிரமங்களால் விளையும்) புரட்சி (அறவே) ஒழிந்து, மேலும் தீன்—(மார்க்கம்) அல்லாஹ்வுக்கே (என்று) ஆகும் வரை அவர்களை வெட்டுங்கள்; பிறகு (அவர்கள் இவ்வக்கிரமத்தினின்றும்) விலகிக் கொண்டு விடுவார்களாயின் (நீங்களும் விட்டு விடுங்கள்.) பின்னர், அநியாயக்காரர்கள் மீதேயன்றி (மற்றவர்களுடன்) பகைமை வேண்டுவதின்று.[28]

---

27. இவ்வாக்கியத்தின் கருத்தாவது:—யுத்த காலமாயினும் அல்லது அஃதல்லாத காலமாயினும், முஸ்லிம்கள் எச்சமயத்திலும் நேர்மையையும் நீதத்தையும் எல்லையையும் கடக்காமல் ஒழுங்காக நடந்துகொள்ள வேண்டுமென்பதே யாம். யுத்தம் செய்வது கொடிதே. ஆனால், உட்கலகங்களையும், வீண் குழப்பங்களையும், மனஸ்தாபங்களையும், புரட்சிகளையும் செய்து கொண்டிருப்பது, யுத்தத்தைக் காட்டினும் மகா கொடிதாகும். எனவே, மனிதர்களின் நிலைமைகளும் மனச்சாந்தியும் உண்டாக வேண்டுமென்னும் நோக்கங்கொண்டு யுத்தம் செய்யலாம் என்றும், பெரிய சங்கடங்களை யுண்டுபண்ணிக் கொண்டிருக்கும் பித்னாவை ஸம்ஹரிக்க யுத்தத்தை மேற்கொள்ளலா மென்றும் இவ்வாக்கியம் அனுமதி யளிக்கின்றது.

28. மனிதர்களுள் ஒவ்வொருவருக்கும் மார்க்க சம்பந்தமான சுயேச்சையும் ஸ்வதந்திரமும் எவ்வித இடையூறுமில்லாமலிருத்தல் வேண்டும். இதற்காக, அவசியமாயின், மக்கள் மார்க்க நம்பிக்கையைப் பாதுகாத்துக்கொள்ள யுத்தமும் செய்யலாம் என்று இவ்வாக்கியம் அனுமதியளிக்கின்றது. அஃதாவது:—மார்க்க சம்பந்தமான விஷயம் அல்லாஹ்வைச் சார்ந்ததாகும். இதில் மன்பதைகளுடைய சொந்த அபிப்பிராயத்துக்குச் சம்பந்த மொன்றுமில்லை. எனவே, ஒவ்வொருவரும் அவரவர் ஆராய்ச்சிக்குத் தக்க முறையில் தத்தம் அபிப்பிராயத்தை வைத்துக் கொள்ளலாம். ஆனால், ஒருவன் தான்நினைப்பதையே மற்றவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தவோ அதிகாரம் பண்ணவோ, இதற்காக மற்றவர்களுக்குச் சங்கடங்களை யுண்டுபண்ணவோ உரிமையில்லை என்பதை இவ்வாக்கியம் நன்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது. மக்காவின் குறைஷிக் குப்பார்கள் இப்படிப்பட்ட கொடிய முறையிலே நடந்து கொண்டதனால்தான் அன்னாருடன் யுத்தம் செய்யலாமென்று அனுமதி யளிக்கப்பட்டது.

194. (அவர்கள் எண்ணப்படி பரிசுத்த மாதங்களில் யுத்தம் செய்யக் கூடாதென நிறுத்தி வைப்பார்களாயின், நீங்களும் யுத்தத்தை அம்மாதங்களில் நிறுத்தி வைப்பீர்களாக. எனவே) பரிசுத்த மாதத்துக்கீடாகப் பரிசுத்த மாதமுண்டு; (அங்ஙனமில்லாது உங்களை ஏமாற்றி, அவர்கள் செய்யும்) சிறப்புற்றதி(ன் மாதங்களி)ல் பதிலுக்குப்பதில் (அத்தியாவசியமாகப் பெற்றுக் கொள்வதும்) உண்டு; பின்னர், எவனேனும் உங்கள்மீது வரம்பு கட(ந்து நட)ப்பானாயின், அவன் உங்கள்மீது வரம்பு கடந்ததே போல் (அம்மட்டே) நீங்களும் அவன்மீது வரம்பு கடக்கலாம். (அவன் அம்மாதங்களில் யுத்தம் தொடங்குவானாயின், நீங்களும் தொடங்கலாம்; இல்லையேல் இல்லை. இஃதெங்ஙனமாயினும், ஒவ்வோர் அமயத்திலும்) அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பீர்களாக. மேலும், அறிந்து கொள்ளுங்கள்: அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்பவர்களுடனே(யே) இருக்கிறான்.

195. மேலும், அல்லாஹ்வின் பாதையில் (நீங்கள் ஐசுவரியத்தைச்) செலவு செய்யுங்கள்; மேலும், நுங்கள் (அஜாக்ரதையால்) கரங்களைக் கொண்டே (நுங்களை) அழிவில் வீழ்த்திக் கொள்ளாதீர்கள்;[29] மேலும், நன்மையைச் செய்யுங்கள்; நிச்சயமாகவே அல்லாஹ் நன்மை செய்பவர்களை நேசிக்கிறான்.

196. மேலும், ஹஜ்ஜையும் உம்ராவையும் (சேர்த்துச் செய்ய நாடுவீர்களாயின், அவற்றினை) அல்லாஹ்வுக்காகப் பூர்த்தி செய்யுங்கள்; பிறகு (உங்கள் எண்ணப்படி இவ்வணக்கத்தைச் செய்ய முடியாமல் நீங்கள்) தடுக்கப் படுவீர்களாயின் (உங்களால்) இயன்ற ஹத்யியை—(உயிர்ப்பிராணியை அனுப்பி வையுங்கள்).[30] பின்னர் (அந்த) ஹத்யி தன் ஸ்தலம் போய்ச் சேருமட்டும் உங்களுடைய சிரங்களை க்ஷவரம் செய்து கொள்ளாதீர்கள்; எனவே, உங்களுள் எவனேனும் வியாதியஸ்தனாகவேனும், அல்லது

29. எந்த மனிதர்கள் தற்காப்பு யுத்தத்துக்காகத் தங்கள் தனத்தைச் செலவு செய்யாமல் வாளா இருக்கின்றார்களோ, அவர்கள் தங்களைச் சார்ந்த சமூகத்தார்கள் எவ்வாற்றானும் அழிந்துபோகட்டு மென்று எண்ணியவர்களாகவே யிருக்கின்றார்கள். ஆகவேதான் அல்லாஹ் அவர்களைப்பற்றி இவ்வாயத்தில் இவ்வண்ணம் கூறியுள்ளான்.

30. யுத்தத்தின் காரணத்தினாலோ, அல்லது வேறு காரணங்களினாலோ ஹஜ்ஜுக்குச் செல்லுபவர்கள் தடை செய்யப்பட்டு விடுவார்களாயின், இப்படிப் பட்டவர்கள் யாது செய்யவேண்டு மென்பதை இவ்வாக்கியம் விளக்கிக் காட்டுகின்றது. அன்றியும் ஹஜ்ஜில் ஒருவகையான தமத்துஃ என்னும் வணக்கத்தைச் செய்பவர்கள் யாங்ஙனம் தங்கள் ஹஜ்ஜின் காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டு மென்பதையும் இவ்வாயத்துச் சுட்டிக்காட்டுகின்றது.

அவனது சிரத்தில் நோவினையேனும் இருக்குமாயின் (அவன்) நோன்பு நோற்பதாலோ, அல்லது தர்மத்தினாலோ, அல்லது (மிருகத்தைப்) பலியிடுவதாலோ அதற்கீடுசெய்தல் வேண்டும்; பின்னர் (நீங்கள் யுத்த மின்மையினாலோ அல்லது வேறு விதமான தடைகள் நீங்கினமையாலோ மக்காவுக்குச்சென்று ஹஜ்ஜு செய்வதில்) அச்சந் தீர்ந்தீர்களாயின் (அப்பொழுது) ஹஜ்ஜுடனே உம்ராவின் பிரயோஜனத்தையும் சேர்த்துப்பெறும் அவன் தன்னாலியன்ற உயிர்(ப் பலியை) ஹத்யியைச் செய்தல் வேண்டும். மேலும் (இப்படிக் குர்பானீ செய்ய)முடியாமலிருப்பவன் ஹஜ்ஜின் காலத்தில் மூன்று நோன்பும், நீங்கள்(சொந்த இல்லம்) திரும்பியக் கால் ஏழும் (நோற்றல்)வேண்டும். இவை பத்தும் பரிபூரணமாயிருக்கின்றன; இ(ந்தக் கட்டளையான)து,—(ஹஜ்ஜையும் உம்ராவையும் சேர்த்துச் செய்யலாமென்பது) எவனுடைய குடும்பத்தினர் பரிசுத்த ஆலயத்தில்—(கஃபாவில்) இல்லாம லிருக்கின்றார்களோ, அவர்களுக்கே உரியதாகும்; (ஆனால், மக்காவிலுள்ளவர்கள் இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துச் செய்வது கூடாது.) மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும்!) அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்வீர்களாக; மேலும், நோவினை செய்வதில் அல்லாஹ் (மிகக்) கொடியவனா யிருக்கிறான் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்.

---

## பிரிவு — 25

*ஹஜ்ஜு யாத்திரையும் விஷமக் காரர்களும்.*

197. ஹஜ்ஜு(க்குரிய காலம் நன்கு) அறியப்பட்ட மாதங்களாகும்; ஆதலின், எவனேனும் அவைகளில் ஹஜ்ஜை(ச் செய்ய வேண்டுமென்று தன்மீது ஒரு பொறுப்பை) ஏற்படுத்திக்கொண்டு விடுவானாயின், ஹஜ்ஜி(ன் காலத்தி)ல் (ஸ்திரீகளுடன்) அஸப்பிய வார்த்தை (ஆடல்) கூடாது; தீயவார்த்தையும் கூடாது. (சண்டை) சச்சரவும் (செய்வது) கூடாது;[31] மேலும் (நீங்கள்) எந்த நன்மையைச் செய்கின்றீர்களோ, அதை அல்லாஹ் அறிகிறான்; மேலும் (நீங்கள் ஹஜ்ஜு செய்ய நாடுவீர்களாயின், அதற்கு வேண்டிய)

---

31. ஹஜ்ஜுக்குச் செல்லுகின்றவர்கள் ஒழுகி நடந்துகொள்ள வேண்டியவைகள் இதில் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன:—ஹஜ்ஜுக்கென ஒருவன் இஹ்ராம் கட்டிக்கொண்டு விடுவானாயின், மனைவியருடன் சேர்க்கை செய்வதும், வீணான விபரீத அஸப்பிய வார்த்தைகள் கூறுவதும், சண்டை சச்சரவுகள் செய்வதும் கூடாவென்றும், பாசகம்பெற்று ஹஜ்ஜை நிறைவேற்றுவது நன்றன்றென்னும் இவ்வாக்கியம் உபதேசம் புரிகின்றது.

சாமக்கிரியையைத் தையார் செய்துகொள்ளுங்கள்; ஆதலின், சாமக்கிரியையில் சிறந்தது (மனத்தின் மெய்யான சாமக்கிரியையாகும்; அன்றியும் யாசகத்தை விட்டு) அஞ்சிக் கொள்வதாகும்; மேலும், ஏ (பகுத்துணரும்) அறிவுடையவர்காள்! (ஒவ்வொரு சமயத்திலும் நீங்கள்) என்னை(யே) அஞ்சிக் கொள்ளுங்கள். (இதனால் நுங்கள் செய்கைகளெல்லாம் சீராய் முடியும்.)

198. (நீங்கள் அறவே இவ்வுலகப் பொருள்களைத் தேடக் கூடாதென்பதில்லை.) நுங்களுடைய இரக்ஷகனிடமிருந்து நீங்கள் இலாபத்தைக் தேடுவது நுங்கள்மீது குற்றமாகாது;[32] ஆதலின், அரபாத் (என்னுமிடத்)தை விட்டு(த் தவ்வாபுக்காக நீங்கள் திரள் திரளாகத்) திரும்புவீர்களாயின், மஷ்அரில் ஹராமில்—(முஜ்தலிபாவில் நாமதித்து) அல்லாஹ்வை நினைப்பீர்களாக; மேலும், அவன் உங்களுக்குக் காட்டிய நேர்வழியின்படி அவனை ஞாபகங் கூருங்கள்; மேலும் (நீங்களோ) அதற்கு முன்னம் நிச்சயமாக வழிவிலகியவர்களுள் ளாயிருந்தீர்கள்.

199. (ஏ மக்காவாசிகாள்!) பின்னர் மனிதர்கள் (கூட்டங் கூட்டமாகத்) திரும்பும் அவ்விடத்திருந்தே நீங்களும் திரும்புங்கள்;[33] மேலும், அல்லாஹ்வின்மாட்டுப் பாபமன்னிப்பைத் தேடுங்கள்; நிச்சயமாகவே அல்லாஹ் (பாபத்தை) மன்னிப்பவனாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கிறான்.

---

32. சத்திய சன்மார்க்கத்தின் இவ்வறிவிப்பானது, உலக ஜீவனத்துக்குரிய பொருள்களைச் சேகரிப்பதற்கும், இவ்வுலகில் சிறந்தவர்கள் ஜயம் பெற்றவர்க ளென்று அழைக்கப்படுவதற்கும் முரண்பட்டதா யில்லை. ஆனால், மனிதர்கள் இவ்வுலகிலும் மறு உலகிலும் ஜயம் பெற்றவர்களாகவும், சிறந்தவர்களாகவும், செழிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்றேதான் இவ்வறிவிப்பு விழைகின்றது. ஹஜ்ஜென்பது ஒரு வணக்கமாகும். அவ்வணக்கம் இவ்வுலகப் பொருள்களைத் திரட்டுவதற்கு இடையூறு யில்லை. பொருளும் செல்வமும் அல்லாஹ்வின் அருளாம். எனவே, அவனருளை எங்கும் நீங்கள் பெறலாம். ஆனால், இவ்வுலகப் பொருள்களைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் ஞாபகத்தையும் வணக்கத்தையும் விட்டுவிடக் கூடாதென்பதே இதன் தாத்பரியமாம்.

33. ஹஜ்ஜுடைய வணக்கங்களுள் அரபாத் என்னும் ஸ்தலத்தில் போய்த் தங்குவதும், அங்கிருந்து திரும்புவதும் ஒன்றும். ஆனால், மக்காவாசிகள் ஹரத்தின் எல்லைவரை சென்று திரும்பி வந்துகொண்டிருந்தனர்; அரபாத்வரை செல்வதில்லை. அன்றியும், அவர்கள், 'நாங்கள் ஸ்தலவாசிகளா யிருக்கிறோம். நாங்கள் ஹரத்தின் எல்லையைக் கடந்து செல்ல வேண்டிய தவசியமின்று,' என்றும் அகம்பாவமாகக் கூறிக்கொண் டிருந்தனர். ஆனால், உண்மையில் அவர்கள், ஹஜ்ஜுடைய கிரியைகளையெல்லாம் சரிவரச் செய்யாது அதுசமயம் அங்கு வந்துகூடும் மக்கள்பா லிருந்து பொருள் திரட்டுவதே பெரிதெனக் கொண்டிருந்தனர். எனவே, அல்லாஹ் இக் கொடிய எண்ணத்தை இத்திருவாக்கியத்தால் நீக்கி விட்டான்.

200. பின்னர், உங்களுடைய ஹஜ்ஜின் வணக்கங்களை யெல்லாம் முடித்துக்கொண்டு விடுவீர்களாயின் (ஆதி காலத்தில்) உங்களுடைய பிதாமஹார்(களின் சிறப்பாய பெருமை)களை ஞாபகப் படுத்தியதேபோல், இல்லை! (அதனைக் காட்டினும்) அதிகமான ஞாபகமாய் அல்லாஹ்வை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்; (ஹஜ்ஜின் வணக்கங்களின் தாத்பரியமும் இதுவே.) மேலும் (இவ்வுலக சுகபோகங்களே பெரியனவென் றெண்ணிக்கொண் டிருப்பவரான) மனிதர்களுள் சிலர், "எங்கள் இரக்ஷக! (என்ன நன்மையையும் பிரயோஜனத்தையும் தருகின்றனையோ, அவற் றினை) இவ்வுலகத்திலே(யே) எங்களுக்குத் தந்து விடுவாயாக!" என்று சொல்லுகிறார்; எனவே, இறுதி(நாளின் வாழ்க்கை)யில் அவனுக் கொன்றும் நன்மை கிடையாது.

201. மேலும் (இவ்வுலகிலும் மறு உலகிலும் நன்மையை யும் ஜயத்தையும் பெற நாடுகிறவர்களான) அவர்களுள் சிலர், "எங்கள் இரக்ஷக! இவ்வுலகில் நன்மையையும், (இனி வரப் போகின்ற) இறுதி நாளில் நன்மையையும் தந்தருள்வாயாக! மேலும், அக்னியின் வேதனையினின்றும் எங்களைக் காப்பாற்று வாயாக!" என்று கூறுகிறார்.

202. இவர்களுக்குத் தாம் (இவர்கள்) சம்பாதித்ததன் பயனுக (இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஜயம் பெறுதற்குரிய) பாக மிருக்கின்றது; மேலும், அல்லாஹ் (கிரியாம்சங்களின்) கணக்கைச் சீக்கிரம் வாங்குகிறவனு யிருக்கிறான்.

203. மேலும், அல்லாஹ்வைக் குறிப்பிட்ட (கணிக்கப்பட்ட ஐயாமுத்தஷ்ரீக்) நாட்களில் (அதிகம்) ஞாபகம் செய்யுங்கள்; பிறகு எவனேனும் (திரும்புப்போது) இரண்டே நாளில் துரிதப் ப(ட்டுப் புறப்ப)ட்டு விடுவானுயின், அவன்மீது எவ்விதப் பாபமு மில்லை; மேலும், எவனேனும் பிற்படுத்துவானுயின், அவன்மீது(ம்) எவ்விதப் பாபமு மில்லை; (இவ்வண்ணம் முந்துவதற்கும் பிந்துவ தற்கும் அனுமதியளிப்பது அல்லாஹ்வுக்கு) அஞ்சிநடந்த அவ னுக்கு ஆகும்; மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பீர்களாக; இன்னம், நீங்கள் (ஒருநாள் மரணமடைந்து, பின்னர் இறுதியாக) அவனிடமே ஒன்றுசேர்க்கப் படுவீர்கள் என்று அறியக் கடவீர்களாக.

204. மேலும், மனிதர்களுள் சிலருளர்; இவ்வுலக வாழ்க்கையைப் பற்றிய அவருடைய வார்த்தை உமக்கு ஆச் சரியத்தை விளைவிக்கின்றது; மேலும், தமதுள்ளத்தி லுள்ள அதன்மீது அல்லாஹ்வை (அவர்) சாக்ஷியாக்குகின்றார்.

(ஆனால், உண்மையில் அவருடைய ஹிருதயம் சத்திய நம்பிக்கையைவிட்டுக் காலியாயிருக்கிறது.) மேலும், அவர் வம்புத்தனத்தில் அதிக உறுதியுள்ளவரா யிருக்கின்றார்.

205. மேலும் (அவர் அரசாட்சியில் சிறிது) அதிகாரம் பெற்று விடுவாராயின், பூமியில் புரட்சி யுண்டுபண்ணவும், அதில் (உண்டாகும்) வேளாண்மையையும் (இதரர்களின்) வம்சத்தையும் அழிக்கப் (பெரிதும்) முயற்சி யெடுக்கின்றார்; அல்லாஹ்வோ புரட்சியை விரும்புவதில்லை.[34]

206. மேலும், அல்லாஹ்வுக் கஞ்சிக்கொள்—(அக்கிரமத்தினின்றும் புரட்சியினின்றும் நீங்கிக்கொள்)ளென்று அவருக்குச் சொல்லப்படுமாயின், பாபத்தின்மீது(ண்டாகும்) கர்வம் அவரை (அதிகமாய்)ப் பற்றிக் கொள்ளுகின்றது; (அல்லாஹ்வுக் கடிபணிவதற்கீடாக அதிக அக்கிரமமே செய்கின்றார்.) ஆதலின், அவருக்கு நரகமே போது(மானதாகு)ம்; மேலும் (இவ்வாறு நரகத்தைத் தேடுபவருக்கு அது) நிச்சயமாகவே கெட்ட இருப்பிடமாகும்.

207. மேலும் (அதற்கெதிரிடையாக) மனிதர்களுள் சிலர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டுத் தமதாத்மாவையே(தா னென்ன! தம்மிடமுள்ள சகல வஸ்துக்களையும்) விற்று விடுகின்றார்; மேலும் (இப்படிப்பட்டவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும்:) அல்லாஹ் அடியார்மீது தயாளுவா யிருக்கின்றான்.[35]

208. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! (நீங்கள் முஸ்லிம்களாவதற்காக நாவினால் மட்டும் 'இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோ' மென்று கூறிவிடுதல் போதாது. ஆனால்) நீங்கள்

---

34. உண்மையில் மார்க்கத்தின் கருத்தானது, இவ்வுலகத்தை அதிகம் விழையாமலிருப்பது ஒரு பக்கல் கிடக்க, இவ்வுலக சம்பந்தமான ஆணவத்தையும், அகம்பாவத்தையும் விரும்புவதில்லை யென்பது தானாகும். இவ்வுலகமே சதமென வெண்ணி இதைக் கொண்டே பெருமைகொண்டிருப்பவர்கள் அநேகமாகத் தங்களுக்குவேண்டற்பாலதான அல்லாஹ்வின் ஏவல்களை யெல்லாம் உதாசினம் செய்துவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்க அதிகாரமும் சிறிது கிடைத்துவிடுமாயின், மார்க்க போதனைகளை யெல்லாம் கனவிலும் நினையாமல் தமதிச்சைக் கடிமைப்பட்டு, உலகின் கண் எத்தனை விதமான அக்கிரமங்களுளவோ அத்தனையையும் செய்து, உலக சீர்திருத்தத்தையும் ஒழுங்கையும் குலைக்கும் விஷயத்தில் இன்னார் ஒரு சிறிதும் பின் வாங்குவதில்லை. இதைத்தான் இவ்வாக்கியம் இங்குக் குறிப்பிட்டு நிற்கின்றது.

35. ஆனால், உண்மையிலே அல்லாஹ்வின்மீது பக்தி பூண்டவர்கள், இவ்வுலக காரியங்களில் எம்மட்டும் ஈடுபட்டிருப்பினும், இவர்களுடைய ஒவ்வொரு காரியமும் தம் மனோபீஷ்டத்துக்கு ஐக்கியப்பட்டதாயில்லாமல் எல்லாக் காரியங்களும் அல்லாஹ்

முற்றும் (உங்கள் செயல்களினாலும் நம்பிக்கையாலும்) இஸ்லாத்துள் நுழைந்து கொள்வீர்களாக. மேலும், ஷைத்தானுடைய அடிச்சுவட்டைப் பின் பற்றாதீர்கள்; உண்மையாகவே அவன் உங்களுக்குப் பகிரங்க விரோதியா யிருக்கிறான்.[36]

209. பின்னர், உங்கள்பால் தெளிவான சான்றுகள் வந்ததன்பின்(னும் நீங்கள்) தவறி விடுவீர்களாயின், (பிறகு) அல்லாஹ் நிச்சயமாக வன்மை யுற்றவனாக(வும்) ஞானமுடையவனாக(வும்) இருக்கிறான்—(அவனுடைய இயற்கைச் சட்டமுறைகளினின்று நீங்கள் தப்பிக்கொள்வது முடியாது) என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

210. (அம்மனிதர்கள் நன்னம்பிக்கை கொள்வதற்கு இது காறும் நாம் சொன்னது போதாதென்று எண்ணுகின்றனர்? அப்படியாயின் அவர்கள் வேறென்ன வேண்டுமென்று விரும்புகின்றனர்? என்ன!) அல்லாஹ்வும் அமரர்களும் மேகத்தின் நிழல்களில் தங்கள்பால் விஜயம் செய்து, (எந்தக்) காரியம் (ஆக வேண்டி யிருந்ததோ, அதுவும்) தீர்மானிக்கவும் படவேண்டுமென்பதைத் தவிர்த்து (வேறொன்றுக்காகவும்) அவர்கள் காத்திருக்கவில்லை (போலும்!) மேலும் (சகல) காரியங்களும் அல்லாஹ்வின் பக்கமே மீட்பிக்கப்படும்.

---

வின் அன்பைப் பெறவேண்டு மென்னும் நோக்கங்கொண்டே நடைபெறுகின்றன. இவ்வுலக நன்மையான இச்சைக்குட்பட்ட மனிதர்கள், தாங்கள் நன்மையை யடையும் பொருட்டு இதரர்களின் ஆன்மாவைப் பலியிடவும் பின்தயங்கார்கள். ஆனால், அல்லாஹ்வின் அன்பையே பெறவேண்டுமென்று எண்ணும் பரம பக்தர்கள், தங்களுக்கு மட்டுமல்லாது இதர நண்பர்களுக்காகவும் தங்கள் ஆன்மாக்களைத் தியாகம் செய்யப் பின் வாங்கமாட்டார்கள். எனவே, இவ்விரண்டு மார்க்கங்களுள் எதைப் பின்பற்றி நடந்தால் அல்லாஹ்வின் அன்பை மக்கள் அடையக்கூடும் என்பதை இவ்வாக்கியத்தால் அல்லாஹ் சுட்டிக் காட்டுகின்றான்.

36. இத்தனை நயமாகவும் பயமாகவும் அல்லாஹ் தன்னுடைய உபதேசங்களை உரைத்து, மக்களெல்லாம் ஈமானெனும் நன்னம்பிக்கைகொண்டு, மேன்மையையும் நன்மையையும் அடையவேண்டு மென்று கூறியும், ஒரு கூட்டத்தார் இவ்வளவும் போதாது; ஆனால், அல்லாஹ்வே அன்னவர்பால் நேரேவந்து, 'இதோ! நான்தான் ஆண்டவன்! என்னை நம்புங்கள்!' என்றுரைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர்? இது ஆனகாரியமு மல்ல; ஆகக்கூடிய காரியமு மல்ல. ஆதலால், தங்கள் ஹிருதயத்துள் உண்மையான பக்திகொண் டில்லாதவர்களும், தங்கள் ஞானத்தைச் சரியான வழியில் உபயோகித்துச் சத்தியத்தை உணர்ந்துகொண்டு அதன்படி நடக்காதவர்களும், இப்படிப்பட்ட ஏனையவர்களும், மரணமடைந்தபின் என்பால் வந்தே தீருவார்கள். ஆகலான் அது சமயம் தங்கள் செய்கைக்கும் எண்ணத்துக்கும் தக்கபடி பிரதி பலனை நிச்சயமாய் அனுபவிப்பார்கள் என்னும் கருத்தை அல்லாஹ் இவ்வாக்கியத்தின் வாயிலாய் விளக்கிக் காட்டுகிறான்.

## பிரிவு—26

*சோதனைகளும் சங்கடங்களும்.*

211. (ஏ நபியே! சென்றுபோன வர்க்கத்தாரின் விஷயங்களை இன்னமும் நீர் நன்றாகக் கவனித்தல் வேண்டும்.) எத்தனைபகிரங்கமான அத்தாக்ஷிகளை (நாம்) அவர்களுக்கு அளித்துள்ளோமென்பதை பனீ இஸ்ராயீல்களிடம் கேட்பீராக; மேலும், அல்லாஹ்வின் அருட்கொடையை, அது தன்பால் வந்ததன்பின் எவனேனும் (கெட்ட முறையில்) மாற்றுவானாயின், (பிறகு) நிச்சயமாகவே அல்லாஹ் (தண்டித்து) நோவினை செய்வதில் கொடியவனாயிருக்கிறான் (என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளட்டும்.)[37]

212. (நன்னம்பிக்கையை) நிராகரிப்பவர்களான அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை(க்கான செல்வங்களும் சுகபோகங்களும்) அலங்காரமாக்கப்பட் டிருக்கின்றன; (எனவே) மேலும் (அவர்கள், இச்சாதனங்களை அதிகம் பெற்றுக்கொள்ளாமல்) அல்லாஹ்வின்மீது மட்டும் நன்னம்பிக்கை கொண்டுள்ள அவர்களை(ப் பார்த்து)ப் பரிகாசம் பண்ணுகிறார்கள்; மேலும் (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடக்கும் அவர்கள் (நாம்) நியாயத்தீர்ப்பு நாளன்று (பரிகசிக்கின்ற) அவர்களுக்கு மேலானவர்களாயிருப்பார்கள்; மேலும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கற்ற (விதமாய அதிகமான) இரணத்தை யளிக்கின்றான்.

213. (ஆதியிலே) மனிதர்கள் (எல்லாரும்) ஒரே வர்க்கத்தினராக(த்தாம்) இருந்தார்கள்; பின்னர் (மானிடர்கள் அதிகமாகிக் கொண்டே செல்லச் செல்லப் பற்பல கூட்டங்களாகவும் பிரிவுகளாகவும் சிதைந்துவிட்டார்கள். எனவே) அல்லாஹ் (தனதருட்கொடையால் ஒருவருக்குப்பின் மற்றொருவராக) நபிமார்களை நற் செய்தி கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அவர்களுள் ளிருந்தே) எழுப்பினான்; மேலும், மனிதர்கள் விகற்பங் கொண்டவர்களாயிருந்த விஷயத்தில் தீர்ப்

---

37. அல்லாஹ்வின் அரிய போதனைகளைக் கொண்டு நன்னம்பிக்கை கொள்ள மனமில்லாதவர்கள், தங்களுக்கு முன்சென்ற பனீ இஸ்ராயீல்களின் விஷயத்தைக் கவனிக்கட்டும்; அல்லாஹ் எத்தனையோ விதத்தால் தன்னுடைய உபதேசத்தைச் செய்தும் அவர்கள் தங்களுடைய துரதிருஷ்டத்தின் காரணத்தால் நேரான வழியை விட்டு விலகி வேறான வழியிலேயே சென்று பொறுக்கமாட்டாத எத்தனையோ விதமான கஷ்டங்களையும் நஷ்டங்களையும் அனுபவிக்கவேண்டியவர்களா யிருந்தார்கள் என்பதைக்கண்டு, அவற்றினின்றும் தங்களுக்கு வேண்டிய படிப்பினையைக் கற்றுக் கொள்ளவேண்டுமென்று இங்கு விஷயம் விளக்கப்படுகிறது.

புக் கூறும்பொருட்டு அவர்களுடனே உண்மையைக் கொண்ட (நூல்) வேதத்தை(யும்) இறக்கினான்; மேலும், அதனை அருளப் பெற்ற அவர்களே யல்லாது, வேறுயாரும் தங்கள்பால் பிரத்தியக்ஷ பிரமாணங்கள் வந்ததன்பின், தமக்குள்(ளே) கலகஞ் செய்து கொண்டு, அதைக் குறித்து விகற்பஞ் செய்துகொள்ள வில்லை; பின்னர் நன்னம்பிக்கை கொண்ட அவர்களுக்கு அல்லாஹ் தன் அனுமதியின் பிரகாரம் அவர்கள் செய்துகொண்டிருந்த விகற்ப விஷயத்தில் உண்மையின் பக்கல் நேர்வழி காட்டினான்; மேலும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு நேரானவழியை அளிக்கிறான்.[38]

214. அல்லது உங்களுக்குமுன் சென்று போனவர்களின் (பரிசோதனையால் ஏற்பட்ட) கதி உங்களுக்கு(ம்) வந்து சேரா முன்னம் (நீங்கள் வெறிதாக நாவினால் மட்டும் நன்னம்பிக்கை கொண்டோமென்று கூறிவிட்டு,) சுவர்க்கத்துள் நுழைந்து விடுவீர்களென்று எண்ணுகின்றீர்களா? (முன்சென்ற) அவர்களைக் கஷ்டங்களும் சங்கடங்களும் (அநேகம்) பிடித்தன; இன்னமும், திருத்தூதரும் அவருடனே நன்னம்பிக்கை கொண்ட அவர்களும் (தங்கள் ஹிருதயங்கள் அச்சங்களையும் கஷ்டங்களையும் பொறுக்க மாட்டாது) "அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்?" என்று சொல்லும் வரை அலைக்கப்பட்டார்கள்; (அப்பொழுது அல்லாஹ் மறைமுக வார்த்தை இவ்வாறு கூறிற்று:) அறிந்துகொள்ளுங்கள்! நிச்சயமாகவே அல்லாஹ்வின் உதவி சமீபித்திருக்கிறது.

215. (ஏ நபியே!) உம்மிடம், எதைச் செலவுசெய்ய வேண்டுமென அவர்கள் வினவுகின்றார்கள். (எனவே நீர்) சொல்வீராக: "நீங்கள் செலவு செய்யும் நல்ல நல்ல ஐசுவரியம் (எதுவாயிருப்

38. ஆதியில் மன்பதைகளெல்லாம் ஒரே வர்க்கத்தினரா யிருந்தனர். எனவே, அவர்களெல்லாம் தங்கள் வாழ்க்கைக் கியைந்தவாறு சாதாரண முறையிலே தங்களுக்கு வேண்டிய மார்க்கத்தை எவ்வித கஷ்டமுமில்லாமல் பின்பற்றி நடந்துவந்தனர்கள். மனிதத்திரள் பெருகப் பெருக அவர்களுள் அநேகபல பிரிவினைக ளுண்டாயின. எனவே, இப்பிரிவினைகளனைத்தும், தங்களுக்குள் அக்கிரமங்களும் அநியாயங்களும் பல செய்துகொண்டு பஹிரங்கமாய் வெளித் தோன்றுவனவாயின. ஆகையால் அல்லாஹ்வின் அனுக்கிரஹம் முன்வந்து, அபிப்பிராய பேதங்கொண்டு பலவாறாய்ப் பிரிந்து கிடந்த அவர்களை யெல்லாம் மீண்டும் ஒரே வழியில் கொண்டுவரும் எண்ணங் கொண்டு, இதற்கான போதனைகளைச் செய்யும் நபிமார்களையும், அவர்களுடன் வேதங்களையும் அனுப்பலாயிற்று. இவ்வாறு வெளியான வேதங்களெல்லாம், அல்லாஹ் ஒருவனே யென்றும், அபிப்பிராய பேதங்களைக் கொண்டு மக்கள் வழி கெட்டுப் போய்விடக் கூடாதென்றும், எல்லா மனிதர்களும் ஏக ஒற்றுமையாய்ச் சகோதரர்களே போல வாழ்ந்து நன்மையை யடையவேண்டு மென்றும் கூறிச் சென்றன வென்பதை இவ்வாக்கியம் நன்கு சுட்டிக் காட்டுகின்றது.

பினும் குற்றமில்லை. ஆனால், நீங்கள் அங்ஙனம் செலவு செய்யும் போது அஃது உங்கள்) பெற்றோர்களுக்கும், சுற்றத்தார்களுக்கும், அகதிகளுக்கும், *தரித்திரர்களுக்கும், (கஷ்டப்படும்) வழிப் போக்கருக்கும் (உரித்து) ஆகும்; மேலும், நன்மையான காரியங்களுள் (நீங்கள்) எதைச் செய்கின்றீர்களோ, அதை நிச்சயமாகவே அல்லாஹ் அறிகிறவனா யிருக்கிறான்."

216. உங்கள் மீது யுத்தம் கடமையாக்கப் பட்டது; அஃதோ உங்களுக்கு வெறுப்பானதா யிருக்கிறது; மேலும் (அறியாத் தனத்தால்) ஒருபொருளை நீங்கள் வெறுக்கலாம்; (ஆனால், உண்மையில்) அஃதோ உங்களுக்கு நன்மையானதா யிருக்கிறது; மேலும் (இப்படியே) ஒரு பொருளை நீங்கள் விரும்பலாம்; (ஆனால், உண்மையில்) அஃதோ உங்களுக்குத் தீயதா யிருக்கின்றது; (எனவே, உங்கள் மனம் நாடுவதெல்லாம் உண்மையானதே என்றெண்ணி, அதைக் கொண்டு எதையும் தீர்மானம் பண்ணி விடாதீர்கள்.) மேலும் (அவற்றை யெல்லாம்) அல்லாஹ் அறிகிறான்; மேலும் நீங்கள் அறிகின்றீர்க ளில்லை.

---

## பிரிவு—27

வேறு சில சில்லறை விஷயங்கள்.

217. (ஏ நபியே! அவர்கள்) நும்மிடம் பரிசுத்த மாதமாய அதில் யுத்தம் செய்வதைக் குறித்து வினவுகின்றார்கள்; (ஆதலின், நீர்) சொல்வீராக: அதில் யுத்தம் புரிவது பெரிய (பாபமானது)தாகும்; மேலும் (அதனோடு இதுவும் ஞாபகத்தி லிருக்கட்டும்: மனிதர்களை) அல்லாஹ்வின் பாதையினின்று தடுப்பதும், அவனை நிராகரிப்பதும், பரிசுத்த ஆலயத்தினின்று (அவர்களைத் தடுப்பதும், மஸ்ஜிதுல் ஹராமான) அதினின்று அதனைச் சார்ந்தவர்களை அப்புறப்படுத்துவதும் அல்லாஹ்வினிடம் மிகப் பெரிய (தான பாபமான)தா யிருக்கின்றது; மேலும், புரட்சி (செய்வது) யுத்தத்தைக் காட்டினும் மிகப் பெரி(ய பாபமான)தாகும்; மேலும், (குப்பார்கள்) சக்தி பெறுவார்களாயின், நுங்கள் மார்க்கத்தை விட் டுங்களை அவர்கள் திரும்பச் செய்யும்வரை உங்களுடன் அவர்கள் யுத்தம் செய்வதை (ஒருபோதும்) நிறுத்த மாட்டார்

கள் ;[39] மேலும், உங்களுள் எவரேனும் தம் மார்க்கத்தை விட்டுத் திரும்பி விடுவாராயின், பின்னர் அவர் நிராகரிப்பவராகவே (இறுதிவரை யிருந்து) மரணமடைந்து(ம்) விடுவாராயின், தங்களுடைய செயல்கள் (அனைத்தும்) இவ்வுலகிலும் மறுவுலகிலும் பாழாய்ப் போனவர்கள் அவர்களே (யாவார்கள்); மேலும், அவர்கள் (தாம்) நரகவாசிக ளாவர் ; அவர்கள் அதிலேயே நிலைத்திருப்பார்கள்.

218. (அதற்கு மாறாக) நிச்சயமாக நன்னம்பிக்கை கொண்டவர்களும், (அதிலேயே உறுதியுடன் இறுதிவரை நிலைத்திருந்தவர்களும்,) ஊரை (வெறுத்து) விட்டுப் புறப்பட்(டு எண்ணிறந்த கஷ்டநிஷ்டூரங்கட் கெல்லாம் உட்பட்)டவர்களும், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரிந்தவர்களுமான அவர்கள்தாம் அல்லாஹ்வின் அருளை (அதிகம்) ஆதரவு வைப்பவர்களா யிருக்கின்றனர்கள் ; மேலும், அல்லாஹ்(வும் அவர்கள் எண்ணத்துக்கும் ஆதரவுக்கும் ஒக்கப் பாபத்தை) மன்னிப்பவ னாக(வும்) அன்புடையவனாக(வும்) இருக்கிறான்.

219. (ஏ நபியே!) உம்மிடம் சாராயத்(தைப் பருகுவ)தைக் குறித்தும், சூதாடுவதைக் குறித்தும் வினவுகிறார்கள் ; (ஆதலின், நீர்) சொல்வீராக: "அவ்விரண்டிலும் பெரிய பாபமும், மனிதர்களுக்கு(ச் சிறிது) பிரயோஜனங்களு மிருக்கின்றன ; (ஆனால்) அவ்விரண்டின் பாபமும் அவ்விரண்டின் பிரயோஜனத்தைக் காட்டினும் மிகப் பெரிதாயிருக்கிறது. (எனவே, அவற்றினின்று விலகியிருக்கக் கடவீர்கள்.) மேலும், அவர்கள் எதைச் செலவு செய்யவேண்டு மென்று உம்மிடம் வினவுகின்றனர் ; (ஆதலின், நீர்) சொல்வீராக : "(உங்களுடைய தேவைக்கு) மேற்பட்டிருப்பதை(ச் செலவு செய்யுங்கள்.) நீங்கள் சிந்தனை புரிவதற்காக இவ்வாறாகத்தான் அல்லாஹ் (தன்னுடைய) அத்தாக்ஷிகளை உங்களுக்கு விளக்கிக் காண்பிக்கின்றான் ;

39. பரிசுத்த மாதங்களில் யுத்தம் செய்வது தகாதென்பது முஸ்லிம்களுக்கும் தெரியும்; ஆனால், குப்பார்கள் அம்மாதங்களில் யுத்தம் செய்வதுதானே தகாத காரியமென்று கூறிக்கொண்டு, புரட்சிக்கு வேண்டிய பெரியபெரிய விஷமத்தனமான காரியங்களை யெல்லாம் செய்துகொண் டிருந்தார்கள். இப்படிப்பட்ட விஷமத்தனம் செய்வது தகாதென்றும், மீண்டும் அந்தக் குப்பார்கள் முஸ்லிம்களுக்குத் தொந்தரை கொடுத்துக்கொண் டிருப்பார்களாயின், அதனைத் தடுப்பதற்காக யுத்தம் செய்வது பெரிய பாபமான காரிய மன்றென்றும் இவ்வாக்கியத்தால் அல்லாஹ் விளக்கிக் காட்டுகின்றான்.

220. (இந்த) உலகிலும், (மறுவுலகாகிய) இறுதி (வாழ்க்கை) யிலும் (சம்பந்தப்பட்ட காரியங்களை நீங்கள் நன்கு சிந்தித்துப் பரியாலோசனை செய்து பாருங்கள்.) மேலும், நும்மிடம் அகதிகளைப் பற்றி (அவர்கள்) வினவுகிறார்கள். (ஆதலின், நீர்) சொல்வீராக : "அவர்களை—(அன்னவரின் காரியாதிகளை)ச் சீர் செய்து வைப்பது நன்மையாகும்; மேலும், அவர்களுடனே (நீங்கள்) கலந்துகொள்வீர்களாயின்—(அஃதாவது, அன்னாரை உங்கள் இல்லத்தாருடன் சேர்த்துக் கொள்ளுவீர்களாயின், அப்பொழுது அவர்கள்) உங்களுடைய சகோதரர்களாயிருக்கின்றனர்கள்; மேலும், அல்லாஹ் சீர்திருத்துபவரினின்றும் விஷமம் செய்பவரை(ப் பிரித்து) அறிகிறான்; மேலும், அல்லாஹ் நாடியிருப்பானாயின், உங்களைக் கஷ்டத்துள்ளாக்கியிருப்பான்; நிச்சயமாகவே அல்லாஹ் வன்மையுள்ளவனாக(வும்) ஞானம் நிறைந்தவனாக(வும்) இருக்கிறான்."

221. இன்னம் (இறைவனுக்கு) இணைவைக்கும் (முஷ்ரிக்கான) பெண்களை அவர்கள் நன்னம்பிக்கை கொள்ளும் வரை (நீங்கள்) மணம் புரிந்து கொள்ளாதீர்கள்;[40] மேலும், இணைவைக்கும் பெண் (தன் வெளித்தோற்ற வனப்பால்) நுங்களை இறும்பூதெய்தச் செய்திடினும், அவளைக் காட்டினும் (சர்வசாதாரணமான எளிய) நன்னம்பிக்கை கொண்ட வெள்ளாட்டியே நல்லவளாவாள்; மேலும், (அவ்வாறு) இணைவைக்கும் புருஷர்களுக்கு அவர்கள் நன்னம்பிக்கை கொள்ளும் வரை (நுங்கள் நன்னம்பிக்கை கொண்ட பெண்களை) மணமுடித்து வையாதீர்கள்; மேலும், இணைவைக்கும் புருஷன் (தன் வெளித்தோற்ற அழகால்) நுங்களை இறும்பூதெய்தச் செய்திடினும், அவனைக் காட்டினும் (சர்வசாதாரணமான எளிய) நன்னம்பிக்கை கொண்ட அடிமையே சிறந்தவனாவான்; (இணைவைக்கும்) அவர்கள் (நுங்களை நேரான வழியினின்றுந் திருப்பி) நெருப்பின் பக்கல் அழைக்கின்றார்கள்; மேலும், அல்லாஹ்(வோ) தன்னுடைய உத்தரவு கொண்டு (நேரான வழியைக் காட்டிச்) சுவர்க்கத்தின் பக்கலும் (பாப)மன்னிப்பின் பக்கலும் அழைக்கின்றான்; மேலும் (அல்லாஹ்) மனிதர்களுக்கு, அவர்கள் நல்லுபதேசம் பெறும் பொருட்டுத் தன்னுடைய ஆத்தாக்ஷிகளை விளக்கிக் காட்டுகின்றான்.

40. மேலே யுத்த விஷயத்தைக் கூறியதால், அதில் அகப்பட்ட ஆண்களையும் பெண்களையும் முஸ்லிம்கள் விவாகம் செய்து கொள்ளலாமா? கூடாதா? என்ற சந்தேகம் உண்டாகின்றமையான், அவ்விஷயத்தை அல்லாஹ் இவ்வாக்கியத்தின் வாயிலாக இடையில் விளக்கிக்காட்டி யுள்ளான்.

## பிரிவு—28

*விவாக ரத்து (தலாக்) விஷயம்.*

222. மேலும் (ஏ நபியே!) நும்மிடம் மாதவிடாயின் காலத்(தில் பெண்களிடம் நெருங்கலாமா, வென்னும் விஷயத்)தைக் குறித்து (அவர்கள்). வினவுகின்றார்கள்; [41](ஆதலின், நீர்) சொல்வீராக: "அது தீமை பயப்பத(ன் காலம)ாகும்; எனவே, மாதவிடாயின்போது ஸ்திரீகளை விட்டு விலகி யிருப்பீர்களாக; மேலும் (அந்த மாதப் பூப்பினின்றும்) அவர்கள் பரிசுத்தமாகும் வரை அன்னவர்களிடம் நெருங்காதீர்கள்; பின்னர் (இதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்: அப்பெண்கள்) பரிசுத்தமடைந்து விடுவார்களாயின், அல்லாஹ் உங்களுக்கு (இயற்கைக் கொடுத்தவாறு) ஏவிய வண்ணம் அன்னவர்பால் வாருங்கள்; நிச்சயமாகவே அல்லாஹ் (பாபத்தை விட்டு மன்னிப்புத்தேடித் தன்பால்) திரும்புகிறவர்களை நேசிக்கிறான்; மேலும், பரிசுத்தமானவர்களை(யே) நேசிக்கின்றான்."

223. (சதிபதிகளது சம்பந்தத்தை ஆழ்ந்து நோக்குமிடத்து) நுங்கள் மனைவியர் நுங்களுக்குரிய வேளாண்மையாயிருக்கின்றார்கள்; எனவே, நீங்கள் நாடிய வண்ணம் (இயற்கைச் சட்டப்படி) நுங்கள் வேளாண்மையின் பக்கல் வாருங்கள்; மேலும், நுங்களுடைய ஆன்மாக்களுக்கு முற்கூட்டியே நன்மையைச் செய்யக் கடவீர்கள்; (அஃதாவது, சந்ததிகளுக்கு வேண்டிய சாதனத்தைத் தேடிக் கொள்ளுங்கள்). இன்னம், (அதுவேயுமன்றி ஒவ்வொரு விஷயத்திலும்) அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்; மேலும், நீங்கள் (மரணமடைந்த பின் ஒருநாள்) அவனை நிச்சயமாகச் சந்திப்பீர்களென்பதை(யும்) அறிந்து கொள்ளுங்கள்; மேலும், நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு(ச் சரியான சன்மார்க்கத்தின் சௌகரியத்தைப் பற்றியும், அனுவசியமான கட்டுப்பாட்டினின்று பரிசுத்தமானதைப் பற்றியும்) நற்செய்தி கூறுவீராக.

224. மேலும் (ஊன்றிப் பாருங்கள்!) நீங்கள் (யாருக்கேனும்) நன்மை செய்வதற்காகவும், நீங்கள் தப்பிக்கொள்வதற்காகவும், நீங்கள் மனிதர்கள்பால் சமாதானம் செய்து வைப்பதற்காகவும் (நீங்கள் அடிக்கடி செய்யும்) உங்கள் பிரமாணங்களுக்கு

41. விவாக பந்தத்துக்குப் பின் சதி பதிகள் ஒழுக வேண்டிய முறையையும் காலத்தையும் நல்ல அழகான முறையால் அல்லாஹ் இவ்வாக்கியத்தில் கூறியிருக்கின்றான்.

அல்லாஹ்வை விளையாட்டுக் கருவியாகச் (செய்து, நற்காரியத்துக் கெதிராக அல்லாஹ்வின் மீது பிரமாணம் செய்து, பின்னர் அவன்மீதே பிரமாணம் செய்து, 'நாங்கள் இக்காரியத்தைச் செய்யவே யில்லை' யென்று மறுத்துக் கூறிப் பாபங்களைச்) செய்யாதீர்கள்; மேலும், அல்லாஹ் (நீங்கள் உங்கள் ஹிருதயங் களுள் மறைத்து வைத்துக் கொண்டு கூறுவதை யெல்லாம்) கேட்பவனாக, அறிகிறவனாக இருக்கிறான்.

225. (ஆனால்) உங்களுடைய பிரமாணங்களுள் வீணான (அர்த்தமற்ற)தைக் கொண்டு அல்லாஹ் உங்களைப் பற்றிப்பிடிக்க மாட்டான்; (மேலும், அது பொருட்படுத்தக் கூடியது மன்று;) ஆனால், உங்களுடைய ஹிருதயங்கள் (உண்மையாக நாடிச் செய்து) சம்பாதிக்குமதைக் கொண்டே (அவன்) உங்களைப் பற்றிப்பிடிப் பான்; (இதனைப் பொருட்படுத்தாம லிருத்தலும் முடியாது.) மேலும், அல்லாஹ் (சகல காலங்களிலும் இழைக்கப்படும் பாபத்தை) மன்னிப்பவனாக,பொறுமையுள்ளவனாக இருக்கின்றான்.

226. தங்கள் மனைவியரிடம் (நெருங்குவ தில்லை யென்று) பிரமாணம் செய்பவர்கள் நான்கு மாதங்கள் (அவர்க ளருகினில் நெருங்காமல்) காத்திருத்தல் வேண்டும்; பின்னர் (அதற்கிடையே அவர்கள் தங்கள் மனைவியரிடம்) மீண்டு (விரைந்து) விடுவார் களாயின், நிச்சயமாகவே அல்லாஹ் (பாபத்தை) மன்னிப்பவனாக (வும்) அன்புடையவனாக(வும்) இருக்கிறான். (எனவே, நீங்களும் இவ்வண்ணமே இதரர்களுடைய தவறுகளைப் பொறுத்துக் கொள்வீர்களாக.)

227. மேலும் (அப்படிச் செய்யாமல் புருஷர்கள்) விவாக ரத்தை—(அப்படியே தலாக்கை)த் தீர்மானித்து விடுவார்களாயின், (இதை அவர்கள் மறந்துவிட வேண்டாம்:) நிச்சயமாகவே அல்லாஹ் கேட்பவனாக, அறிகிறவனாக இருக்கின்றான். [ஆகவே, நீங்கள் அக்கிரமமாகவும் அநியாயமாகவும் உங்கள் மனைவியரை விவாகரத்து செய்து தலாக்குச் சொல்லி விடுவீர்க ளாயின், அஃது அல்லாஹ்வுக்கு மறைவானதா யிருப்பதில்லை.]*

228. மேலும், விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள், தங்களை மூன்று மாதவிடாய்(க் காலம் வரை வேறு விவாகம் செய்து கொள்ளாமல்) காத்திருக்கக்கடவர்; மேலும் (உண்மையிலேயே அப் பெண்கள்) அல்லாஹ்வைக் கொண்டும் இறுதி(த் தீர்ப்பு)

* "சட்டத்துக்கு முரண்படாததும், ஆனால் ஆண்டவனால் மிகவும் வெறுக்கப் படுவதுமா யிருப்பது விவாக விலக்கா யிருக்கிறது" என்பது ஹதீது.

நாளைக் கொண்டும் நன்னம்பிக்கை கொண்டவர்க ளாயின், (இக்காலத்திற்குள்) தங்கள் கர்ப்பாசயங்களில் அல்லாஹ் சிருஷ்டித்திருப்பதை அவர்கள் மறைத்து வைப்பது அவர்களுக்கு ஆகாது ; (அஃதாவது, அவர்கள் கர்ப்பமடைந் திருப்பார்களாயின், அதனை ஒளிக்காமல் சொல்லி விடல் வேண்டும்.) மேலும், அவர்களுடைய கணவன்மார்கள் சமாதானத்தை நாடுவார்களாயின், அப்பெண்களை அந்தத் தவணைக் குள்(ளே) திருப்பிக் கொள்ளும் விஷயத்தில் அதிக பாத்யதை யுள்ளவர்களாக இருக்கின்றார்கள் ; மேலும் (புருஷர்களுக்கு) அப்பெண்கள் மீது பாத்யதை யிருப்பதே போல, அப்பெண்களுக்கும் நன்மையான முறையில் (புருஷர்கள்மீது பாத்யதை) உண்டு ; மேலும், ஆடவருக்கு(ப் பெண்டிரானை) அவர்கள்மீது சிறிது உயரிய அந்தஸ்துண்டு. ஆதலின், ஒவ்வொருவரும் எல்லையைக் கடவாமல் தத்தமக் கேற்பட்ட பாத்யதையைக் கவனித்து நடத்தல் வேண்டும். மேலும், அல்லாஹ் வன்மையுள்ளவனாக, ஞானமுள்ளவனாக இருக்கிறான்.

## பிரிவு—29

விவாகரத்து—தொடர்.

229. விவாகரத்து (செய்து, மீட்டும் மனைவியைத் தன்னுடனே சேர்ந்துக் கொள்வது) இரண்டு முறையா(க இரண்டு மாதங்களில் சொல்வதா)கும் ; பின்னர், (புருஷர்களுக்கு இரண்டு வழிகளே யிருக்கின்றன. அவை யாவெனின் : இரண்டு முறை தலாக்குச் சொல்லப்பட்ட மனைவியரை) நல்ல முறையில் தடுத்து (அன்னாருடன் வாழ்க்கைச் சம்பந்தத்தை மீட்டும் வைத்து)க் கொள்ளல் வேண்டும் ; அல்லது அழகான முறையில்[42] (மூன்றாம்

42. அஃதாவது, ஒருவன் தன் பெண்ஜாதிக்கு இருமுறை தலாக் சொல்லி யிருந்தானாயின், அவன் மூன்றாம் தலாக் சொல்வதற்கு முன்பு அவளைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ளலாம் ; அல்லது பெண்ஜாதி மாதவிடாயின் தருணத்தி லில்லாமல் பரிசுத்தமா யிருக்கும் சமயத்தில் மூன்றாவது தலாக் சொல்லி, அவளைத் தன் விவாக பந்தத்தினின்றே நீக்கிவிடலாம். மாதவிடாயின்போது தலாக் சொன்னால், அது கூடும். ஆயினும், அங்ஙனம் செய்வது மக்ரூஹென்பர். இன்னம், ஆண்பிள்ளைகள் தலாக் சொன்னால் பெண்களின் பாத்யதையான மஹ்ர்த் தொகையை எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும், பெண்ஜாதி சுயமே விடுதலையை விரும்புவாளாயின், மேலும் அவள் அதற்காக ஏதேனும் பொருளைக் கொடுப்பாளாயின், அதனைப் பெற்றுக் கொள்வதில் புருஷன்மீது குற்றமொன்று மில்லை யென்றும் இவ்வாக்கியம் சுட்டிக் காட்டிக்கொண் டிருக்கின்றது.

மாதம் மாதவிடாயி வில்லாமல் பரிசுத்தமா யிருக்கும்போது, மூன்ருவது தலாக்கைச் சொல்லிப் பிரித்து) விட்டுவிடல் வேண்டும்; மேலும், அல்லாஹ்வின் வரையறைகளை நிலைநிறுத்த முடியாதென்று அவர்களிருவரும் அஞ்சினுர்களல்லாது (புருஷர்களாய நீங்கள் தலாக்குச் சொல்லியபின்) அவர்களுக்குக் கொடுத்ததிலிருந்து எவ்வஸ்துவையும் எடுத்துக் கொள்வது நுங்களுக்குக் கூடாது; பின்னர் அல்லாஹ்வின் வரையறைகளை அவர்களிருவரும் (சரியாக) நிலை நிறுத்த மாட்டார்களென்று அஞ்சுவீர்களாயின் (தன்னை விடுவித்துக் கொள்ளும்பொருட்டு மனைவியான) அவள் ஈடாகக் கொடுக்கும் அப்பொருளால் அவர்களிருவர்மீதும் எவ்விதக் குற்றமு மில்லை; (புருஷன் அதைப் பெற்றுக் கொண்டு பெண்ஜாதியைச் சந்தோஷத்துடன் பிரித்து விட்டுவிடல் வேண்டும்.) இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும்; ஆகலின், அவற்றைக் கடவாதீர்கள்; மேலும், யாரேனும் அல்லாஹ்வின் வரையறைகளைக் கடப்பாராயின், அவர்கள்தாம் அநியாயக்காரர்களாயிருக்கின்றார்கள்.

230. பின்னர் (ஒருவன் இரண்டு தலாக்குடன் நில்லாது, மூன்றும் மாதத்தில் மூன்ருவது முறையாகவும்) அவளைத் தலாக்குச் சொல்லி விடுவானுயின், பின்னர் (த்தலாக்குச் சொன்ன) அவனல்லாது வேறொரு கணவனை விவாகம் செய்துகொள்ளும் வரை அவனுக்கு—(முதற்புருஷனுக்கு அவள்) உரியவளாகாள்; பிறகு (இரண்டாம் முறையாக விவாகம் செய்துகொண்டவன்) அவளைத் தலாக்குச் சொல்லி விடுவானுயின், அல்லாஹ்வின் வரையறைகளை (ச் சரிவர) நிலை நிறுத்த முடியுமென்று (முதற் புருஷனும் இவளுமாகிய) அவ்விருவரும் எண்ணுவார்களாயின், ஒருவருக்கொருவர் (மீண்டும்) சேர்ந்து (விவாகம் செய்து) கொள்வதால், அவர்களிருவர்மீதும் குற்றமொன்று மில்லை; மேலும் (ஊன்றிப் பாருங்கள்:) இவை அல்லாஹ்வின் வரைதுறைக ளாகும்; அவற்றை அறிஞர்களான கூட்டத்தாருக்கு (அல்லாஹ்) விளக்குகின்றான்.

231. மேலும் (உங்கள்) பெண்பிள்ளைகளுக்குத் தலாக்குச் சொல்லி விடுவீர்களாயின், பின்னர் (அவர்கள்) தங்களுடைய (இத்தாவுக்குரிய) எல்லையை அணுகி விடுவார்களாயின் (உங்களுக்கு இரண்டுவழிகளே யுள., அவை: நீங்கள்) நல்லமுறையுடன் அவர்களை (உங்கள்பால்) தடுத்துவைத்துக் கொள்ளுங்கள்; அல்லது அவர்களை நல்ல முறையுடன் (இறுதித் தலாக்குச் சொல்லி) விட்டு விடுங்கள்; மேலும், நீங்கள் (அல்லாஹ்வின்)

எல்லையைக் கடப்பதற்காகத் துன்பங்கொடுக்கும் பொருட்டு அவர்களைத் தடுத்துவைக்காதீர்கள்; மேலும் (மீண்டும்) எவனேனும் இவ்வாறு செய்வானாயின், நிச்சயமாகவே (அவன்) தன்னுடைய ஆன்மாவுக்கு(த் தான்) அக்கிரமம் செய்தவனாவான்; (வெளித்தோற்றத்தில் மற்றோர் ஆன்மாவுக்கே இவன் தொந்தரை கொடுக்கின்றான். ஆனால், இதற்கு இவனுடைய ஆன்மாவே உண்மையில் ஜவாப்தாரியா யிருக்கின்றது.) மேலும், அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளை—(போதனைகளை) ஏளனமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்; மேலும், உங்கள்மீதுண்டான அல்லாஹ்வின் அருட்கொடையை நினைவு கூருங்கள்; (இன்னமும்) ஞானத்தினின்றும் வேதத்தினின்றும் உங்களுக்குப் புத்தி புகட்டுவான் வேண்டி உங்கள் மீது அவன் இறக்கிவைத்திருக்கும் அதையும் (நினைத்துப் பாருங்கள்.) மேலும், அல்லாஹ்வுக் கஞ்சிக்கொள்ளுங்கள்; இன்னம், நிச்சயமாகவே அல்லாஹ் சகலவஸ்துக்களையும் அறிந்தவனா யிருக்கிறானென்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

---

## பிரிவு — 30

*விவாகரத்து செய்யப்பட்டவர்களும் விதவைகளும் மறுமணம் புரிந்து கொள்ளலாம்.*

232. மேலும் (நீங்கள் நுங்கள்) பெண்பிள்ளைகளைத் தலாக்குச் சொல்லிவிடுவீர்களாயின், பின்னர் (அவர்களும்) தங்களுடைய (இத்தாவுக்குரிய) காலத்தை அடைந்து விடுவார்களாயின் (அவர்கள் தங்களுக்குப் பிரியமான புருஷர்களை விவாகம் செய்து கொள்ளலாம்.) பிறகு அன்னவர்கள் (சட்டபூர்வமாக) அழகான முறையில் உடன் படுவார்களானால், தங்கள் (புதிய) புருஷன்மார்களை அவர்கள் மணமுடித்துக் கொள்வதினின்று அவர்களைத் தடுக்காதீர்கள்; உங்களுள் யார் அல்லாஹ்வின்மீதும் இறுதி (த்தீர்ப்பு) நாளின்மீதும் நன்னம்பிக்கை கொண்டிருக்கிறாரோ, அவர் இதைக்கொண்டு உபதேசிக்கப் படுகின்றார்; இஃதுங்களுக்கு இலாபகரமுள்ளதாகவும், பரிசுத்த முள்ளதாகவும் இருக்கின்றது; மேலும், அல்லாஹ் (உங்களுக்கு நன்மையான மார்க்கமெதுவென்பதை) அறிகிறான்; நீங்களோ (அதை) அறிகின்றீர்க ளில்லை.

233. மேலும் (தன் மனைவிக்குத் தலாக்குச் சொல்லும் போது மனைவியினிடம் பால்குடிக்கும் குழந்தை யிருக்குமாயின்,

அக் குழந்தைக்குப்) பால்கொடுக்கும் காலத்தைப் பூர்த்திசெய்ய வேண்டு மென்று விரும்புகிறவனுக்கு, தாய்மார்கள் தங்கள் குழந்தைகட்கு இரண்டு வருஷம் பூர்த்தியாகப் பால்கொடுப் பார்களாக. (இதுவே பால் கொடுப்பதன் பூர்த்தியான கால மாகும்.) மேலும் (பால் கொடுக்கும்) அவர்களுடைய உணவும் அவர்களுடைய உடையும் (பால்கொடுக்கும் காலமட்டும் ஒவ்வொரு வனுடைய அந்தஸ்துக்குத் தக்கவாறு) நல்ல முறையில் தந்தை யின் மீதே சார்ந்திருக்கின்றது ; எந்த ஆன்மாவும் தன்னால் இயன்றமட்டு மல்லாது (அதிகம்) கஷ்டப்படுத்தப்பட மாட்டாது ; எந்தத் தாயும் தன்னுடைய குழந்தையின் பொருட்டும், (எந்தத்) தந்தையும் தன்னுடைய குழந்தையின் பொருட்டும் நஷ்டப்படுத் தப்பட மாட்டார் ; மேலும் (பால்கொடுக்கும் காலத்துக்கு மத்தி யில் தந்தை இறந்து விடுவானாயின், அவனுடைய) வாரிஸ்கள்மீது இதுபோலவே (கடமை விதிக்கப்பட் டிருக்கின்றது); பின்னர் அவர்க ளிருவரும் பரஸ்பர உடன்பாட்டாலும், பரியாலோசனை யாலும் (குழந்தையின்) பால் குடிப்பை(க் கெடுவுக்கு முன்பே) நிறுத்திக்கொள்ள நாடுவார்களாயின் (அப்படியே செய்து கொள்ளலாம்); அவர்க ளிருவர்மீதும் குற்ற மொன்று மில்லை ; மேலும் (பெற்ற தாயைக் கொண்டல்லாது வேறு பெண்பிள்ளை யைக் கொண்டு) உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் பால் கொடுக்கத் தேட நாடுவீர்களாயின் (நீங்கள் நன்றாக அப்படியே செய்யலாம். ஆனால், தாய்மார்களின் பாத்யதை யொன்றினை யும் இதனால் வீணாக்குவது கூடாது.) வழக்கப் பிரகாரம் நீங்கள் (அவர்களுக்குக்) கொடுப்பதைக் கொடுத்து விடுவீர்களானால், உங்கள்மீது குற்ற மொன்று மில்லை; மேலும் (நீங்கள் எல்லாச் சமயத்திலும்) அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள் ; அன்றி யும், நீங்கள் செய்வதை அல்லாஹ் பார்த்துக்கொண் டிருக்கிறான் என்பதையும் அறியக்கடவீர்களாக.

234. மேலும், உங்களுள் மரணமடைபவர்கள்—(தங்கள் மரணத்தின்போது) மனைவியரை விட்டுச் செல்பவர்கள் (விஷய மாவது: அம்மனைவியர் தங்கள் கணவன்மார் இறந்து போயின பின்) நான்கு மாதங்களும் பத்து (நாளு)ம் (வேறு விவாகம் பண் ணிக்கொள்ளாது மரண இத்தாவுக்காகத்) தங்களைப்பற்றி எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்களாக; பின்னர் (அம்மனைவியர்) தங்கள் (கால) எல்லையை அடைந்து விடுவார்களாயின் (அவர்கள் தங்கள் இஷ்டம்போல நடந்து கொள்ளலாம். எனவே) அவர்கள் (மறு விவாகம் செய்து கொள்வதற்காகத்) தங்கள் விஷயத்தில்

நல்ல விதமாக நடந்து கொள்வதால், உங்கள்மீது குற்றமொன்று மில்லை; (எனவே, நீங்கள் அவர்களது இவ்விஷயத்தில் தலையிடுவதும், இன்னமும் அவர்கள் அப்படியே துக்கத்துள் ஆழ்ந்திருக்க வேண்டுமென்று வற்புறுத்துவதும் கூடா.) மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதைக்கொண்டு விஷயமுணர்ந்தவனாயிருக்கிறான்.

235. மேலும் (இப்படிப்பட்ட விதவைகளை விவாகம் செய்து கொள்ள நாடி) நீங்கள் மறைமுகமாகப் பெண் பேசுவதனாலும், அல்லது நீங்கள் உங்கள் உள்ளங்களுள் (இவ் வெண்ணத்தை) மறைத்து வைப்பதனாலும் உங்கள்மீது குற்றமொன்று மில்லை; நீங்கள் (நிச்சயமாகவே இயற்கையின்படி) அவர்களை ஞாபகம் செய்வீர்க ளென்பதை அல்லாஹ் அறிகிறான்; ஆனால் (வழக்கத்திற் கொத்தவிதமாகச் சயிக்கினையாகவோ பகிர்முகமாகவோ) நன்மையான வார்த்தையை(யே) நீங்கள் கூறுவதன்றி, (கள்ளத்தனமாகவும்) மறைவாக(வும் தீமையானதாகவும் விவாக விஷயத்தில்) அவர்களிடம் (எதையும்) வாக்களித்துக் கொள்ளாதீர்கள்; மேலும், குறிப்பிடப்பட்ட தவணையின் எல்லை—(இத்தா) முடியும் வரை விவாகத்தின் முடிப்பைத் தீர்மானம் செய்யாதீர்கள்; (என்னெனின், விதவை இத்தாவின் காலத்துக்குள் விவாக ஏற்பாடு செய்வது தகாது.) மேலும் (இது சம்பந்தமாக) உங்கள் ஹிருதயங்களி லுள்ள (பலக்குறைவான விஷயத்)தை (நிச்சயமாகவே) அல்லாஹ் அறிகிறா னென்பதை அறிந்து கொள்ளுங்கள்; ஆதலின், அவனுக்குப் பயந்து கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ் (நிச்சயமாக உங்களா லுண்டாகும் பாபங்களை) மன்னிக்கக் கூடியவனாக(வும்) பொறுமையுள்ளவனாக(வும்) இருக்கிறா னென்பதையும் அறிந்துகொள்ளுங்கள்.

---

## பிரிவு—31

*விவாக விடுதலை பெற்ற ஸ்திரீகட்கும் விதவைகட்கும் வேறு சில ஏற்பாடுகள்.*

236. நீங்கள் (விவாகம் செய்து கொண்டபின்பு உங்கள் மனைவியரான) அவர்களைத் தொடாம லிருக்கும்போது, (இன்னம்) நீங்கள் அவர்கட்கு மஹ்ரை(யும்) ஏற்படுத்தாமல் (இருக்கும் போது) ஸ்திரீகளைத் தலாக்குக்கொடுத்து விடுவீர்களாயின் (உங்கள் இஷ்டம்போல் இதனைச் செய்யலாம்; இதனால்) உங்கள்மீது குற்ற மொன்று மில்லை; (ஆனால், அவர்களுடனே நீங்கள் ஒரு

பந்தத்தை உண்டுபண்ணி அதை முறிப்பதால் அவர்களுக்குண் டாகும் நஷ்டத்துக்காக) மேலும், அவர்களுக்குச் சுகத்தை—(தக்க சன்மானத்தை) அளிப்பீர்களாக; தனவந்தன் தன்னியல்புக்குத் தக்கவாறு(ம்), தாரித்திரியன் தன்னியல்புக்குத் தக்கவாறு(ம்) நல்ல முறையில் (வழக்கத்துக் கொத்த) பொருளைக் கொடுத்தல் வேண்டும்; (இது) நன்மை செய்கிறவர்கள்மீது கடமையாயிருக்கும்.

237. மேலும் (பெண்மணிகளான) அவர்களுக்கு மஹ்றை நீங்கள் ஏற்படுத்தியிருந்து (விவாகம் செய்துகொண்ட பின்னர்) அப்பெண்களை நீங்கள் தீண்டுவதற்கு முன்னமே, அவர்களுக் குத் தலாக்குக் கொடுத்து விடுவீர்களாயின், (மனைவியரான) அவர்கள் (தங்களுக்குச் சேரவேண்டியதை) மன்னித்தாலன்றி, அல்லது எவன் கையில் விவாகத்தின் முடிப்பு இருக்கின்றதோ அவன் மன்னித்தாலன்றி[43]— (அஃதாவது, ஒருபாதி மஹ்ர்த் தொகையைக் கணவன் எடுத்துக்கொள்ளாமல் முழுத் தொகை யையும் மனைவிக்குக் கொடுத்தாலன்றி) நீங்கள் ஏற்படுத்திய தி(ரவியத் தொகையி)ல் பாதி (தலாக் சொல்லப்பட்ட அப் பெண்களுக்கு) உண்டு; மேலும் (கணவர்களாய) நீங்கள் (உங் கள் வயமுள்ள பாத்தியதையான மற்றொரு பாதியை) மன்னித்து விடுவதானது (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடப்பதற்கு அதிக அண்மையாகும்; மேலும் (கவனியுங்கள்:) உங்களிடையே (ஒரு வருக் கொருவர் கொடுத்துக் கொள்ளவேண்டிய) சன்மானத்தை மறந்து விடாதீர்கள்; நிச்சயமாகவே அல்லாஹ் நீங்கள் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கிறவனா யிருக்கிறான்.

238. தொழுகைகளை, மேலும் (குறிப்பாக அந்தரங்கத்தி லும் பகிரங்கத்திலும் மேன்மை பெற்றிருக்கும்) மத்திபமான தொழுகையை (நன்கு பேணிப் பாது)காத்துக் கொள்வீர்க ளாக;[44] மேலும், அல்லாஹ்வுக்கு (முற்ற முற்ற) வழிபட்டவர்

43. இவ்விஷயம் பெண்ணுக்கு வலீயாய் நின்று விவாகம் செய்துகொடுத்த மனிதனைக் குறிக்கும் என்று இமாம் அப்துல்லா பின் அப்பாஸ்[ரலி] அவர்கள் கூறுகின் றார்கள்.

44. இச்சைக்கு அடிமைப்பட்டவர்களாகவும், சுயநலத்தையே அதிகம் விரும்பு கிறவர்களாகவு முள்ள மனிதர்கள், இல்லற வாழ்க்கையின் விஷயத்தில் இப்படிப் பட்ட மேன்மையான ஆத்மசக்தியைப் பெற்றுக்கொள்ள முடியுமெனின், அவர்கள் அல்லாஹ்வுக்கு வணக்கம் புரிவதில் முற்ற முற்ற மூழ்கியிருந்து இந்தச் சக்தியையும் மேன்மையையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்; எனவே, மனிதர்கள் தொழுகையை நன்கு கடைப்பிடித்தல் வேண்டும்; யுத்தசமயமா யிருப்பினும், வேறெந்த வேளையா யிருப்பினும், தொழுகையை எக்காரணத்தைக் கொண்டும் கைவிடுவது கூடாது என்பது இவ்வாயத்தால் வற்புறுத்தப்படுகின்றது.

களாய் (அவனுக்கு வணக்கம் புரியும்போது அதிக அச்சத்துடனும் பக்தி சிரத்தையுடனும் ஏகாக்ர சித்தத்துடனும்) எழுந்து நிற்கக் கடவீர்களாக.

239. பின்னர் (நீங்கள் வழக்கத்துக் கேற்ப நின்று தொழுதுகொண் டிருந்தால் பகைவர்கள் உங்களுக்கு நஷ்டத்தையோ கஷ்டத்தையோ உண்டு பண்ணக் கூடும் என்று) அச்சங் கொண்டீர்களாயின், பாதசாரிகளாக(வேனும்), (வாகனங்களின்மீது) சவாரி செய்பவர்களாக(வேனும் தொழுது கொள்ளக் கடவீர்கள்;) பின்னர் (நீங்கள்) அச்சந்தீர்ந்து விடுவீர்களாயின், நீங்கள் அறியாமலிருந்ததை உங்களுக்கு அவன் அறிவித்துத் தந்ததேபோல் அதுசமயம் (குறிப்பிட்ட முறையின்படி தொழுது) அல்லாஹ்வை ஞாபகம் செய்துகொள்ளக் கடவீர்கள்.

240. மேலும், உங்களுள் மரண மடைகிறவர்கள்,— மேலும் (அதுசமயம் தங்கள்) மனைவியரை (உயிருடன்) விட்டுச் செல்பவர்கள், (மரண மடைவதற்குமுன் ஒரு) வருட (கால)ம் வரை (தங்கள் இல்லங்களை விட்டு) அப்புறப் படுத்தாமல் (அவர்களுக்கு உணவுப் பொருள்களான சாதன) சுகத்தைத் தங்கள் மனைவியருக்கு (அளிக்குமாறு) வஸிய்யத் செய்தல் வேண்டும்;[45] (மரணமடைந்த பின்னர் மரணமடைந்தவனுடைய வாரிஸ்கள் அதனைச் சரிவர நிறைவேற்றி வைத்தல் வேண்டும்.) பின்னர் அவ்விதவைகள் (குறிப்பிட்ட காலத்துக்கு முன்பு) சுயமே வெளிப்பட்டுத் தங்கள் விஷயத்தில் நல்ல முறையில் அவர்கள் நடந்துகொள்வதால்—(அஃதாவது, அவர்கள் ஓர் ஆண்டுக்குள் கணவன் இல்லத்தைவிட்டு வெளிப்பட்டு வேறு கணவனை விவாகம் செய்து கொண்டு விடுவதாலோ, அன்றி அதற்குரிய பேச்சு வார்த்தைகளை நடாத்துவதாலோ) உங்கள்மீது குற்றமொன்று மில்லை; மேலும், அல்லாஹ் வன்மையாளனுக, ஞானமுள்ளவனுக இருக்கிறான்.

45. இவ்வாக்கியத்தின் வாயிலாக, விதவைகளை நன்கு உபசரிக்கவேண்டும்; அவர்களுக்குப் புருடனுடைய சொத்தில் பங்குண்டாயினும், அதைத்தவிர்த்து வேறு விதமாகவும் சுகசௌகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும்; இக்காரியத்தை—சௌகரியத்தை—வாரிஸ்கள் செய்வது ஒருபக்கல் கிடக்க, மரணமடையும் புருடனே இந்த நன்மையைப் பற்றி வஸிய்யத் செய்யவேண்டும் என்று அல்லாஹ் போதிக்கின்றான். அன்றியும், அல்லாஹ் ஓர் ஆண்டுவரையேனும் அவ்விதவைகளுக்கு உபகாரம் செய்யவேண்டும் என்று நற்போதனை செய்திருப்பதில் பற்பல கருத்துக்கள் அடக்கமாகி யிருக்கின்றன.

241. மேலும், தலாக் சொல்லப்பட்ட பெண்களுக்கு அழகான முறையில் (உங்களால் கூடுமானவரை) பிரயோஜனகரமான பொருள்கள் (கொடுக்கப்படல் வேண்டும்.) (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடப்பவர்கள்மீது (இது) கடமையாக்கப்பட்டிருக்கிறது.[46]

242. நீங்கள் (உங்கள் இல்லற வாழ்க்கையில் ஐயமும் பாக்யமும் பெறுவது அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அப்படியே அமல் செய்வதிலேதான் அமைந்து கிடக்கின்றது என்பதைக்) கவனித்து அறிந்துகொள்ளும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறாகத் தன்னுடைய அத்தாக்ஷிகளை நுங்களுக்கு விளக்கிக் காட்டுகின்றான்.

---

## பிரிவு — 32

*ஸத்தியத்திற்காக யுத்தம் புரிவதன் அத்தியாவசியம்: யூத சரிதையினின்று மேற்கோள்கள்.*

243. (ஏ நபியே!) அவர்கள் விஷயத்தை நீர் கவனிக்கவில்லையா? (அஃதாவது: பனீ இஸ்ராயீல்களான) அவர்கள் ஆயிரக் கணக்கானவர்களா யிருந்தும் (மனஉறுதி யற்றவர்களா யிருந்தமையால், தங்கள் எதிரிகளுடனே எதிர்த்து நின்று போர் புரியாமல்) மரணத்தின் அச்சத்தால் தங்கள் இல்லங்களை விட்டு வெளிப்பட்டு விட்டார்கள். எனவே, அல்லாஹ் அவர்களுக்குச் சொன்னான்: "(நீங்கள் மரணத்தின் அச்சத்தைக் கண்டு ஓடுவதால் தப்பிக்கொள்ளப் போவதில்லை; நுங்கள் தைரியமற்ற தன்மையால் நீங்கள்) 'மரணமடையுங்கள்!'" (அப்படியே அவர்கள் எதிரிகள்பால் சிக்குண்டு, அனேகர் மரணமடைந்தே போயினர்.) பின்னர் அவர்களை (மனோதிட முள்ளவர்களாகவும் தீரமும் தைரியமும் உள்ளவர்களாகவும் பண்ணிப் பகைவர்களை ஜயிக்கும்படி செய்து அவர்களை) உயிர்ப்பித்தான்; நிச்சயமாகவே அல்லாஹ் மன்பதைகள் மீது பக்ஷமுடையவனா யிருக்கிறான்; (இதனால்தான் மக்கள் அதிகம் வழிகெட்டுப்போனதன் பின்னரும் அவன் அவர்களை நேரானவழியில் கொண்டுவந்து விடுகிறான்.) ஆனால், மானிடர்களுள் பெரும்பான்மையோர் (இதனைக் கௌரவமாக ஏற்றுக் கொண்டு அல்லாஹ்வுக்கு) நன்றி செலுத்துகின்றவர்களா யில்லை.

---

46. தலாக்குக் கொடுக்கப்பட்ட பெண்கள், பற்பலவிதங்களால் தங்கள் அந்தஸ்தையும் கௌரவத்தையும் இழந்தவர்களாகின்றார்களானமையின், அவர்கள் நிலைமையை நன்மையுறச் செய்யவேண்டுமென்பது இவ்வாக்கியத்தின் கருத்தாகும்.

244. மேலும், அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் புரியுங்கள்; மேலும், அல்லாஹ் கேட்பவனாக இருக்கிறான்; அறிகிறவனாக(வும்) இருக்கிறான் என்பதை(யும்) அறிந்துகொள்ளுங்கள்.

245. (மனிதர்களுக் கீடாக) அல்லாஹ்வுக்கு அழகான (மனத்துடன்) கடனைக் (கிரியைகளைச் செய்து) கடன் கொடுப்பவர் யார்? பின்னர், அதை அவன்—(அல்லாஹ்) அதிகமான இரட்டிப்புக்களாக இரட்டிக்கும்படி செய்கிறான்;—(அஃதாவது, கேவலம் ஒரு சிறிது தொகையை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்து இவ்வுலக மறுவுலக சம்பந்தமான மட்டற்ற நன்மைகளைப் பெறத் தையாராயிருப்பவர் யார்?) மேலும் (உங்கள் திரவியங்களைச் செலவு செய்வதால் நீங்கள் ஏழைகளாய்ப் போய்விடுவீர்கள் என்று அஞ்சுகின்றீர்கள்; ஆனால், உண்மையிலே) அல்லாஹ்(தான் உங்கள் ஐசுவரியங்களை மனோநிலைமைக்குத் தக்க முறையில்) சுருக்குகிறவனாகவும் (அதை அதிகமாகப் பெருக்கி) விரிக்கிறவனாகவு மிருக்கிறான்; மேலும், அவன் பக்கலே (நீங்கள்) மீட்கப்படுவீர்கள்.

246. (ஏ நபியே!) மூஸாவுக்குப்பின் பனீ இஸ்ராயீல் வர்க்கத்தலைவர்க(ளுக்கு நிகழ்ந்த விஷயங்க)ளை நீர் கவனிக்கவில்லையா?[47] (அஃதாவது:) "நாங்கள் அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்வதற்காக எங்களுக்கு ஓர் அரசனைத் தோன்றச் செய்வீராக," என்று (அவர்கள்) தங்கள் நபியிடம் சொன்னார்கள்; அப்பொழுது (அதற்கு விடையாக அவர், "இதுசம்பந்தமாக உங்களிடம் எனக்கு நம்பிக்கை யில்லை.) உங்கள்மீது யுத்தம் கடமையாக்கப்பட்டால், நீங்கள் (அவ்வாறு) யுத்தம் புரியாமலிருந்துவிட மாட்டீர்களா?" என்று சொன்னார். (இதற்கு அத்தலைவர்கள்) "நாங்களோ எங்கள் இல்லங்களை விட்டும் எங்கள் மக்களை விட்டும் அப்புறப்படுத்தப்பட்டவர்களா யிருக்கும்போது, (அப்பகைவருடன்) அல்லாஹ்வின் பாதையில் நாங்கள் யுத்தம் செய்யாமலிருப்பதற்கு எங்களுக்கென்ன (தடை) இருக்கிறது?"

47. இங்கிருந்து, மீட்டும் ஆண்டவன் ஆதியில் சொல்லிக்கொண்டு வந்த விஷயத்தையே விளக்குகிறான்: அஃதாவது, அல்லாஹ்வின் பாதையில் யுத்தம் செய்வதற்கு யார் யார் அஞ்சுகின்றார்களோ, அவர்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் நன்மையைப் பெற்று ஜயமடையப் போவதில்லை; இதற்கான உதாஹரண மொன்றையே பனீ இஸ்ராயீல்களின் ஒரு நிகழ்ச்சியால் எடுத்துக் காட்டுகின்றான். யுத்த விஷயத்தைக் கூறிக்கொண்டுவரும் இடையே, இதனால் கைக்குக் கிட்டும் எதிரிகளின் ஆண்பெண்களிடம் எங்ஙனம் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்னும் ஒழுக்க முறையையே இதற்குமுன் இடையிட்ட விஷயமாகச் சொல்லிக்கொண்டு வந்தான்.

என்று கூறினார்கள்; (ஆனால்) பின்னர் அவர்கள்மீது யுத்தம் கடமையாக்கப்பட்டபோது, அவர்களுள் சிலரைத் தவிர்த்து (மற்றவர்களெல்லாரும் தங்கள் வாக்குறுதியை விட்டுத்) திரும்பிவிட்டார்கள்; எனவே, அல்லாஹ் அநியாயக்காரர்க(ளின் மனத்திலுண்டான எண்ணங்க)ளை அறிகிறவனா யிருக்கிறான்.

247. மேலும், அவர்களுடைய நபி அவர்களுக்குச் சொன்னார்: "நிச்சயமாகவே அல்லாஹ் உங்களுக்குத் தாலூத்தை அரசராக (ஏற்படுத்தி) அனுப்பியிருக்கிறான்; (எனவே, நீங்கள் அவருக்கு வழிபடுங்கள்; அவருடைய தலைமையில் நீங்கள் யுத்தம் செய்யத் தையாராயிருங்கள்." இதைக்கேட்ட அத்தலைவர்கள்) "அவரைக்காட்டிலும் நாங்கள் அரச பதவிக்கு அதிக பாத்தியதை பெற்றிருக்கும்போது, எங்கள்மீது அவருக்கு எங்ஙனம் அரசபதவி கிடைத்தல் சாலும்? மேலும் (அவர்) ஐசுவரியத்தில் விஸ்தீரணத்தையும் அளிக்கப்பட்டவராகவு மில்லை (என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே)" என்று சொன்னார்கள்; (இதைக் கேட்டு நபி) சொன்னார்: "(அரசுபுரிவதற்கு அரசரிடம் ஐசுவரியத்தின் பெருக்கம் இருக்கவேண்டிய. தில்லை. நிச்சயமாகவே) அல்லாஹ் உங்கள்மீது அவரை(யே) தேர்ந்தெடுத்திருக்கிறான்; மேலும், ஞானத்திலும் தேக (பலாட்டிய)த்திலும் (உங்களைக் காட்டிலும்) அவருக்கு அபிவிருத்தியை அதிகமாக்கியிருக்கிறான். (இவை துங்களுக்கெல்லாம் தெரிந்ததே; அதுவேயுமன்றி, அரசுபுரிவதற்கு அத்தியாவசியமாக வேண்டப்படுவதும் இதுவேயாம்.) மேலும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன் அரசாங்கத்தை அளிக்கிறான்; (ஆனால், இவ்விஷயம் நீங்கள் எண்ணுவதேபோல் நடப்பதன்று.)" மேலும், அல்லாஹ் (செல்வத்தையும் ஞானத்தையும் பெருந் தகைமையையும் அளிப்பதில்) விஸ்தீரண முள்ளவனாக (எல்லாவற்றையும் அதிகம்) அறிகிறவனாக இருக்கிறான்.

248. மேலும், அவர்களுடைய நபி அவர்களுக்குச் சொன்னார்: "(நீங்கள் தாலூத்தின் அரசபதவியின்மீது அனாவசியமான ஆக்ஷேபங்களைக் கிளப்புகின்றீர்கள்; ஆனால், ஆழ்ந்து நோக்குங்கள்:) நிச்சயமாகவே அவனது அரசாங்கத்தின் அடையாளமாவது உங்கள்பால் (பரிசுத்த) தாபூத்—(பேழை வாபஸ்) வருவதாகும்; (அதை நீங்கள் கைவிட்டுவிட்டீர்கள்; அஃது எதிரிகள் வயம் சிக்கிக்கொண்டு விட்டது.) அதில் உங்கள் இரக்ஷகன் மாட்டிருந்து (உங்களுக்கு மனச்)சாந்தியும், மூஸாவின் சந்ததி

யார்களும் ஹாரூனின் சந்ததியார்களும் (தங்கள் பரிசுத்த ஞாபகார்த்தத்தை) விட்டுச் சென்றதில் எஞ்சியதும் இருக்கின்றன. அதை (அல்லாஹ்வின் அரிய வன்மையின்படி) வானவர் சுமந்து வருவார்கள்; நீங்கள் (உண்மையிலே) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பீர்களாயின், நிச்சயமாகவே அதில் உங்களுக்கு(ப் பெரிய) அத்தாக்ஷி இருக்கின்றது."

249. பின்னர், தாலூத் (தம்முடைய) சைன்யங்களுடன் புறப்பட்டபோது சொன்னார்: "நிச்சயமாகவே அல்லாஹ் உங்களை (வழியில் குறுக்கிடும்) ஓர் ஆற்றைக்கொண்டு பரிசோதிக்கிறவனா யிருக்கிறான்; ஆகவே, (நீங்கள் ஜாக்ரதையாயிருங்கள்); அதினின்று (நீர்) அருந்துபவன் என்னைச் சார்ந்தவனல்லன்; (மேலு மவன் என்னுடைய கூட்டத்தினின்று அப்புறப்பட்டவனாவான்.) மேலும், எவன் அதை (அருந்திச்) சுவைக்கவில்லையோ, அவன் நிச்சயமாக என்னைச் சார்ந்தவனாவான்; (ஆனால், தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள வேறு வழியின்றித்) தன்னுடைய கைகொண்டு (ஒரே ஒரு) சிறங்கை(த் தண்ணீர்) பருகிய அவனைத் தவிர்த்து. (இப்படிச் செய்பவன்மீது குற்றமில்லை.)" பின்னர் (சைன்யங்கள் ஆற்றை யடைந்தவுடன்) அவர்களுள் சிலரேயன்றி (மற்றவர்களெல்லாம் சர்வ தாராளமாக) அதினின்று அருந்தினர்; (அஃதுடன் சகிப்புத்தன்மையையும் வழிபாட்டையும் இழந்ததுடன் பரிசோதனையிலும் நல்லவர்களாக நின்றார்க ளில்லை;) எனவே, அவரும் அவருடனிருந்த நன்னம்பிக்கை கொண்டவர்களும் அதை—(அந்த ஆற்றை)க் கடந்து சென்றபோது (தாலூத்தின் வார்த்தையைக் கேளாதவர்கள்) சொன்னார்கள்: "இன்று (அதிபயங்கரமான தோற்றமுள்ள தலைவனான நம் எதிரி) ஜாலூத்துடனும், அவனுடைய சைன்யங்களுடனும் (யுத்தம் செய்ய) எங்களுக்குச் சக்தியில்லை." (ஆனால், மரணமடைந்தபின் ஒருநாள்) மெய்யாகவே அல்லாஹ்வைச் சந்திப்பரென்பதை நிச்சயமென் றெண்ணியிருந்த அவர்கள் சொன்னார்கள்: "(பகைவர் அதிகமாகவும் நாம் சிறுபான்மையோராகவும் இருப்பதைக் கண்டு ஏன் அஞ்சுகின்றீர்கள்?) எத்தனையோ சிறு தொகுதி—(கூட்டங்கள்) அல்லாஹ்வின் ஆணைகொண்டு பெருந் தொகுதியினரைத் தகைந்திருக்கின்றன." மேலும், அல்லாஹ் பொறுமையாளருட னிருக்கிறான்.

250. பின்னர் (எதிரியான) ஜாலூத்துக்கும் அவனுடைய சைன்யங்களுக்கு மெதிரே அவர்கள் வெளிப்பட்டபோது சொன்

னார்கள்: "எங்கள் இரக்ஷக! (நாங்கள் சிறு தொகுதியினராகவும், எங்கள் எதிரிகளோ பெருந் தொகுதியினராகவும் இருப்பதை நீ பார்த்துக்கொண் டிருக்கின்றாய். எனவே) பொறுமையை எங்கள்மீது பொழிந்தருள்வாய்! மேலும், எங்கள் பாதங்களை உறுதிப்படச் செய்வாய்! மேலும், நிராகரிப்பவர்களான கூட்டத்தின்மீது எங்களுக்கு (நன்மையான முறையிலே உன்னுடைய அருளைக்கொண்டு) உதவிபுரிந்தருள்வாய்."[48]

251. பின்னர் (ஜாலூத்தின் சைன்யங்களான) அவர்களை அல்லாஹ்வின் ஆணைப்படி (தாலூத்தின் படைகள்) முறியவடித்தனர்; மேலும், ஜாலூத்தை(த் தாலூத்தின் சைன்யத்திலுள்ள) தாவூத் வெட்டிவிட்டார்; மேலும், அவருக்கு அல்லாஹ் இராஜ்யாதிகாரத்தையும், ஞானத்தையும் கொடுத்தருளினான்; மேலும் (இராஜ்யபரிபாலனத்துக் குரிய ஞானவான்களுக்கு வேண்டிய விஷயங்களுள்) அவன் நாடியதை அவருக்குக் கற்பித்தான்; மேலும், மனிதர்களை, அவர்களுள் சிலரை (வேறு) சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்கவில்லையாயின் (பற்பல வர்க்கத்தாருள்ளும் கூட்டங்களுள்ளும் சண்டைகளும் சச்சரவுகளும் நிகழ்ந்து கொண்டேதா னிருக்கும்; எனவே, இறுதியில்) உலகம் கெட்டுப் போம்; (அன்றியும், எங்கும் சாந்தத்தையும் சமாதானத்தையும் கண்டுகொள்வதே முடியாது.) ஆனால், அல்லாஹ் சர்வ உலகத்தவர்மீதும் பக்ஷமுடையவனா யிருக்கிறான். (இதனால்தான் உலகத்தின்கண் ஒருபாலாரால் குழப்பமும் அக்கிரமமும் தோன்றும் போது, மற்றொரு பாலாரைக்கொண்டு அல்லாஹ் அதனை நிஷேதஞ் செய்துவருகிறான்.)

252. (ஏ நபியே!) இவை அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளாகும்; இவற்றை உமக்கு உண்மையுடனே (நாம்) எடுத்தோதுகின்றோம்; மேலும், நிச்சயமாகவே நீர் (நம்மால்) அனுப்பப்பட்டவர்(களான முர்ஸலீன்)களுள் உள்ளவரா யிருக்கின்றீர்.

48. பகைவருக்கு முன்னே நின்று வெற்றிபெற வேண்டுமாயின், ஒருகாரியத்தைச் சாதிக்க வேண்டுமாயின், சரியான மன உறுதியும் கலங்காத திடசித்தமும் வேண்டும் என்று இவ்வாக்கியம் சுட்டிக் காட்டுகின்றது. இன்னம், ஒரு சிறிது அபஜயத்தையும், தோல்வியையும் கண்டு தங்கள் மனங் கலங்கி வீரத்தையும், தைரியத்தையும், முயற்சியையும் விட்டுவிடுகிறவர்கள் தோரிய காரியங்களில் சித்தியடைய மாட்டார்களென்றும் இவ்வாக்கியம் எச்சரிக்கை செய்கின்றது. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பதும், 'பிரயாசைப்படுபவன் கோரியகாரியத்தைப் பெற்றுக்கொள்வான்' என்னும் நாயக வாக்கியமும் இக்கருத்தை விளக்கிக்கொண் டிருக்கின்றதென்பதையும் இங்கு கவனித்தல் வேண்டும்.

# பாகம்—மூன்று

253. தூதர்(களாக அனுப்பப் பட்டவர்களான அவர்)கள்—அவர்களுள் சிலரை (வேறு) சிலர்மீது மேன்மைப்படுத்தி யிருக்கிறோம்; (நபித்துவத்தில் அவர்களெல்லாரும் சமமானவர்களாகவே யிருக்கின்றார்கள்; ஆனால், ஒவ்வொருவரும் பிரத்தியேக முறையால் பற்பல விதமான அந்தஸ்துடையவர்களா யிருக்கின்றனர்; எனவே) அவர்களுள் சிலர் அல்லாஹ் (தன்னுடைய வேதத்தை வெளியாக்கி) வார்த்தை யாடியவர்களுளர்; மேலும், அவர்களுள் சிலருக்கு (அவர்களுடைய காலங்களுக்கும் நிலைமைகளுக்கும் தக்கவாறு) அந்தஸ்துகளை உயர்த்தினான்; மேலும் (உமக்கு முன் வந்த) மர்யத்தின் குமாரரான ஈஸாவுக்கு (நேர்வழிக்குரிய) பிரத்தியக்ஷ பிரமாணங்களை (நாம்) அளித்தோம்; மேலும், பரிசுத்த ஆத்மாவை—(தேவஞான அறிவிப்பை)க் கொண்டு அவரை உறுதிப்படுத்தினோம்; மேலும், அல்லாஹ் நாடியிருப்பானாயின்—(இஃது அவனுடைய சக்தியின்று வெளிப்பட்டதன்று; அஃதாவது: நபிமார்களான) அவர்களுக்குப் பின்னுண்டானவர்கள் தங்கள் பால் பிரத்தியக்ஷ பிரமாணங்கள் வந்ததன் பின்(னும் வீண் சச்சரவுள் வீழ்ந்திருக்க மாட்டார்கள்; மேலும், தங்களுக்குள்) ஒருவரோ டொருவர் சண்டை செய்துகொண்டிருக்க மாட்டார்கள்; ஆனால் (அவர்கள்) விகற்பம் பண்ணிக் கொண்டார்கள் (என்பதை நீர் காண்கின்றீர்.) ஆகவே, அவர்களுள் (தங்கள் நேரான எண்ணத்தின்படி) நன்னம்பிக்கை கொண்டார் சிலர்; மேலும், அவர்களுள் (தங்கள் மாறான எண்ணத்தின்படி சத்தியத்தை) நிராகரித்தார் சிலர்; மேலும், அல்லாஹ் நாடியிருப்பானாயின் (தங்களுக்குள்) ஒருவரோடொருவர் சண்டைசெய்து கொள்ள மாட்டா(மல் சண்டைக்குரிய கொடிய எண்ணங்களையெல்லாம் அல்லாஹ்வால் நிஷேதம் செய்யப்பெற்றிருப்பா)ர்கள்; ஆனால், அல்லாஹ் அவன் நாடுகிறதைச் செய்கிறான். (எனவே நீர் அவனுடைய காரியங்களையும் அவற்றிலுள்ள இரகசியங்களையும் பரிபூரணமாக அறிந்து கொள்ளமாட்டீர்.)[49]

---

49. இங்கு ஒரு விஷயத்தை இவ்வாக்கியம் நன்கு விளக்குகின்றது. அஃதாவது, அல்லாஹ் நாடுவானாயின், அவர்கள் தங்களுக்குள் சண்டை சச்சரவுகளை யிழைத்துக்கொண் டில்லாமல் அல்லாஹ்வின் பிரத்தியட்ச பிரமாணங்களையே பின்பற்றி நடந்துகொண் டிருப்பார்கள்; ஆனால், மனிதர்களோ என் செய்வார்கள்? அல்லாஹ் நாடவில்லை; இவர்களும் அவன் பிரமாணப்படி சத்திய மார்க்கத்தைப் பின்பற்றி நடக்கவு மில்லை என்று கூறலாம். உண்மை விஷயம் இங்ஙனமன்று. மனிதர்களுக்

## பிரிவு — 34

*மதவிஷயத்தில் பலவந்தம் தடுக்கப்பட்டுள்ளது.*

254. *ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! (அந்த இறுதி) நாள்வருவதற்கு முன்னே உங்களுக்கு நாம் அருளிய ஜீவனோபாயப் பொருளினின்றும்—(ஐசுவரியங்களினின்றும் உங்கள் சுகத்துக்காக மட்டுமல்லாது எல்லாம் வல்ல அல்லாஹ்வினுடைய வழியிலும்) செலவு செய்யுங்கள்; அ(ந்நாள்வரும் அமயத்)தில் எவ்விதப் பண்டமாற்று மில்லை; (அவ்வாறிருப்பின், பின்னர் நீங்கள் ஒருகால் ஈடேற்றத்தைக் கிரயம் கொடுத்துப் பெறலாம்;) மேலும் (அந்நாளில்) எவ்விதத் தோழமையு மில்லை. (அப்படியேனு மிருப்பின், அத்தோழர்களைக் கொண்டு உங்கள் பாபங்களை மன்னிக்கும்படி செய்துகொள்ளலாம்.) மேலும் (அந்நாளில் எவருடைய) பரிந்து பேசுதலு மில்லை. (எனவே, ஆங்கு ஒவ்வொருவரும் தாம் தாம் செய்துள்ள காரியங்களைக் கொண்டேதான் ஈடேற்றம் பெறுதல் சாலும். எனவே, இந்த உண்மையை) மேலும் நிராகரிப்பவர்கள்—அவர்கள்தாம் அநியாயக்காரர்களாக இருக்கின்றார்கள்.*

255. *அல்லாஹ்! அவனன்றி (வணக்கத்துக்குரிய வேறு) தெய்வ மில்லை; (அவன் என்றும்) ஜீவித்திருப்பவன்; (ஆகவே, அவனுடைய ஜீவிப்பில் அழிவேனும் தேய்வேனு மில்லை. ஆகலின், சுயம்புவாகச் சதா சர்வ காலமும்) நிலைத்திருப்பவன்; (ஆனால், சகல வஸ்துக்களும் அவனைக்கொண்டே நிலைத்திருக்கின்றன. ஆயின், அவன் தான் நிலைத்திருப்பதில் எவருடைய*

---

குள் அனேக உயரிய சக்திகளை அல்லாஹ் இயற்கைக்குத் தக்கவண்ணம் தன்னுட்டங் கொண்டு சிருஷ்டி செய்துவிட்டான். அதன்பிறகு, தன் ஏற்பாட்டின்படி ரசூல் மார்களின் வாயிலாய் நேர்வழி யின்னது வேறுவழி யின்னதென்பதைத் தெரிந்து நடந்துசெல்வான் வேண்டி, வேதங்களான பிரத்தியக்ஷ பிரமாணங்களையும் அல்லாஹ் அனுப்பிவைத்தான். இவ்வளவு நற்சாதனங்களை அல்லாஹ் நல்கியிருந்தும், ஒரு சிலர் தங்கள் சுய அறிவைக் கொண்டு உண்மையை உணர்ந்துகொண்டு நேரான வழியைப் பின்பற்றுகின்றவர்களா யில்லை. அல்லாஹ், தான் நாடி அவர்களை நேரான வழியில் திரும்பும்படி கட்டாயப்படுத்தினானாகில், அவர்கள் தங்களுள் சண்டை சச்சரவுகளை விட்டுவிட்டு, அல்லாஹ்வின் பிரத்தியட்ச பிரமாணங்களைப் பின்பற்றுவார்கள் என்பதே இதன் தாத்பரியமாகும். அல்லாஹ் மக்களை எவ்விஷயத்திலும் கட்டாயப் படுத்துவதில்லை. இங்ஙனம் செய்வது அல்லாஹ்வின் பொது இயற்கைச் சட்டத்துக்கு விரோதமு மாகும். அல்லாஹ் தன் இயற்கைக்குத் தக்கபடியே தான் நாடியதைச் செய்துகொண்டிருக்கிறான் என்னும் விஷயத்தையும் இவ்வாக்கியம் சுட்டிக்கொண்டிருக்கின்றது.

உதவியையும் எதிர்பார்ப்பவ னல்லன். அவனுடைய நேத்திரங்களை அமட்டும்) சிறு உறக்கமும் (அவனுடைய மதியை மருட்டும் பெரு) உறக்கமும் அவனைப் பற்றுவதில்லை; வானங்களி லுண்டானதும் பூமியி லுண்டானதும் அவனுக்(கே) உரியனவா யிருக்கின்றன; (எனவே, அவனுடைய அரசாங்கத்தின் எல்லையில்) அவனுடைய அனுமதியின்றி அவனிடம் (எவருக்காகவேனும்) பரிந்து பேசுபவர் யார் (உளர்)? (இவ்வாறு செய்வதனால் தன் பாபத்தினின்றும் நீங்கிப் பரிசுத்தமாய்ப் போய்விடுபவர் யாவருளர்?) அவர்களுக்கு முன்னிருப்பதையும் அவர்களுக்குப் பின்னிருப்பதையும் (அல்லாஹ்) அறிகிறான்; மேலும் (மனிதர்களுக்கு இத்துணை அறிவைத்தான் கொடுக்கவேண்டு மென்று) அவன் நாடியதையல்லாது, அவனுடைய அறிவிலிருந்து (ஒரே) ஒரு வஸ்துவை(யும்) பரிபூரணமாக (மனிதர்கள்) தெரிந்துகொள்ள மாட்டார்கள்; மேலும், வானங்களிலும் பூமியிலும் அவனுடைய (அரசாங்கத்தின்) ஞானம் (எங்கும் ஏகமாக) விஸ்தீரணமாய்(ப் பரந்து சென்று) நிற்கின்றது; மேலும், அவ்விரண்டையும் பாதுகாப்ப(தென்ப)து அவனுக்குக் களைப்பைத் தருவதில்லை; மேலும் அவன் மஹா உயர்ந்த (பெரிய சக்தியுள்ள)வனாக விருக்கிறான்.[50]

256. மார்க்க (விஷய)த்தில் பலவந்தமில்லை; (என்னெனின், இது ஹிருதய சம்பந்தப்பட்ட விஷயமாகும்; மனிதனை வற்புறுத்துவதால் அவனது ஹிருதயம் வழிபடுவதில்லை. எனவே) நிச்சயமாகவே கோடியவழியினின்று நேரியவழி (பிரிந்து) துலக்கமாக வெளிவந்து விட்டது; (எனவே, யார் எதை ஒப்புக்கொள்ள விரும்புகின்றாரோ, அவர் அதனை ஒப்புக்கொள்ளலாம்.) பின்னர் யார் தாகூத்(தான ஷைத்தானது கோடிய கூட்டத்)தை நிராகரித்து, மேலும் அல்லாஹ்வின்மீது நன்னம்பிக்கை கொள்ளுகின்றாரோ (அவர்) நிச்சயமாகவே உறுதியான சாகையைப் பற்றிக்கொண்டார்; அதற்கு முறிவென்பதில்லை; (அதைக் கைப்பற்றியவன் கீழே வீழ்ந்து நாசமடைவதினின்றுந் தப்பிக்கொண்டான்.)

50. இவ்வாக்கியம் விளக்கிக்கொண்டிருப்பதாவது:—அல்லாஹ்வைத் தவிர்த்து வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை; அவன் அழிவற்றவன்; மயக்கமும் உறக்கமு மற்றவன்; அவனுடைய அரசாட்சியினின்றும் ஞானத்தினின்றும் ஒரு வஸ்துவும் வெளிப்பட்டதா யில்லை. அவன் எந்த வஸ்துவையும் மறந்தவனாகவோ அறியாதவனாகவோ இல்லை; இப்படிப்பட்ட உயர்ந்தகுண விசேஷங்க ளுடையவன்பால் யார்தான் எவரைப்பற்றியும் எவ்விதமாகவும் ஷிபாரிஷ் செய்ய இயலும்? அன்றியும் இப்படிப்பட்ட அவனுடைய அரசாங்கத்தில் யார்தான் சம்பந்தப்படுதல் சாலும்? ஒருவருக்கும் அல்லாஹ்வின் அதிகாரத்தில் சம்பந்தமோ, சமத்துவமோ இல்லையென்பதாகும்.

எனவே, அல்லாஹ் கேட்பவ னுக(வும்) அறிகிறவ னுக(வும்) இருக்கிருன்.[51]

257. அல்லாஹ் நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு உதவி யாளனுக(வும், நேயனுகவும், எஜமானனுகவும்) இருக்கிருன்; அவர் களை (அவன் சகல) இருள்களை(யும்) விட்டுப் பிரகாசத்தின் பக் கல் வெளிப்படுத்துகிருன்; மேலும் (சத்தியத்தை) நிராகரித்த அவர்களுக்குத் தாகூத் (தென்னும் ஷைத்தான்களின் கொடிய எண்ணங்களே) அவர்களுக்கு உதவியாளராக(வும், நேயராகவும், எஜமானராகவும்) இருக்கின்றன; அவர்களை (அவை) பிரகாசத்தை விட்டு இருள்களின் பக்கல் வெளிப்படுத்துகின்றன; அன்னுர் அக்கினி வாசிகளாவர்; அவர்கள் அதிலே(யே) நிலைத்திருப் பார்கள்.[52]

## பிரிவு—35

எவ்வாறு மரித்த ஜாதியார்கள் உயிர்ப்பிக்கப் பெறுகிருர்கள்.

258. (ஏ நபியே!) அல்லாஹ் தனக்கு இராஜ்யாதிகாரத்தை யளித்ததற்காக இப்ராஹீமிடத்தில் அவருடைய இரக்ஷகனைக் குறித்து வாதாடியவனைப் பற்றி(ய விஷயத்தை) நீர் கவனிக்க

---

51. இவ்வாக்கியம் நமக்கு முக்கியமாக எச்சரிக்கை செய்வதாவது:—மக்களுக் குள் கலகமும் குழப்பமும் உண்டாகுமாயின், யுத்தம் செய்து பலவந்தப்படுத்திச் சமாதானத்தை அவர்கள்பால் நிலைபெறுத்த வேண்டும். ஆனல், மதசம்பந்தமாகப் பலவந்தமும் யுத்தமும் செய்யலாகாது. என்னெனின், இது மனச்சாக்ஷியைப் பொறுத்ததாகும். சத்தியமார்க்க சம்பந்தமான பிரசாரத்துக்கு யுத்தம் செய்வது எக்காரணத்தைக் கொண்டும் கூடாது. மார்க்கப் பிரசாரம் செய்யவேண்டு மாயின், நல்லுபதேசங்களைக் கொண்டும் உயரிய நற்போதனைகளைக் கொண்டுமேதான் செய்ய வேண்டும் என்று எமது குர்ஆன்வேதம் வேறு பல இடங்களில் நன்கு விளக்கி யிருக்கின்ற தென்பதை நன்குணர்ந்து கொள்ளல் வேண்டும். இனி முஸ்லிம்கள் செய்த யுத்தங்களெல்லாம் வீணுன கலகங்களையும் புரட்சியையும் அமைதி யின்மை யையும் போக்கிச் சாந்தத்தையும் சமாதானத்தையும் அமைதியையும் நிலை நிறுத்து வதற்காகவே யல்லாமல், இஸ்லாமியப் பிரசாரத்துக்காகவன்று என்பதைத் திண்ண மாய் எண்ணவேண்டும்.

52. அல்லாஹ்வின் ஆணைகளின்மீது நன்னம்பிக்கை கொள்வதும், அல்லது அதனை நிராகரிப்பதுமான மனிதர்களின் செய்கைகளுக்கும் எண்ணங்களுக்கும் தக்க படியே, பின்னர் அல்லாஹ்வின் நேர்வழியும் வேறு வழியும் மனிதர்களைச் சாருகின் றன வென்பதை இவ்வாக்கியம் விவரிக்கின்ற தென்பதைக் கவனிக்கவேண்டும். தாங்கள் எண்ணியபடி, நாடியபடி, ஒரு காரியத்தையும் செய்ய முடியாதவர்களாய் மனிதர்களை அல்லாஹ் நிர்ப்பந்த சிருஷ்டி செய்திருக்கிருன் என்று கூறும் வீணுன கூற்றை விட்டுவிடல்வேண்டும்.

வில்லையா? (அஃதாவது, நம்ரூத் இவ்வுலகத்தின் சகல சுக போகங்களையும் இராஜ்ய பரிபாலனத்தின் சர்வாதிகாரத்தை யும் பெற்றிருந்தமையான் அல்லாஹ்வையும் ஒரு பொருட்டாக எண்ணாது அவ்விஷயத்திலும் வாதாடினான். எப்படியெனின்) "என்னுடைய இரக்ஷகன் (சிருஷ்டி கோடிகளை) உயிர்ப்பிக்கச் செய்கிறான்; (மேலும்) மரிக்கவும் செய்கிறான்," என்று இப்ராஹீம் சொன்னபோது, (நம்ரூத்) சொன்னான்: "யானும் உயிர்ப் பிக்கவும் மரிக்கவும் செய்கிறேன்."—(அஃதாவது, நான் நாடிய வனைக் கொன்றும் நாடியவனை மன்னித்தும் விடுகிறேன்." அதற்குப்பின்) இப்ராஹீம் சொன்னார். "(விஷயம்) அப்படியா யின், நிச்சயமாகவே அல்லாஹ் சூரியனைக் கிழக்கிலிருந்து (உதய மாகும்படி செய்து) கொண்டு வருகிறான்; ஆகவே, (நீர்) மேற்கி லிருந்து அதைக் கொண்டு வருவீராக." ("இப்படி நீர் செய்வீ ராயின், சிருஷ்டி கோடிகள் மாட்டு உமக்கு அதிகாரமும் செல் வாக்கும் உண்டென்பது தெளிவாகும்," என்று இப்ராஹீம் சொன்னார். இதைச் செவியேற்ற வுடனே) பிறகு நிராகரி(ப் பை)த் த(ன்னுடைய சுபாவகுணமாகக் கொண்ட) அவன் பிரமித் துப் போனான்; மேலும், அல்லாஹ் அநியாயக் காரர்களான கூட்டத்தாருக்கு(த் தன்னிடமுள்ள ஜயத்துக்குரிய நேரான) பாதையைக் காட்டுவதில்லை.[53]

259. அல்லது ஒரு கிராமத்தின்மீது சென்ற(அ)வர் விஷ யத்தை—(நீர் கவனிக்க வில்லையா? அவர் ஆங்குச் சென்றபோது) அது தன் இடிந்(துவிழுந்)த (சுவர்களின்மீது) மேல்முகடுகள் நாச மடைந்து கிடந்தது; (இந்நிலைமையைக் கண்டு, "இவ்வாறு அழிந்து போய்க்கிடக்கும்) அதனை அது மரணமடைந்த(தைப்போல் நாசமா ய)தன்பின்பு எவ்வாறு அல்லாஹ் (இரண்டா முறையாக அதைச் செழிக்கும்படி செய்து) உயிர்ப்பிக்கப் போகிறான்?" என்று சொன்னார்; பின்னர் அல்லாஹ் நூறுவருடம்வரை அவருக்கு

53. இங்கு அநியாயக் காரர்களுக்கு அல்லாஹ் நேர்வழியைக் காட்டுவதில்லை யென்று கூறியமாத்திரத்தில், அல்லாஹ் பெரிய அக்கிரமக்காரனு யிருக்கிறான் என்று தீர்மானித்துவிட வேண்டாம். என்னெனின், நேரான பாதையிலும் வேறான பாதையிலும் நடந்து செல்வதற்குரிய மனப் பான்மையும், அதற்கான கிரியைகளும் மானிடர்கள் வயமே யிருக்கின்றன. எனவே, மனிதர்கள், தாங்கள் எந்தப் பாதை யில் நடந்து செல்லப் பிரியப்படுகின்றார்களோ அதற்குத் தக்க முறையில்தான் அல் லாஹ் காரியங்களைத் தீர்மானிக்கிறான். இதனைச் சுட்டிக்காட்டுவான் வேண்டியே, பொதுவாகச் சகல மனிதர்களையும் குறிப்பிடாமல், அநியாயக் காரர்களுக்கே அல் லாஹ் நேர்வழி காட்டுவதில்லை யென்று கூறியிருக்கின்றான் என்பதை இங்கு முக்கிய மாகக் கவனிக்க வேண்டும்.

மரணத்தை—(அதன் நிலைமையை)க் கொடுத்தான்; பிறகு அவரை (அந் நிலைமையினின்றும்) எழுப்பினன். (அதுசமயம் அல்லாஹ் அவரை நோக்கிச் சொன்னன்:) "எத்துணை(க் காலம் நீர் இந்நிலைமையிலே) தாமதித் திருந்தீர்?" (இதற்கு அவர்) "ஒரு நாள் அல்லது ஒரு நாளில் சில பாகம் (தான் இந்நிலையில்) தாமதித் திருந்தேன்," என்று கூறினர்; (இதற்கு அல்லாஹ்) சொன்னன்: "இல்லை! நூறு வருடகாலம் (நீர்) தாமதித்திருந்தீர்; ஆகலின், உம்முடைய போஜனகத்தை யும் உம்முடைய பானகத்தையும் நோக்குவீராக; அதில் (பல) வருடங்கள் கழியவில்லை;—(அவற்றின்மீது அனேக ஆண்டுகள் சென்றுபோவதா லுண்டாகும் மாறுதலொன்றையும் நீர் கண்டு கொள்ள மாட்டீர்;) மேலும் (நீர் ஏறிவந்த) உம்முடைய கழுதை யைப் பார்ப்பீராக; (அஃது என்ன நிலைமையி லிருக்கிறது?) மேலும் (இப்படி நாம் ஏன் செய்தோமெனின்) உம்மை மனிதர் களுக்கு (உண்மைக்கு)ரிய அத்தாக்ஷியாக நாம் செய்வதற்காக(வே இங்ஙனம் செய்தோம்); மேலும் (சரீரத்தின்) எலும்புகள்—அவற் றினை எப்படி (நாம் கங்காளமாகச் செய்து) நிற்பாட்டுகிறோம்? பின்னர் (எவ்விதம்) அவற்றிற்கு (நான்கு புறத்தும்) மாம்சத்தை ஏற்றுகிறோம்? (என்பதன் பக்கல் ஊன்றிப் பார்ப்பீராக. அஃ தாவது, பூரண அமைப்பிலும் உருவத்திலும் ஒரு பொருள் எவ் வாறு பரிணமித்து வருகின்றது? என்பதை நீர் கவனிப்பீராக.) ஆகலின், அவருக்கு (விஷயம்) விளக்கமா(க வெளியா)னபோது சொன்னர்: "அல்லாஹ் சகல வஸ்துக்களின்மீதும் ஆண்மை யுடையவனு யிருக்கிறு னென்பதை (நான்) நிச்சயமாக அறி கிறேன்."

260. மேலும் (ஆழச் சிந்தித்துப் பார்ப்பீராக:) "ஏ (என்) இரக்ஷக! நீ எவ்வாறு மரணமடைந்தவர்களை உயிர்ப்பிக்கச் செய்வாய்? என்பதை எனக்குக் காண்பிப்பாய்!" என்று இப்ராஹீம் சொன்னபோது (அல்லாஹ்) சொன்னன்: "(என்ன! அதன்மீது) நீர் நன்னம்பிக்கை கொள்ள வில்லையா?" (அதற்கு இப்ராஹீம்) சொன்னர்: "ஆம்! (நான் நன்னம்பிக்கை கொண் டுளேன்.) ஆனல் (எங்களால் ஆகாத இக் காரியத்தின்மீது) என் ஹிருதயம் (கொண்டுள்ள சந்தேகத்தின் சலனம் அகன்று) சாந்தியடைவதற்காக(வே கேட்கின்றேன்." அதற்கு அல்லாஹ்) சொன்னன்: "அப்படியாயின் (நீர்) பறவைகளுள் நான்கைப் பிடித்துக் கொள்வீராக; பின்னர் அவைகளை நும் பக்கல் (பழக்கித்) திருப்பிக்கொள்வீராக;—(அஃதாவது, நும்மை அவை

கள் நன்கு அறிந்துகொண்டு நமது கூப்பீட்டைத் தெரிந்து கொள்ளும் வண்ணம் செவ்வனே பழக்கிக்கொள்வீராக.) பின்னர் அவைகளினின்று ஒவ்வொரு பாகத்தை(யும் நமக்குத் தூரமா யுள்ள) ஒவ்வொரு மலையின்மீது வைத்துவிடுவீராக; பின்னர் அவைகளை அழைப்பீராக; அவை (உம்முடைய சப்தத்தைக் கேட்டவுடன்) உம்மிடம் விரைந்து வந்து சேரும்;[54] மேலும், அல்லாஹ் வன்மையுள்ளவனாக ஞானம் நிறைந்தவனாக இருக்கிறான் என்பதை அறிந்துகொள்வீராக.''

---

## பிரிவு—36

*சத்திய மார்க்கத்தில் செல்வத்தைச் செலவிடுதலின் பயன்.*

261. தங்களுடைய முதல்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்பவர்களான அவர்களின் (நன்மைகளும் அவற்றின் பயனாய் விளையும் அபிவிருத்திகளு மாயவற்றின்) உவமையானது, ஒரு வித்தின் உவமானத்தை ஒத்திருக்கின்றது;[55] (அவ்வித்து ஒன்றாயிருந்தும் பூமியில் விதைத்ததன்பின்பு) ஏழு கதிர்களை முளைக்கச் செய்கின்றது; ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்களிருக்

---

54. காட்டுப்பறவைகளாகவும் பகுத்தறிவின் ஞானமற்றவைகளாகவுமுள்ள பறவைகளே மனிதர்களுடைய பழக்கத்தினால் மனிதர்களின் வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படியே நடக்க முற்பட்டுவிடுகின்றன வென்றால், அல்லாஹ்வின் உண்மையான அழைப்பினால் மனிதர்களுள் அத்தகைய இயக்கம் ஏற்படமாட்டாதென்று நினைக்கின்றீர்கள்? இவர்கள் நேரான வழியில் பழக்கப்பட்டவர்களாக வந்துசேர மாட்டார்களா? உம்முடைய உண்மையான உபதேசத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்களா? அல்லாஹ்வின் ஆணைப்படி நடக்கமாட்டார்களா?

55. யுத்த விஷயங்களையும் அது சம்பந்தமான வேறுபல் காரியங்களையும் கூறியதன்பின், அல்லாஹ் இங்கிருந்து மற்றொரு விஷயத்தைக் கூறத் தொடங்குகிறான்; அஃதாவது: இதுகாறும் மேலே சொல்லிக்கொண்டுவந்த வண்ணம் நடந்து காட்ட வேண்டுமாயின், முதன் முதலாக மனிதன் தன்னுடைய முதலை நன்மையான வழியில் செலவு செய்வதற்கு அவன்பால் பூரணசக்தி யுண்டாதல் வேண்டும்; எனவே, தமது முதலைக் குறித்து வஸிய்யத் செய்து மரணமடைவதும், நோன்பு நோற்கும் போது தானதர்மச் செலவுசெய்ய வேண்டுவதும், உண்ணத்தக்க முதலையே உண்ணுவதும், ஹஜ்ஜு செய்வதும், யுத்தம் புரிவதும், விவாகம் செய்வதும், விவாக ரத்து செய்வதும், அநாதிகளை ஆதரிப்பதும், பெண்பாலாரை நல்ல அழகான முறையிலே நடாத்திச் செல்வதும், அவர்களுக்கு அதிக உபகாரம் செய்வதும், பணமே பெரிதென வெண்ணி அதனைக் கட்டிக்கொண்டழாத சத்திய சீலர்களுக்கே முடியக்கூடிய காரியமாகும். எனவே, மேலேசொன்ன நன்மையான காரியங்களை யெல்லாம் உண்மையிலே செய்பவர்களுக்கு, அல்லாஹ்வின் பாதையில் தங்கள் பொருள்களைச் செலவு செய்ய வேண்டுமென்று இதற்குப்பின் கூறப்படுவதுடன், பொருள்கள் சம்பந்தமான ஏனைய விஷயங்களும் சொல்லப்படுகின்றன.

கின்றன ; (எனவே, நீங்கள் செலவழிப்பது ஒன்றே யாயினும், அதன் பிரதிபிரயோஜனம் ஏழுநூறு தானென்ன ! ஏழுநூறு ஆயிரக் கணக்காகவும் உங்களுக்குக் கிடைக்கின்றது.) மேலும், அல்லாஹ் தான் நாடியவருக்கு இரட்டிப்பாக்கித் தருகிறான் ; இன்னம் அல்லாஹ் விசாலம்—(கொடை) உள்ளவனாக, அறிகிறவனாக இருக்கிறான்.

262. (ஆனால், ஞாபக மிருக்கட்டும் ! உண்மையான மனத்துடனும் பரிசுத்தமான எண்ணத்துடனும் செய்யப்படும் தர்மமே தான் உண்மையிலே நல்லதா யிருக்கின்றது. எனவே) தங்கள் முதல்களை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்கின்றவர்களான அவர்கள் தாங்கள் செலவு செய்ததைப் பின்னர்ச் சொல்லிக் காட்டாமலும் (அதைப் பெறுகிறவர்களுக்குத் தம்முடைய சொல்லினாலோ செயலினாலோ) எவ்வித நோவினையையும் கொடுப்பதைப் பின்பற்றாமலு மிருக்கின்றார்களோ, அப்படிப் பட்டவர்களுக்கு (அவர்களுடைய நன்மைக் கீடாக) அவர்களது இரக்ஷகனிடத்தில் அவர்களுடைய சன்மான மிருக்கிறது ; அவர்களுக்கு (யாதொரு விதமான) அச்சமில்லை ; அவர்கள் (எவ்விதத்தும்) துயருறவு மாட்டார்கள்.

263. (நாவினால் கூறும் ஒரு) நன்மையான வசனமும், (அன்பினாலும் இரக்கத்தினாலும் தவறுகளின்) மன்னிப்பும் (மனிதர்களுக்கு) நோவினையைப் பின்பற்றி யிருக்கும் அந்தத் தர்மத்தைக் காட்டினும் (மிகமிக) மேலானதா யிருக்கின்றன ; மேலும் (நீங்கள் கவனத்தி லிருத்திக் கொள்ளுங்கள் :) அல்லாஹ் தேவையற்றவன். (எனவே, அவனுக்கு நுங்கள் நன்மையால் பிரயோஜனமொன்று மில்லை ; நுங்கள் சகாயத்தையும் அல்லாஹ் எதிர்பார்த்தவனாயு மில்லை ; அன்றியும்) பொறுமை யுள்ளவன். (ஆதலின், நீங்களும் மனிதர்களின் தவறுகளைப் பொறுத்துக் கொள்ளக் கடவீர்களாக.)

264. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள் ! மனிதர்களுக்குக் காட்டும் பொருட்டுத் தன்னுடைய முதலைச் செலவு செய்து (கொண்டு)ம், அல்லாஹ்வின் மீது(ம்) இறுதி(த்தீர்ப்பு) நாளின்மீதும் நன்னம்பிக்கை கொள்ளாமலும் இருப்பவரே போல் (நீங்கள் செய்யும் தர்மத்தைச்) சொல்லிக் காட்டுவதைக்கொண்டும் (அதைப் பெற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு) நோவினை கொடுப்பதைக் கொண்டும் உங்களுடைய தர்மங்க(ளின் நன்மைக)ளைக் கெடுத்து விடாதீர்கள். (எதைச் செய்யினும், அதை அல்லாஹ்வுக்காகவே,

செய்தல் வேண்டும்; மனிதர்களுக்குக் காட்டுவான் வேண்டி ஒன்றையும் செய்வது தகாது.) ஆதலின், அவனுடைய உவமையானது, தன்மீது (சிறிது) மண்ணையுடைய வழுவழுப்பான கற்பாறையின் உச்சியின் உவமானத்தைப் போல(வே) இருக்கிறது; (எனவே, அதன்மீது விதையும் விதைக்கப்பட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்.) பிறகு அதன்மீது கடுஞ் சோனமாரி பொழியலாயிற்று; பின்னர் (அதனால் அப் பாறையின்மீது படிந்திருந்த ஒரு சிறிது மண்ணும், அதில் விதைக்கப்பட்டிருந்த விதையும் அடியோடு அடித்துக்கொண்டு போகப்பட்டு) அதை (ஒன்றுமில்லா வழுவழுப்பான) உறுதியான ஒரு கல்லாக (மட்டுமே அம்மாரி செய்து) விட்டுவிட்டது. (ஆதலின், தானதர்மஞ் செய்து) அவர்கள் சம்பாதித்ததி லிருந்து (உண்டான நன்மைகளெல்லாம், அவற்றை மனிதர்களுக்குக் காட்டுவதால் அழிந்துபோய்விட்டன. எனவே, நன்மையான) ஒரு பொருளையும் அடையக்கூடியவர்களல்ல; இன்னமும், அல்லாஹ் (சன்மார்க்கத்தை) நிராகரிப்பவர்களாய கூட்டத்தாருக்கு (ஜயம் பெறுதற்குரிய) நேர்வழி காட்டமாட்டான்.

265. மேலும் (அதற்கு மாறாகத்) தங்கள் முதல்களை (மனிதர்களுக்குக் காட்டும் பொருட்டல்லாது) அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் பொருட்டும், தங்கள் ஆன்மாக்களை (நேரான பாதையின்மீது) உறுதிப்படுத்தும் பொருட்டும் செலவு செய்பவர்களின் உவமையானது, உயர்தரமான பூமியின் மீதுள்ள தோட்டத்தின் உவமானத்தைப் போன்றதாயிருக்கிறது; அ(ந்தத் தோட்டத்)தில் கடுஞ் சோனமாரி பொழிந்தது; எனவே (அதன் பயனாக அந்தத் தோட்டம்) தன்னுடைய உணவுப் பொருள்களை இரட்டிப்பாய்க் கொடுத்தது; ஆனால் (அங்ஙனமில்லாது) அதன்மீது கடுஞ் சோனமாரி பொழியவில்லை யாயின், பிறகு (அதற்கு நஷ்டமொன்று முண்டாவதில்லை; என்னெனின், அதற்கு) இலேசான பனி(யே போதுமானதா யிருக்கிறது.) மேலும், அல்லாஹ் நீங்கள் செய்கின்றதை (யெல்லாம்) பார்த்துக்கொண்டிருக்கிறான் (என்பது ஞாபகத்தி லிருக்கட்டும்.)

266. உங்களுள் (யாரேனும்) ஒருவன், தனக்குப் பேரீச்சைகளாலும், திராக்ஷைகளாலும் (நிரப்பப் பெற்றிருந்து) கீழே நீர்ச்சுனைகள் ஓடுகின்ற தோட்டமொன்று (இருந்து) — அவனுக்கு அதில் எல்லா (வித)ப் பழங்களு மிருக்கின்றன; (மேலும்) அவனுக்கோ வயோதிகம் வந்துவிட்டது; (மேலும்) அவனுக்குப் பலஹீனமான குழந்தைகளு மிருக்கின்றனர் — (இப்படி யிருக்கும் நிலைமையிலே) அக்கினியுடன் கூடிய கடும்புயல் அ(ந்த)த் தோட்

ட்டத்தில் வீசி, பின்னர் (அக்கடும் புயலால்) அஃது எரிந்து (நாசமாகி, அழிந்து) விடவேண்டு மென்பதை விரும்புகிறானா?[56] நீங்கள் ஆலோசனை செய்து பார்க்கும் பொருட்டு, அல்லாஹ் உங்களுக்கு இவ்வண்ணமாகவே (உண்மையான) அத்தாக்ஷிகளை விளக்கிக் காட்டுகின்றான்.

---

## பிரிவு — 37

முதலின் வகையும் அதன் செலவு முறையும்

267. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! நீங்கள் (வியாபாரத்தைக் கொண்டேனும் கூலிவேலையைக் கொண்டேனும் கஷ்டப்பட்டுச்) சம்பாதித்ததில் பரிசுத்தமானவைக(ளான பொருள்க)ளிலிருந்து(ம்), நாம் உங்களுக்காகப் பூமியினின்று வெளிப்படுத்திக் கொடுத்ததிலிருந்தும் (அல்லாஹ்வின் பாதையிலே தாராளமாகச்) செலவு செய்வீர்களாக; (ஆனால்) மேலும், நீங்கள் அதினின்று கேவலமான—(ஒன்றுக்கு முதவாத)தைச் செலவு செய்ய எண்ணங் கொள்ளாதீர்கள்; மேலும் (அப்படிப்பட்ட கேவலமான வஸ்து உங்களுக்குக் கொடுக்கப்படுமாயின்) அவ் விஷயத்தில் நேத்திரங்களை மூடிக்கொண்டல்லாமல் (உங்கள் மனத்திருப்தியுடனே) அதை நீங்கள் (ஒருபோதும்) பெற்றுக்கொள்ள மாட்டீர்கள்; (எனவே, உங்களுக்கே பிரியமில்லாத விரும்பத்தகாத கேவலமான ஒரு பொருளை அல்லாஹ்வுக்காகக் கொடுப்ப தென்பது எங்ஙனம் பொருந்தும்? ஆகவே) மேலும், அல்லாஹ் தேவையற்றவன், புகழுக்குரியவனா யிருக்கிறா னென்பதை (நீங்கள்) அறிந்துகொள்ளுங்கள். (அஃதாவது, உங்களுடைய எத்தகைய

56. தம்முடைய ஆயுள்முழுதும் மனிதர்களுக்குக் காட்டி, அவர்களிடத்திருந்து கீர்த்தியையும் பெருமையையும் பெறவேண்டுமென்ற எண்ணங்கொண்டு நன்மையைச் செய்பவர்களுடைய நிலைமையெல்லாம் இப்படித்தா னிருக்கிறது. என்னெனின், இப்படிப்பட்ட காரியங்களைச் செய்பவர்களெல்லாம் இதனால் இறுதிநாளில் நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றே எண்ணியிருக்கின்றனர். ஆனால், அந்த இறுதிநாள் வரும்போது, தங்கள் மரணபரியந்தம் செய்துள்ள மேலே குறிப்பிட்டபடியாயுள்ள அபாரப் பெரிய பெரிய நன்மைகளெல்லாம் நாசமாய்ப் போயிருப்பதையும், அவை அல்லாஹ்வால் ஒரு சிறிதும் ஒப்புக்கொள்ளப் படாமலிருப்பதையும் நிதரிசனமாகக் கண்டுகொள்வார்கள். எனவே, அல்லாஹ்வுக்காகவே நீங்கள் செலவு செய்ய வேண்டும்; அவனுடைய பிரியத்தையும் அருளையும் பெறுவான் வேண்டியே திரவியங்களை இறைக்கவேண்டும். இங்ஙனமில்லாது, மனிதர்களுக்குக் காட்டுவான் வேண்டியும், அதனால் மக்கள் தன்னைப் போற்றிப் புகழவேண்டு மென்னும் எண்ணம்கொண்டும் பணங்களை வீணே விரயம் பண்ணுவது கூடாது என்று இவ்வாக்கியம் நன்கு அறிவுறுத்திக்கொண் டிருக்கின்றது.

வஸ்துவின் மீதும் ஆண்டவன் தேவையுடையவனு யில்லை; நீங் கள்தாம் வெற்றியும் ஈடேற்றமும் பெறுவான் வேண்டி நன்மை யான காரியங்களின் பக்கல் தேவை யுடையவர்களா யிருக்கின் றீர்கள்.)

268. (நீங்கள் உங்கள் முதல்களைத் தாராளமாகச் செலவு செய்வதால் தாரித்திரியர்களாய்ப் போய்விடுவீர்களென்று) ஷைத் தான் உங்களுக்குத் தாரித்திரியத்தை(க் கொண்டு) வாக்களிக் கிறான்; மேலும், உங்களுக்குக் கெடுதியானவைகளை(ச் செய்யும் படியும்) ஏவுகிறான்; மேலும், அல்லாஹ் தன்மாட் டிருந்து மன் னிப்பையும் மிகுதியான (செல்வத்)தையும் (தருவதாக) உங் களுக்கு வாக்களிக்கிறான்; (ஆதலின், ஷைத்தானுடைய வார்த்தை யைக் கேளாதீர்கள்; அல்லாஹ்வின் நேரான பாதையையும் அவ னது வாக்குறுதியையும் இறுகப் பற்றிக் கொள்ளுங்கள்.) மேலும், அல்லாஹ் விசாலம்—(கொடை) உள்ளவனுக, அறிகிறவனுக இருக் கிறான்.

269. (அல்லாஹ்) தான் நாடிய அவருக்கு ஞானத்தை யளிக்கிறான்; மேலும், ஞானத்தை யளிக்கப் பெற்ற அவர் நிச்சய மாகவே அதிகமான (மிக மேலான) நன்மையை (யே) அளிக்கப் பெற்றவ ராவார்; மேலும் (அதனுல்) நுண்ணறி வுள்ளவர்களல் லாது (மற்றவர்கள் எம்மட்டும் எடுத்துக் கூறினும்) உபதேசம் பெறமாட்டார்.

270. இன்னமும் (தானதர்மத்தின் பொருட்டுச்) 'செலவழிக் கும் பொருளிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்யினும், அல் லது (அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்வதற்காக) நேர்ச்சை செய்வதிலிருந்து நீங்கள் (எதை) நேர்ச்சை செய்துகொள்ளினும், நிச்சயமாகவே அதை (எல்லாம்) அல்லாஹ் அறிகிறான் (என்பது உங்கள் ஹிருதயங்களுள் இருக்கட்டும்). மேலும் (உண்மையை உணர்ந்த பின்னரும்) அநியாயக்காரர்களுக்கு உதவியாளரில்லை. (எனவே, நீங்கள் தவறிழைத்ததன் பின்பு தப்பிக்கொள்ளலா மென்பது ஒருகாலும் முடியாது.)

271. (நீங்கள் உங்கள் பிரதாபத்தையும், மனிதர்களுக்குப் பிரஸ்தாபித்துக் காட்டுவதையும் நாடாமல்) தர்மங்களைப் பகிரங் கப் படுத்துவீர்களாயின், அது(வும்) நல்லதாகவே யிருக்கிறது; அ(ந்தத் தர்மத்)தை நீங்கள் மறைத்து (வைத்து)ம் அதனைத் தாரித்திரியர்களுக் களிப்பீர்க ளாயின், அது(வும்) உங்களுக்குச் சிறந்ததாக(வே) யிருக்கிறது. மேலும் (அஃது) உங்களை விட்டு

உங்கள் பாபங்களை அகற்றி வைக்கும்; மேலும் (உங்கள் ஞாபகத்தி லிருக்கட்டும்:) அல்லாஹ் நீங்கள் செய்வதை (யெல்லாம்) உணர்கிறவனு யிருக்கிறன்.

272. (ஏ நபியே!) அவர்களது நேர்வழி (அஃதாவது, அவர்களை நேர்வழி யடையச் செய்வது) உம்மீது (கடமையாக்கப்பட்டதாய்) இல்லை; ஆனல், அல்லா(ஹ்) தான் நாடியவர்களுக்கு நேர்வழி காட்டுகிருன்; மேலும், நீங்கள் நல்ல (பொருளாய)தி னின்றுஞ் செலவு செய்வது (எனக்குப் பிரயோஜனப் படுவதில்லை; அஃதன்றி அதன் நன்மையை வேறெவருங்கூடப் பெறமாட்டார்; ஆனல், அஃது) உங்கள் ஆன்மாக்களுக்கே (பிரயோஜனம் தரத்தக்கதாகவும்) உரித்தானதாகவும் இருக்கின்றது; மேலும் (நீங்கள்) அல்லாஹ்வின் திருப்திக்காக வன்றி (உங்கள் முதல்களைச்) செலவு செய்கின்றீர்க ளில்லை; மேலும், நீங்கள் நல்ல (பொருளாய)தினின்றுஞ்செலவுசெய்கின்ற (அது)—அதன் நற்பயன் (யாவும்) உங்களுக்குப் பூரணமாக அளிக்கப்படும் (என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்) மேலும் (அவ்வாறின்றி உங்களுக்குப் பூரண நன்மை யளிக்கப்படாமல்) நீங்கள் அக்கிரமம் செய்யப் படமாட்டீர்கள்.

273. (தர்மம் செய்ய வேண்டுவது) அல்லாஹ்வின். பாதையிலே(யே தங்களை அர்ப்பணம் செய்து விட்டதால்) தடுக்கப்பட்டிருக்கின்றவர்களாய தாரித்திரியர்களுக்கு உரித்தாகும்; (என்னெனின், அவர்கள் தங்கள் ஜீவனேபாயப் பொருள்களைத் தேடும் விஷயத்தில்) பூமியில் நடந்து திரியக் கூடாதவர்களாக இருக்கின்றனர்; (அதுவேயு மன்றி, அவர்கள் தங்கள் தாரித்திரியத்தை வெளியில் சொல்லிக் காட்டிப் பொருளுதவி கோராமல் தங்கள் மானத்தைக் காப்பாற்றிக் கொண்டு) பிச்சை புகாமலிருப்பதால், அவர்களைத் தனவந்தர்களென்று (உண்மை விஷயத்தை) அறியாதவன் எண்ணுகிருன்; (ஆனல்) அவர்களுடைய (முகவிலாசத்தின்) அடையாளங்களைக் கொண்டு (நீர்) அவர்களை (நன்கு) அறிந்துகொள்வீர்; மனிதர்களிடத்தில் மேல்விழுந்து (வற்புறுத்தி அவர்கள் யாசகம்) கேட்கமாட்டார்கள்; மேலும், நீங்கள் நல்ல (பொருளாய)தினின்றும் எதைச் செலவு செய்கிறீர்களோ, அதை நிச்சயமாகவே அல்லாஹ் அறிகிறவனு யிருக்கிறன்.

## பிரிவு — 38

### வட்டியின் விஷயம்

274. (ஆகவே) தங்கள் முதல்களை, இரவிலும் பகலிலும், இரகசியமாகவும் பஹிரங்கமாகவும் செலவு செய்கின்றவர்களான அவர்களுக்கு அவர்களுடைய இரக்ஷகனிடத்தில் அவர்களது (நன்மையான) பிரதிபல னிருக்கின்றது; மேலும், அவர்களுக்கு (யாதொரு விதமான) அச்ச(மு)மில்லை; (மேலும்) அவர்கள் (எவ்வி தத்தும்) துயருறவு மாட்டார்கள்.[57]

275. (தேவைப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதை விடுத்து, அதற்கு மாறாக) வட்டியை (அவர்களிடத்திருந்து வாங்கித்)தின்னு கின்ற அவர்கள் ஷைத்தான் தொட்டதால் ஸ்மரணையற்றுக் கிடத்தாட்டப்பட்ட ஒருவன் (எழுந்து) நிற்பதேபோ லல்லாமல் (வேறு நேரான பாதையில் உறுதியாக) நிற்கமாட்டார்கள்; இஃது (ஏன் இவ்வாறு ஆகின்றதெனின், அவர்கள் வட்டிவாங்கித் தின் பது கூடாதென்பதை நிராகரித்துக்கொண்டு) வியாபாரம் (செய் வதும்) வட்டியைப்போலத்தா னிருக்கிறதென்று அவர்கள் கூறிக் கொண் டிருக்கின்றார்கள் என்பதற்காம்; (ஆனால்) அல்லாஹ்வோ வியாபாரத்தை ஆகு (மென்று அனுமதியளித்து, நல்லதாகவு) மாக்கி வைத்திருக்கிறான்; மேலும், வட்டியை ஆகாததாக (த் தடை) செய்திருக்கிறான்; (ஆகவே, அவ்விரண்டும் எங்ஙனம் ஒன்றாயிருத்தல் சாலும்?) ஆதலின், எவருக்குத் தன்னுடைய இரக்ஷகனிடத்திருந்து (இந்த) அறிவுறுத்தல் வந்துவிட்டதோ, பின்னர் (வட்டிவாங்கித் தின்னமல் அன்னவர்) விலகிவிட்டாரோ, அவருக்குச் சென்று போன காரியங்களானவை (குற்றமான வையாயிருப்பின், அவற்றின் பாபங்கள் மன்னிக்கப்பட்டனவாக) இருக்கின்றன; மேலும், அவருடைய காரியம் அல்லாஹ்வினிடம்

---

57. இப்பிரிவில் வட்டி வாங்குவது கூடாத காரியமா யிருக்கின்றதென்பதே விளக்கிக் காட்டப்படுகின்றது. எனினும், மீட்டும் இதில் தர்மசம்பந்தமான விஷயத் தின் கருத்தும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. மனிதர்கள் தானதர்மம் செய்ய வேண்டுமென்றும், ஆனால் அதற்கு விரோதமாக வட்டிப்பொருளை வாங்கி மக்களுக் குக் கஷ்டத்தைக் கொடுக்கவேண்டா மென்றும் அல்லாஹ் வற்புறுத்துகிறான். என் னெனின், தானதர்மம் என்பது தனவந்தர்கள் தாரித்திரியர்களுக்குச் செய்யும் உப காரமா யிருந்துகொண் டிருக்கின்றது. வட்டி யென்பது, எளியாரைக் கசக்கிப்பிழிந்து கஷ்டப்படுத்தி அவர்கள்பாலுள்ள முதல்களை வலியாருக்குப் பிடுங்கிக் கொடுப்பதைக் குறிக்கும். எனவே, வட்டியென்னும் கடுமையான கொடுமையைக் காட்டினும், தானதர்மமென்னும் தாராளக் கொள்கையும் மனமும் செய்கையுமே சிறந்தனவாயிருக் கின்றன என்பதை முதன் முதலாக இவ்வாக்கியத்தால் அல்லாஹ் சுட்டிக்காட்டுகிறான்.

(ஒப்படைக்கப்பட்டதாக) இருக்கிறது ; (ஆனால்) மேலும் (இந்த நேரான பாதையை விட்டு மீட்டும் வட்டிவாங்குவதன் பக்கல்) திரும்பி விட்டாராயின்; அவர்கள்தாம் அக்கினி வாசிகளாக இருக்கின்றார்கள் ; அதிலேயே அவர்கள் நிலைத்திருப்பார்கள்.

276. அல்லாஹ் வட்டியை—(அதை வாங்கித் தின்பவரை) அழிக்(க நாடு)கிறான் ; மேலும், தர்மங்களை(க் கொண்ட ஐசுவரியத்தை) வளர்க்கிறான் ; மேலும், அல்லாஹ் பாபிகளாய நன்றி கெட்டவர்களை யெல்லாம் நேசிக்கின்றா னில்லை.

277. நிச்சயமாக(வே) நன்னம்பிக்கை கொண்டவர்களும், நற்கிரியைகளைச் செய்தவர்களும், தொழுகையை நிலைநிறுத்தியவர்களும், ஏழை விகிதத்தைக் கொடுத்தவர்களுமாய அவர்களுக்கு அவர்களுடைய இரக்ஷகனிடம் அவர்களது பிரதிபல னிருக்கின்றது ; மேலும் அவர்களுக்கு (யாதொருவிதமான) அச்ச(மு) மில்லை ; (மேலும்) அவர்கள் (எவ்விதத்தும்) துயருறவுமாட்டார்கள்.

278. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! நீங்கள் (உண்மையிலேயே) அல்லாஹ்வின்மீது நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பீர்களாயின், (அந்த) அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்தும்) வட்டியில் (இன்னம் வரவேண்டிய) பாக்கியிருப்பதை (அதைக் கொடுக்க வேண்டியவர்களிடமே தள்ளுபடிசெய்து) விட்டுவிடக் கடவீர்களாக.

279. (வட்டி வாங்கித் தின்னவேண்டா மென்று நீங்கள் விலக்கப்பட்டதன்) பின்னர் (அங்ஙனம்) நீங்கள் செய்யவில்லையாயின், அல்லாஹ்வுடனும் அவனுடைய தூதருடனும் யுத்தம் புரியத் தையாரா யிரு(ந்துகொள்ளு)ங்கள் ; (என்னெனின், அவர்களுடைய கட்டளைக்குச் சிரஞ்சாய்க்காமல் அதை மறுத்து நிற்பது அவர்களுடனே எதிர்த்து நிற்பதாகவே பொருள்படும்.) மேலும் (நீங்கள் வட்டி வாங்கித்தின்னமல் அதை வெறுத்துப் பச்சாதாபத்துடனே) திரும்பிவிடுவீர்களாயின் (நீங்கள் கடன்கொடுத்திருந்த) உங்களது அசல் முதல்கள் உங்களுக் கிருக்கின்றன ; (அவற்றை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் கடன் வாங்கியவர்கள் வட்டியைக் கட்டாயமாக உங்களுக்குக் கொடுக்கத்தான் வேண்டுமென்று) அநியாயம் செய்யாதீர்கள் ; (நீங்கள் இவ்வாறு செய்வீர்களாயின், நீங்களும்) அநியாயம் செய்யப்படமாட்டீர்கள்.

280. மேலும் (கடன் வாங்கியவன் சீக்கிரமாகத் தன் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல்) கஷ்டத்துள் ளிருப்பானாயின் (அவன்வயம் முதல் சேர்ந்து) இலேசாகும்வரை தாமதி(த்திரு)த்

தல் வேண்டும்; மேலும், நீங்கள் அறிகிறவர்களா யிருப்பீர்களா யின் (கஷ்டத்துள் சிக்கிக்கொண்டிருக்கும் உங்கள் சகோதரன் கடன் தொகையை) நீங்கள் (திரும்பப் பெற்றுக்கொள்ள முயலாது அப்படியே) தர்மம் செய்து விடுவ(தான)து உங்களுக்குச் சிறந்ததா யிருக்கிறது.

281. மேலும், அல்லாஹ்வின் பக்கல் எந்நாளில் நீங்கள் திருப்பிக் கொணரப் படுவீர்களோ அந்நா(ளின் கேள்வி கணக் குக்க)ளை (நினைத்துப் பார்த்து) அஞ்சிக்கொள்ளுங்கள்; பின்னர் ஒவ்வோர் ஆன்மாவும் தான் (இவ்வுலகில் செய்துள்ள காரியங் களால்) சம்பாதித்திருப்பதைப் பூரணமாகக் கொடுக்கப்பெறும். மேலும், அவர்கள் (தங்களுக்குச் சேரவேண்டியதில்) அக்கிரமம் செய்யப்பட மாட்டார்கள்.

---

## பிரிவு—39

### கொடுக்கல் வாங்கல் விஷயம்

282. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! குறிப்பிட்ட தவணைக்கு (நீங்கள்) ஒருவரோடொருவர் கடன்கொடுத்துக் கொள் வீர்களாயின், அதை(க் குறிப்பிட்டபடி) எழுதிக்கொள்ளுங்கள்; மேலும், உங்களுக்கு மத்தியில் (இவ்விஷயத்தை) எழுதுகிறவன் நீதத்துடன் எழுதவேண்டும்; மேலும், (அந்த) எழுத்துக்காரன் தனக்கு அல்லாஹ் கற்றுக்கொடுத்த வண்ணம் (நேரிய முறையில்) எழுத மறுப்பது கூடாது; ஆதலின், அவன் (அப்படியே) எழுத வேண்டும்; மேலும், எவன்மீது (கடன் கொடுக்க வேண்டிய) உரிமை ஏற்பட்டிருக்கிறதோ அவன் எழுதச் செய்யட்டும்; தன் னுடைய ரக்ஷகனாய அல்லாஹ்வுக்கு (அவன்) அஞ்சிக்கொள்ளக் கடவன்; மேலும், (தான் கொடுக்கவேண்டிய உரிமைத் தொகை யான) அதிலிருந்து ஒன்றையும் குறைக்காம லிருக்கக்கடவன்; பின்னர், எவன்மீது (கடன் கொடுக்கவேண்டிய) உரிமை இருக் கிறதோ, அவன் (இக்காரியங்களில்) அறிவிலியாகவேனும், அசக்த னாகவேனும் (அல்லது) தானே (விஷயத்தைச் சொல்லி) எழுதச் செய்யக் கூடாதவனாகவேனும் இருப்பானாயின், அவனுடைய அதி காரி நீதத்துடன் (சொல்லி) எழுதும்படி செய்வானாக; மேலும் (நீங்கள் எழுதும் இந்த தஸ்தாவீஜுக்கு) உங்கள் ஆடவருள் இரண்டு சாக்ஷிகளைச் சாக்ஷியம் (ஆகத்) தேடிக்கொள்வீர்களாக; பின்னர் (சாக்ஷிகளாக) இரண்டு ஆடவர்களா யில்லையாயின், நீங்கள் விரும்புகின்ற சாக்ஷிகளுள் ஓர் ஆடவரும் இரண்டு பெண்

டிரும் (இருத்தல் வேண்டும் ; என்னெனின்) அவ்விருவருள் ஒருவர் தவறி (மறந்து) விடுவாராயின், அவ்விருவருள் ஒருவர் மற்றவருக்கு ஞாபகமூட்டுவார் ; மேலும், சாக்ஷிகள் (தங்களுக்குத் தெரிந்ததைக் கூற) அழைக்கப் படுவார்களாயின் (அவர்கள்) மறுப்பது கூடாது ; மேலும் (அந்தக் கடன்) சிறிதாயினும் பெரிதாயினும் (எவ்வாறிருப்பினும்) அதன் தவணைக்குள் அதை நீங்கள் எழுதிக்கொள்வதில் அசிரத்தையா யிராதீர்கள் ; இஃது (உங்களுக்கு) அல்லாஹ்வினிடம் மிக்க நீதமுள்ளதாகவும், சாக்ஷியத்திற்கு மஹா உறுதியுள்ளதாகவும் இருக்கிறது ; மேலும், நீங்கள் (பிறகு) சந்தேகிக்காம லிருப்பதற்கு மிக்க நெருங்கியதா (ய தஸ்தாவீஜுமா)கும் ; ஆனால், அஃது உங்களிடையே கொடுக்கல் வாங்கலாய்ப் புரண்டு கொண்டுவரும் 'ரொக்க' வியாபாரமாயின், அதை நீங்கள் எழுதிக்கொள்ளாததால் உங்கள்மீது குற்றமொன்றுமில்லை ; மேலும், நீங்கள் வியாபாரம் செய்துகொள்ளும்போது(ம்) சாக்ஷி வைத்துக் கொள்ளுங்கள் ; மேலும், எழுத்துக்காரனு(க் கேனு)ம் சாக்ஷி(யா)யு (மிருப்பவனுக் கேனு)ம் நஷ்டம் உண்டாக்குவது கூடாது ; மேலும் (நீங்கள் அவர்களுக்கு அவ்வாறு நஷ்டத்தை உண்டுபண்ணச்) செய்வீர்களாயின், அஃது உங்களால் உண்டாகும் (மார்க்க வரம்பை மீறிய) பாபமாகும் ; மேலும், அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள் ; இன்னம், உங்களுக்கு அல்லாஹ் (ஜயம் பெறுதற்குரிய இப்படிப்பட்ட சரியான மார்க்கத்தைக்) கற்றுக் கொடுக்கிறான் : மேலும், அல்லாஹ் சகல வஸ்துக்களையும் அறிகிறவனா யிருக்கிறான்.

283. மேலும் (நீங்கள் சொந்த ஊர்களிலில்லாமல்) பிரயாணத்தி லிருப்பீர்களாயின், இன்னம் (உங்கள் கடன் விஷயமாக எழுதிக்கொள்ள) நீங்கள் எழுதுகிறவனைப் பெற்றுக்கொள்ள வில்லையாயின், ஏதேனு மொரு பொருளை(க் கடன் கொடுத்தவனுக்கு) ஒப்புக்கொடுத்த (விதமாய) அடமானம் வைத்தல் வேண்டும் ; பின்னர், உங்களுள் சிலர் (மற்றுஞ்) சிலரை நம்புவாராயின், நம்பப்பட்டவரான அவர் (தம்பால் வைக்கப்பட்ட) தமது பாதுகாப்பு—(அமானத்து)ப் பொருளை (அதற்குரியவர்பால் திருப்பி)க் கொடுத்துவிடல் வேண்டும் ; மேலும் (இவ் விஷயத்தில்) அவர் இரக்ஷகனாய அல்லாஹ்வுக்கு அஞ்சிக் கொள்வாராக ; மேலும், சாக்ஷியத்தை ஒளிக்காதீர்கள் ; மேலும், எவன் அதை ஒளிக்கிறானோ அவனுடைய ஹிருதயம் நிச்சயமாகவே பாபியா யிருக்கிறது ; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்துகொண்டிருப்பதை அறிகிறவனா யிருக்கிறான் (என்பது ஞாபகத்தி லிருக்கட்டும்).

## பிரிவு—40

முஸ்லிம்கள் ஜயசீலர்களாக ஆக்கப்படுவார்கள்.

284. வானங்களி லுள்ளவைகளும், பூமியி லுள்ளதும் அல்லாஹ்வுக்கே உரியனவாக இருக்கின்றன; (எனவே, அவனுடைய அதிகாரத்தை விட்டும் அறிவை விட்டும் ஒரு பொருளும் அப்புறப் பட்டதாயில்லை.) மேலும், உங்களுடைய ஹிருதயங்களி லுள்ளதை நீங்கள் வெளிப்படுத்தினும், அல்லது அதை நீங்கள் மறைத்து வைப்பினும், அதைக் கொண்டு உங்களிடம் அல்லாஹ் கணக்குக் கேட்பான்; (அதை இவ்வுலகத்தார் பார்வையிலிருந்து மறைத்து வைப்பினும், அல்லாஹ்வுக்கு முன்னே மறைப்பது முடியாது.) எனவே, தான் நாடியவருக்கு மன்னிப்பை யளிப்பான்; மேலும், தான் நாடியவருக்குத் தண்டனையை யளிப்பான்; மேலும், அல்லாஹ் சகல வஸ்துக்களின்மீது(ம்) ஆண்மை பெற்றவனா யிருக்கிறான்.

285. (நம்முடைய) தூதர் தம்முடைய ரக்ஷகன்பா லிருந்து தம்மாட்டு இறக்கி வைக்கப்பட்ட (உபதேசத்)தைக் கொண்டு நன்னம்பிக்கை கொள்ளுகின்றார்; மேலும், நன்னம்பிக்கை கொண்டவர்களும் (அவ்வாறே அதை நம்புகின்றார்கள். இவர்கள்) எல்லாரும் அல்லாஹ்வின்மீதும், அவனுடைய வானவர்மீதும், அவனுடைய வேதங்கள் மீதும், அவனுடைய தூதர்கள் மீதும் நன்னம்பிக்கை கொள்ளுகிறார்கள்; (இன்னமும், இவர்கள் தங்கள் நம்பிக்கைக் கொத்த வண்ணமே, "நாங்கள்) அவனுடைய தூதர்களுள்ளிருந்து ஒருவரிடையேயும் பாகுபாடு செய்யமாட்டோம்; (அஃதாவது, ஒரு தூதரை ஒத்துக்கொண்டு மற்றொரு தூதரை நிராகரிக்காமல், எல்லாத் தூதர்கள்மீதும் நாங்கள் நம்பிக்கை கொள்ளுகிறவர்களாகவே யிருக்கிறோம்," என்று கூறுகின்றனர்கள்.) மேலும் (அவர்களை அல்லாஹ் அழைக்கும்போது அவர்கள்) சொல்லுகிறார்கள்: ("ஏ எங்கள் இரக்ஷக! உன்னுடைய வார்த்தையை நாங்கள்) செவிமடுத்தோம்; மேலும் (அதற்கு) வழிபட்டோம்; எங்கள் இரக்ஷக! உன்னுடைய மன்னிப்பை(யே கோருகின்றோம்.) மேலும், உன் மாட்டே (நாங்கள் இறுதியில் வந்து) சேரும் ஸ்தல மிருக்கின்றது.

286. (எந்த) ஆன்மாவுக்கும் தன்னுலியன்ற (அளவின்) மட்டல்லாது அல்லாஹ் (அதிகமான) கஷ்டம் கொடுப்பதில்லை; அது சம்பாதித்த(தன்) நன்மையானது அதற்கு உண்டு; மேலும்,

அது சம்பாதித்த(தன்) தீமையானது அதன் மீதே சாரும்; (எனவே, நன்னம்பிக்கை கொண்டவர்களது நிலைமை யாதா யிருக்கிற தென்னின்:) "எங்கள் இரக்ஷக! நாங்கள் (எங்கள் நற்கிரியைகளில் எதையேனும்) மறந்து விடுவோமாயின், அல்லது பிழை செய்து விடுவோமாயின், (அதற்காக) எங்களை(த் தண்டிக்கப் பற்றி)ப் பிடிக்காம லிருப்பாயாக; எங்களிரக்ஷக! எங்களுக்கு முன்னுண்டான வர்கள்மீது நீ (நிபந்தனையும் கொடிய பிடியு மாய) அதைச் சுமத்தியதேபோல் எங்கள்மீது (ஒரு) சுமையைச் சுமத்தாம லிருப்பாயாக; எங்கள் இரக்ஷக! எத(னைச் சகிப்பத)ன் மீது எங்களுக்குச் சக்தி யில்லையோ, அதனை எங்கள் மீது சுமத் தாம லிருப்பாயாக; மேலும், எங்களைவிட்டு(ப் பாபங்களை) அழித் தருள்வாயாக; மேலும், எங்களுக்கு(ப் பாப) மன்னிப்பை அளித் தருள்வாயாக; இன்னம், எங்களுக்கு அருள்புரியக்கடவாய்; நீயே எங்களுடைய அதிகாரியாக(வும் உதவியாளனாகவும்) இருக்கின்றாய்; எனவே, (நினது சத்திய சன்மார்க்கத்தை) நிராகரிப்பவர்களாய கூட்டத்தவர்மீது எங்களுக்கு உதவி புரிந்தருளக் கடவாய்!" (என்ப தாகவே யிருக்கின்றது.)

## அத்தியாயம் 3

### இம்ரான்வம்சம்—(ஆலே இம்ரான்)

*மதீனாவில் வெளியானது; பிரிவு 20; திருவாக்கியங்கள் 199.*

### பிரிவு—1

**குர்ஆனும் முந்தை வேதங்களும்; அவற்றினை வியாக்யானம் செய்யும் முறையும்.**

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்
(ஆரம்பம் செய்கின்றோம்.)

1. நானே அல்லாஹ்! பரிபூரண ஞானமுள்ளவனா யிருக் கின்றேன்.

2. அல்லாஹ்! அவனையன்றி (வணக்கத்திற்குரிய வேறு) தெய்வமில்லை; அவன் (என்றும்) ஜீவித்திருப்பவன்; (ஆகவே, அவனுடைய ஜீவிப்பில் அழிவேனும் தேய்வேனும் எப்பொழுது மில்லை, ஆகவின், சுயம்புவாகச் சதா சர்வகாலமும்) நிலைத்திருப் பவன்; (ஆனால், சகல வஸ்துக்களும் அவனைக்கொண்டே நிலைத்

திருக்கின்றன. ஆயின், அவன் தான் நிலைத்திருப்பதில் எவருடைய உதவியையும் எதிர்பார்ப்பவ னல்லன்.)

3. (ஓ முஹம்மத்!) (அது) தனக்கு முன்னுண்டாய (வேதத்)தை மெய்ப்பித்ததாக (இருக்கு முறையிலே அல்லாஹ்) உண்மையுடன் (கூடிய) வேதத்தை, உமக்கு இறக்கி வைத்தான்; இன்னம், (இதற்கு) முன்னம் மனிதர்களுக்கு நேர்வழி (காட்டி)யாகத் தவ்ராத்தையும் இன்ஜீலையும் இறக்கிவைத்தான்; மேலும், (அசத்தியத்தினின்றும் சத்தியத்தைப் பாகுபாடுசெய்து பிரித்துக் காட்டக்கூடிய) விசேஷணப் பாகுபாட்டையும் இறக்கிவைத்தான்; நிச்சயமாகவே எவர்கள் அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளை நிராகரிக்(கின்றவர்களாய் அசத்தியத்தின் பக்கல் செல்லு)கின்றார்களோ, அவர்களுக்குக் கொடிய வேதனை யுண்டு; மேலும், அல்லாஹ் வல்லமை யுள்ளவனாக, (சரியான முறையில்) தண்டிக்கக் கூடியவனாக இருக்கிறான்.

4. நிச்சயமாகவே அல்லாஹ்வாகிய அவன்மாட்டு, பூமியில் மறைவான ஒரு வஸ்துவுமில்லை; வானத்திலு(ம் அத்தகைய வஸ்து ஒன்று) மில்லை.

5. அவனே தான் நாடியபடி கர்ப்பாசயங்களில் (பெருமையாகவேனும் சிறுமையாகவேனும், வெண்மையாகவேனும் கருமையாகவேனும், ஆணாகவேனும் பெண்ணாகவேனும்) உங்களை உருவாக்குகின்றான்; வல்லமை யுள்ளவனாகிய, ஞான முள்ளவனாகிய அவனைத் தவிர்த்து (வணக்கத்திற்குரிய வேறு) தெய்வ மில்லை.

6. அவனே உமக்கு (இவ்)வேதத்தை இறக்கிவைத்தான்; அதினின்றும் (ஒருசில) திருவாக்கியங்கள் (வெளிப்படையான விளக்கத்தை யுடைய) நேர்முக மானவைகளா யிருக்கின்றன; அவை(களே) வேதத்தின் மூலங்க(ளாய அஸ்திபாரங்க)ளா யிருக்கின்றன; மேலும், மற்றையவை (பற்பல விதமான அர்த்தங்களுக்கும், உருவகப் பொருள்களுக்கும் பொருத்தமான முறையிலே) மறைமுக மாக்கப்பட்டவைகளா யிருக்கின்றன; ஆகலின், எவருடைய ஹிருதயங்களில் கோடிய தன்மை யிருக்கின்றதோ, அவர்கள் (நேரான வழியில் சீராக நடந்துசெல்லாமலும், விளக்கமான நேர்முக வாக்கியங்களை விடுத்தும்) புரட்சியின் நிமித்தமாகவும் (அத்தாக்ஷியான) அதில் (தாங்கள் சொந்தமாக நுழைக்கும்) வலிந்து (கொள்ளப்படும் உ)ரையின் நிமித்தமாகவும் அதினின்றும் மறைமுக மானதை(யே) பின்பற்றுகின்றனர்; (ஆனால்) மேலும்,

அதன் (சரியான வியாக்யான) வலிந்து (கொள்ளப்படும் உ)ரை (உண்மை)யை அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறெவரும்) அறிய மாட்டார்; (என்னெனின், அவ்விஷயம் மனிதர்களுடைய அறிவும் ஆராய்ச்சியும் எட்டக்கூடாத அப்படிப்பட்ட உயர்தரமான ரஹஸ்யத்தைச் சார்ந்ததாயிருக்கிறது.) மேலும், ஞானத்தில்—(பகுத்தறிவில்) தேர்ந்தவர்கள் (மறைமுகமாக வைக்கப்பட்டுள்ள அவ்விஷயங்களுள் பிரவேசியாது, அவற்றின் உண்மை என்னவாயிருப்பினும், பொதுவாக) "அதன்மீது (நாங்கள்) நன்னம்பிக்கை வைக்கின்றோம்; சர்வமும் எங்கள் இரக்ஷகனிடத்திருந்தே (உண்டாகி)யிருக்கின்றன," என்று கூறுகின்றார்கள்; மேலும் (உண்மையான இவ்விஷயத்தால்) அறிஞர்களாயுள்ளவர்களல்லாது (மற்றையோர்) உபதேசம் பெறமாட்டார்.*

7. (அப்படிப்பட்ட அறிஞர்களும் நேரான வழியைப் பின்பற்றுபவர்களுமாயவர்களின் நிலைமையானது எப்பொழுதும் கூறிக்கொண்டிருப்பதாவது:) எங்கள் இரக்ஷகனே! எங்களை நீ நேர்வழியில் கொணர்ந்ததன்பின் எங்களுடைய ஹிருதயங்களை (அதினின்றுந் திருப்பி)க் கோடாதிருக்கச் செய்வாய்; மேலும், உன்னிடமிருந்து எங்களுக்கு அருளைச் சொரியக்கடவாய்; நிச்சயமாக(வே) நீயே அதிகமதிகம் கொடை கொடுக்கக் கூடியவனாயிருக்கின்றாய்.

* இவ்வாக்கியத்தின் வாயிலாய்க் குர்ஆன் நமக்கு எச்சரிக்கை செய்கிறதாவது:— குர்ஆனில் விவரிக்கப்படும் விஷயங்களெல்லாம் இரண்டு வகையாய்க் காணப்படுகின்றன. ஆகவே, ஒன்றில் மனிதர்கள் தங்கள் அறிவைக்கொண்டும் ஆராய்ச்சியைக்கொண்டும் விஷயத்தை மிகத்தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட வெளிப்படையான முறையில் காணப்படும் விஷயங்களுக்கெல்லாம் முஹ்கம் என்று பெயர். உதாஹரணமாக, ஏகத்துவ போதனை, தூதின்தத்துவம், ஏவல் விலக்கல்கள், ஹலால் ஹராம் என்னும் விஷயங்களெல்லாம் இந்த முஹ்கமைச் சாரும். பின்னர், அல்லாஹ்வின் கல்யாண குணங்களான ஸிபாத்துக்கள், மரணமடைந்ததன்பின் மனிதர்களது நிலைமையென்ன? இறுதிநாளின் போது எந்த எந்தக் கிரியைகள் எப்படி எப்படி நடைபெறும்? தண்டனை எப்படி நடக்கும்? நற்பயன்கள் எங்ஙனம் கிட்டும்? என்பனபோன்ற விஷயங்களையெல்லாம் மனிதர்கள் சர்வ சாதாரணமாக உணர்ந்து கொள்ளலாமென்பது இயலாது. எனவே, இப்படிப்பட்ட முறையில் காணப்படுவனவெல்லாம் மு(த்)தஷாபிஹ் என்னும் பெயர் கொண்டழைக்கப்படுகின்றன. எனினும், மனிதர்கள் இவ்விஷயத்தை ஒருவாறாக உணர்ந்துகொள்ளுமாறே குர்ஆன் உருவக முகத்தான் கூறியிருக்கின்றது. எனவே, நேர்மையற்ற மனப்பான்மை கொண்டவர்கள், தெளிவாகவும், விளக்கமாகவும் இல்லாமலிருக்கும் மு(த்)தஷாபிஹான விஷயங்களைப் பின்பற்றித் தங்கள் மனம் போனபடியெல்லாம் சென்று உலகமக்கள்பால் வீணான கலகங்களையும் குழப்பங்களையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றனர்கள், என்று இந்த வாக்கியம் நமக்கு அறிவுறுத்திக்கொண்டிருக்கின்றது.

8. (ஏ) எங்கள் இரக்ஷகா! (இறுதி நாளின் காரியங்களும் விஷயங்களும் எங்களுடைய புத்தியுள் நுழையட்டும், அல்லது நுழையாமலே போகட்டும்.) நிச்சயமாகவே (நாங்கள் மரண மடைந்தபின்பு உன் வாக்குறுதியின்படி) மனிதர்களை (யெல்லாம்) ஒருநாள் (உன்பக்கல் நீ) சேகரிக்கக் கூடியவனு யிருக்கின்றாய்; அதில் (எவ்வகை) ஐய(மு)மில்லை; நிச்சயமாகவே அல்லாஹ் (தன்) வாக்குறுதிக்கு விரோதம் செய்யமாட்டான்.

---

## பிரிவு— 2

*எல்லா மதங்களுக்கும் அஸ்திபாரமாய் விளங்கி வருவது அல்லாஹ்வின் ஏகத்துவமே யாகும்; இந்த ஏகத்துவத்தின் இறுதி வெற்றியும் ஈண்டுக் குறிப்பிடப்படுகிறது.*

9. நிச்சயமாக(வே நேரான பாதையைப் பின்பற்றி, அதனூடே சீராகச் செல்லாது, அதனை) நிராகரித்தவர்கள் (நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கடவார்கள்:) அவர்களுடைய முதல்களும், அவர்களுடைய சந்ததியார்களும், அல்லாஹ் வினிடத்திலிருந்து (உண்டாகும் வேதனைகளுள் ளிருந்து) ஒரு (சிறு) வஸ்துவையும் அவர்களைவிட்டு (அகற்றிக்) காப்பாற்ற மாட்டா; (அவைகளையே அவர்கள் பெரிதும் நம்பி யிருக்கிறார்கள்.) மேலும், அவர்கள்தாம் அக்கினியின் விறகளா யிருக்கின்றார்கள்.

10. (இவர்களுடைய நிலைமையானது) பிர்அவ்னுடைய வர்க்கத்தாரின், மேலும், அவர்களுக்கு முன்னுண்டாயவர்களின் நிலைமையே போல(த்தான்) இருக்கின்றது;[1] (அவர்கள்) நம்முடைய அத்தாக்ஷிகளை (யெல்லாம்) பொய்யாக்கினார்கள்; ஆதலின், அவர்களை அவர்களுடைய பாபங்களின் காரணமாக அல்லாஹ் (கடுமையாகப் பற்றிப்) பிடித்தான்; மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும்! பாபங்களுக்குத் தண்டனை யளித்து) நோவினை கொடுப்பதில் அல்லாஹ் (மகா) கொடியவனு யிருக்கிறான்.

---

1. உண்மை விஷயத்தை அல்லாஹ் விளக்கியதன் பின்னும் குர்ஆனி லுள்ள போதனையின்படி நடவாமல் சிலர் அதனை நேரே எதிர்த்தும் நிற்கின்றனர்; இவ்வாறாகவே தான் மூஸாவுக்கு எதிராக, பிர்அவ்னும் அவனுடைய கூட்டத்தார்களும் நின்றார்கள்; எனவே, இவர்களுக்கும் பிர்அவ்னுடைய கூட்டத்தாருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையேபோலக் கொடுக்கப்படுவது ஒரு பாரதூரமான காரியமன்று; இங்ஙனம் தண்டனை கொடுக்கப்படும் போதுதான் உண்மை எந்தப்பக்க மிருக்கிற தென்பதை உலகம் நன்குணர்ந்து கொள்ளும், என்று இருபிரிவினர்களுக்கு மிடையே உண்டாய ஒற்றுமை விஷயத்தையே அல்லாஹ் ஈண்டெடுத்துக் கூறுகிறான்.

11. (ஏ நபியே! சத்தியத்தை) நிராகரித்தவர்களுக்குச் சொல்வீராக: (நீங்களும் பிர்அவ்னுடைய வர்க்கத்தாரேபோல் சத்தியத்தால் சீக்கிரம்) ஜயிக்கப்படுவீர்கள்; மேலும், நரகத்தின் பக்கல் ஒன்று சேர்க்கப்படுவீர்கள்; மேலும் (யார் நரகத்தையே தங்கள் இருப்பிடமாகச் செய்து கொண்டார்களோ அவர்களுடைய) இருப்பிடம் (மகா) கெட்டதாய்விட்டது.

12. (பத்ரென்னும் ஸ்தலத்தில்) யுத்தம் செய்துகொண்ட (நேரத்தில் சந்தித்த) இரண்டு கூட்டத்தில் (சத்தியம் மிகைத்த முறையிலே) நுங்களுக்குத் திட்டமாகவே அத்தாக்ஷி யுண்டாயிருந்தது; (அவ்விரு கூட்டத்தினுள்) ஒரு கூட்டம்—(அஃதாவது, போதிய வசதியொன்று மில்லாதிருந்த முஸ்லிம்களின் கூட்டம்) அல்லாஹ்வின் பாதையிலே யுத்தம் செய்துகொண் டிருந்தது. மேலும், மற்றொன்று (சத்தியத்தை) நிராகரிப்பதா யிருந்தது; அவர்களை (அல்லாஹ்வின் பகைவர்களை)த் தங்களைப்போல இரண்டத்தனையாக(த் தங்கள்) கண்பார்வையால் கண்டுகொண் டிருந்தார்கள்; (நிராகரிப்பவர்கள் அத்துணை அதிகமானவர்களா யிருந்தும், அவர்களுக்கே தோல்வி யுண்டாயிற்று.) மேலும், அல்லாஹ் தான் நாடியவர்களுக்குத் தன்னுதவி கொண்டு பலங்கொடுக்கிறான்; நிச்சயமாகவே இதில் (ஆழ்ந்த) நோக்குடையவர்களுக்கு (நல்ல) படிப்பினை இருக்கின்றது.

13. மனிதர்களுக்கு, ஸ்திரீகள் மாட்டும், புத்திரர்கள் மாட்டும், பொன்னாலும் வெள்ளியாலும் குவிக்கப்பட்ட கருவூலங்கள் மாட்டும், தேர்ந்தெடுக்கப்பட்ட குதிரைகள் மாட்டும், (ஏனைய) நாற்கால் பிராணிகள் மாட்டும், வேளாண்மை மாட்டும் உண்டாயிருக்கும் இச்சைகளின் பாசம் (அவர்களுடைய இயற்கையிலேயே) அழகாகக் க(ாணப்படச் செய்ய)ப்பட் டிருக்கிறது; இது (கேவலமான இவ்)வுலக வாழ்க்கையின் (பிரயோஜனத்திற் குரிய) சாமானாகும்; மேலும், அல்லாஹ்வி னிடத்திலேயே அழகாய (போய்) ஒதுங்கும் ஸ்தல மிருக்கின்றது.*

14. (ஏ நபியே! நீர்) சொல்வீராக: "இவற்றைக் காட்டினும் சிறந்ததை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? (அல்லாஹ்வுக்கு

---

* உண்மையாளரும், பரமபக்தர்களுமான மனிதர்கள் தங்கள்பால் இவ்வுலக சம்பந்தமான ஐசுவரியங்கள் அதிகமாக இல்லை யென்று மனங்கலங்கவோ கஷ்டப்படவோ வேண்டியதில்லை யென்றும், அல்லாஹ்வின்மீது தாங்கள் பரிபூரண பத்தியும் நம்பிக்கையும் கொண்டு நற்கிரியைகளைச் செய்வதே சாலவும் சிறந்த காரியமாகவும் அழியாத பெரிய பொருளாகவும் இருக்கின்றதென்றும் இவ்வாக்கியம் வலியுறுத்திக் காட்டுகின்றது.

வழிபட்டு அவனுக்கு) அஞ்சி நடந்தவர்களுக்கு, அவர்களுடைய ரக்ஷகனிடத்தில் (எக்காலும் சுகமாக விருந்துகொண்டு) அவற்றின் கீழே நீரருவிகள் ஓடுகின்ற உத்தியான வனங்களுள ; (எனவே, அவை எப்பொழுதும் வரண்டு போவதில்லை ;) மேலும், அவர்கள் அவற்றிலே(யே) நிலைத்திருப்பார்கள்; (இவ்வளவுடன் நில்லாது அவர்களுக்கு) மேலும், பரிசுத்தமாக்கப்பட்ட ஜோடிகளுண்டு ; (அவர்களைப் பார்க்கினும் மேலானதாய) அல்லாஹ்வின் திருப்தியும் உண்டு. மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும் !) அல்லாஹ் (தன்) அடியார் (களின் மனோநிலைமை)களைப் பார்க்கிறவனா யிருக்கிறான்."

15. (அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவர்கள் ஆரொனின்) அவர்கள் சொல்லுகிறார்கள்: "எங்கள் இரக்ஷகா! (நிச்சயமாக உன்மீது) நாங்கள் (பரிபூரண) நன்னம்பிக்கை கொண்டுள்ளோம்; ஆதலின், எங்கள் பாபங்களை எங்களுக்கு மன்னித்தருள்வாய் ; மேலும், அக்கினியின் வேதனையினின்றும் எங்களை (அப்புறப் படுத்தி)க் காப்பாற்றுவாய்!"

16. (மேலும், அவர்களுடைய குணவிசேஷங்க ளாவன: கஷ்ட காலத்திலும் அபாயத்திற்குரிய தருணத்திலும்) பொறுமை யுள்ளவர்களாயும், (சொற் செயலில்) உண்மை யுள்ளவர்களாயும், (அல்லாஹ்வின் ஆணைக்கு முற்றும்) வழிபட்டு(ச் சிரஞ்சாய்த்து) நடப்பவர்களாயும், (அல்லாஹ்வின் பாதையிலே தம் முதல்களைத் தாராள மனத்துடன்) செலவு செய்பவர்களாயும், இரவின் இறுதி நேரங்களில்—(மக்கள்களெல்லாம் அயர்ந்த நித்திரையுள் ஆழ்ந்திருக்கும் விடியற்காலை வேளைகளில் இவர்கள் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் தங்கள்) பாபமன்னிப்பைக் கோருகின்றவர் களாயும் இருக்கின்றனர்கள்.

17. (அல்லாஹ் வாகிய) அவனைத் தவிர்த்து (வணக்கத்திற் குரிய வேறு எவ்விதத்தும் உண்மையான) தெய்வமில்லை யென்று அல்லாஹ் சாக்ஷியம் கூறினன் ; மேலும் (இவ்வுலக காரியங்களை யெல்லாம் அல்லாஹ்வின் ஆணையின் பிரகாரம் கவனித்து வரும்) வானவர்களும்—(உண்மையை உணர்ந்து கொண்ட உத்தமர்களும்) நீதத்துடன் நிலைத்திருக்கும் ஞானவான் களும் (அவ்வண்ணமே சாக்ஷியம் கூறுகின்றார்கள். எனவே) வன்மை பெற்றவனான(வும்) ஞானமுள்ளவனான(வு மாய) அவனைத் தவிர்த்து (வணக்கத்திற்குரிய வேறு எவ்விதத்தும் உண்மை யான) தெய்வமில்லை.

18. நிச்சயமாகவே அல்லாஹ்வின்பால் (உண்மையான) மார்க்கமானது இஸ்லா மா(கவே) யிருக்கின்றது ; (இதனைத்

தவிர்த்து உண்மையான வேறு மார்க்கம் இல்லை.) மேலும், வேதத்தை யருளப் பெற்றவர்கள் தங்களிடம் (உண்மையான வேத) ஞானம் வந்ததன் பின்(னும்) தங்களுக்கிடையே பிடிவாதத்துக்காக வல்லாமல் (உண்மையிலேயே அவர்கள் நேரான ஒரு வழியைக் கடைப்பிடிக்க வேண்டு மென்னும் நல்லெண்ணங் கொண்டு) விகற்பம் பண்ணிக் கொள்ள. வில்லை; மேலும், எவரேனும் அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளை நிராகரிப்பாராயின்—(நேரான வழியைக் காட்டினும் மாறான வழியே சிறந்ததெனக் கொள்வதால் அல்லாஹ்வுக் கொன்றும் நஷ்ட மில்லை. ஆனால், அவர்கள் செய்யும் பாபங்களைக் குறித்து) அல்லாஹ் துரிதமாகக் கணக்குக் கேட்பவனா யிருக்கிறான்.

19. பின்னர், உம்மிடம் (அவர்கள்) வாக்குவாதம் செய்வார்களாயின் (ஏ நபியே! நீர்) சொல்வீராக: "என்னை(யே நான்) அல்லாஹ்வு(டைய ஏவல்களு)க்கு ஒப்படைத்து விட்டேன்; மேலும், என்னைப் பின்பற்றியவர்களும்—(அவ் வண்ணந்தான். எனவே, அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு யாருக்கும் நாங்கள் வழிபட்டு நடப்ப தில்லை.)" மேலும், வேதத்தை யருளப்பெற்றவர்க ளிடத்தும் (வேதத்தையும் கல்வியையும்) அறியாதவர்களிடத்தும் "(நீங்கள் அல்லாஹ்வின் வழிபாட்டின்பால் நுங்களை) ஒப்படைக்கின்றீர்களா? (இல்லையா?)" என்று சொல்வீராக; பின்னர் (அவர்கள்) வழிபட்டு நடப்பவர்களாய் விடுவார்களாயின் (சண்டைகளும், சச்சரவுகளும், பற்பல பிரிவின் வேறுபாடுகளும் ஒழிந்து போய்விடும். எனவே, அவர்கள்) திடமாகவே நேர்வழியைப் பெற்றனர்; மேலும் (நேரான வழியை விட்டுத்) திரும்பி விடுவார்க ளாயின் (அதைப்பற்றி நீர் கவலைப்பட வேண்டுவதின்று; உம்முடைய் காரியத்தை நீர் செய்துகொண்டே செல்லக் கடவீர்.) உம்மீது (கடமை யாக்கப்பட்டு) இருப்ப தெல்லாம் (உண்மை உபதேசத்தை அவர்களிடம்) சேர்ப்பித்து வைப்பதே யாகும். மேலும், அல்லாஹ் (தன்) அடியார்களை (நன்கு) பார்க்கிறவனாயிருக்கிறான்.

———

## பிரிவு — 3

**அல்லாஹ்வின் ஆட்சி பனீ இஸ்ராயீலை விட்டுநீங்கி பனீ இஸ்மாயீலுக்குக் கிடைக்க வேண்டும்.**

20. அல்லாஹ்வின் (உண்மையான) அத்தாக்ஷிகளை நிராகரிப்பவர்களும், நியாயமின்றியே (அக்கிரமமாக) நபிமார்களைக் கொலை புரிகின்றவர்களும்; மனிதர்களுள் நீதத்தை(ச் செய்ய

வேண்டுமென்று) ஏவுகின்றவர்களைக் கொலை புரிகின்றவர்களுமாய அவர்க(ள் எத்துணை நல்ல நடக்கையுடையவர்களா யிருக்கின்றனர்! ஆ! இப்படிப்பட்டவர்க)ளுக்கு நோவுண்ட தண்டனையைக் கொண்டு (அச்சமூட்டி எச்சரிக்கை செய்து) சுபசெய்தி அறிவிப்பீராக.

21. தங்களுடைய கிரியைகளெல்லாம் இவ்வுலகி(ன் வாழ்க்கையி)லும் இறுதி(யில் வரும் மறுவுலக வாழ்க்கை)யிலும் வீணாய்ப் போய்(க் கைசோர்ந்து தவித்து) நிற்பவர்கள் அவர்களே; மேலும், அவர்களுக்கு உதவி செய்பவர்கள் (யாருமே) இல்லை.

22. (ஏ நபியே!) வேதத்திலிருந்து ஒரு பாகம் (மட்டுமே) அளிக்கப்பெற்ற அவர்கள் (நிலைமையின்) பக்கல் நீர் கவனம் செலுத்தவில்லையா? தங்களுக்கிடையே (உண்டாயிருக்கும் விஷயங்களில்) தீர்ப்புச் செய்வான் வேண்டி அல்லாஹ்வின் வேதத்தின் (போதனையின்) பக்கல் (அவர்கள்) அழைக்கப் படுகின்றார்கள்; (இங்ஙன மிருந்தும்) அவர்களுள் ஒரு கூட்டம் (அதை ஒப்புக்கொள்ளாமல்) திரும்பி விட்டது; மேலும், அவர்கள் முகந் திரும்பிச் செல்லக் கூடியவர்களாகவே யிருக்கின்றார்கள்.

23. இஃது (ஏனெனின்) "குறிப்பிடப்பட்ட (சில) தினங்களுக் கல்லாமல் எங்களை அக்கினி தீண்டமாட்டாது," என்று (யூதர்களாய) அவர்கள் சொல்லிக்கொண் டிருக்கும் காரணம் பற்றி(யே) யாகும்; அவர்கள் (அல்லாஹ்வின் மீது) பொய்ம் மொழி கூறுகின்றவர்களா யிருந்தார்களே, அது (தான்) அவர்களை அவர்களது மார்க்க விஷயத்தில் ஏமாற்றிவிட்டது.*

24. யாதொரு சந்தேகமு மற்ற அந்நாளில் அவர்களை நாம் (ஒன்று) சேர்க்கும்போது (அவர்கள்) நிலைமை என்னவாகும்? மேலும், ஒவ்வோர் ஆன்மாவும் தான் (தான் செய்த நற்காரியங்களால்) சம்பாதித்ததைப் பூரணமா யளிக்கப்பெறும்;

---

* யூதர்கள் மார்க்கவிஷயத்தில் தவறான வழியில் இருந்துகொண் டிருந்தும், பெரிதும் நல்லவர்கள் தாங்கள்தாம் என்று அகம்பாவம் கொண்டவர்களா யிருந்தனர். இதனாற்றான் அவர்கள், 'நாங்கள்தாம் விமோசனமும் மேன்மையும் பெற்ற மார்க்கத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கின்றோம். ஏனை மதவாதிகளெல்லாம் நரகவாசிகளாகவேதா மிருக்கின்றனர்' என்று எண்ணிக்கொண் டிருந்தனர். இன்னம் அந்த யூதர்கள், தாங்கள் எப்படிப்பட்ட தீமையான காரியங்களைப் புரிந்தபோதினும், நரகவேதனைக் காளாகமாட்டா ரென்றும் கூறிக்கொண் டிருந்தனர். ஆனால், உண்மையில் விஷயம் இங்ஙனமன்று. நன்மையைச் செய்பவர்கள் நன்மையடைவார்கள். தீமையைச் செய்பவர்கள் தீமையையே யடைவார்கள் என்றுகூறி, யூதர்களின் வீண் மனோபாவத்தை இவ்வாக்கியம் கண்டித்துக்கொண் டிருக்கின்றது.

மேலும், அவர்கள் (செய்த காரியங்களுக்குப் பிரதிபலனையுள்ளதை அளிக்கப் பெறுமல்) அக்கிரமம் செய்யப்பட மாட்டார்கள்.

25. (ஏ நபியே! நீர் உம்முடைய காரியங்களை யெல்லாம் அல்லாஹ்வி னிடம் ஒப்படைத்து விட்டுச்) சொல்வீராக: "ஏ அல்லாஹ்! இராஜ்ய(ாதிகார)த்துக் குரியவனே! நீ நாடியவருக்கு இராஜ்ய(ாதிகார)த்தைக் கொடுக்கின்றாய்; மேலும், நீ நாடியவரிடத் திருந்து இராஜ்ய(ாதிகார)த்தை(த் திரும்ப)க் கழற்றிக் கொள்ளுகின்றாய். மேலும், நீ நாடியவருக்குக் கண்ணியத்தை யளிக்கின்றாய்; மேலும், நீ நாடியவரை இழிவு—(கேவலப்) படுத்துகின்றாய்; (சர்வ) நன்மை(யுடைய அஸ்திபாரமும்) உன் கைவயமே யிருக்கின்றது. நிச்சயமாகவே நீ சகல வஸ்துக்களின்மீதும் ஆண்மை பெற்றவனு யிருக்கின்றாய்."

26. "(நீ) இரவைப் பகலில் நுழையுமாறு செய்கின்றாய்; மேலும், பகலை இரவில் நுழையுமாறு செய்கின்றாய்; மேலும், உயிருள்ளதை மரித்ததினின்றும் வெளிப்படுத்துகின்றாய்; மேலும், மரித்ததை உயிருள்ளதினின்றும் வெளிப்படுத்துகின்றாய்; மேலும், நீ நாடியவருக்கு (உன்னுடைய அருளால்) கணக்கற்ற (விதமாய) இரணத்தை அருள்கின்றாய்."

27. (சத்தியத்தின் மீது) நன்னம்பிக்கை கொண்டவர்கள் (தங்களைப் போல்) நன்னம்பிக்கை கொண்டவர்களை விடுத்து (அச் சத்தியத்தை) நிராகரிப்பவர்களை நேயர்களாக(வும் உதவியாளர்களாகவும்) செய்துகொள்ளா திருக்கக் கடவர்; மேலும், எவரேனும் இவ்வண்ணம் செய்வாராயின் (அவருடைய ஞாபகத்தி லிருக்கட்டும்:) அல்லாஹ்வுடன் அவருக்கு (யாதொருவிதமான) சம்பந்த(மு)மில்லை; ஆனல், அவர்களினின்று (உண்டாகும் தீமைகளைவிட்டு) எவ்வாறேனும் (உங்களை) நீங்கள் (பத்திரமாகக்) காப்பாற்றிக் கொள்ளுங்கள். (உங்களுக்கு மிக்க நன்மை யுண்டு.) மேலும் (நீங்கள் ஊன்றிப் பார்த்துக்கொள்ளுங்கள்.) அல்லாஹ் தன்(னுடைய வேத)னை(யைக்கொண்டு) உங்களுக்கு அச்சுறுத்துகின்றன்: மேலும் (இறுதியாக உங்களுடைய காரியங்களெல்லாம் திரும்பிவந்து) சேருமிஸ்தலம் அல்லாஹ்வின் பக்கலிலே யிருக்கின்றது.

28. (ஏ நபியே! நீர்) சொல்வீராக: "உங்களுடைய ஹிருதயங்களி லுள்ளதை நீங்கள் மறைத்து வைப்பினும் அல்லது அதை நீங்கள் வெளிப்படுத்தினும் (ஒவ்வொரு நிலைமையிலும்) அல்லாஹ் அதை அறிகிறான்; இன்னம், வானங்களி லுள்ளதையும், பூமியி லுள்ளதையும் (அவன்) அறிகிறான்; மேலும்,

அல்லாஹ் சகல வஸ்துக்களின் மீதும் ஆண்மை பெற்றவனு யிருக்கிருன்.

29. (மேலும், பின்னே வரப்போகும் அந்நாளை மறந்து விடாதீர்கள்!) ஒவ்வோர் ஆன்மாவும் தான் (தான்) நற்காரியத்தி னின்றுஞ் செய்ததை—(அதன் பயனைத் தன்னெதிரே கொண்டு வந்து) ஹாஜிராக்கப் பட்டதாகவும், இன்னம் (இவ்வாறே)தான் தீக்கருமத்தினின்றும் செய்ததையும் கண்டுகொள்ளும். அந் நாளில், ஒவ்வோர் ஆன்மாவும் தனக்கும் அ(ந்)த (நாளி)ற்கு மிடையே நீண்ட (நாள்) தூரமிருக்க வேண்டி யிருந்ததே! (அப் படி யிருக்குமாயின், நான் இப்படிப்பட்ட குறைவான பிரதி பலனைப் பெற்றுக்கொள்ளாமல் அதிகமான நன்மையையே பெற் றுய்யலாம்) என்பதை விழையும்; (ஆனால், அது கூடாத காரிய மாகும்.) மேலும், அல்லாஹ் தன்(னுடைய வேத)னை(யைக் கொண்டு) "உங்களுக்கு அச்சுறுத்துகின்றான்; மேலும், அல் லாஹ் அடியார்கள் மீது தயாளுவா யிருக்கிருன்.

## பிரிவு—4

பொறுக்கி யெடுக்கப்பட்ட ஜாதியாருள் இறுதியானவர்கள்.

30. (ஏ நபியே!) சொல்வீராக: ("நீங்கள் உண்மையிலேயே) அல்லாஹ்வை நேசிக்கின்றவர்களா யிருப்பீர்களாயின், என் னைப் பின்பற்றுங்கள்; (அஃதாவது, என்னுடைய வார்த்தை யைக் கேட்டு, அதன் பிரகாரம் நடந்து செல்லுங்கள். இன்ன ணம் செய்வீர்களாயின்) அல்லாஹ் உங்களை நேசிப்பான்; இன்னமும், உங்களுடைய பாபங்களை உங்களுக்காக மன்னிப் பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனுக, அன்புடையோனுக இருக்கிருன்.

31. (ஏ நபியே!) சொல்வீராக: "அல்லாஹ்வுக்கும் (அவ னுடைய) தூதருக்கும் வழிபடுங்கள்;[2] (இதுதான் நீங்கள் ஜயம் பெறுதற்குரிய மார்க்கமாகும். இதை யுணர்ந்ததன்) பின்னர் (அவர்கள் அதைத் கேட்காமல்) திரும்பிவிடுவார்களாயின் (அது சத்தியத்தை நிராகரிப்பவர்களின் குணமாகும். எனவே) அல் லாஹ் நிச்சயமாக நிராகரிப்பவர்களை நேசிப்பதில்லை."

2. அல்லாஹ்வை நேசிப்பவர் நிச்சயமாக அவனுடைய நபியைப் பின்பற்றி நடக்க வேண்டியது அத்தியாவசியமாகும். அல்லாஹ்வை நேசிக்கிறே மென்று கூறுவதும், அவனுடைய வழிகாட்டியான தூதரை மறுப்பதும் ஒரே மனத் தின் சேர்ந்திருப்பது முடியாது. எனவே, அல்லாஹ்வின் சட்டப்படி அவன் நபியைப் பின்பற்றி நடப்பவர்கள் ஜயமடைவார்கள்; அவருடைய வார்த் தையை நிராகரிப்பவர்கள் அபஜய மடைவார்கள்.

32. நிச்சயமாகவே அல்லாஹ் ஆதத்தையும், நூஹையும், இப்ராஹீமுடைய குடும்பத்தையும், இம்ரானுடைய குடும்பத்தையும் உலகத்தவர்மீது (சிறந்தவர்களாகத்) தேர்ந்தெடுத்தான்.[3]

33. அவர்களுள் சிலர் சிலரினின்றுண்டான சந்ததியார்களாய் (இருக்கின்றனர்;) மேலும், அல்லாஹ் (அடியாரின் வேண்டுகோளைக்) கேட்பவனாக (உலகத்தின் நன்மைக்குரிய சன்மார்க்கங்களை) அறிகிறவனாக இருக்கிறான்.

34. இம்ரானுடைய மனைவி,[4] "என் ரக்ஷகா! (நிச்சயமாக) என் வயிற்றிலுள்ளதை—(பிள்ளையை உலக காரியங்களில் கலந்து கஷ்டப்படும்படி செய்யாமல்) உனக்காக உரிமையாக்க—(வணக்கம் செய்துகொண்டிருக்குமாறு விட்டுவிட) நேர்ச்சை செய்து

3. அல்லாஹ்வின் சட்டப்படி ஒவ்வொரு காலத்திலும் நபிமார்கள் தோன்றிக் கொண்டேதா னிருந்தார்கள். அன்றியும், அவர்கள் உலகத்தவர்பால் வருந்தோறெல்லாம் ஒரேவிதமான பலனே கிடைத்துக்கொண்டு மிருந்தது. நபிமார்களுக்கு வழிபட்டு நடந்தோர் ஜயமடைந்தனர்; நிராகரித்தோர் அபஜயமடைந்தனர். இதற்குதாஹரணமாக அல்லாஹ் இங்கு ஹஜ்ரத் எஹ்யா, மஸீஹ் முதலியவர்களின் விஷயத்தைக் கூறுமுன், இடையில் ஹஜ்ரத் மர்யம் அவர்கள் உண்டான விஷயத்தையும் விவரிக்கப்போகிறான்.

4. இங்கு ஒரு விஷயத்தை முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஜகரிய்யாவும், இம்ரானும் பாகூஜா வென்பவரின் புத்திரிகளான ஈஷாஉ என்பவரையும், ஹன்னு வென்பவரையும் முறையே விவாகம் பண்ணிக்கொண்டார்கள்; எனவே, ஜகரிய்யாவும் இம்ரானும் ஷட்டகர்களாவர். ஆகவே, எஹ்யா அலை அவர்கள், ஜகரிய்யாவையும் ஈஷாவையும் தாய் தந்தையராய்க் கொண்டவர்களாவர். இப்படியே மர்யம் அவர்கள், இம்ரானையும் ஹன்னுவையும் தாய் தந்தையராய்க் கொண்டவராவர். ஆனால், இதே இம்ரான் என்னும் பெயர், மூஸா அலை ஹாரூன் அலை அவர்களுடைய தந்தைக்கு முண்டு. அந்த இம்ரானுக்கும், ஹஜ்ரத் மர்யம் அலை அவர்களுடைய தந்தையான இம்ரானுக்குமிடையே சுமார் 1800 ஆண்டுகள் கழிந்திருந்தன.—(தப்ஸீர் ஜவாஹிர், வா. 2, பக்கம் 97 பார்க்க.) ஆனால், குர்ஆன் 19:28-இல் ஹஜ்ரத்மர்யம் அவர்களை ஹாரூனுடைய சகோதரி என்று ஒரு விஷயம் சொல்லப்பட்டிருப்பது, உருவக முகத்தால் நல்ல நடக்கையுடைய பெருமைக்குரிய பெண்ணென்பதையே சுட்டிக் காட்டுகின்றது. இதனால்தான் எம்பிரான் ஸல் அவர்களுடைய காலத்தில் ஹஜ்ரத் முகைரா பின் ஷுஃபா ரலி அவர்கள், எம்பிரான் ஸல் அவர்களிடம், 'மர்யம் ஹாரூனுடைய சகோதரியாய் எங்ஙனம் இருத்தல் சாலும்? மர்யத்துக்கும் ஹாரூனுக்கு மிடையே அனேக காலம் இடையிட்டிருக்கின்றதே!' என்று வினவ, எம்பிரான் ஸல் அவர்கள், 'நல்ல முறையில் நேராக நடந்து செல்லுபவர்கள் முன்சென்ற நபிமார்களைத் தங்கள் பெயர்களுடன் சேர்த்துக்கொள்வது வழக்கம்' என்று திருவுளம்பற்றியுள்ளார்கள்.—(தப்ஸீர் ஜவாஹிர், வா. 10, பக்கம்8 பார்க்க). எனவே, மூஸா-ஹாரூனுடைய தந்தைக்கும், மர்யம் அவர்களுடைய தந்தைக்கும் இம்ரான் என்னும் நாம மிருந்ததென்பதைத் தெரிந்து கொள்ளுகின்றோம். அன்றியும்,19:28-இல் மர்யம் ஹாரூனுடையசகோதரி என்று சொல்லப்பட்டிருப்பது நமது நாயகம் அவர்களுடைய திருவாக்கியத்தின்படி உருவகமுகமான விஷயமென்பதையும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளுகிறோம்.

கொண்டிருக்கிறேன்; ஆதலின் (இவ்வேண்டுகோளை) என் மூலமாக டிருந்து ஏற்றுக்கொள்வாய்; நிச்சயமாக நீயே (சர்வ விஷயங்களையும்) கேட்கிறவனாக (மனத்தின் கண்ணுள்ள எண்ணங்களை யெல்லாம்) 'அறிகிறவனாக இருக்கின்றாய்,'' என்று சொன்ன போது (நடந்த விஷயத்தைக் கவனித்துப் பாரப்பீராக.)

35. பின்னர், (கர்ப்பத்தி லிருந்த) அதை (ஆணுக்கு மாறாய்ப் பெண்ணாக) அவர் ஈன்றபோது சொன்னார்: "என் ரக்ஷகா! நான் நிச்சயமாக அதைப் பெண்ணாகப் பெற்றெடுத்தேன்."—மேலும், அவர் ஈன்றெடுத்ததை அல்லாஹ் மிக அறிந்தவனா யிருக்கிறான்; இன்னம், ஆண் பெண்ணைப்போ லில்லை—(அஃதெங்ஙனமாயினு மிருக்கட்டும்.) "மேலும், அதற்கு (நான்) மர்யம் என்று நாமமிட் டிருக்கிறேன்; மேலும், நான் உன்பால் அவளுக்காகவும் அவளுடைய சந்ததியாருக்காகவும் வீசியெறியப்பட்ட ஷைத்தானி(னுடைய விஷமங்களி)னின்றும் பாதுகாப்புத் தேடுகிறேன்."

36. ஆகலான், அவருடைய ரக்ஷகன் அவரை—(மர்யத்தை) அழகான ஒப்புக்கொள்ளுதலாக ஒப்புக்கொண்டான்; மேலும், அவரை அழகான வளர்ப்பாக வளர்த்தான்; (அஃதாவது, அப் பெண் குழந்தை வளர்வதற்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்து, அந்நங்கையை நல்ல பாதுகாவலரான போஷகர்பால் இருக்கும்படி செய்வான் வேண்டி) மேலும், ஜகரிய்யாவிடம் அவரை ஒப்படைத்தான்; அவர்பால் (மர்யம் வணக்கம் புரிந்துகொண்டிருந்த) ஆசிரமத்தில் ஜகரிய்யா நுழைந்தபோதெல்லாம் அவரிடம் ஜீவனோபாயப் பொருள்களைக் கண்டுகொண்டார்; (அதனைக் கண்ட ஜகரிய்யா) "ஏ மர்யம்! இஃது உனக்கு எங்கிருந்து கிட்டிற்று?" என்று சொன்னார்; "அஃது அல்லாஹ்வி னிடத்திலிருந்து (எனக்குக் கிட்டிற்று" என்று விடையாக மர்யம்) சொன்னார்; நிச்சயமாகவே அல்லாஹ் தான் நாடியவருக்குக் கணக்கற்ற இரணத்தை யளிக்கிறான்.

37. அதேயிடத்தில் ஜகரிய்யா தமது ரக்ஷகன்பால் வேண்டுதல் புரிந்தார்; (எவ்வாறெனின், அவர்) சொன்னார்: "(என்) ரக்ஷகா! உன் (மேலான) சமுகத்திலிருந்து (மர்யத்தைப்போல் வணக்கம் புரியக்கூடிய) பரிசுத்தமான சந்ததியை எனக் களித்தருள்வாய்; நிச்சயமாக நீ (அடியார்) வேண்டுகோளைக் கேட்பவனா யிருக்கின்றாய்."

38. பின்னர் அவர் (அந்த) ஆசிரமத்தில் நின்று தொழுது கொள்ளுகிறவரா யிருந்தபோது, வானவர்கள் அவரை அழைத்

தார்கள்; (மேலும் அவர்கள் சொன்னார்கள்:) "அல்லாஹ்வி னின் றுண்டாகும் ஒருவார்த்தையை மெய்ப்பிப்பவராகவும் தலைவ ராகவும், (தீமையினின்றுந் தம்மைக்) காத்துக்கொள்பவராகவும், நல்லோர்களுள்ளிருந்து (ஒரு) நபியாகவும் (உண்டாகப்போகும்) எஹ்யாவை (உமக்களிப்பதாகச் சொல்லி)க்கொண்டு அல்லாஹ் உமக்கு நற்செய்தி கூறுகின்றான்."

39. (இதைக் கேட்டவுடன் ஜகரிய்யா) சொன்னார்: "(என்) ரக்ஷகா! எனக்கு எங்ஙனம் குழந்தை உண்டாகும்? திட்டமாக எனக்கோ தள்ளாமை வந்துவிட்டது; என்னுடைய மனைவியோ மலடா யிருக்கிறாள்;" (எனவே அல்லாஹ்வின் அதிகாரம் பெற்ற வானவர்) கூறினார்: "அப்படியே ஆகும்! அல்லாஹ் தான் நாடு வதைச் செய்கிறான்; (அவனுடைய சர்வ சக்தியைவிட்டு இஃது அப்புறப்பட்டதா யில்லை.)"

40. (பின்னர் அதன்மீது விண்ணப்பம் செய்து, ஜகரிய்யா) சொன்னார்: "(என்) ரக்ஷகா! எனக்கு (இப்படித்தான் புத்திரன் ஜனிப்பான் என்பதை நிரூபிக்க ஏதேனு மோர்) அத்தாக்ஷியை நியமிப்பாயாக;" (அதுகேட்டு வானவர்) சொன்னார்: "உமக்கு அத் தாக்ஷி—(அடையாளமாவது) சயிக்கினையாக வல்லாது (வேறு விதத்தில்) மூன்று தினங்களுக்கு மனிதர்கள்பால் நீர் வார்த்தையா டாம லிருப்பதே (யாகும்);—(அஃதாவது, ஆண்டவனையே உம்மு டைய ஜபதபங்களால் நீர் தியானம் புரிவதேயாம்.) மேலும், உம் முடைய ரக்ஷகனை அதிகமாக (நீர்) ஞாபகம் செய்வீராக! மேலும், காலையிலும் மாலையிலும் (நீர் அவனையே) பஜிப்பீராக!"

---

## பிரிவு—5

மஸீஹின் பிறப்பும் அவர் நபியாகும் விஷயமும்.

41. இன்னம், அதுசமயம் (நடந்த விஷயத்தைக் கவனிப் பீராக:) "ஏ மர்யம்! (நிச்சயமாக) உம்மை அல்லாஹ் தேர்ந் தெடுத்திருக்கிறான்;[5] மேலும், உம்மைப் (பாபமாகிய மாசினின்று) பரிசுத்தப் படுத்தியிருக்கிறான்; மேலும் (உமது காலத்திலுள்ள) உலகத்தார்களாய பெண்களின் மீது உம்மை (உயரியவராக)த் தேர்ந்தெடுத் திருக்கிறான்," என்று வானவர்கள் சொன்னார்கள்.

5. பீபீமர்யம் புஷ்பவதியானபோது நடந்த விஷயத்தை அல்லாஹ் இங்கே சொல்லுகிறான். அன்றியும், சென்றுபோன இவ்விஷயத்தைத் தெய்விக அறிவிப் பில்லன்றி நமது வள்ளல் ஸல் அவர்கள், தங்கள் காலத்தில் சொல்வது முடியாது என்பதை இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

42. "(ஆதலின்) ஏ மர்யம்! உம்முடைய ரக்ஷகனுக்கு (நீர் முற்றும்) வழிபடுவீராக; மேலும், சிரவணக்கம் புரிவீராக; மேலும் (அல்லாஹ்வுக்கு வணக்கம் புரிவான் வேண்டிக்) குனிகிறவர்களுடன் குனிவீராக."

43. இது மறைவான விஷயங்களில் உள்ளதாகும்; அதை உமக்கு நாம் அறிவிக்கின்றோம்; மேலும், மர்யத்தை (வளர்த்துப் பரிபாலனம் பண்ண) அவர்களுள் யார் (அப்பொறுப்பை) ஏற்றுக்கொள்வ தென்பதற்காக(ச் சீட்டுக் குலுக்குவதேபோல்) அவர்கள்—(பைத்துல் முகத்தஸின் புரோகிதர்கள்) தங்கள் பேனைக் கலைப் போட்டபோது, அவர்கள்பால் நீர் இரு(ந்து நேரில் பார்)க்க வில்லை (என்பது வெளிப்படையான ஒரு விஷயமாம்.) மேலும், (இங்ஙனமே மர்யத்தை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில்) அவர்கள் தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண் டிருந்தபோது(ம்) நீர் அவர்கள்பால் இல்லை. (எனவே, நீர் நேரில் காணாத விஷயத்தை அல்லாஹ்வே உமக் கறிவிக்கிறான்.)

44. (அதற்குப் பின்பு நடந்ததையும் ஞாபகம் பண்ணுவீராக:) அதுசமயம் வானவர்கள் (பின் வருமாறு) சொன்னார்கள்: "ஏ மர்யம் (நிச்சயமாக) அல்லாஹ் தன்பாலுள்ள (ஒரு) வார்த்தையைக்கொண்டு உமக்கு (ஓர் ஆண் மகவு உதிக்குமென்று) நற்செய்தி கூறுகின்றான்; அவருடைய பெயர் மஸீஹ், ஈஸா, மர்யத்தின் குமாரன் (என்பதாகும்.) இவ்வுலகிலும் இறுதியி(ல்வரும் மறு உலகி)லும் மேன்மை பெற்றவராகவும் (அல்லாஹ்வுக்கு) அண்மையி லுள்ளவர்களுள் (ஒருவராகவும்) இருப்பார்."

45. "மேலும், தொட்டிலிலும்—(அஃதாவது, சிறு பிராயத்திலும்) வயோதிகத்திலும் (நல்லுபதேசங்களை நவில்வதில் ஒரே மாதிரியாகவே) ஜனங்களிடம் பேசுவார்; மேலும், நல்லோர்களுள் (அவர் ஒருவராக) இருப்பார்."

46. (மர்யம் இச் சுபசெய்தியைச் செவிமடுத்த வுடனே) சொன்னார்: "(என்) ரக்ஷகனே! எனக்கு எவ்வாறு குமாரன் ஜனிப்பான்? என்னையோ (இந்நேரம் வரை) ஒரு மனிதனும் தீண்டிய தில்லை." (இதற்கு விடையாக வானவர்) சொன்னார்: "அப்படியே ஆகும்! அல்லாஹ் தான் நாடியதைச் சிருஷ்டிசெய்கிறான்; (அல்லாஹ்) ஒரு காரியத்தைத் தீர்மானித்துவிடுவானயின், அதற்கு அவன் சொல்வது, 'ஆகக்கடவாய்!' என்பதே; பின்னர் (அஃது அல்லாஹ்வின் ஆணைப்படி அப்படியே) ஆய் விடுகின்றது."

47. "மேலும் (ஏ மர்யம்! உமக் குண்டாகப்போகும் குமாரராகிய) அவருக்கு. (அல்லாஹ் பொதுவான) வேதத்தையும், (தெய்விக) ஞானத்தையும், (மூஸாவுக்குரிய) தவ்ராத்(வேதத்)தையும், (தமக்குண்டாய) இன்ஜீலையும் கற்றுக்கொடுப்பான்."

48. "மேலும் (அவரை) பனீ இஸ்ராயீல்மாட்டுத் தூதுவராக (அவன் அனுப்புவான்; அப்பொழுது அவர்களிடம் அவர் சொல்வார் :) 'உங்களுடைய ரக்ஷகன்பாலிருந்து திட்டமாகவே நான் ஓர் அத்தாக்ஷியுடன் உங்களிடம் வந்திருக்கிறேன்; நான் உங்களுக்காகக் களிமண்ணிலிருந்து பறவையின் உருவத்தைப்போல் சிருஷ்டிப்பேன்; பின்னர் அதற்குள் நான் ஊதுவேன்; ஆகவே (அஃது அப்பால்) அல்லாஹ்வின் அனுமதிகொண்டு பறவையாக ஆகும்; மேலும், குருட்டையும், வெண் குஷ்டத்தையும் சொஸ்தப்படுத்துவேன்; மேலும், அல்லாஹ்வின் அனுமதிகொண்டு மரணமடைந்தோரை உயிர்த்தெழச் செய்வேன்; மேலும், நீங்கள் தின்னுவதையும் நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரித்து வைத்திருப்பதையும் உங்களுக் கறிவிப்பேன்; நீங்கள் (உண்மையிலேயே) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பீர்களாயின், நிச்சயமாகவே இதில் உங்களுக்கு(ச் சரியான நல்ல) அத்தாக்ஷி யிருக்கின்றது.'"

49. "'மேலும் (நான்) எனக்கு முன்னுண்டாயிருந்த தவ்ராத்தி விருந்ததை உறுதிப்படுத்துபவனுய், மேலும் உங்களுக்கு(த் தவ்ராத்தின் போதனைப் பிரகாரம்) விலக்கப்பட்டதில் (இருந்து) சில (பாகத்)தை உங்களுக்கு நான் ஆகுமென ஆக்குவதற்காக (வும் உங்களிடம் வந்திருக்கிறேன்.) மேலும், உங்களுடைய ரக்ஷகன்பா லிருந்து ஓர் அத்தாக்ஷியுடன் உங்களிடம் வந்திருக்கிறேன்; ஆகலின், அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்; மேலும் (என்னுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி எனக்கு) வழிபடுவீர்களாக.'"

50. "'(இன்னமும் கவனியுங்கள்!) நிச்சயமாக அல்லாஹ்(வே) என்னுடைய ரக்ஷகனுகவும் உங்களுடைய ரக்ஷகனுகவும் இருக்கிறுன்; ஆதலின், அவனுக்கு வணக்கம் புரியுங்கள்; இது(வே) நேரான பாதையா யிருக்கிறது.'"

51. (பிறகு அந்த முன்னறிக்கையின் பிரகாரம் மஸீஹ் ஜனனமாயினுர்; பின்னர், பனீ இஸ்ராயீல்களை நேரான பாதையில் அழைக்கவும் முற்பட்டார்.) பின்பு ஈஸா (தம்முடைய அழைப்புக் கிணங்காத மாதிரியில்) அவர்கள்மாட் டிருந்து நிராகரிப்(பதான யறுப்)பைத் தெரிந்துகொண்டபோது சொன்னுர்;

"அல்லாஹ்வின் பக்கல் (மனிதர்களைக்கொண்டு சேர்க்க) எனக்கு உதவி புரிபவர்கள் யார்?" (இதைக் கேட்டதும், ஈஸா அலை அவர்களுடைய உபதேசத்தைக் கேட்டு அதன்படி நன்னம்பிக்கை கொண்ட அவருடைய சிஷ்யர்களான) ஹவாரிய்யீன்கள்—(தோழர்கள்) சொன்னார்கள்: "நாங்கள் அல்லாஹ்வுக்காக (அவன் மார்க்கப் பிரசார விஷயத்தில்) உதவி செய்பவர்களாயிருக்கிறோம்; அல்லாஹ்வின்மீது (நாங்கள்) நன்னம்பிக்கை கொண்டுள்ளோம்; (ஏ உண்மையின் பக்கல் அழைப்பவரே! நீர்) நாங்கள் (அவன் ஆணைக்குத்) தலை சாய்ப்பவர்களா யிருக்கிறோம் என்பதற்குச் சாக்ஷியா யிருப்பீர்."

52. (இன்னமும் அவர்கள் சொன்னார்கள்:) "ஏ எங்கள் ரக்ஷகா! நீ இறக்கிவைத்த(வேதமாய வு)தன் மீது (நாங்கள்) நன்னம்பிக்கை கொண்டுள்ளோம்; மேலும் (உன்னுடைய) தூதரைப் பின்பற்றினோம்; ஆதலின், எங்களை (உண்மைக்கு)ச் சாக்ஷியங் கூறுபவருடன் எழு(திச் சேர்த்)து(க் கொள்)வாய்."

53. மேலும் (நிராகரிப்பவர்கள் தாங்கள் தப்பிக்கொள்ளச்) சூழ்ச்சி செய்தார்கள்; அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்தான். மேலும், அல்லாஹ் (மஸீஹுக்கு அவர்கள் செய்ய நாடிய தீமைகளைவிட்டும் கொடுமைகளை விட்டும் காப்பாற்றி வேறு விதச்) சூழ்ச்சி செய்பவர்களுள் (ளெல்லாம்) சிறந்தவனா யிருக்கிறான்.

---

## பிரிவு — 6

பொய்க்குற்றச் சாட்டினின்றும் மஸீஹ் விடுவிக்கப்படுகின்றார்.

54. (பின்னர்) அல்லாஹ் (ஈஸாவுக்குச்) சொன்னபோது (நடந்த விஷயத்தைக் கவனிப்பீராக. அஃது என்ன வெனின்:) "ஏ ஈஸா! உம்மை நான் மரிக்கச் செய்பவனா யிருக்கிறேன்; இன்னம், என் பக்கல் உம்மை உயர்த்திக்கொள்பவனா யிருக்கிறேன்; மேலும், நிராகரிப்பவர்களி(ன் அபவாதங்களி) னின்றும் உம்மைப் பரிசுத்தமாக்குபவனா யிருக்கிறேன்; இன்னம், உம்மைப் பின்பற்றிய அவர்களை (உமது வார்த்தையைக் கேளாது அதை) நிராகரித்தவர்கள் மீது நியாயத் தீர்ப்பு(க்காக எழுந்து நிற்கும்) நாள்வரை மேன்மைப் படுத்துபவனா யிருக்கிறேன். பின்னர் (இறுதியாக) உங்களுடைய மீளும் ஸ்தலம் என் பக்கலே யிருக்கிறது; ஆதலின் (அது சமயம்) நீங்கள் எது விஷயத்தில் விகற்பம் பண்ணிக்கொண் டிருந்தீர்களோ, அதில் உங்களுக் கிடையே தீர்ப்புச் செய்வேன்."

55. ஆதலின் (என் சத்தியத்தை) நிராகரித்தவர்களாய அவர்களுக்கு, இவ்வுலகிலும் இறுதி (வாழ்க்கை)யிலும் கொடிதான தண்டனையாக(க் கொடுத்து)த் தண்டிப்பேன்; மேலும், அவர்களுக்கு (அப்படிப்பட்ட தண்டனையினின்றுங் காப்பாற்ற) உதவியாளர்களுள் ஒருவருமில்லை.

56. இன்னம் (இதற்கெதிராக) நன்னம்பிக்கை கொண்டு நற்கருமங்களைச் செய்தவர்களான அவர்களுக்கு அவர்களுடைய (நன்மைகளுக்குரிய) பிரதிபலன்களைப் பரிபூரணமாக (அல்லாஹ்) அளிப்பான்; மேலும், அல்லாஹ் (தன்னுடைய காரியங்களில் நீதமற்ற முறையிலே நடந்து கொள்வதில்லை. எனவே, அவன்) அநியாயக்காரர்களை நேசிக்கமாட்டான்.

57. (ஏ நபியே!) இதை (நாம்) உமக்கு அத்தாக்ஷிகளினின்றும் ஞானோபதேசத்தி(ன் ஞாபகமூட்டலி)னின்றும் ஓதிக் காட்டுகிறோம்.

58. நிச்சயமாகவே அல்லாஹ்வினிடத்தில் ஈஸாவின் உவமை (நிலைமை)யானது ஆதத்தின் உவமை (நிலைமை)யைப் போலவே யிருக்கின்றது; அவரை (அவன்) மண்ணிலிருந்து சிருஷ்டித்தான்; பின்னர் அதற்குச் சொன்னான்: "ஆகக் கடவாய்!" ஆதலின் (அஃது) ஆய்விடுகிறது.

59. உண்மை உமது ரக்ஷகனி(டத்தி)னின் றிருக்கிறது; ஆதலின் (கிறிஸ்துவர்கள் வாயில் வந்தவாறெல்லாம் தங்கள் நபியை உயர்த்தும் நோக்கங்கொண்டு உளறிக் கொட்டுவதைக் கண்டு) சந்தேகப் படுபவர்களுள் (நீர்) ஆய்விடாதீர்.

60. பின்னர் உம்மிடம் (சரியான) ஞான(த்துக்குரிய உபதேச)த்தினின்று (விளக்கம்) வந்ததன் பின்(னும்) அது விஷயத்தில் உம்மிடம் யாரேனும் வாக்குவாதம் பண்ணுவாராயின் (அந்த யூதர்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும்) சொல்வீராக: "(விகற்பங்களையும் வாக்குவாதங்களையும் விட்டொழியுங்கள்; இவற்றினைத் தீர்த்துக் கொள்ள) வருவீர்களாக! எங்களுடைய குமாரர்களையும் உங்களுடைய குமாரர்களையும், எங்களுடைய ஸ்திரீகளையும் உங்களுடைய ஸ்திரீகளையும், எங்கள் ஜனங்களையும் உங்கள் ஜனங்களையும் (சேர்த்து) அழைப்போம்; பின்னர் (மிக்க) பணிவுடனே (அல்லாஹ்வினிடம்) இறைஞ்சுவோம்; ஆதலின், அல்லாஹ்வின் சாபத்தைப் பொய்யர்களின்மீது நாம் இறக்குவோம். (இப்படிச் செய்தபின்பு முடிவு யாதாகின்ற தென்பதை அல்லாஹ்வினிடத்திருந்தே எதிர்பார்த்து நிற்போம்.)"

61. (ஏ நபியே !) நிச்சயமாகவே இஃது உண்மையான விவரமா யிருக்கின்றது ; மேலும், அல்லாஹ்வைத் தவிர்த்து (வணக்கத்துக்குரிய வேறு) தெய்வம் (எதுவும்) இல்லை ; மேலும், நிச்சயமாக அல்லாஹ்வாகிய அவனே வன்மையுள்ளவனாக ஞானமுள்ளவனாக இருக்கிறான்

62. பின்னர் (இத்தீர்ப்பு முறையை ஏற்றுக்கொள்ளாது அவர்கள்) திரும்பி விடுவார்களாயின் (அவர்களது ஞாபகத்தி லிருக்கட்டும் :) நிச்சயமாக அல்லாஹ் கலகம் செய்பவர்களை அறிகிறவனா யிருக்கிறான்.

---

## பிரிவு — 7

யூதர்களுடனும் கிறிஸ்துவர்களுடனும் வாக்குவாதம் தொடர்ந்து நடைபெறுகிறது.

63. (ஏ நபியே ! நீர் எஹூதி நஸாராக்களுக்குச்) சொல்வீராக : "ஏ வேதத்தை யுடையவர்காள் ! (வீணான வாக்குவாதங்களையும் சச்சரவுகளையும் விட்டொழியுங்கள்.)[6] எங்களுக்கும் உங்களுக்கு மிடையே சரியாய் (விகற்பமின்றி) இருக்கும் வார்த்தையின் பக்கல் (பேசுவோம்) வருவீர்களாக ; (அஃதாவது :) அல்லாஹ்வைத் தவிர்த்து (வேறு யாருக்கும்) நாம் வணக்கம் புரிவது கூடாது ; மேலும், அவனுக்கு எந்த வஸ்துவையும் நாம் இணையாக்குவது(ம்) கூடாது ; மேலும், அல்லாஹ்வை யன்றி நம்முள் சிலர் சிலரை ரக்ஷகர்களாகப் பற்றிக்கொள்வது(ம்) கூடாது." பின்னர் (அவர்கள் இதையும் ஒத்துக்கொள்ளாமல்) திரும்பி விடுவார்களாயின் (அவர்களுக்குச்) சொல்லுங்கள் : "(சத்தியத்தை

---

6. நீங்கள், "பொறுமையைக் கொண்டும், கெட்ட எண்ணத்தைக் கொண்டும் விகற்பம் செய்யாமல், நேர்மையான மனத்துடனே தான் நடந்து கொள்ளுகிறோம்," என்று கூறுவீர்களாயின், நமக்குள்ளிருக்கும் சகல விகற்பங்களையும் ஒழித்துவிட்டு, நீங்களும் நாங்களும் ஏற்றுக்கொள்ளும் இப்ராஹீமின் மார்க்கத்தின் பிரகாரம் நடப்போம் வாருங்கள். இவ்வாயத்தில் கூறப்பட்டதே இப்ராஹீமின் சன்மார்க்கமாகும். யூதமார்க்கமும் கிறிஸ்து மார்க்கமும், இப்ராஹீம் சென்று எத்தனையோ காலத்துக்குப்பின் தோன்றியவைகளா யிருக்கின்றன. நீங்களோ, இப்ராஹீம் யூதராகவோ கிறிஸ்துவராகவோதா மிருந்தார் என்று வீணே வாக்குவாதம் செய்கின்றீர்கள். இம் மார்க்கங்களெல்லாம் தோன்றுவதற்கு எத்தனையோ நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அவர் மரண மடைந்திருக்கும்போது, வீணே நீங்கள் செய்துகொண் டிருக்கும் விபரீத வித்தியாசப் பிரிவினைக்குள் அவர் எங்ஙனம் வந்து நுழைந்து கொள்ளுதல் கூடும்! எனவே, சர்வ சாதாரணமான இவ் விஷயத்தையேனும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா! என்றே ஆண்டவன் இவ்வாக்கியத்தால் அறிவுறுத்துகின்றான்.

நிராகரிப்பவர்கள் நீங்களாகவே யிருக்கின்றீர்கள்.) நாங்கள் (சத்தியத்துக்குத்) தலைசாய்ப்பவர்களா(ய முஸ்லிம்களா) யிருக்கிறோம் என்பதற்கு (நீங்களே) சாக்ஷியாயிருக்கக் கடவீர்கள்."

64. ஏ வேதத்தை யுடையவர்காள்! இப்ராஹீம் (மார்க்க) விஷயத்தில் (நீங்கள்) ஏன் வாக்குவாதம் செய்கின்றீர்கள்? மேலும், தவ்ராத்தும், இன்ஜீலும் அவருக்குப் பின்னேயல்லாது (முன்னே) இறக்கப்படவில்லை; (எனவே, நீங்களெல்லாம் செய்து கொண்டிருக்கும் இப்பிரிவினைகளுக்கு இப்ராஹீமின் காலத்தில் ஆதார மில்லை. ஆகவே, வெளிப்படையான இவ்விஷயத்தை) நீங்கள் (பகுத்தறிவைக்கொண்டு) தெரிந்துகொள்ள வேண்டாமா?

65. அறிந்து கொள்ளுங்கள்! எதன்மீது நுங்களுக்கு(ச் சிறிது) அறிவு இருந்ததோ, அதன் விஷயத்தில் (நீங்கள்) வாக்குவாதம் செய்து கொண்டவர்களா யிருக்கின்றீர்கள்; ஆதலின், எதன்மீது நுங்களுக்கு (ஒரு சிறிதும்) அறிவு இல்லையோ, அதன் விஷயத்தில் (நீங்கள்) ஏன் (வீணே) வாக்குவாதம் செய்கின்றீர்கள்? மேலும், அல்லாஹ் (சகல விஷயங்களையும்) அறிகிறான்; நீங்களோ அறிகின்றீர்க ளில்லை. (எனவே, வீணே சச்சரவு செய்துகொண் டிராதீர்கள்.)

66. (நீங்கள் பொறாமைக் குணங்கொண்டே குழப்பம் செய்து கொண்டு வருகின்றீர்கள்,) இப்ராஹீம் யூதரா யிருந்தா ரில்லை; (அவர்) கிறிஸ்துவராகவும் இருந்ததில்லை; ஆனால், (அவர் தமது காலத்தில் காணப்பட்ட கோடிய வழிகளினின்றும் நீங்கி) நேராயவ ராய் (அல்லாஹ்வின் ஆணைக்கு)த் தலைசாய்த்தவ ராக(வே) இருந்தார்; மேலும், இணைவைப்பவர்களுள் (ஒருவராக) அவர் ஆகியிருந்தா ரில்லை.

67. (உண்மையில்) நிச்சயமாகவே மனிதர்களுள் இப்ராஹீமு(டைய நேரியபாதை)க்கு மிக அண்மையி லிருப்பவர்கள், அவரைப் பின்பற்றியவர்களும், இந்த நபியும், (இவரேயுமன்றி இந்நபியின்மீதும் இவருடைய வார்த்தையின்மீதும்) நன்னம்பிக்கை கொண்ட அவர்களுமா யிருக்கிறார்கள்; மேலும், அல்லாஹ் நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு நேயனுக(வும் உதவியாளனுகவும்) இருக்கின்றான்.

68. (ஏ சத்திய அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டவர்காள்!) வேதத்தை யுடையவர்களினின்று ஒரு கூட்டத்தார் உங்களை (எவ்வாற்றாலேனும் இப்ராஹீமின் நேரான பாதையை விட்டு) வழி கெடுத்துவிட வேண்டுமென்று விழைகின்றனர்;

(இப்படிப்பட்ட கொடிய எண்ணத்தால்) தங்களுடைய ஆன்மாக்களை(யே) யல்லாது (வேறெவரையும்) வழிகெடுக்கின்றார்க ளில்லை; (ஆனால், அவர்கள் தங்களுடைய பொறாமையின் மேலீட்டால் இதையும்) உணர்ந்து கொள்கின்றார்க ளில்லை.

69. ஏ வேதத்தை யுடையவர்காள்! நீங்கள் அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளை (நுங்கள் நேத்திரங்கொண்டு) கண்டு கொள்ளுகிறவர்களா யிருந்தும் (அவற்றினை) ஏன் நிராகரிக்கின்றீர்கள்?

70. ஏ வேதத்தை யுடையவர்காள்! மெய்யைப் பொய்யுடன் ஏன் கலக்கின்றீர்கள்? மேலும், நீங்கள் (உண்மையை) அறிகிறவர்களா யிருந்தும், மெய்யை (ஏன்) மறைக்கின்றீர்கள்?

---

## பிரிவு — 8

இஸ்லாத்தை இழிவுபடுத்திக் காட்டச் சூழ்ச்சி.

71. இன்னம் (முஸ்லிம்களை வழி கெடுக்கும் நோக்கங் கொண்டு) வேதத்தை யுடையவர்களுள் ளிருந்து ஒரு கூட்டம் (அவர்களுள் ளேயொரு கூட்டத்திற்குச்) சொல்லுகின்றது: "(குர்ஆன்மீது) நன்னம்பிக்கை கொண்டவர்கள்மீது இறக்கி வைக்கப்பட்டதைக் கொண்டு, பகலின் ஆரம்பத்தில்—(காலையில்) நன்னம்பிக்கை கொள்ளுங்கள்; பின்னர் அதன் இறுதியில்—(மாலையில் அவர்கள் வேதத்தை) நிராகரியுங்கள். (இப்படி நீங்கள் செய்வீர்களாயின்) அவர்கள் ஒருகால் (தங்கள் மார்க்கத்தை விட்டுத்) திரும்பிவிடுவார்கள்."

72. மேலும் (அவர்கள் தங்களுக்குள்ளே பேசிக்கொள்ளுகிறார்கள்:) "உங்களுடைய மார்க்கத்தைப் பின்பற்றிய(வர்களே போன்று உங்களுடன் ஒற்றுமையா யிருப்ப)வர்பா லல்லாமல் நீங்கள் (ஏனையோர் மாட்டு) நன்னம்பிக்கை கொள்ளாதீர்கள்." (எனவே, ஏ நபியே! நீர்) சொல்வீராக: "நிச்சயமாகவே (பரிபூரணச் சத்திய) நேர்வழியானது அல்லாஹ்வின் நேர்வழியா(கவே) யிருக்கின்றது; (அஃது எந்த வர்க்கத்தாருக்கும் எந்தச் சந்ததியாருக்கும் சொந்தமானதா யில்லை; அதனைப் பின்பற்றுபவர் யாரா யிருப்பினும், அவர் நிச்சயமாக ஜயம் பெறுவார். அவர்கள் மேற்கொண்டும் தங்களைச் சார்ந்தவர்களுக்குச் சொல்லுகிறார்கள்:) "நீங்கள் கொடுக்கப்பெற் றிருப்பதேபோல (வேறு) ஒருவர் (வேத போதனையைக்) கொடுக்கப்பெற் றிருக்கிறார் (என்பதை ஏற்றுக் கொள்ளாதீர்கள்.) அல்லது உங்களுடைய ரக்ஷகன்

சமுகத்தில் (நீங்கள் கூறுவது தவறென்று) உங்களுடன் (மூமின் களாய்) அவர்கள் வாக்குவாதம் செய்வார்கள்; (எனவே, இந்த முறையிலும் அவர்களுடன் நீங்கள் நடந்து கொள்ளாதீர்கள்." எனவே, ஏ நபியே! அவர்களுக்குச்) சொல்வீராக: "(நீங்களேன் இப்படிப்பட்ட தவறான எண்ணத்துள் சிக்குண்டு கிடக்கின்றீர் கள்?) கொடை(யும் நேர்வழியும்) அல்லாஹ்வின் கைவய மிருக் கிறது; தான் நாடியவருக்கு அதைக் கொடுக்கின்றான்; மேலும், அல்லாஹ் (கொடையில்) விஸ்தீரணமுள்ளவனுகை(வும்) அறிகிறவ னுகை(வும்) இருக்கின்றான்."

73. (அல்லாஹ்) தான் நாடியவரைத் தன்னுடைய கருணைக் கு(ச் சொந்தமாக) உரிமையாக்கிக் கொள்ளுகிறான்; மேலும், அல்லாஹ்(வே) பெருங் கொடையாளியா யிருக்கின்றான்.

74. மேலும், வேதத்தை யுடையவர்களுள் ளிருந்து (ஒரு) சிலர் (பொன், வெள்ளியினுலான) கருவூலத்தின்மீது அவரை அச் சந்தீர்ந்தவரா(ன பாதுகாப்பாளரா)கச் செய்வீராயின்—(அஃதா வது, அவர்பால் அடைக்கலமாக வைப்பீராயின்) அதை (அப் படியே) உம்மிடம் திருப்பிக் கொடுப்பவராக இருக்கின்றார்; மேலும், அவர்களுள்(ளேயே வேறு) சிலர் (ஒரே) ஒரு தீனரின் மீது அவரை அச்சந் தீர்ந்தவரா(ன பாதுகாப்பாளரா)கச் செய்வீ ராயின், அவர்மீது (ஒரே) நிலையாய் (நின்று, வாதாடிக்கொண்டு) இருந்தாலல்லாது, அதை(யும்) உம்மிடம் திருப்பிக் கொடுக்காதவ ராக இருக்கின்றார்; (இப்படிப்பட்ட கெட்ட முறையில் அவர்கள் நடந்துசெல்லும்) இஃது அவர்கள், "இந்த எழுதப்படிக்கத் தெரி யாதவர்கள் விஷயத்தில் (இவ்வாறு நடந்துகொள்வதால்) எங்கள் மீது (குற்றத்திற்குரிய) மார்க்கமொன்று மில்லை. (என்னெனின், இணைவைத்து வணங்கி வந்த அரபிகளுடன் நாங்கள் நேரான முறையிலேதான் நடந்துகொள்ள வேண்டுமென்ப தில்லை)" என்று அவர்கள் கூறுகின்ற காரணத்தினுலே யாகும். மேலும், அவர்கள் (உண்மையை) அறிகின்றவர்களா யிருந்தும் (தாங்கள் செய்வது குற்றமல்ல வென்று) அல்லாஹ்வின்மீது பொய்(ம் மொழி)யைச் சொல்லுகிறார்கள்.

75. ஆனல் (அவர்கள் தங்கள் தங்கள் கொடுமையின் பிரதி பலனை விட்டுத், தப்பமாட்டார்கள்; ஆண்டவனுடைய உண்மை யான சட்டமென்ன வெனின்) எவரேனும் (தம்முடைய கொடுக்கல் வாங்கல் விஷயத்தில்) தமது வாக்குறுதியை (உண்மையுடன்) பரி பூரணமாக நிறைவேற்றுகின்றாரோ, மேலும் (இப்படிப்பட்ட

விஷயங்களில் அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடக்கின்றாரோ (அவர் எக்கூட்டத்தைச் சார்ந்தவரா யிருப்பினும் பாதகமில்லை; என்னெனின்) நிச்சயமாகவே அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்பவர்களை நேசிக்கின்றான்.

76. எவர் (நற்காரியங்கள் செய்யவேண்டுமென்ற) அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஈடாகவும், தங்களுடைய சத்தியங்களுக்கு (ஈடாகவு)ம் சிறு கிரயத்தைப் பெறுகின்றனரோ, அவர்களுக்கு இறுதியி(ல் வரும் நாளி)ல் நிச்சயமாக (நன்மையான) பாகமொன்று மில்லை; மேலும், அல்லாஹ் அவர்கள்பால் (நல்ல முறையிலே) வார்த்தையாட மாட்டான்; மேலும் (நியாயத்தீர்ப்புக்காக எழுந்து) நிற்கும் நாளில் அவர்கள் பக்கல் (கருணையுடன்) நோக்கமாட்டான்; மேலும், அவர்களைப் (பாபத்தினின்று) பரிசுத்தமாக்க மாட்டான்; மேலும், அவர்களுக்கு (அந்நாளில்) நோவுண்ட தண்டனை யுண்டு.

77. இன்னம் (கவனியுங்கள்!) நிச்சயமாகவே அவர்களுள் ஒரு பிரிவார் தங்களுடைய பாஷைகளை—(கைச் சரக்கை)—(உண்மையான) வேதத்துடன் கலந்து (விஷயத்தைப்) புரட்டுகின்றனர்; (இஃது எற்றுக்கெனின், அவர்கள் சுயமே சொந்தமாகச் சேர்த்த) அதை வேதத்தினின்று முள்ளதென்று நீங்கள் எண்ணுவதற்காக(வேயாம்;) (ஆனால்) அதுவோ (உண்மையிலே) வேதத்தி(ன் போதனைகளி)னின்று முள்ளதன்று; மேலும் (அவர்கள்) சொல்லுகிறார்கள்: "அஃது அல்லாஹ்விளிடத்திருந் துண்டாயிருக்கிறது." (ஆனால்) அதுவோ (உண்மையிலே) அல்லாஹ்விலிடத்திருந் துண்டாய தன்று; மேலும், அவர்கள் (தாங்கள் செய்துவரும் காரியங்களை யெல்லாம்) அறிந்தவர்களா யிருந்தும், அல்லாஹ்(தான் இதனைச் சொன்னான் என்று அவன்)மீது (பெரும்) பொய்யைச் சொல்லுகிறார்கள்.

78. எந்த மனிதருக்கும், அல்லாஹ் தமக்கு (மனிதர்களுக்குரிய நேர்வழியின் பொருட்டு) வேதத்தையும், ஞானத்தையும், நபித்துவத்தையும் கொடுத்திருக்க, பின்னர் அவர் மனிதர்களுக்கு, "அல்லாஹ்வைத் தவிர்த்து எனக்கே வணக்கம் புரிகிறவரா யிருங்கள்," என்று கூறுவது தகாது; ஆனால், (அவர் கூறுவார்:) "நீங்கள் வேதத்தைக் கற்றுக்கொடுக்கின்றவர்களா யிருப்பதைக் கொண்டும், நீங்கள் (அதனைக்) கற்கின்றவர்களா யிருப்பதைக் கொண்டும் ரக்ஷகனைச் சார்ந்தவர்களாக—(அவனையே வணங்கிக்

கொண்டு அடியார்களுக்குச் சரியான ஊழியம் புரிகின்றவர்களாக) ஆய்விடுவீர்களாக!"

79. இன்னம் (மேலே குறிப்பிடப்பட்டுள்ள அம்மனிதர்) நீங்கள் வானவர்களையும், நபிமார்களையும் ரக்ஷகர்களாகப் பற்றிக் கொள்ள வேண்டுமென்று உங்களுக்கு ஏவமாட்டார்; என்ன! நீங்கள் (அல்லாஹ்வின் போதனைகளுக்குத் தலைசாய்த்தவர்களாய) முஸ்லிம்களாயதன் பின்(னே அதன்) நிராகரிப்பைக் கொண்டா உங்களுக்கு ஏவப்போகின்றார்? (இவ்வாறு அன்னவர் ஒருபோதும் செய்யப் போவதில்லை.)

---

## பிரிவு—9

*முன்வந்த வேதங்களும் நபிமார்களும் இஸ்லாத்தின் உண்மைக்குச் சாக்ஷியம் கூறல்.*

80. இன்னம், நிச்சயமாக வேதத்(தினின்றும் உள்ள)தையும் ஞானத்தையும் உங்களுக்கு நான் கொடுத்ததற்காக நபிமார்கள் பால் அல்லாஹ் வாக்குறுதி வாங்கினன். பின்னர் உங்கள்பா லிருப்ப(தாய வேதத்)தை உறுதிப் படுத்துபவராய தூதர் உங்கள்மாட்டு வந்துவிட்டார்; (ஆகவே) அவர் (வார்த்தையின்)மீது (நீங்கள்) நிச்சயமாய் நன்னம்பிக்கை கொள்ளுங்கள்; மேலும், நிச்சயமாகவே அவருக்கு (வேண்டிய) உதவி(யும்) செய்யுங்கள். (பின்னர் அவர்களை நோக்கி, "நீங்கள் இதை) உறுதி செய்(து ஒப்புக்கொள்ளு)கின்றீர்களா? மேலும், இதன்மீது என்னுடைய உறுதிப்பாட்டைப் பற்றிக் கொள்ளுகின்றீர்களா?" என்று கூறினேன்; (இதற் கவர்கள்) சொன்னார்கள்: "(அதனை அப்படியே நாங்கள்) உறுதி செய்(து ஒப்புக்கொள்ளு)கின்றோம்." (பிறகு அல்லாஹ்) சொன்னான்: "(நீங்கள்) சாக்ஷியாயிருக்கக் கடவீர்கள்; யானும் உங்களுடனே சாக்ஷிகளுள் உள்ள (ஒரு) வனா யிருக்கிறேன் (என்பது நுங்கள் ஞாபகத்தி லிருக்கட்டும்.)"

81. பின்னர் எவரேனும் (தம்முடைய வாக்குறுதியாகிய) இதற்குப் பின்பு(ம் நேரிய முறையில் நடவாமல்) திரும்பிவிடுவராயின், அவர்கள்தாம் (மார்க்க வரம்பைக் கடந்த) பாபிகளாயிருக்கின்றார்கள்.

82. (விஷயம் அவ்வாறிருக்க) அல்லாஹ்வின் மார்க்கமல்லாத (வேறு மார்க்கத்)தையா (அவர்கள்) தேடுகிறார்கள்? மேலும் (உண்மையிலே) அவனுக்கு(த்தான்) வானங்களிலும் பூமியிலுமுள்ளவர்கள் (எல்லாம்) விருப்பாகவும் வெறுப்பாகவும் (ஒன்றும்

செய்துகொள்ள முடியாமல்) தலைசாய்த்திருக்கின்றனர். மேலும் (இறுதியாக) அவன் பக்கலே (அவர்களெல்லாம்) திருப்பப் படுவார்கள்.

83. (ஏ நபியே! நீர் அவர்களுக்குச்) சொல்வீராக: ("எங்களுடைய நேரான மார்க்கம் என்னவெனின்) அல்லாஹ்வைக் கொண்டும், எங்களுக்கு வெளியாக்கப் பட்டதைக்கொண்டும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப், இன்னம் (அவர்) சந்ததியார் (ஆகியவர்)களுக்கு வெளியாக்கப் பட்டதைக்கொண்டும், மூஸாவும், ஈஸாவும், (இன்னம்) அவர்களுடைய ரக்ஷகன்பாலிருந்து வந்த நபிமார்களும் அளிக்கப்பெற்ற (வேதத்)தைக் கொண்டும் நாங்கள் நன்னம்பிக்கை கொண்டிருக்கிறோம்; அவர்களுள்ளே ஒருவரிடத்தும் நாங்கள் வேறுபாடு செய்வதில்லை; (சிலரை ஏற்றுக் கொண்டும் சிலரை நிராகரித்துக்கொண்டும் இருப்பதில்லை.) மேலும், நாங்கள் அவனுக்கே தலைசாய்த்தவர்களா யிருக்கிறோம். (எனவே, அல்லாஹ்வின் உண்மைமொழி எங்கிருந்துண்டாயினும், எவர் நாவினின் றுண்டாயினும், அஃது உண்மையான தென்றே ஏற்றுக்கொண்டு, அதன்வழியே நடப்பவர்களா யிருக்கிறோம்.)"

84. இன்னம் (சர்வ முன்மாதிரியாய்த் தோன்றிய நபிமார்களின், பெரியார்களின், தலைவர்களின் மார்க்கமாய, இறைவனுக்கே என்றும் தலைசாய்த்த லென்னும்) இஸ்லாத்தைத் தவிர்த்து (வேறு) மார்க்கத்தை எவனேனும் தேடுவானாயின், அஃது அவன்மாட் டிருந்து ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது; மேலும், அவன் இறுதி (நாளை)யில் நஷ்டவாளிகளுள் (ஒருவனாக) இருப்பான்.

85. தாங்கள் நன்னம்பிக்கை கொண்டதன் பின்(னும்) (அல்லாஹ்வின்) தூதர் உண்மையானவரென்று சாக்ஷியம் கூறினதன் பின்(னும் அதற்காதாரமான) அத்தாக்ஷிகளும் அவர்களிடம் வந்துவிட்டதன் பின்(னும் சத்தியத்தை) நிராகரித்தவர்களாய வர்க்கத்தினருக்கு அல்லாஹ் எங்ஙனம் நேர்வழி காட்டுவான்? மேலும், அல்லாஹ் அநியாயக்காரர்களாய கூட்டத்திற்கு நேர் வழி காட்டுவதில்லை.

86. இப்படிப்பட்ட அவர்களுடைய (அக்கிரமக் காரியங்களுக்குரிய) தண்டனையானது, அவர்கள்மீது, அல்லாஹ்வும், வானவர்களும், மனிதர்களும் ஆகிய எல்லாரின் சாப(மு)ம் உண்டாயிருக்கின்றது (என்பதேதானாகும்).

87. அ(ந்த நிலைமையான)திலே (யே) நிலைத்திருப்பார்கள்; வேதனை அவர்களுக்கு இலேசாக்கப்பட மாட்டாது; மேலும்,

அவர்கள் (சிறிது காலத்துக்கேனும்) ஓய்வுகொடுக்கப்பட மாட்டார்கள் ;

88. (ஆனால்) அதற்குப் பின்(னும் தமது துன்மார்க்கத்தினின்றுங் கழிவிரக்கத்துடன்) திரும்பி விட்டவர்களும், மேலும் (தங்கள் கிரியைகளைச்) சீர்படுத்திக் கொண்டவர்களுமான, அவர்களைத் தவிர ; (அவர்கள் காரியம் பின்னே அல்லாஹ்வினிட மிருக்கின்றது.) எனவே, அல்லாஹ் (பாபங்களை அதிகம்) மன்னிப்பவனாக(வும் அடியார்கள் மீது) அன்புடையோனாக(வும்) இருக்கிறான்.

89. நிச்சயமாகவே, எவர், தாங்கள் நன்னம்பிக்கை கொண்டதன் பின் (சத்தியத்தை) நிராகரித்தார்களோ, பின்னர் (அவ்வளவோடு நில்லாது தங்களுடைய அதிக்கிரமச் செயல்களினால்) நிராகரிக்கும் தன்மையை(யே) அதிகப்படுத்திக் கொண்டு சென்றார்களோ, அவர்களுடைய (கழிவிரக்கத்துடன் கூடிய) பாப மன்னிப்புக்கோரல் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது. (என்னெனின், அவர்களுடைய ஹிருதயங்கள் மிக்க இருள்கொண்டனவாயிருக்கின்றன.) மேலும், அவர்கள்தாம் வழிதவறிப் போனவர்களாயிருக்கின்றார்கள்.

90. நிச்சயமாகவே, எவர் நன்னம்பிக்கை யற்றும், அவர்கள் நன்னம்பிக்கை யற்றவர்களாகவே (இறுதிவரை யிருந்து) மரணமடைந்து(ம்) விடுவார்களோ (ஞாபகத்திலிருக் கட்டும் ! அவர்களுடைய கொடிய கிரியைகளுக்குப் பதிலாக எப்படிப்பட்ட ஈட்டுப் பொருளும் பிரயோஜனம் தரமாட்டாது.) அவர்களுள் ஒருவரினின்றும் பொன்னைப் பூமி(யின் கனமாக) நிறைய, அதை(த் தன்னுடைய துர்க்கிருத்தியங்களுக்கு) ஈடாகக் கொடுத்தாலும் (அஃது) ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது ; அவர்களுக்கே நோவுண்ட தண்டனை யுண்டு ; மேலும், அவர்களுக்கு (அதுசமயம்) உதவிசெய்பவர்கள் (ஒருவரும்) இருக்கமாட்டார்.

# பாகம்—நான்கு

## பிரிவு — 10

*இஸ்லாத்தின் மெய்ம்மை குறித்து நிரந்தர சாக்ஷியம்.*

91. (முதலிலும் செல்வத்திலும்) நீங்கள் பிரியம் வைப்பதினின்றும் (தாராளமாக) நீங்கள் செலவுசெய்யும் வரை, நன்மை (யான சன்மார்க்க நிலைமை)யை (நீங்கள்) ஒருகாலும் பெற்றுக் கொள்ளவே மாட்டீர்கள்; நீங்கள் செலவு செய்யும் பொருளினை—(நன்மையானதோ அஃதல்லாததோ எப்படிப்பட்டதாயினும்) அல்லாஹ் அதனை (நிச்சயமாக) அறிகிறவனா யிருக்கிறான்.

92. தவ்ராத் (மூஸாவுக்கு) இறக்கப்படுவதற்கு முன்னே இஸ்ராயீல் — (யஃகூப்) தம்மீது விலக்கப்பட்டதாகச் செய்து கொண்டத(ாய வஸ்துவ)ல்லாது (சர்வசாதாரணமாய் உட்கொள்ளக்கூடிய) உணவுப் பொருள்களெல்லாம் பனீ இஸ்ராயீல்களுக்கு அனுமதிக்கப்பட் டிருந்தன. (ஆனால், நீங்கள் கூறுகின்றபடி அல்லாஹ் அவற்றை யெல்லாம் விலக்கிவிடவில்லை; ஆண்டவனே தான் அவற்றை யெல்லாம் உண்ணக்கூடா தென்றே விலக்கி யிருக்கிறான் என்று மீட்டும் நீங்கள் கூறுவீர்களாயின், ஏ நபியே! அவர்களுக்கு நீர்) சொல்வீராக: "(நீங்கள் கூறும் விஷயத்தில்) உண்மையாளர்களா யிருப்பீர்களாயின், தவ்ராத்தைக் கொண்டு வாருங்கள்; பின்னர் அதனை ஓதுங்கள் (பார்ப்போம். அதில் நீங்கள் சொல்லுகின்றபடி இருக்கின்றதா இல்லையா வென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.)"

93. பின்னர், எவர் இ(ந்)த(ப் பிரகடனத்தி)ற்குப் பின் (னும் பொய் சொல்வதை விட்டுவிடாமல்) அல்லாஹ்வின்மீது பொய்ம் மொழியைச் சுமத்துகின்றாரோ அவர்கள் தாம் அநியாயக்காரர்களா யிருக்கின்றார்கள்.

94. (ஏ நபியே! நீர் அம்மனிதர்களுக்குச்) சொல்வீராக: "அல்லாஹ் உண்மை(யைத் தெளிவாக) உரைத்தான்; எனவே (உங்கள் மனத்துள்ளே உண்மையை விரும்பும் குணமிருக்குமாயின்) 'நேர்மையான இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றி நடப்பீர்களாக; (அதன் பக்கலேதான் உங்களை நான் அழைக்கின்றேன்.) மேலும் (இப்ராஹீம்) இணைவைப்பவர்களுள் (ஒருவராக) இருந்தன ரில்லை."

95. நிச்சயமாகவே (அல்லாஹ்வின் வணக்கத்திற்காக) மனிதர்களுக்கு (ஏற்பாடுசெய்து) இடப்பட்ட முதல் வீடா(ன ஆலய

மா)னது பக்காவிலுள்ள (கஃபா வென்னும் மஸ்ஜிதி) தாகும்; (அஃது) ஆசீர்வதிக்கப்பட்டதாகவும், உலகத்தவர்களுக்கு நேர் வழி (யடைதற்குரிய ஊற்றின்வா) யாகவு மிருக்கின்றது.

96. அதில் (நேரான மார்க்கத்துக்குரிய அனேக) துலக்க மான அத்தாக்ஷிகளி(ன் சின்னங்க ளி)ருக்கின்றன: (அதில்) இப்ராஹீம் (நின்றுகொண் டிருந்த) இட(மு)ம் இருக்கின்றது. மேலும், அத(ன் எல்லையி)னுள் நுழைந்தவன் அச்சந்தீர்ந்தவ னுவான். (எனவே, அதற்குள்ளே நுழைந்த மனிதனைக் கொல்வது கூடாது.) மேலும், அதன் பக்கல் (நல்லமுறையில் நடந்து செல் வதற்கு வேண்டிய) வழியை—(சாதனங்களை) யுடைய சக்தி பெற்ற மனிதர்கள்மீது (அல்லாஹ்வின் அந்த) வீட்டை அல்லாஹ் வுக்காக ஹஜ்ஜு செய்யவேண்டுவது கடமையாக்கப்பட் டிருக் கிறது. (விஷயத்தை இத்துணைத் தூரம் விளக்கிக் காட்டியதன் பின்னும், இதனை ஏற்றுக்கொள்ளாது) மேலும் எவனேனும் நிராகரிப்பானுயின் (அவன் அல்லாஹ்வுக் கொன்றும் நஷ்டத்தை உண்டாக்குவ தில்லை; என்னெனின்:) நிச்சயமாகவே அல்லாஹ் உலகத்தவர்களை விட்டுத் தேவையற்றவனு யிருக்கிறுன்.

97. (ஏ நபியே! அவர்களுக்குச்) சொல்வீராக: "ஏ வேதத்தை யுடையவர்காள்! அல்லாஹ்வின் (உண்மையான) அத்தாக்ஷிகளை (நீங்கள் அறிந்தவர்களா யிருந்தும்) ஏன் நிராகரிக் கின்றீர்கள்? இன்னம், அல்லாஹ்வோ நீங்கள் செய்(துவரு) கின்றதன்மீது சாக்ஷியா யிருக்கிறுன் (என்பதுமட்டும் உங்கள் ஞாபகத்தி லிருக்கட்டும்.)"

98. (மேற்கொண்டும்) சொல்வீராக: "ஏ வேதத்தை யுடை யவர்காள்! நன்னம்பிக்கை கொண்டவரை அல்லாஹ்வின் பாதையை விட்டு ஏன் தடுக்கின்றீர்கள்? நீங்கள் (உண்மையை உணர்ந்துகொண்டு அதற்குச்) சாக்ஷிகளா யிருந்து கொண்டும், அ(வர்களின்பா)தை (யை)க் கோணலாய்ச் செய்ய நாடுகின்றீர் கள்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதை விட்டுப் பராமுக மானவனு யில்லை."

99. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! வேதத்தை யரு ளப்பெற்றவர்களினின்றும் ஒரு கூட்டத்தாரை—(அவர்கள் வார்த் தையை)ப் பின்பற்றுவீர்களாயின் (ஞாபகத்தில் வைத்துக்கொள் ளுங்கள்!) நீங்கள் (சத்தியத்தின்மீது) நன்னம்பிக்கை கொண்ட தன்பின் உங்களை (அவர்கள் சத்தியத்தை) நிராகரிப்பவர்களாகத் திருப்பிவிடுவார்கள்.

100. இன்னம், நீங்களோ—உங்கள்பால் அல்லாஹ்வின் திருவசனங்கள் ஓதிக் காட்டப்படுகின்றன; மேலும் (சத்தியபோதனைக்காகவும் நேர்வழி காட்டுவதற்காகவும்) உங்களுக்குள்ளே அவனுடைய தூதரு மிருக்கும்போது (நீங்கள்) எவ்வண்ணம் (சத்தியத்தை) நிராகரிக்கக்கூடும்? இன்னம், அல்லாஹ்வை உறுதியாகப் பற்றிக்கொண்டவன், திட்டமாக நேரான—(சீரிய)பாதையின் பக்கல் நடாத்தப்படுவான். (எனவே, இவன் ஒருகாலும் வழிதவறுவ தில்லை.)

---

## பிரிவு — 11

முஸ்லிம்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டப்படுகின்றனர்.

101. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! உண்மையிலே அவனுக்கு அஞ்சவேண்டிய முறைப்படி அல்லாஹ்வுக்கு அஞ்சி (ஒழுகி)க் கொள்ளுங்கள்; மேலும் (அத்தன்மைத்தாய) வழிபடுபவர்களா யிருந்தல்லாது நீங்கள் மரணமடையாதீர்கள்.

102. இன்னும், அல்லாஹ்வின் கயிற்றை நீங்களெல்லாம் (ஒன்றாகச் சேர்ந்து) உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்; மேலும் (நீங்கள் தனித்தனியே) பிரிந்து விடாதீர்கள்; மேலும், உங்கள் மீது சொரியப்பட்ட அல்லாஹ்வின் அருட்கொடையை நினைத்துப்பாருங்கள்: (எப்படிப்பட்ட அருட்கொடை யெனின், ஆதியிலே) நீங்கள் (உங்களுக்குள்ளே) பகைவர்களா யிருந்தபோது (அதுகண்டு) பின்னர் உங்களுடைய ஹிருதயங்களுக்குள் அன்பை—(பிரியத்தை அல்லாஹ்) நிலைபெறுத்தினான்; ஆகவே, அவனுடைய அருட்கொடையின் பயனாய் (நீங்கள்) சோதரர்களாக ஆய்விட்டீர்கள்; (இதுமட்டுமா?) மேலும் (நீங்கள்) நெருப்பினாலாய அகழின் (நெருங்கிய) ஓரத்தி லிருந்தீர்கள்; எனவே (அல்லாஹ் தன்னருளால்) அதினின்றும் உங்களைக் காப்பாற்றினான்; நீங்கள் நேர்வழி பெற்றவர்க ளாவான்வேண்டி அல்லாஹ் தன்னுடைய அத்தாக்ஷிகளை இங்ஙனமே உங்களுக்கு விளக்கிக்காட்டுகிறான்.

103. இன்னம், உங்களுள்(ளே) ஒரு கூட்டத்தார், (மானிடர்களை அல்லாஹ்வின்) நன்மையின்—(மூர்க்கத்தின்) பக்கல் அழைக்கிறவர்களாகவும், நன்மையானதைக் கொண்டு ஏவுகிறவர்களாகவும், தீமையானதை விட்டு (மனிதர்களைத் தடுத்து) விலக்குகிறவர்களாகவும் இருக்கக் கடவார்களாக; மேலும் (நிச்சயமாக) அவர்களேதாம் ஜயம்பெற்றவர்களா யிருக்கின்றார்கள்.

104. (இவ்வளவுடன் நில்லாது) மேலும் (ஒற்றுமையுடன் நில்லாது) தங்களிடம் பிரத்தியக்ஷ பிரமாணங்கள் வந்ததன் பின் (னும் உண்மையைப் பின்பற்றாது) விகற்பம் செய்து கொண்டவர்களும் (தனித்தனியே) பிரிந்துபோனவர்களுமே போல (நீங்கள்) ஆய்விடாதீர்கள்; மேலும் (இப்படிச் செய்துவரும்) அவர்களுக்கே பெரிய தண்டனையுண்டு;

105. (நிச்சயமாக வரப்போகும் அந்) நாளில் (பல) முகங்கள் வெண்மையாய்(ப் பிரகாசித்துக் கொண்டு) இருக்கும்; மேலும் (பல) முகங்கள் (தாம் செய்த தீமையின் பயனாகக்) கறுத்துப்போயிருக்கும்; பிறகு, எவருடைய முகங்கள் (தங்கள் பாபத்தால்) கறுத்துப்போய் விட்டனவோ, அவர்க(ளுக்குச் சொல்லப்படும்: "நீங்க)ள் நன்னம்பிக்கை கொண்டதன்பின் (சத்தியத்தை) நீங்கள் நிராகரித்தீர்களா? ஆதலின், நீங்கள் நிராகரித்தவர்களாய் (மாறி) இருந்ததன் பயனாக (இன்று இங்கு இந்த நரக) வேதனையைச் சுவைத்துப்பாருங்கள்."

106. மேலும், எவருடைய முகங்கள் (தாங்கள் பெற்ற ஜயத்தின் காரணத்தால் சந்தோஷமாய முகமலர்ச்சியுடன் பிரகாசித்துக்கொண்டு) வெண்மையாய் விட்டனவோ, அவர்கள் அல்லாஹ்வின் (மேன்மையான) கருணை(ப் பிரவாகத்தின்)உள் ளிருப்பார்கள்; (இன்னமும்) அவர்கள் அதிலேயே (சதா) நிலைத்திருப்பார்கள்.

107. (ஏ நபியே!) இவை அல்லாஹ்வின் திருவசனங்களாகும்; அவற்றை (நாம்) உண்மையுடன் எடுத்தோதுகின்றோம்; மேலும், அல்லாஹ் உலகத்தவருக்கு அநியாயத்தை(ப் புரிய) நாடவில்லை.

108. மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும்!) வானங்களி லுள்ளனவும் பூமியிலுள்ளனவும் (ஆகிய வெல்லாம்) அல்லாஹ்வுக் குரியனவாகவே யிருக்கின்றன; மேலும் (சகல) காரியங்களும் அல்லாஹ்வின் பக்கலே திருப்பப்படும்.

---

பிரிவு — 13

முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கு முள்ள சம்பந்தா சம்பந்தம்

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRA BESANT NAGAR, MADRAS-

109. (ஏ உண்மை யழைப்பை ஏற்றுக்கொண்ட உத்தம அடியார்காள்! நீங்கள்) மனிதர்களுக்கு (நேர்வழி காட்டி நன்மை புரியுமாறு) வெளியாக்கப்பட்ட கூட்டத்தாருள் மேன்மையான

(சிறந்த)வர்களா யிருக்கின்றீர்கள்; (எவ்வா றெனின்) நன்மையைக்கொண்டு (மனிதர்களை நடக்கும்படி) ஏவுகின்றீர்கள்; மேலும், தீமையைவிட்டு (அம் மனிதர்களைத் தடுத்து) விலக்குகின்றீர்கள்; இன்னம் (இவ்வளவுடன் நில்லாது நீங்கள் பரிபூரண மனத்துடனே) அல்லாஹ்வின்மீது நன்னம்பிக்கை(யும்) கொள்ளுகின்றீர்கள்; மேலும் (இதைத் தெரிந்து கொண்டதன் பின்னர் விகற்ப மொன்றும் செய்யாமல்) வேதத்தை யுடையவர்(கள்) நன்னம்பிக்கை கொள்வாராயின், அவர்களுக்கு (அது) நன்மையானதாக ஆகும்; (ஆனால், அவர்கள் எல்லாரும் இதை ஏற்றுக் கொள்ளுவார்களா வென்றால், அதுதான் இல்லை; எனினும்) அவர்களுள் (சிலர்) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருக்கின்றனர்; மேலும், அவர்களுள் அதிகம் (மனிதர்கள் மார்க்க) வரம்பைக் கடந்த (பாவியான)வர்க ளாகவே யிருக்கிறார்கள்.

110. (ஏ உண்மை யடியார்காள்! அவர்கள் உங்களை எத்துணைத்தூரம் பகைத்துக் கொள்ளினும், ஒருசிறிது) நோவினையல்லாது உங்களுக்கு நஷ்டத்தை யுண்டுபண்ண மாட்டார்கள்; மேலும் (அவர்கள்) உங்களுடன் யுத்தம் செய்வார்க ளாயின், (இறுதியாக அவர்கள்) உங்களுக்கு (முன்) புறமுதுகு காட்(டியே ஓ)டுவார்கள்; பின்னர் (அவர்கள்) உதவி செய்யப்பட மாட்டார்கள்.

111. அல்லாஹ்வினின் றுண்டான கயிற்றை—(அறுதிப் பாட்டை)க் கொண்டும், மனிதரினின் றுண்டான கயிற்றை—(அறுதிப்பாட்டை)க் கொண்டு மல்லாது (யூதர்களாய) அவர்கள் எங்குக் காணப்பட்டாலும், அவர்கள்மீது தாழ்மையே (ஏற்பாடு செய்து) தறையப்பட்டது; (அவர்கள்) மேலும், அல்லாஹ்வின்பாலிருந்துண்டாகும் கோபத்துக்குரிய ஸ்தலமாக ஆய்விட்டார்கள்; மேலும், அவர்கள்மீது ஏழ்மையே (ஏற்பாடு செய்து) தறையப்பட்டது; இஃது (எற்றுக் கெனின்) அவர்கள் அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளை நிராகரித்த வர்களாகவும், அநியாயமாக நபிமார்களைக் கொலை புரிந்துகொண் டிருந்தவர்களாகவும் ஆய்விட்ட காரணத்தால் (தான்); (அன்றியும்) இஃது, அவர்கள் கீழ்ப்படியாமலிருந்ததோடு, எல்லையைக் கடந்தவர்களாகவும் ஆய்விட்டார்கள் (என்றதனுலேதான்).

112. அவர்கள் (எல்லாரும் ஒரே மனப்பான்மையைக் கொண்ட) சரியானவர்களா யில்லை; வேதத்தை யருளப்பெற்றவர்களி னின்றும் ஒருகூட்டம் (நேரான மார்க்க போதனையின் பிரகாரம் சரியாய்) நிலைத்திருக்கின்றது; (அவர்கள்) இரவின்

வேளைகளில் (எழுந்து) அல்லாஹ்வின் திருவசனங்களை ஓதுகிறார்கள்; மேலும், அவர்கள் (அல்லாஹ்வுக்காகத் தங்கள் பரிபூரண மனத்துடனே) சிரவணக்க(மு)ம் செய்கின்றார்கள்.

113. (இன்னமும் அக் கூட்டத்தார்கள்) அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் நன்னம்பிக்கை கொள்ளுகிறார்கள்; மேலும், நன்மையைக்கொண்டு (மனிதர்களுக்கு) ஏவுகின்றனர்; தீமையை விட்டு (அவர்களை) விலக்குகின்றனர்; மேலும், நன்மைக(ளான காரியங்க)ளில் ஒருவரோ டொருவர் விரைந்து (முந்திச்) செல்லுகின்றனர்; மேலும், அவர்கள்(தாம்) நல்லோர்களுள் (சேர்ந்தவர்களாக) இருக்கின்றார்கள்.

114. இன்னம், நன்மையினின்றும் எதை அவர்கள் செய்கின்றார்களோ, அதை — (அதன் பிரதிபலனை அல்லாஹ்வால் அளிக்கப்பெறாமல்) நிராகரிக்கப்பட மாட்டார்கள்; மேலும், அல்லாஹ் (தனக்கு) அஞ்சி நடப்பவர்களை அறிகிறவனா யிருக்கிறான் (என்பது ஞாபகத்தி லிருக்கட்டும்).

115. எவர்கள் (சத்தியத்தை) நிராகரித்தார்களோ, அவர்களுடைய முதல்களும், அவர்களுடைய பிள்ளைகளும், அல்லாஹ்வினின்றுண்டாகும் (வேதனையின் போது) ஒரு வஸ்துவுக்கும் அவர்களுக்காகப் பிரயோஜனம் தரமாட்டா; மேலும், அவர்கள்(தாம் தாங்கள் செய்த பாபத்தின் காரணமாக) அக்கினிவாசிகளாவர்; அதிலேயே அவர்கள் நிலைத்திருப்பார்கள்.

116. (இப்படிப்பட்ட குணவிசேஷமுடைய) அவர்கள் இவ்வுலக வாழ்க்கை விஷயத்தில் செலவு செய்வதற்கு(ரிய) உவமையானது, தங்கள் ஆன்மாக்களுக்கு (அதிகமான கஷ்டம் கொடுத்து) அநியாயம் புரிந்தும் அவைகளை நாசப்படுத்தியும் விட்ட ஒரு கூட்டத்தின் வேளாண்மையில், தன்னுள் நெருப்பு (அல்லது கடுமையான குளிரை)க் கலந்த (மிகவேகமாய் வீசக்கூடிய) காற்றுச் சேர்ந்து, பின்னர் (அக்காற்று) அதனை நாசப்படுத்தி விட்டதே போன்ற உவமை(க் கதை)க்கு ஒத்ததாகும்; (என்னெனின், அவர்கள் செய்யும் செலவின் நன்மைகளை யெல்லாம் தங்களிடமுள்ள நிராகரிப்புத் தன்மையும் நன்னம்பிக்கையற்ற குணமும் நாசமடையும்படி செய்துகொண் டிருக்கின்றன.) மேலும், அல்லாஹ் அவர்களுக்கு அநியாயம் செய்யவில்லை; ஆனால் (அவர்கள்) தங்களுடைய ஆன்மாக்களுக்கே (தாங்கள்) அநியாயம் செய்கின்றார்கள்

117. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! உங்க(ள் சொந்த ஜனங்க)ளை(ப் போன்ற நன்னம்பிக்கை கொண்டவர்களை) யல்லாது (மேற்கூறப்பட்டவர்களே போலுள்ள) ஏனையருள்ளிருந்து அந்தரங்க நண்பர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாதீர்கள்; உங்களுக்குக் கஷ்ட (நஷ்ட)ம் கொடுப்பதில் அவர்கள் குறையொன்றும் செய்வதில்லை; மேலும், நீங்கள் கடுமையாய்க் கஷ்டப்பட வேண்டுமென்பதை (அன்னவர்) விழைகின்றனர்; அவர்களுடைய நாக்களி னின்றும் (உங்கள் மீதுள்ள அவர்களது) அடங்காக் கோபம் வெளியாய்விட்டது; இன்னம், அவர்களுடைய நெஞ்சங்கள் மறைத்து வைத்திருப்பது (அதனைக் காட்டினும் மிகப்) பெரியதா யிருக்கிறது; திட்டமாக, நீங்கள் புத்திசாலிகளா யிருப்பீர்களாயின், நுங்களுக்கு அத்தாக்ஷிகளை (நாம்) விளக்கிக் காட்டினோம். (எனவே, உண்மையை உணர்ந்துகொள்ளக் கடவீர்கள்.)

118. கவனியுங்கள்! (உங்கள் நிலைமையோ வெனின்) அவர்களை நீங்கள் நேசிக்கின்றவர்களா யிருக்கின்றீர்கள்; (ஆனால், அவர்கள் நிலைமையோ வெனின்) இன்னம் (ஒரு சிறிது நேரத்திற் கேனும்) உங்களை (அவர்கள்) நேசிக்கின்றார்களில்லை; மேலும், வேத முழுதைக் கொண்டும் (நீங்கள்) நன்னம்பிக்கை கொள்ளுகின்றீர்கள்; (எனவே, அவர்களுடைய வேதத்தை யெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொண்டமையான் அவர்களை இயற்கையாகவே நீங்கள் நேசிக்கிறீர்கள். ஆனால், அவர்களது மனப்பான்மையோ விரோதமா யிருக்கின்றது.) எனவே (அவர்கள்) உங்களைச் சந்திக்கும்போது, "நாங்கள் நன்னம்பிக்கை கொண்டோ" மெனக் கூறுகின்றனர்; மேலும் (உங்களை விட்டு நீங்கிப்) பிரிந்துவிடுவார்களாயின், உங்கள்மீது (ண்டா யிருக்கும்) கொடிய கோபத்தினால் தங்கள் விரல்களைக் கடிக்கின்றனர்; (ஆகவே, இப்படிப்பட்ட மனிதர்களை உங்களுக்குரிய அந்தரங்க அத்தியந்த நண்பர்களாய்ச் செய்துகொள்வதும், அவர்களை நேசிப்பதும் எங்ஙனம் நன்மையாகும்? ஆதலின், அப்படிப்பட்டவர்களுக்கு நீர்) சொல்வீராக: "உங்களுடைய கடினமான கோபத்திலே (அப்படியே) மரணமடைவீர்களாக; நிச்சயமாகவே அல்லாஹ் நெஞ்சங்களிலுள்ளதை அறிகிறவனா யிருக்கிறான்.

119. (இதுமட்டுமா?) உங்களுக்கேதேனும் நன்மை (வந்து) அடுக்குமாயின், அவர்களுக்கு(ப் பிடிக்காமல் அது வருத்தந் தரக்கூடிய) தீமையா யிருக்கிறது; மேலும், உங்களுக் கேதேனும் தீமைவந் தணுகுமாயின், அதைக் கொண்டு (அவர்கள்) சந்தோஷ

மடைகிறார்கள்; எனவே, அவர்கள் பல வழிகளாலும் உங்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கவேண்டுமென்றே கருதுகிறார்கள். (ஆதலால்) இன்னும் நீங்கள் பொறுத்துக்கொண்டும் (அல்லாஹ்வின் வரம்பைக் கடவாமல் அவனுக்கு) அஞ்சி நடந்துகொண்டும் இருப்பீர்களாயின், அவர்களுடைய மனோராஜ்யம் உங்களுக்கொரு வாற்றானும் தீமை பயக்காது; நிச்சயமாகவே அல்லாஹ் அவர்கள் செய்வதை (யெல்லாம் தன் ஞானத்தால் அடைய) வளைந்தவனா யிருக்கிறான்.

---

## பிரிவு — 13

### உஹுத் யுத்த விஷயம்.

120. இன்னும் (ஏ நபியே, நீர் கவனிப்பீராக!) நன்னம்பிக்கை கொண்டவர்களை யுத்தத்திற்காக (அதற்குரிய) ஸ்தானங்களில் அமர்த்தும் பொருட்டு நீர் நும்முடைய குடும்பத்தாரை விட்டு அதிகாலையில், (உஹுதென்னும் யுத்தகளத்தை நோக்கிப்) புறப்பட்டுச்சென்றீர்—(அவ்விஷயத்தை நினைத்துப் பார்ப்பீராக.) மேலும், அல்லாஹ் கேட்பவனாக(வும்) அறிகிறவனாக(வும்) இருக்கின்றான்.

121. உங்களுள்ளிருந்து இரண்டு கூட்டம் பயங்கொள்ளித்தனத்தைக் காட்ட நாடியபோது (நடந்ததை நினைத்துப் பாருங்கள்; ஆனால்) மேலும், அல்லாஹ்வோ அவ்விருவருக்கும் பாதுகாவலனா யிருக்கிறான் (என்பதை அவர்கள் சிந்திக்கவில்லை). மேலும், அல்லாஹ்வின்மீதே நன்னம்பிக்கை யுள்ளவர்கள் பொறுப்பு—(நம்பிக்கை) வைத்தல் வேண்டும்.

122. மேலும் (உங்கள் கவனத்திலிருக்கட்டும்:) பத்(ரெனும் யுத்தத்துக்கு)ரி(ய ஸ்தலத்தி)ல் நீங்களோ ஏழ்மையானவர்களாய்—(பலஹீனமுள்ள ஒருசில மனிதர்களாக) இருந்தீர்கள்; உங்களுக்கு (ஜயத்தைக்கொண்டு) நிச்சயமாகவே அல்லாஹ் உதவி செய்தான்; ஆதலின் (அவனுடைய அருட்கொடையின் மீது) நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்.

123. (ஏ நபியே! "அந்த யுத்தசமயத்தில்) வானவர்களினின்றும் இறக்கப்பட்டவர்களான மூவாயிரங்களைக்கொண்டு *

---

* முதன் முதலாய், பத்ர் யுத்தத்தின்போது பகைவர்களாயிருந்த குறைஷிகள் ஆயிரம் பேர்; இதற்காக அல்லாஹ்வின் உதவியால் ஆயிரம் வானவர்கள் தோன்றினார்கள் என்று (8: 9-ஆம்) திரு வாக்கியம் கூறுகின்றது. இவ்வாயத்

(மூவாயிரம் எதிரிகளுக் கெதிரே) உங்களுடைய ரக்ஷகன் உங்களுக்கு உதவி செய்வதென்பது உங்களுக்குப் போதாதா?" என்று நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு நீர் சொன்னீர்; (அவ்வமயம் நிகழ்ந்த விஷயத்தையும் நினைத்துப் பார்ப்பீராக.)

124. ஆம்! (போதும். நீங்கள்) பொறுமையுடன் (கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு) இருப்பீர்களாயின், மேலும் (உங்கள் காரியங்களில் அல்லாஹ்வுக்கு) அஞ்சி (ஒழுகி)க் கொள்வீர்களாயின், இன்னம் (இதற்கிடையே எதிர்பாராவண்ணம் திடுகூறாய்க் குப்பார்கள்) தங்கள் பூரண பலத்துடனே உங்கள்பால் (யுத்தத்திற்கு வலிய) வருவார்களாயின் (அப்பொழுதும் நீங்களொன்றுக்கும் அஞ்சவேண்டுவ தின்று. என்னெனின், அம் மூவாயிரங்களைக் கொண்டுமட்டு மன்று!) விநாசம் செய்யக் கூடிய வானவர்களினின்றும் ஐயாயிரம் பேர்களைக்கொண்டு(ம்) உங்கள் ரக்ஷகன் உங்களுக்கு உதவிபுரிவான்.

125. மேலும் (உங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்! இங்ஙனம் கூறிய) அதனை உங்களுக்கு (ஜயத்திற்குரிய ஒரு) சுபசெய்தியாக வல்லாது அல்லாஹ் (வெறுமையாகக் கூறச்) செய்யவில்லை; மேலும், அதைக்கொண்டு உங்கள் ஹிருதயங்கள் சாந்தியடைவதற்காகவும்(தான் கூறினான்.) மேலும், உதவியென்பது (உண்மையிலே) வன்மையுள்ளவனுக(வும்) ஞானமுள்ளவனுக(வும்) உள்ள அல்லாஹ்வினிட மிருந்தே யல்லாது (வேறெவரிடத்திருந்தும்) இல்லை.

126. (மேலும், அல்லாஹ் உங்களுக்கு இவ்வாறு உதவி செய்வது) நிராகரித்தவர்களினின்றும் ஒருசார்பா (ராய கூட்டத்தா)ரை (எஞ்சியுள்ளவர்களைவிட்டு)த் துண்டிப்பதற்காக, அல்லது (இங்ஙனம் உதவி செய்து) அவர்களை இழிவு படுத்துவதற்காக

---

தில் மூவாயிரம் வானவர்கள் முஸ்லிம்களின் உதவிக்காக இறங்கினார்க ளென்பது உஹத் யுத்தத்தின்போது நடந்ததைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றது. உஹத் யுத்தத்தில் மூவாயிரம் குறைஷிகளே முஸ்லிம்களுக்கு விரோதிகளாய் வந்தனர். (3:124-இல்) ஐயாயிரம் வானவர் வருவதாய் ஒரு விஷயம் காணப்படுகிறது. இஃது அஹ்ஜாப் யுத்தத்தைக் குறித்துக் காட்டுகின்றது. அஹ்ஜாப் யுத்தத்தின்போது குறைஷிகள் தங்கள் சுற்றுப்புறங்களிலுள்ள கூட்டங்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு சுமார் பத்தாயிரத்துக்கு மேற்கொண்ட கூட்டமாகவே வந்தனர். அம் மாபெரும் எதிரிகளான கூட்டத்தில் அசல் பகைவர்களா யிருந்த குறைஷிக் குப்பார்கள் ஐயாயிரம் பேர்கள்தாம். எனவே, ஐயாயிரம் வானவர்கள் அந்த அஹ்ஜாப் யுத்தத்தின்போது இறங்கி யிருக்கின்றனர். இங்கு ஒரு விஷயம் கவனிக்கவேண்டும்: வானவர்கள் மூமின்களுக்கு உதவியாய் வந்து தோன்றினார்க ளென்பதையும், மூமினீன்களுக்கு அன்னார் உதவி செய்தார்க ளென்பதையும் திண்ணமாய் உண்மையென நம்பவேண்டும்.

(என்பது நுங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்.) ஆதலின் (அவர்கள்) நாடியதைப் பெற்றுக்கொள்ளாத (ஏமாற்றமடைந்த)வர்களாய்த் திரும்பிவிடுவார்கள்.

127. (ஏ நபியே!) உமக்கு இக்காரியத்தில் ஒன்றும் சம்பந்தமில்லை; (அஃதாவது) அவர்கள்மீது (இரக்கங்கொண்டு, அல்லாஹ் பாபமன்னிப்பின் பக்கல்) திரும்புவான்; அல்லது அவர்களுக்கு வேதனை (கொடுக்கச்) செய்வான்; (எனவே, நீர்மட்டும் மனிதர்கள் எப்படிப்பட்ட கொடுமையாளர்களா யிருப்பினும் அதைக்கண்டு உம்முடைய மனத்தைத் தளர்ச்சியடையச் செய்து கொள்ளாது அவர்களைச் சத்தியத்தின் பக்கலே சதா அழைத்துக்கொண் டிருப்பீராக.) ஆகவே, அவர்கள் நிச்சயமாக அநியாயக்காரர்களா யிருக்கிறார்கள்.

128. இன்னம், வானங்களி லுள்ளவைகளும், பூமியிலுள்ளவைகளும் (ஆகிய சகல வஸ்துக்களும்) அல்லாஹ்வுக்கே உரியனவா யிருக்கின்றன; (ஆதலின், தான்) நாடியவருக்கு மன்னிப்பை யளிக்கிறான்; மேலும் (தான்) நாடியவரைத் தண்டிப்பான்; (ஆகவே, ஒருவரும் அவனுடைய இக்காரியத்தில் தலையிட்டு அதை மாற்றுவதேனும் திருத்துவதேனும் முடியாது; ஆனால்) இன்னம், அல்லாஹ் (பாபங்களை) மன்னிப்பவனாக(வும், சிருஷ்டிகள்மீது) அன்புடையோனாக(வும்) இருக்கிறான்.

## பிரிவு—14

### ஜயம்பெறுவ தெப்படி ?

129. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! இரட்டிப்பாக்கப்பட்ட இரட்டிப்புக்களாக வட்டிப் பொருளைத் தின்னாதீர்கள்; மேலும், நீங்கள் ஜயம் பெறும்பொருட்டு அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்.—(அவனுடைய உபதேசங்களுக்கு விரோதம் செய்யாதீர்கள்.)

130. இன்னம் (சத்திய போதனையை) நிராகரிப்பவர்களுக்குத் தையாரிக்கப்பட் டிருக்கும் அக்கினியை—(அதனாலுண்டாகும் வேதனையை) அஞ்சிக்கொள்ளுங்கள்.

131. இன்னம், நீங்கள் (ஈருலகிலும் ஜய சீலர்களாய்) அன்புபாலிக்கப் படுவான்வேண்டி, அல்லாஹ்வு(டைய கட்டளைகளு)க்கும், (அவனுடைய) தூதரு(டைய போதனைகளு)க்கும் வழிபடுவீர்களாக.

132. இன்னம், உங்களுடைய ரக்ஷகன்பாலிருந் துண்டா யிருக்கும் (பாப) மன்னிப்பின் பக்க(லு)ம், மேலும் (அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவர்களுக்கென்று தையாரிக்கப்பட் டிருக்கும்) உய்யானம்—அதன் விஸ்தீரணம் வானங்களும் பூமியும் கொண்டது—(அத்துணைப் பெரிதான தோட்டத்தின்பக்கலும்) விரைந்து செல்லுங்கள். (பின்னர் நீங்கள் அதிக சுகமா யிருப்பீர்கள்.) (ஆண்டவனுக்கு) அஞ்சி நடப்பவர்களுக்கென (அது) தையார் செய்யப்பட்டிருக்கிறது.

133. (அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவர்கள் யார் எனின்) சந்தோஷ(மா யிருக்கும் செல்வச்சமய)த்திலும், (கையிலொன்றும் செல்வச் செருக்கில்லாத) சங்கடத்திலும் (அல்லாஹ்வின் பாதையில் அளவிறந்து) செலவு செய்கின்றவர்கள்; மேலும் (தங்கள்) கடினமான கோபத்தை அடக்கிக் கொள்ளுகின்றவர்கள்; மேலும், மனிதரை—(அவர்களது தீமையை) மன்னித்து விடுகின்றவர்கள்; (இப்படிப்பட்ட குணமுடையவர்கள் நன்மை புரிகின்றவர்களா யிருக்கின்றனர். எனவே) இன்னம், அல்லாஹ் நன்மை புரிவோர்களை(யே) நேசிக்கிறான்.

134. இன்னம், பகிரங்க துராசார (ஒழுக்க வீன)த்தைப் புரிந்து விடுங்கால், அல்லது தங்கள் ஆன்மாக்களுக்கு அநியாயத்தைப் புரிந்து விடுங்கால், அவர்கள் (ஆண்டவனது தண்டனைக் கஞ்சி) அல்லாஹ்வைத் தியானிக்கின்றவர்கள்; பின்னர்த் தங்களுடைய பாபங்களுக்கு மன்னிப்புத் தேடுகின்றவர்கள்;—(அன்னோர் அல்லாஹ்வுக்கு அஞ்சிநடப்பவரா யிருக்கின்றனர்.) மேலும், அல்லாஹ்வைத் தவிர்த்துப் பாபங்களை மன்னிப்பவன் (வேறு) எவன் (உளன்)? (ஒருவனு மில்லை.) மேலும், அவர்கள் (தாங்கள் செய்த தவற்றை) அறிகிறவர்களா யிருந்து கொண்டு, (முன்னமே) தாங்கள் செய்த (பாபத்)தின்மீது அப்படியே (மேன்மேலும் தொடர்ந்து செய்துகொண்டு) இருப்பதில்லை.

135. அவர்கள் (குறித்து என்ன வென்றாலோ)—அவர்களது பிரதிபலன் தங்களுடைய ரக்ஷகன்பா லிருந்து (பாப) மன்னிப்பும், தமக்குக் கீழே நீரருவிகள் ஓடுகின்ற உத்தியானவனங்களுமா யிருக்கின்றன; அவற்றிலே(யே) அவர்கள் (சதா) நிலைத்திருப்பார்கள்; (அவ் வுத்தியானவனங்கள் ஒருகாலும் உலர்ந்து போவதில்லை.) மேலும் (நன்மையான) கிரியைகளைச் செய்பவர்களின் கூலி நல்லதாயிருக்கிறது.

136. (இன்னமும் நிதானமாய்க் கவனித்துப் பாருங்கள் :) திட்டமாக உங்களுக்கு முன்னம் (இத் தரணியின்கண் பற்பல வர்க்கத்தாரின்) மார்க்கங்கள் — (உவமைக்குரிய காரியங்கள்) சென்றுவிட்டன ; ஆதலின், பூமியில் (திரிந்து நீங்கள்) சுற்றிப் பாருங்கள் ; பின்னர், (அல்லாஹ்வின் சத்திய ஆணைகளைப்) பொய்யாக்கியவர்களின் முடிபு (எத்துணைக் கொடிதாய்) எவ்வாறு ஆய்விட்டதென்பதை(யும்) நோக்குவீர்களாக.

137. (இங்ஙனம் கூறும்) இது மனிதர்களுக்கு (ஆழ்ச்சிந்தித்துப் பார்த்து உண்மை விஷயத்தை உணர்ந்து கொள்வதற்காக ஒரு) விளக்கமாக விருக்கின்றது ; மேலும் (இஃது அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடப்பவர்களுக்கு நேர்வழியாகவும் (நன்மையைப் போதிக்கக்கூடிய) உபதேசமாகவும் இருக்கின்றது.

138. (ஏ என்னடியார்காள் !) இன்னம் (நீங்கள் உண்மையையும் உறுதியையும் உயரச் செய்வதில் ஒருபோதும்) சோர்வடையாதீர்கள் ; மேலும், கவலைக்குள்ளாகாதீர்கள் ; இன்னம், நீங்கள் (உண்மையிலேயே என்மீது பரிபூரண, உறுதியான) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பீர்களாயின், நீங்கள் (இறுதியிலே ஒவ்வொரு விஷயத்திலும்) மேலானவர்களாகவே யிருப்பீர்கள்.

139. உங்களுக்கு (உஹுத் யுத்தத்தின்போது) ஏதேனும் (வெட்டுக்) காயம் பட்டிருக்குமாயின் (அதில் ஆச்சரியப்படவோ அன்றி நீங்கள் கவலைப்படவோ காரணம் எதுவுமில்லை. என்னெனின்) அஃதே போலக் காயம் (எத்தனையோ எதிரிகளின்) கூட்டத்துக்கு (அப்படிப்பட்ட யுத்தத்தின்போது) நிச்சயமாகவே பட்டிருக்கிறது ; மேலும், அந்நாட்களை மனிதர்கள் மாட்டு (நாம்) மாறிமாறி(யே) கொண்டுவருகிறோம் ; (ஒரு கூட்டத்தார் ஒரு சமயம் யுத்தத்தில் ஜயம் பெறுகின்றனர் ; மற்றொரு சமயம் அவர்களே தோல்வியுறுகின்றனர்கள். எனவே, இதனால் நீங்கள் உங்கள் தைரியத்தைக் கைவிடவேண்டாம்.) மேலும் (அல்லாஹ் இங்ஙனம் செய்வதில் பெரிய நன்மையே யுண்டு. அஃதென்னவெனின்) நன்னம்பிக்கை கொண்டவர்களை அல்லாஹ் அறி(ந்து சோதனை செய்)வதற்காகவும், உங்களுள்ளிருந்து (இக்காரியத்தைப்பற்றிக் கூறும்) சாக்ஷிகளாக அவன் எடுத்துக் கொள்வதற்காகவும் (இப்படிச் செய்கிறான்.) மேலும் (உண்மையான விஷயங்களை யெல்லாம் உணர்ந்தும் அப்படியே நடவாமலிருக்கும்) அநியாயக்காரர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை

140. இன்னம் (அல்லாஹ் இங்ஙனம் ஏன் செய்கின்றா னெனின்) நன்னம்பிக்கை கொண்டவர்களான அவர்களை அல்லாஹ் (யுத்தத்தின் பயனாய்த் தங்களிடமுள்ள பலஹீனத்தையும் அவநம்பிக்கையையும் நீக்கி அவன்) பரிசுத்தப்படுத்தி நிறுத்துவதற்காகவும், (சத்தியத்தை) நிராகரித்தவர்களை (முஸ்லிம்களின் அபார சக்தியால் ஒரே முறையில்) அவன் அழித்துவிடுவதற்காகவும் (இங்ஙனம் செய்கிறான்).

141. (ஏ மானிடர்காள்! நீங்கள் நன்னம்பிக்கை கொண்டுவிட்டதாக நாவினால் மட்டுமே கூறிவிட்டு, அதற்குரிய பரிசோதனைகளுக் குள்ளாகா முன்னரே, அஃதாவது) அல்லாஹ் உங்களுள்ளிருந்து (தனது பாதையில்) பெரு முயற்சி செய்பவரை (இன்னாரென்று வெளிப்படுத்தி) இன்னம் அறியாம லிருக்குங் காலையில், மேலும் (தன் பாதையில் உண்டாகும் கஷ்டங்களைச்) சகித்துக்கொண் டிருப்பவரை (இன்னாரென்று மனிதர்களுக்கு வெளிக்காட்டி) அறிந்து (கொள்ளாமல்) இருக்குங் காலையில் நீங்கள் சுவர்க்கத்துள் நுழைந்து கொள்வீர்களென்று நினைக்கின்றீர்கள்?

142. மேலும், திட்டமாகவே நீங்கள் (மரணமாகிய) அதைச் சந்திப்பதற்கு முன்னே (யுத்தத்தில் சென்று கலந்துகொண்டு) மரணத்தை எதிர்பார்த்தவர்களா யிருந்தீர்கள்; எனவே (பின்னர் யுத்த சமயத்தில்) திட்டமாக அ(ந்த மரணத்)தைக் கண்டுகொண்டீர்கள். மேலும், நீங்கள் பார்த்துக்கொண் டிருக்கின்றீர்கள்.

---

## பிரிவு — 15

### கஷ்டநஷ்டங்களை விடாப்பிடியுடன் சகித்துவரவேண்டும்.

143. இன்னம், முஹம்மத் (அல்லாஹ்வின் ஒரு) தூதரே யல்லாது (வேறொன்றும்) இல்லை; அவருக்குமுன் (வந்த) தூதர்கள் (தத்தம் காலத்தில் தோன்றி, உண்மை யுபதேசத்தை மக்களுக்கு எடுத்துரைத்து விட்டுச்) சென்று விட்டார்கள்; (ஆதலின், இத்தூதரும் அல்லாஹ்வின் ஆணைப்படி) மரணமடைந்து விடுவராயின், அல்லது (இவர் ஒருகால்) கொல்லப்பட்டு (மரணமடைந்து) விடுவராயின் (நீங்கள்) உங்கள் 'பின்புறமாய்த் திரும்பிவிடப் போகின்றீர்களோ? (அஃதாவது, நேரான வழியை விட்டு வேறான மார்க்கத்தைக் கைக்கொள்ளப் போகின்றீர்களோ?) மேலும், எவனேனும் தன்னுடைய பின்புறமாய்த்

திரும்பிவிடுவானாயின் (அவன் தனக்குத்தான் சங்கடத்தை உண்டு பண்ணிக் கொள்ளுகிறானல்லாது) அல்லாஹ்வுக் கொன்றையும் கெடு(த்துச் சங்கடங் கொடு)க்கமாட்டான்; மேலும் (இத்தன்மைத்தாய அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு) நன்றி செலுத்துகிறவர்களுக்கு அல்லாஹ் சமீபத்தில் (நன்மையான) பிரதிபலனை யளிப்பான்.

144. மேலும் (ஞாபகத்தி லிருக்கட்டும்:) குறிப்பிட்ட ஏற்பாட்டின்படி அல்லாஹ்வின் ஆணையைக்கொண் டல்லாது எந்த ஆன்மாவுக்கும் அது மரணமடைவதென்ப தில்லை; (எனவே, இன்னமும் நீங்க ளேன் மரணத்துக்கு அஞ்சுகின்றீர்கள்?) மேலும், எவர் (இந்த) உலகத்தின் நல்ல பிரதிபலனை நாடுகின்றாரோ அவருக்கு அதை அ(ச்சுகத்)தினின்றும் அளிக்கின்றோம்; (இவ்வாறே) இன்னம், எவர் இறுதி (நாளை)யின் நல்ல பிரதிபலனை நாடுகின்றாரோ அவருக்கு அதை (அவர்கள் எதிர்பார்த்த வண்ணம்) அ(ச் சுகத்)தினின்றும் அளிக்கின்றோம்; மேலும் (மெய்யான அருட்கொடைகளுக்கு) நன்றி செலுத்துகின்றவர்களுக்குச் சமீபத்தில் (நாம்) பிரதிபலனை யளிப்போம்.

145. இன்னம், நபியினின்று எத்தனையோ பேர், அவருடன் ரக்ஷகனைச் சார்ந்தவர்களனேகர் (சேர்ந்திருக்க அல்லாஹ்வின் பாதையில்) யுத்தம் செய்தனர்; பின்னர் அல்லாஹ்வின் பாதையில் (யுத்தம் செய்தபோது) அவர்களுக்குக் கிடைத்ததற்காக—(கஷ்ட நஷ்டங்களுக்காக அவர்கள்) தைரிய மிழந்தார்களில்லை; மேலும், பலஹீன மானார்களில்லை; மேலும் (எதிரிகளுக் கெதிரே சிரம் வணங்கித் தாழ்ந்து நின்று) இயலாமையானவர்களா யிருந்தார்க ளில்லை; மேலும், அல்லாஹ் (இப்படிப்பட்ட குணமுடைய) பொறுமையாளரை(யே) நேசிக்கிறான்.

146. இன்னம் (அவர்கள் எப்படிப்பட்ட கஷ்டங்களுக்கும் சங்கடங்களுக்கும் ஆளானவர்களா யிருப்பினும்) அவர்களுடைய வார்த்தை, "எங்கள் ரக்ஷகா! எங்கள் பாபங்களையும், எங்கள் காரியங்களில் நாங்கள் எல்லையைக் கடந்து செய்ததையும்—(அதற்குரிய பாபத்தையும்) எங்களுக்காக மன்னித்து விடுவாய்; மேலும், எங்கள் பாதங்களை (எதிரிகளுக்குமுன்னே பின்வாங்காமல்) உறுதிப்படுத்தி வைப்பாய்; மேலும் (சத்தியத்தை) நிராகரிப்பவர்களான கூட்டத்தின்மீது எங்களுக்கு (நன்மையான ஜயம் பெறுவதற்கான) உதவி செய்(யக் கட)வாய்," என்று அவர்கள் கூறுவது தவிர்த்து (வேறொன்றும் அவர்கள் கூறுவது) இல்லை.

147. (உண்மைப் பக்தர்களின் நிலைமை இப்படிப்பட்டதா யிருந்தது.) ஆதலின், அல்லாஹ் அவர்களுக்கு இவ்வுலக நன்மை யான பிரதிபலனையும், இறுதி (நாளை)யின் நன்மையான பிரதி பலனில் அழகானதையும் அளித்தான்; மேலும், அல்லாஹ் நன்மை செய்பவர்களை(யே) நேசிக்கிறான்.

## பிரிவு — 16

உஹத்யுத்தத்தில் கிடைத்த துரதிருஷ்டங்களுக்குக் காரணம்.

148. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்காள்! (சத்தி யத்தை) நிராகரித்தவர்களாய அவர்களுக்கு வழிபடுவீர்களாயின்—(அவர்கள் வார்த்தைகளை மெய்யென்று நீங்கள் நம்பி, அவற் றினைப் பின்பற்று வீர்களாயின்) உங்களை (உங்கள் நேரான பாதையினின்று விலக்கி) உங்கள் பின்புறமாக(க் கோடிய மார்க் கத்தின் பக்கல்) திருப்பி விடுவார்கள்; எனவே (பின்னர் நீங்கள் அதன் பயனாக) நஷ்டவாளிகளாய் மாறி விடுவீர்கள். (எனவே, ஜாக்ரதையா யிருந்துகொள்ளுங்கள்!)

149. ஆனால் (உண்மையிலே) அல்லாஹ் (வேதான்) உங்க ளுடைய நேயனாய்—(உதவியாளனாய், அதிகாரியாய்) இருக்கிறான்; மேலும், அவன்(தான்) உதவி செய்பவர்களுள் (எல்லாம்) சிறந்தவனா யிருக்கிறான்.

150. (சத்தியத்தை) நிராகரித்தவர்களின் இருதயங்களுள் (உங்கள் சம்பந்தமான) திகிலைச் சமீபத்தில் (நாம்) இடுவோம்; இஃது எற்றுக்கெனின், எதைக் குறித்து (அல்லாஹ் தன்) ஆதா ரத்தை இறக்கவில்லையோ, அதை(யே) அல்லாஹ்வுக்கு இணை யாக்கினார்கள் (என்பதனாலேதான்). மேலும், அவர்களுடைய வாஸஸ்தலம் அக்கினியாயிருக்கிறது. மேலும், அக்கிரமககாரர் களுடைய வாஸஸ்தலம் (மிகக்) கெட்டதாயிருக்கிறது.

151. இன்னம் (அல்லாஹ்வின் நாட்டப்படி உஹதில்) அவனது அனுமதி கொண்டு (விரோதிகளான) அவர்களை நீங்கள் ஸம்ஹரித்துக்கொண் டிருந்தபோது, திட்டமாகவே அல்லாஹ் தன்னுடைய வாக்குறுதியை உங்களுக்கு மெய்ப்பித்து வைத் தான்; ஆனால் (அவ்வமயம்) நீங்கள் பிரியம்வைக்கின்றவர்களா யிருந்த (நல்ல ஜயத்)தை உங்களுக்கு (அல்லாஹ்) காட்டியதற் குப் பின்னே (குறிப்பிடப்பட்ட முறையிலே அபிப்பிராய பேதங் கொண்டு நீங்கள் பல கூட்டமாய்ப்) பிரிந்து போய் (அதைரிய

மடைந்து) விட்டீர்கள்; மேலும் (உங்கள் தலைவராய ரசூலுல்லா வுடைய) தீர்ப்பு விஷயத்தில் உங்களுள் பிணக்கங் கொண்(டுவிட்) டீர்கள்; மேலும் (அவருடைய தீர்ப்புக்கு) நீங்கள் மாறு செய் தீர்கள்; (அதற்குக் கீழ்ப்படியவில்லை. எவ்வாறெனின்) உங்களுள் ளிருந்து (ஒரு) சிலர் (யுத்த களத்தில் கிடைத்த பொருள்களாய) இவ்வுலகத்தை—(இங்குள்ள பொருள்களை நாடினர்; மேலும், உங்களுள்ளிருந்து (வேறு) சிலர் (இவ்வுலகப் பொருள்களைப் பொ ருட்படுத்தாது ரசூலுடைய உத்தரவின் பிரகாரம் குறிப்பிட்ட விடத்திலேயே நின்றுகொண்டு) இறுதிநா(ளின் நன்மைக)ளைநாடி னர்; பின்னர், அல்லாஹ் உங்களைச் சோதிப்பான்வேண்டி (அப ஜயத்தை விரோதிகளான) அவர்களைவிட்டு உங்கள் பக்கல் திருப் பினன்; (எனவே, உங்களுக்குக் கிடைத்த ஜயம் அபஜயமாய் மாறிற்று. விஷயம் இவ்வாறாயிற்றெனினும்) இன்னம் திட்ட மாகவே (அல்லாஹ்) உங்க(ள் குறைபாடுக)ளை மன்னித்துவிட் டான்; அல்லாஹ் நன்னம்பிக்கை கொண்டவர்கள்மீது அருளுடை யவனா யிருக்கிறான்.

152. (உஹுத் யுத்தத்தின் வேளையில்) நீங்கள் (பயந்து கொண்டு) ஒருவரையும் திரும்பியும் பாராமல் விரைந்தோடிக் கொண்டிருந்தீர்கள்; (அதுசமயம் அல்லாஹ்வின்) தூதர் உங்கள் பின்னே யிருந்து (நீங்கள் அங்ஙனம் ஓடவேண்டாமென்று) உங்களை யழைத்துக்கொண் டிருந்தார்; அதன்பின்னே, உங் களுக்கு(க் கிடைத்து)த் தவறிப்போனத(ான பொருள்களி)ன் மீதும், உங்களைச் சாடியத(ான கடுமையான கஷ்டங்களி)ன் மீதும் நீங்கள் துயருறாமல் (அதனால் நீங்கள் நல்ல படிப்பினையைக் கற் றுக் கொண்டு தைரியத்துடன்) இருப்பான் வேண்டி ஒரு துக்கத் திற் கீடாக (மற்றொரு) துக்கத்தை (அல்லாஹ்) உங்களுக்குக் கொடுத்தான்; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதன்மீது நுண் ணிய அறிவுள்ளவனா யிருக்கிறான்.

153. பின்னர் (அல்லாஹ்) உங்களுள்ளிருந்து ஒரு கூட்டத் துக்கு அரை நித்திரை (வந்து) மூடிக்கொண்ட முறையிலே, துக் கத்திற்குப் பிறகு (சிறிது) அமைதியை உங்கள்மீது இறக்கினான்; (அஃதாவது, அந்த அமைதியானது உங்கள் மனத்தின்கண் ணிருந்த அச்சத்தையும் அதைரியத்தையும் அடியோ டில்லாது செய்துவிட்டது.) மேலும் (வேறு) ஒரு கூட்டம் (சம்பந்தப்பட்ட மக்கள்) திட்டமாகத் தங்களைத் தாங்களே கவலைக் குள்ளாக்கிக் கொண்டனர்; (இப்படிப்பட்ட மக்கள் இஸ்லாம் தோன்றுவ தற்கு முன்னுண்டான காலத்தில்) அறியாத்தன்மையின் (கார

ணத்தால் எண்ணிக்கொண்டிருந்த) எண்ண(த்தின் காரண)மாய், (இஸ்லாம் தோன்றியதற்குப் பின்னரும்) அநியாயமானதை அல்லாஹ்வின்மீது (வீண்எண்ணமாக) எண்ணுகின்றனர்; (இப்படிப் பட்ட எண்ணத்தினால்தான், காரியங்கள் புரிவதில் (நன்மையாய் முடிவதிலோ அல்லது நம்மிஷ்டப்படி ஒவ்வொரு காரியத்தையும் சாதித்துக் கொள்வதிலோ) நமக்கென்ன அதிகாரமிருக்கின்றது? எனக் கூறுகின்றனர். (எல்லாம் நடக்கவேண்டிய முறைப்படி நடக்கும்; நாம் பிரயாசைப்பட்டாலென்ன? படாமற் போனாலென்ன? என்கின்றனர். ஆதலின், நபியே! நீர்) சொல்வீராக: "நிச்சயமாகவே சகல அதிகாரமும் அல்லாஹ்வுக் குரியதாகவே யிருக்கின்றது." (ஆயின், ஒவ்வொரு காரியத்துக்கும் சரியான காரணத்தையும், அவன் உண்டு பண்ணியிருக்கிறான் என்பதையும் மறந்துவிட வேண்டாம். ஆனால், இவர்களது உண்மையான விஷய மென்னவெனின்) உமக்கு அவர்கள் வெளிப்படுத்தாததைத் தங்கள் உள்ளங்களுக்குள்ளே மறைத்துக்கொண் டிருக்கின்றனர். (இதனால்தான் அவர்கள்) சொல்லுகிறார்கள்: "(இந்த யுத்தத்தில் ஜயம் பெறுதற்குரிய) ஏதேனும் காரியம் செய்வதில் அதிகாரம் நமக்கிருக்குமாயின், (நாம்) இங்குக் கொல்லப்பட்டிருக்க மாட்டோம்." (ஆனால், ஏ நபியே! நீர்) சொல்வீராக: "நீங்கள் உங்களுடைய விடுதிகளுள் ளிருப்பினும், எவர்மீது கொலை நிர்ணயிக்கப்பட்டு விட்டதோ அவர்கள் தங்களுடைய உறங்கும்—(அஃதாவது, தாங்கள் கொல்லப்படுதற்குரிய) ஸ்தலங்களின் பக்கல் வெளிப்பட்டே விடுவார்கள்; மேலும், அல்லாஹ் (இவ்வாறு ஏன் செய்கின்றானெனின்) உங்களுடைய நெஞ்சங்களுள் ளிருப்பதைப் பரிசோதிப்பான் (வேண்டியும்); உங்களுடைய ஹிருதயங்களிலுள்ள (அசுத்தத்)தை (நீக்கி)ப் பரிசுத்தப் படுத்துவான் (வேண்டியுமேதான் இவ்வண்ணம் செய்கிறான்). மேலும், அல்லாஹ் நெஞ்சங்களிலுள்ள விஷய(ங்களை)த்தை(யும்) அறிகிறவனா யிருக்கிறான்.

154. இரண்டு கூட்ட(மு)ம் (யுத்தத்திற்காகச்) சந்தித்த தினத்தில் உங்களுள்ளிருந்து புறமுதுகு காட்டித் திரும்பிச் சென்றவர்கள் (யாரென நினைக்கின்றீர்கள்? தங்கள் தைரியமற்ற தன்மையால்) தாங்கள் சம்பாதித்த (அஃதாவது, வெருண்டோடிய ஒரு) சிலவற்றைக்கொண்டு ஷைத்தான்தான் நிச்சயமாக அவர்களை (நேரான முறையினின்று) சறுகுமாறு விரும்பினான்; (விஷயம் இவ்வா றாயிற்றெனினும், அவர்களது நன்னம்பிக்கைக் கொன்றும் ஹானி விளைந்துவிடவில்லை. எனவே) இன்னம்,

நிச்சயமாகவே அல்லாஹ் அவர்களை மன்னித்துவிட்டான்; திட்டமாகவே அல்லாஹ் (மிகவும்) மன்னிப்பவனாகவும் (பாபமாய காரியங்களைப்) பொறுத்தருள்பவனாகவும் இருக்கிறான்.

---

## பிரிவு — 17

உஹுத்யுத்தம் முஸ்லிம்களையும் முனாபிக்*களையும்
பாகுபாடு செய்து காண்பிக்கின்றது.

155. ஏ நன்னம்பிக்கை கொண்டவர்களே! (நன்னம்பிக்கை யற்று, சத்தியத்தை) நிராகரித்தவர்களான அவர்களைப் போல (நீங்களும்) ஆய்விடாதீர்கள்; மேலும் (நன்னம்பிக்கை யற்ற அந் நிராகரிப்பாளர்கள் தங்களுடைய சோதரர்கள்) பூமியில் நடந்து பிரயாணஞ் செய்யும்போது, அல்லது அவர்கள் யுத்தம் புரியும்போது தங்களுடைய (அச்) சோதரர்களுக்குச் சொல்லுகின்றனர்: "(யுத்தத்திற்கேனும் பிரயாணத்திற்கேனும் அவர்கள் செல்லாமல்) நங்கள்பால் இருந்தார்களானால் (அவர்கள்) மரணமடைந் திருக்கமாட்டார்கள்; கொல்லப்பட்டவர்களாகவும் போயிருக்க மாட்டார்கள்." (ஆனால், உண்மையிலே அல்லாஹ்வின்மீது நன்னம்பிக்கை கொண்டவர்களுடைய ஹிருதயங்களுள் இப்படிப்பட்ட எண்ணம் ஒருபோதும் உண்டாக மாட்டாது; எனினும்) இ(ப்படிப்பட்ட எண்ணமாய)தை (நன்னம்பிக்கை யற்ற) அவர்களுடைய ஹிருதயங்களில் அதிக கவலையா யிருப்பதற்காக(வே) அல்லாஹ் (இங்ஙனம்) செய்தான்; (இவ்விஷயம் எவ்வாறாயினும், நீங்கள் அஞ்ச வேணும் பின்வாங்க வேணும் கூடாது. என்னெனின்) மேலும், அல்லாஹ்(வேதான் உண்மையிலே) உயிர்ப்பிக்கிறான்; மரணமடையவும் செய்கிறான்; இன்னமும், அல்லாஹ் நீங்கள் செய்வதைப் பார்க்கிறவனா யிருக்கிறான்.

156. இனியும் (கவனியுங்கள்!) அல்லாஹ்வின் பாதையிலே (சத்தியத்தின் பொருட்டு நீங்கள்) கொல்லப்பட்டீர்களானால், அல்லது (சர்வ சாதாரணமாகவே நீங்கள்) மரண மடைந்தீர்களானால் (நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. என்னெனின், நிச்சயமாக) அல்லாஹ்வின்பாலிருந் துண்டாகும் மன்னிப்பும் கருணையும் உண்டு. (மனிதர்களாய) அவர்கள் சேகரிப்பதைக் காட்டினும் (அவை மிகமிகச்) சிறந்தனவா(கவே) யிருக்கின்றன.

---

* முனாபிக் என்பான் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்றாய் நடிக்கும் கள்ள மனிதனாவான்.

157. இன்னமும் (அறிந்து கொள்ளுங்கள்! சாதாரணமாக நீங்கள்) மரணமடை(ந்து விடு)வீர்களானால், அல்லது (அல்லாஹ்வின் பாதையிலே) கொல்லப்ப(ட்)டு (விடு)வீர்களானால் (எங்ஙனமாயினும் நிச்சயமாகவே நீங்களெல்லீரும்) அல்லாஹ்வின் பக்கலே (இறுதி நாளன்று) ஒன்று சேர்க்கப்படுவீர்கள்.

158. ஆகவே (ஏ நபியே! நீர்) அல்லாஹ்வின் மாட்டிருந்துண்டாய கருணையால் அவர்களுக்கு மிருதுவான (குணம் படைத்த வரா யிருக்கின்றீர்; மேலும் (நீர்) கடுமையான (வசனத்தை யுடைய)வராயி, வன்னெஞ்சம் படைத்தவராக இருப்பீராயின் (நன்னம்பிக்கையற்ற அவர்கள் நிச்சயமாகவே) உமக்குச் சுற்றிலுமிருந்து (விலகிக்) கலைந்துபோயிருப்பார்கள்; (இப்பொழுது நம்பக்கல் அவர்களுடைய ஹிருதயங்கள் வசீகரிக்கப்படுவதே போல அப்பொழுது வசீகரிக்கப்பட மாட்டாது.) ஆதலின், அவர்க(ள் உமக்குச் செய்த தீமைக)ளை மன்னித்து விடுவீராக; மேலும், அவர்களுக்கு (மேற்கொண்டு என்னிடம்) மன்னிப்புத் தேடுவீராக; மேலும், (ஒரு) காரியத்தில் அவர்களுடனே கலந்து ஆலோசனை செய்வீராக; ஆகவே (அங்ஙனம் ஆலோசனை செய்ததன்) பின்னர் (ஒரு காரியத்தைச் செய்ய) உறுதியாக எண்ணங்கொள்வீராயின், அல்லாஹ்வின்மீது (முழுப்) பொறுப்பை வை(த்து, அவனிடம் உமது காரியத்தை ஒப்படை)ப்பீராக; நிச்சயமாகவே அல்லாஹ் (தன்மீது) பொறுப்பை வைப்பவர்களை நேசிக்கிறான்.

159. (ஏ சத்தியத்தை ஏற்றுக்கொண்ட உத்தம பக்தர்காள்!) அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானாயின், உங்களை மிகைக்கிறவர் ஒருவரும் இல்லை. மேலும், உங்களை (அல்லாஹ்) கைவிட்டு விடுவானாயின், அவனுக்குப்பின் உங்களுக்கு யாரே உதவி செய்வார்? (எனவே) இன்னம், அல்லாஹ்வின் மீதே (உண்மையிலே) நன்னம்பிக்கை கொண்டவர் பொறுப்பை வைப்பார்கள் (என்பதை உறுதியாக நம்புங்கள்).

160. இன்னம் (கவனிப்பீர்களாக!) மோசம் செய்வ(தென்ப)து நபிக்குப் பொருத்தமான தன்று. (என்னெனின், நபியாயிருப்பவர் மோசக்காரரா யிருக்கமாட்டார்.) இன்னம், எவரேனும் மோசம் செய்வாராயின் (நியாயத்தீர்ப்புக்காக இறுதியிலே எழுந்து) நிற்கும் நாளில் அவர் (எதும் குறித்து) மோசம் செய்த(தைரோ அ)தைக் கொண்டு வருவார். (அவர் அதனை ஆங்கு மறைப்பது ஒரு சிறிதும் முடியாது.) பின்னர் ஒவ்வோர் ஆன்

மாவும் தான் சம்பாதித்ததை—(அதன் பிரதிபலனை)ப் பரிபூரண மாக அளிக்கப்பெறும்; மேலும், அவர்கள் (தங்களுக்குரிய பிரதி பலனைப் பெற்றுக்கொள்ளும் விஷயத்தில்) அநியாயம் புரியப்பட மாட்டார்கள்.

161. ஆகவே, அல்லாஹ்வின் பிரியத்தை—(அதற்குரிய நன்மையான காரியங்களை)ப் பின்பற்றி நடப்பவன் (தன்னுடைய துஷ்கிரியைகளால்) அல்லாஹ்வின் கோபா வேசத்தைப் பெற்று(க்கொண்டு) மேலும் தன்னிருப்பிடத்தை நரகமாகச் செய்து கொண்டவனை போலவா இருக்கிறான்? (இல்லை; நிச்சயமாக இல்லை.) மேலும் (நரகம் பாபிகள் போய்ச்) சேரும் ஸ்தலத்துள் (மிகவுங்) கெட்டதா யிருக்கிறது.

162. அவர்கள் அல்லாஹ்வினிடம் (தங்கள் தங்கள் கிரியை களுக் கேற்பப்) பல படித்தரங்க(ளைப் பெறுபவர்க)ளா யிருக் கிறார்கள். மேலும், அல்லாஹ் அவர்கள் செய்வதைப் பார்க்கிற வனு யிருக்கிறான்.

163. அவர்களுள்ளிருந்து, அவனுடைய அத்தாக்ஷிகளை அவர்களுக்கு ஓதிக் காட்டுகிறவரும், அவர்களைப் பரிசுத்தமாக்கு கிறவரும், அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறவருமான (ஒரு) தூதரை (மூமினை) அவர்கள்பால் அனுப்பியபோது, திட்டமாகவே அல்லாஹ் (அம்) மூமினை வர்கள்மீது பேருதவியே புரிந்தான். எனினும் (மூமினை) அவர் கள் (அல்லாஹ் இவ்வுதவியைச் செய்வதற்கு) முன்னே விளக்க மான வழிக்கேட்டிலே(யே) நிச்சயமாக இருந்தார்கள்.

164. (என்னை! உஹுத் யுத்தத்தின்போது) உங்களுக்குத் துன்பம் நேர்ந்து (உங்களுடைய எதிரிகளுக்கு) அதன் இரண்டு பங்கை—(அத்துணைத் துன்பத்தை) நீங்கள் திட்டமாக நேரும்படி செய்தபோது, "இ(ந்தத் துன்பமான)து எங்கிருந்து வந்தது?" என்று சொல்லத் தலைப்பட்டீர்களா? (இல்லையா? ஆம்! அவ்வாறு சொன்னீர்கள். எனவே, ஏ நபியே! நீர் சொல்வீராக. துன் பம் உங்களுக்கு நேர்ந்தது உண்மையே. ஆனால்) அஃது உங்க ளிடத்திலிருந்தே (அதைரியத்தின் காரணமாய் வந்ததாக) இருக் கிறது; நிச்சயமாகவே அல்லாஹ் சகலவஸ்துக்களின்மீதும் (சர்வ) ஆண்மையுள்ளவனு யிருக்கிறான்.

165. இன்னம் (கவனிப்பீர்களாக!) இரு (சேனைக்) கூட் டங்கள் சந்தித்(து யுத்தம் செய்)த நாளன்று உங்களுக்கு நேர்ந்த (துன்பமான)து அல்லாஹ்வின் அனுமதியின்படியேயாம்; (உண்

மையிலே கஷ்டங்களை யெல்லாம் சகித்துக்கொண்டு நடக்கும்) நன்னம்பிக்கை கொண்டவர்களை அறிந்துகொள்ளுவான்வேண்டியுமே(தான் அத்துன்பம் நேர்ந்தது.)

166. மேலும் (துன்பத்தின்போது சகிப்புத் தன்மையற்ற) நயவஞ்சகம் புரிந்தவர்களை அறிந்து கொள்வதற்காக(வுமேதான் அத்துன்பம் நேர்ந்தது. எவ்வாறெனின்) அல்லாஹ்வின் பாதையிலே (வெளியில்) வந்து (இதுபோது கட்டாயமான) யுத்தம் செய்யுங்கள்; அல்லது (குறைந்த பக்ஷம்) தற்காப்பேனும் செய்ய வாருங்களென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. "(நாங்கள்) யுத்தத்தை (நடாத்த) அறிந்திருப்போமாயின், நிச்சயமாக உங்களைப் பின்பற்றி யிருப்போம்," என்று கூறினார்கள். (எனவே) அவர்கள் (இப்படிப்பட்ட வார்த்தையைக் கூறியதாய) அதுசமயம் நன்னம்பிக்கையைக் காட்டினும் நிராகரிப்புக்கே அதிக சமீபமானவர்களா யிருந்தார்கள். (அதுவேயுமன்றி, நயவஞ்சகர்களான அவர்கள்) தங்களுடைய ஹிருதயங்களுள் இல்லாமலிருப்பதைத் தங்கள் நாக்களால் கூறுகின்றார்கள். மேலும், அவர்கள் (தங்கள் ஹிருதயங்களுள்) மறைத்து வைப்பதை அல்லாஹ் அதிகம் அறிகிறவனா யிருக்கிறான்.

167. தாங்கள் (யுத்தகளத்துக்குச் செல்லாமலே வீட்டில்) அமர்ந்துகொண்டு, தங்கள் சோதரர்களுக்குச் சொன்னார்கள்:— "ந(மது வார்த்தையைக் கேட்டு ந)மக்கு வழிபட்டிருப்பார்களாயின் (வீணே அவர்கள்) கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்." (எனவே, ஏ நபியே! நீர்) சொல்வீராக: "நீங்கள் உண்மையுரைப்பவர்களா யி(ருப்பி)ன், உங்களை விட்டு மரணத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் (பார்ப்போம்! இஃது ஒரு முடியாத காரியமேயாம். மரணம் வந்துவிடுமாயின், அதனைத் தடுத்துக் கொள்வது எவராலும் இயலாது).

168. மேலும் (என்னடியார்காள்!) அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்ட அவர்களை மரணமடைந்தவர்களென்று எண்ணற்க; இல்லை! (அவர்கள்) ஜீவித்திருப்பவர்களா யிருக்கின்றனர்; (இன்னம்) அவர்களுடைய இரக்ஷகனிடத்தில் (இருந்து) இரணமளிக்கப் படுகின்றனர்;

169. (இதுமட்டுமா?) அல்லாஹ் தன் அருளி(ன் கொடையி)னின்று அவர்களுக் களித்ததைக்கொண்டு சந்தோஷமா யிருந்துகொண் டிருக்கின்றனர். மேலும், அவர்களுக்குப் பின்னே (இவ்வுலகத்தி லிருந்துகொண்டு இன்னமும்) அவர்களைச் சந்திக்

காம லிருக்கும் அவர்கள் ஷஹீதாகி* மரணமடைந்த அவர்களி னிமித்தம் சந்தோஷமா யிருக்கின்றனர்; ஏனெனின், (பின் னர்) அவர்களுக்கு (எவ்வித) அச்ச(மு)மில்லை; அவர்கள் (என் றும்) துயருறவு மாட்டார்கள்.

170. (இன்னம், அவர்கள்) அல்லாஹ்வினி(டத்தினி)ன் றுண்டா யிருக்கும் அருட்கொடையைக் கொண்டும் அருளை (யுட்கொண்ட கிருபையை)க் கொண்டும், நன்னம்பிக்கை கொண் டவர்களுடைய பிரதிபலனை அல்லாஹ் விருதாவாக்க மாட்டா னென்பதைக் கொண்டும் சந்தோஷ முடையவர்களா யிருக் கின்றனர்.

---

## பிரிவு — 18

உஹுத் யுத்தத்தால் எதிரிகளுக்கு ஒன்றும் பயன் விளையவில்லை.

171. (முதல் நாள் நிகழ்ந்த உஹுத் யுத்தத்தின்போது) தங் களுக்குக் காயம் பட்ட—(துரதிருஷ்டம் நேரிட்ட) பின்னர், அல் லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதரு(டைய அழைப்பு)க்கும் (அடி பணிந்து) விடைபகர்ந்தவர்கள் (எப்படிப்பட்ட மேன்மையை அடைவார்க ளெனின்) அவர்களுள்ளிருந்து நல்லதாயதைச் செய்து, மேலும் (அல்லாஹ்வுக்கு) அஞ்சி நடந்தவர்களாய் அவர் களுக்குப் பெரிய (நல்ல) பிரதிபலனுண்டு.

172. (இன்னம், அவர்களுடைய நிலைமையைக் கவனியுங் கள்!) "நிச்சயமாகவே மனிதர்கள் உங்களு(டனே யுத்தம் செய் வான் வேண்டி அக்களத்து)க்கு (வந்து குழுமச் சைன்னியங்களை அதிகமாகச்) சேகரித்திருக்கின்றனர். (ஆகவே, நீங்கள் யுத்தத் திற் கென வெளிக்கிளம்ப வேண்டாம்.) ஆதலின், அவர்களுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்," என்று (வேறுசில) மனிதர்கள் அவர் களுக்குச் சொன்னார்கள்; ஆகலான், (மூமின்களுக்கு அச் சத்தை யுண்டுபண்ணுவதற்கிடாக) அவர்களுக்கு (அவ்வார்த்தை) நன்னம்பிக்கையை(யே) அதிகப்படுத்திற்று. (ஆதலால்) மேலும் (மூமின்கள்) சொன்னார்கள்: "அல்லாஹ் எங்களுக்குப் போது மானவ(னா யிருக்கிறா)ன்; மேலும் (எங்களுக்கு அல்லாஹ் ஒரு வனே) மேலான பொறுப்பாளனா யிருக்கிறான்."

173. பின்னர் (மூமின்கள் தைரியத்தைக் கைவிடாது யுத் தத்துக்குச் சென்றார்கள். எனவே, இவர்கள்) அல்லாஹ்வினி (டத்தினி)ன் றுண்டாய அருட்கொடையை (யும், அருள்மயமாய)

* ஷஹீத்—இரத்தசாக்ஷி மரணம்.

நன்மையையும் (பெற்றுக்)கொண்டு திரும்பினார்கள்; (எவ்விதத்) தீமை(யும்) அவர்களைத் தீண்டவில்லை; மேலும் (மூமினான அவர்கள்) அல்லாஹ்வின் திருப்தி(க்குரிய கிரி)யை(யே) பின்பற்றினார்கள்; (இஃதோர் அல்லாஹ்வின் பெரிய உபகாரமாகும்.) மேலும், அல்லாஹ் பெரிய (அருள் அதும்பும்) கொடையாளியாயிருக்கிறான்.

174. இ(வ்வாறு யுத்தத்துக்குச் செல்லவேண்டா மென்று அச்சுறுத்துவதான)து, ஷைத்தான் தன்னுடைய (வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி நடக்கும்) நண்பர்களை(க் கண்டு, நீங்கள் பயப்படவேண்டுமென்று) அச்சுறுத்துகிறான் (என்பதாகவே இருக்கிறது.) ஆகவே (ஷைத்தான்களே போன்ற) அவர்களுக்கு அஞ்சாதீர்கள்; நீங்கள் (உண்மையிலேயே) நன்னம்பிக்கை கொண்டவர்களா யிருப்பின், எனக்கே அஞ்சிக் கொள்ளுங்கள். (பின்னர் இவ்வுலகத்தின் எத்தகைய சக்தியும் உங்களை அசைப்பது முடியாது.)

175. (ஏ நபியே!) இன்னம் (நன்னம்பிக்கையை உதறித் தள்ளும்) நிராகரிப்பின்பால் தீவிரமாகச் செல்லும் அவர்கள் (நிலைமையைக் கண்டு மனந்தளர்ந்து) உம்மைத் துயருறச் செய்ய வேண்டாம்; (என்னெனின்) நிச்சயமாகவே அவர்கள் அல்லாஹ்வுக் கொன்றையும் (அவனுடைய காரியங்களில்) கெடுதி செய்ய மாட்டார்கள். (அவ்வாறு கெடுக்கவும் இயலாது. ஆனால், தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்ளுகின்றனர். எனவே) அல்லாஹ் இறுதி (நாளை)யில் எவ்வித (நன்மையான) பாகத்தையும் அவர்களுக்கு இல்லாமற் செய்துவிட நாடுகிறான்; மேலும், அவர்களுக்குப் பெரிய தண்டனை யுண்டு. (இதுவே அல்லாஹ்வின் சட்டமாகும்.)

176. நன்னம்பிக்கைக் கீடாக நிராகரிப்பைக் கிரயம் பெற்ற அவர்கள், நிச்சயமாக அல்லாஹ்வுக் கொன்றையும் (அவனுடைய காரியங்களில்) கெடுதிசெய்ய மாட்டார்கள். (அவ்வாறு கெடுக்கவும் இயலாது.) மேலும் (நன்னம்பிக்கை யற்று நிராகரித்தவர்கள் தங்கள் துஷ்கிருத்தியத்தை விட்டு நீங்காமல் அப்படியே யிருந்துகொண் டிருப்பார்களாயின்) அவர்களுக்கு நோவினையுண்ட தண்டனையுண்டு.

177. இன்னம் (நன்னம்பிக்கையை) நிராகரித்தவர்க(ளாய அவர்க)ள் (செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம் பிரதி பிரயோஜனத்தை உடனே அளிக்காமல்) அவர்களுக்கு நாம் தாமதம்

கொடுப்பதைத் தங்கள் ஆன்மாக்களுக்கு நன்மையா யிருக்கிற தென்று அவர்கள் எண்ணிவிட வேண்டாம்; (ஆனால், அவர்கள் தங்கள் பாபங்களை விட்டு வெளிப்படாமல் அப்) பாபங்களை அவர்கள் அதிகரித்துக்கொள்ளும் பொருட்டே நாம் அவர்களுக்குத் தாமஸ மளிக்கின்றோம். (ஆதலின்) மேலும், அவர்களுக்கு அவமானம் தரத்தக்க தண்டனையுண்டு.

178. (இதுசமயம் உண்மையிலே நன்னம்பிக்கை கொண்டவர்களும், அவ்வாறு நன்னம்பிக்கை கொள்ளாது நிராகரித்தவர்களும் கலந்தவர்களாகவே யிருக்கிறார்கள்.) அபரிசுத்தத்தைப் பரிசுத்தத்தினின்றும் பிரித்துக்காட்டும் வரை(யேதான் இங்ஙனம் எல்லீரும் ஒன்றுகூடி யிருப்பீர்கள். எனவே) எதன்மீது நீங்கள் (இதுபோது) இருக்கின்றீர்களோ (அதன்மீது) அப்படியே நன்னம்பிக்கை கொண்டவர்க(ளாய நுங்க)ளை அல்லாஹ் விட்டு விடுபவனுயில்லை; மேலும், அல்லாஹ் உங்களுக்கு மறைவான த(ாய விஷயங்களி)ன்மீது (உள்ள இரகசியங்களை) அறிவிப்பவனுகவு மில்லை; ஆனால் (இக்காரியத்தைச் செய்ய) அல்லாஹ் தன்னுடைய தூதர்களுள் தான் நாடியவரை(யே) பொறுக்கி யெடுத்துக் கொள்ளுகிறான்; எனவே (ஏ மானிடர்காள்!) அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர்கள்மீதும் நன்னம்பிக்கை கொள்ளுங்கள்; மேலும், நீங்கள் நன்னம்பிக்கை கொண்டு (அல்லாஹ்வுக்கு உண்மையிலே) அஞ்சி நடந்தீர்களாயின், உங்களுக்குப் பெரியதாய பிரதிபல னுண்டு (என்பதைத் திண்ணமாக எண்ணலாம்).

179. இன்னம், தங்களுக்கு அல்லாஹ் தனது (கொடையாகிய) அருளினின்று அளித்ததை (நன்மையான வழியிலே செலவு செய்யாது), உலோபிகளா யிருக்கும் அவர்கள் அ(வ்வாறு செய்வ)து அவர்களுக்கு நன்மையா யிருக்கிறதென்று எண்ண வேண்டாம்; இல்லை! அஃது அவர்களுக்குத் தீமையா(னதாகவே) யிருக்கின்றது; (இறுதித் தீர்ப்புக்காக எழுந்து) நிற்கும் நாளில், எதை லோபம் செய்தார்களோ அதை(க் கொண்டே அவர்கள்) கழுத்தில் (தண்டனைக்குரிய விலங்காய்) காரையிடப் படுவார்கள்; மேலும், வானுலகங்களி னுடையதும், பூலோகத்தினுடையதுமாய பாத்தியதை (எல்லாம்) அல்லாஹ்வுக் குரியதாகவே யிருக்கிறது; மேலும், அல்லாஹ் நீங்கள் செய்வதன் மீது நுண்ணறிவுடையவனா யிருக்கிறான்.

## பிரிவு — 19

### வேதத்தை யுடையவர்கள் செய்யும் ஏளனம்.

180. "நிச்சயமாக்வே அல்லாஹ் தாரித்திரிய முடையவனு(ய ஏளியானு) யிருக்கிறான்; (இக்காரணத்தால்தான் அவனுக்கு நாம் நம்முதல்களைச் செலவுசெய்ய வேண்டுமென்று ' கோரப்படுகிறோம்;)" மேலும், "நாம் (தாரித்திரிய மற்ற) தனவந்தரா யிருக்கிறோம்," என்று அவர்கள் கூறிய வார்த்தையைத் திட்டமாகவே அல்லாஹ் கேட்டுக்கொண்டான்; (மேற்கண்டவாறு) அவர்கள் சொன்னதையும் (அஃதாவது, அவர்கள் அல்லாஹ்வை ஏளனமிய்ப் பரிஹாஸம் செய்ததையும்) அக்கிரமமாக நபிமார்களை அவர்கள் கொன்றதையும் நாம் வரைந்து வைப்போம்; மேலும் (அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும்: அன்னூர் செய்துள்ள பெரிய பாதகங்களுக்காகவும் பாபங்களுக்காகவும்) "கரிக்கக்கூடிய வேதனையைச் சுவைத்துப் பாருங்கள்!" என்று நாம் (பின்னர்க்) கூறுவோம்.

181. அ(ப்படிப்பட்ட கொடிய தண்டனையான)து உங்களுடைய கரங்கள் முற்படுத்தி (அனுப்பி)வைத்ததன் காரணத்தினாலேயாகும் (என்றே நீங்கள் கொள்ள வேண்டிய திருக்கும்). மேலும், அல்லாஹ் (தான் இங்ஙனம் அதிகமான) அக்கிரமம் அடியார்களுக்கு (அனாவசியமாக)ச் செய்கிறவனுயில்லை யென்னும் காரணத்தினாலுமேதான்.*

182. அக்கினி பக்ஷிக்கின்ற அந்தப் பலியை நம்மிடத்திற்கு அவர் கொண்டுவரும் வரை (எந்தத்) தூதர் மாட்டு(ம்) நாம் நன்னம்பிக்கை கொள்ள வேண்டாமென்று நம்மிடம் அல்லாஹ் நிச்சயமாகவே வாக்குறுதி வாங்கி யிருக்கிறான்," என்று (அவர்களே) சொன்னவர்கள். (எனவே, ஏ நபியே! நீர்) சொல்வீராக: "திட்டமாகவே, நீங்கள் உண்மையுள்ளவர்களா யிருப்பின் (பின்னர் அதுதான் நன்னம்பிக்கை கொள்வதற்கு வேண்டிய நிபந்தனை எனின்) எனக்கு முன்னே (அல்லாஹ்வின் அரிய போதங்கள் நிறைந்த) பிரத்தியக்ஷ பிரமாணங்களைக் கொண்டும், நீங்கள்

* இத்திருவாக்கியத்தின் வாயிலாய் அல்லாஹ்வே தான் நாடியபடியெல்லாம் அக்கிரமம் செய்கிறவனு யில்லை என்பதை விளக்கிக் காட்டி யிருக்கிறான். 180-ஆம் திருவாக்கியத்தில் கண்டபடி அடியார்களிற் சிலர் தகாத வார்த்தைகளையும், ஆகாத கிரியைகளையும் செய்கிறதனுற்றான் தண்டனைக்காளாகின்றனர். இப்படியல்லாமல் அல்லாஹ் பூர்ண ஆண்மையும் சக்தியும் பெற்றவனுயிருந்தும், அடியார்கள்மீது அக்கிரமம் செய்கின்றவனு யில்லை என்பதை இத்திருவாக்கியம் விளக்கிக் காட்டுகிறது.

(இப்பொழுது) சொல்லிய (விதமாகவே பலியின் விஷயத்)தைக் கொண்டும் உங்களிடம்—(உங்கள் பிதாமகர்களிடம்) வந்த தூதர்களாய அவர்களை ஏன் (அக்கிரமமாகக்) கொலைபுரிந்தீர்கள்?"

183. ஆனல் (ஏ நபியே!) உம்மை (இப்படிப்பட்ட மனப்பான்மை யுள்ளவர்கள்) பொய்யாக்குவார்களாயின் (அதிலொன்றும் ஆச்சரியப் படுவதற்கில்லை. என்னென்னின்) உமக்குமுன் துலக்கமான (போதனைக் குரிய) பிரத்தியக்ஷ பிரமாணங்களைக் கொண்டும் (உயரிய உபதேசங்களுக்குரிய) ஏடுகளைக்கொண்டும் (உண்மையான) பிரகாசமான வேதத்தைக்கொண்டும் வந்தவர்களாய (எத்தனையோ) தூதர்கள் (இப்படிப்பட்ட மனப்பான்மையுடையவர்களால்) பொய்யாக்கப் பட்டிருக்கின்றனர். (இதுவே இவர்களுடைய வழக்கமா யிருக்கிறது.)

184. (உண்மையைப் பின்பற்றும் உத்தம அடியார்காள்! உங்கள் ஞாபகத்திலிருக்கட்டும்!) ஒவ்வோர் ஆன்மாவும் (இறுதியில்) மரணத்தைச் சுவைக்கக் கூடியதா(கவே) யிருக்கின்றது; மேலும், உங்களுடைய பிரதிபலனை (நியாயத் தீர்ப்பிற்காக இறுதியில் எழுந்து) நிற்கும் நாளிலேதான் பரிபூரணமாக அளிக்கப் பெறுவீர்கள்; எனவே (அதுசமயம்) அக்கினியை—(நரகத்தின் வேதனையை) விட்டு அகற்றிவைக்கப்பட்டு, இன்னும் உய்யானத்துள் — (சுவர்க்கத்துள்) நுழைவிக்கப்பட்ட அவர் திட்டமாகவே காரியசித்தி—(ஜயம்) பெற்றார்; மேலும் (கேவலமான இந்த)உலகத்தின் ஜீவியம்—(இதற்குரிய சுகபோகங்கள்) ஏமாற்றமான சுக சாமானேயன்றி (வேறொன்றுமாக) இல்லை. (எனவே, இப்படிப்பட்ட சிறிய சுகத்தையே மெய்யானதென்று கொண்டு, பெரிய ஜயத்தைப் புறக்கணித்து விடாதீர்கள்.)

185. (இதுவும் உங்கள் ஞாபகத்தி லிருக்கட்டும்!) உங்கள் முதல்களி(ன் நஷ்டத்தின)லும், உங்கள் ஆன்மாக்களி(ன் அழிவி)லும் பரிசோதிக்கப் படுவீர்கள்; மேலும், உங்களுக்கு முன்னே வேதமளிக்கப்பெற்றவர்க ளி(டத்தி)னின்றும் (இறைவனுக்கு) இணைவைத்தவர்களாய அவர்களி(டத்தி)னின்றும் அதிக (மன) வேதனையான (வார்த்)தை(களை நீங்கள்) நிச்சயமாகச் செவிமடுப்பீர்கள்; இன்னும் (இப்படிப்பட்ட மனக் கஷ்டங்களையும் துன்பங்களையும்) சகிப்பவர்களாகவும் (அல்லாஹ்வுக்கே) அஞ்சி நடப்பவர்களாகவும் இருப்பீர்களாயின், நிச்சயமாகவே அ(ங்ஙனம் நடக்துகொள்வ)து காரியங்களுள் (மஹா) உறுதியானதா யிருக்கின்றது. (இவ்வாறு எல்லாராலும் செய்வது இயலாது.)

186. இன்னம், வேதத்தை யருளப் பெற்றவர்கள்பால், "அ(ந்த வேதத்)தை மனிதர்களுக்கு நீர் விளக்கிக் காட்டவேண்டும்" என்றும், அதை நீங்கள் மறை(த்து வை)க்க வேண்டாம்" என்றும் அல்லாஹ் ஒருசமயம் வாக்குறுதி பெற்றான். (அதைக் கூர்ந்து நோக்குவீர்களாக! ஆகவே, அவர்கள் என் செய்தார்களெனின்) அ(ல்லாஹ்வின் வாக்குறுதியாய அ)தனைத் தங்கள் முதுகுக்குப்பின்னே எறிந்துவிட்டார்கள்; இன்னம், அ(ந்)த (வேத உபதேசத்தி)ற் கீடாகச் சிறிது பொருளை(யே) கிரயமாகப் பெற்றுக்கொண்டார்கள்; எனவே, கெட்டதே அவர்கள் கிரயம் பெற்றுக்கொண்டதா யிருக்கிறது!

187. (ஏ நபியே! இங்கே நீா கவனிப்பீராக! ஒரு சில மனிதர்கள்) தாங்கள் செய்த (தீயதாய)தைக் கொண்டு சந்தோஷப் படுகின்றார்கள். நிச்சயமாக (அஃது ஓர் உண்மையான குதூகலமென்று) நீர் எண்ணவேண்டாம்; இன்னம், (அவர்கள்) தாங்கள் செய்யாததைக் கொண்டு (உலக மக்களால் வீணே) அவர்கள் புகழப்பட வேண்டுமென்று(ம்) பிரியப்படுகின்றனர்; ஆகவே (இப்படிப்பட்ட வீண் பெருமைக்காரர்களாய்) அவர்களை வேதனையினின்றும் (நீங்கி) ஜயம் பெற்றவரென்று நிச்சயமாகவே நீர் எண்ணவேண்டாம்; மேலும், அவர்களுக்கு நோவுண்ட தண்டனையுண்டு.

188. இன்னம், வானுலகங்களி னுடையதும் பூலோகத்தினுடையது மாகிய அரசாட்சி அல்லாஹ்வுக்கே உரித்தாக விருக்கின்றது; மேலும், அல்லாஹ் சகல வஸ்துக்களின்மீதும் (சம்பூர்ண) ஆண்மை பெற்றவனா யிருக்கிறான்.

## பிரிவு — 20

நன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு இறுதியிலே வெற்றி.

189. (மகா) நிச்சயமாகவே வானங்களையும் பூமியையும் சிருஷ்டி செய்ததிலும், இரவையும் பகலையும் மாறுபட்டு வரச் செய்ததிலும் (மெய்யான இறைவனை அறிந்துகொள்ளப் பிரயத்தனப்படும்) அறிஞர்களுக்கு (அனேக) அத்தாக்ஷிக ளிருக்கின்றன;

190. அவர்கள் (எப்படிப்பட்டவர்களெனின், தாங்கள் எந்நிலையி லிருப்பினும் தங்கள்ரக்ஷகனாய அல்லாஹ்வை மறக்கவே மாட்டார்கள். ஆதலின்) நிலையாக (நின்றவண்ணமாக)வும் உட்

காந்து (இருந்தவண்ணமாகவு)ம் (சிரஞ்சாய்த்துத்) தங்கள் விலாப் புறங்களின்மீது (படுத்த வண்ணமாகவு)ம் அல்லாஹ்வைத் தியானம் செய்(து வணக்கம் புரி)கின்றனர்; மேலும் (அவர்கள் உயரிய வழக்கத்திற்கேற்ப) வானங்களினுடையதும் பூமியினுடையதுமாய சிருஷ்டி(ப் பொருள்கள் எத்துணை ஆச்சரியகரமானவையாயிருக்கின்றன வென்னும்) விஷயத்தில் (அதிகமதிகம்) சிந்தனை செய்கின்றார்கள்; (இவ்வாறு இவர்கள் சிந்திக்கும்போது மஹா ஆச்சரியத்துடனே மொழிகின்றார்கள்:) "ஏ எங்கள் ரக்ஷகா! இ(த்துணை அபாரமான)தை (நீ) வீணே சிருஷ்டித்தாயில்லை. (இதற்கு ஏதேனும் ஆழிய கருத்து இருக்கத்தான் வேண்டும். அவ்வாறில்லாது இவைகளை யெல்லாம் எவ்வித உயரிய தாத்பரியமு மில்லாமல் வீணே சிருஷ்டிப்பதினின்றும்) நீ பரிசுத்தமானவனா யிருக்கின்றாய்; எனவே, அக்கினியின் வேதனையை விட்டு எங்களைக் காப்பாற்றி வைப்பாய்.

191. "எங்கள் ரக்ஷகா! (நீ) யாரை (நரகத்தின்) நெருப்புள் நுழைத்தனையோ அவனை நிச்சயமாகவே (நீ) அவமானப் படுத்தி(க் கேவலமாக்கி) விட்டாய்; மேலும் (பாபங்களைச் செய்த) அநியாயக்காரர்களுக்கு உதவியாளர் யாருமில்லை.

192. "எங்கள் ரக்ஷகா! (எங்களை நோக்கி) 'உங்கள் ரக்ஷகனைக் கொண்டு நன்னம்பிக்கை கொள்ளுங்கள்!' என்று (அந்) நன்னம்பிக்கையின் பக்கல் அழைத்தவ(ராய உண்மைத் தூத)ரின் அழைப்பை நாங்கள் நிச்சயமாகவே செவிமடுத்தோம்; எனவே (நாங்கள் அவருடைய சத்திய அழைப்புக் கிணங்கி உண்மையெனக் கொண்டு உன்மீது) நன்னம்பிக்கை கொண்டு விட்டோம்; எங்கள் ரக்ஷகா! ஆகவே, எங்களுடைய பாபங்களை எங்களுக்குப் பொறுத்தருள்வாய்! மேலும், எங்களை விட்டு எங்கள் தீமைகளை (அப்புறப்படுத்தி) அழித்து விடுவாய்! இன்னம், நேர்மையானவர்களுடனே எம்மை மரணமடையச் செய்(து, அன்னாருடனே சேர்த்துவை)வ(ப்ப)ாய்!

193. "எங்கள் ரக்ஷகா! இன்னம் உன்னுடைய தூதர்கள் வாயிலாக எங்களுக்கு நீ வாக்குறுதி செய்த (சுவன பதியின் சுகத்)தை எங்களுக் களித்தருள்வாய்! (தீர்ப்புக்காக எழுந்து) நிற்கும் (இறுதி) நாளில் எங்களை அவமானப் படுத்தாதிருப்பாய்! நிச்சயமாகவே நீ (உன்) வாக்குறுதிக்கு மாற்றம் செய்ய மாட்டாய்."

194. எனவே (அறிஞர்களும் உண்மை அடியார்களும் இங்ஙனம் அதிகம் அல்லாஹ்வின்பால் இறைஞ்சி வேண்டிக் கொண்டதனால்) அவர்களுடைய ரக்ஷகன் அவர்க(ளுடைய வேண்டுகோ)ளை ஏற்றுக்கொண்டான்; (ஆகவோன், அல்லாஹ் சொன்னான்:) “உங்களுள்ளிருந்து ஆணேயாயினும் பெண்ணே யாயினும் (அவர் எவராயிருப்பினும் நன்மை) செய்தவரின் செய்கையை (அதற்குரிய நன்மையான பிரதிபலனை யளிக்காது) நான் வீணாக்கமாட்டேன்; (மானிட வர்க்கமானது நன்மை தீமையான காரியங்களைச் செய்யும் விஷயத்தில் ஒன்றாகவே யிருந்துவருகின்ற தாதலின்) உங்களுள் சிலர் (வேறு) சிலரி(டத்தி)லிருந்து உண்டாகி யிருக்கின்றீர்கள்; ஆதலால் (அல்லாஹ்வின் பாதையிலே தங்க ளிருப்பிடத்தைத் துறந்து) வெறுத்துச் சென்றவர்களும், தங்கள் இல்லங்களினின்றும் (அக்கிரமமாக) வெளிப்படுத்தப் பட்டவர்களும், என்னுடைய பாதையிலே இம்சிக்கப்பட்டவர்களும், (என் நிமித்தம்) யுத்தம்புரிந்தவர்களும் (யுத்தத்தின் போது) கொல்லப்பட்டவர்களுமாய அவர்களை விட்டு அவர்களின் தீமை(யான பாபங்)களை நிச்சயமாகவே நான் (அப்புறப்படுத்தி) அழித்து விடுவேன்; இன்னம், மெய்யாகவே, அவற்றின் கீழே நீரருவிகள் ஓடுகின்ற உத்தியான வனங்களுள்(ளே) அவர்களை நுழையுமாறு (நான்) செய்வேன்; (இவ்வண்ணமாய மேன்மையை அவர்கள் தங்கள்) அல்லாஹ்விடத்திருந்து (பெரும்) பிரதிபலனாக (அடைவார்கள்); மேலும், அல்லாஹ்வி னிடத்திலேயே பிரதிபலனுள் (மிக்க) அழகாயது உண்டு.

195. (ஏ நபியே! பற்பல) நகரங்களில் (சத்தியத்தை) நிராகரித்தவர்கள் (சுகமாகவும் ஜயத்துடனும் அரசியல் அதிகாரத்துடனும்) சுற்றித்திரிவது உம்மை ஏமாற்றத்துள் ளாக்கிவிட வேண்டாம்.

196. (என்னெனின், அவர்கள் பற்றிக்கொண்டிருக்கும் இச்செல்வாக்கின் அனுபவம்) சிறிது (கால) சுகானுபவமே! பின்னர் அவர்களுடைய ஒதுங்கும் ஸ்தலம் (இறுதி நாளின் போது) நரகமாயிருக்கின்றது (என்பதை மறந்து கிடக்கின்றார்கள்). இன்னம் (நரகமென்னும் அந்த) இடம் கெட்டதாயிருக்கிறது.

197. ஆனால், தங்கள் ரக்ஷகனுக்கு அஞ்சி நடந்(து நற்கிரியை புரிந்)தவர்களான அவர்களுக்கு, அவற்றின் கீழே நீரருவிகள் ஓடுகின்ற உத்தியான வனங்களுண்டு; அல்லாஹ்வி

னின் றுண்டாய (மேலான) தங்கும் ஸ்தலமாய அதிலே(யே அவர்கள்) நிலைத்திருப்பார்கள்; மேலும், அல்லாஹ்வினிடத் திருப்பது (நன்மையைப் புரியும்) நேர்மையானவர்களுக்கு (நன்மையானதாய்ச்) சிறந்ததா யிருக்கின்றது.

198. இன்னம், நிச்சயமாக, வேதத்தை யருளப்பெற்றவர்களுள், அல்லாஹ்வின் மீதும், உங்கள்பால் இறக்கிவைக்கப்பட்டதன் மீதும், (வேதத்தை யுடையவர்களான) அவர்கள் பால் இறக்கிவைக்கப்பட்டதன் மீதும் நன்னம்பிக்கை கொண்டுள்ளவர்கள் — அல்லாஹ்வுக்கு (அஞ்சி) அடிபணிகிறவர்கள் உளர்; (அவர்கள்) அல்லாஹ்வின் அத்தாக்ஷிகளுக் கீடாக (ஒரு) சிறிய தொகையைக் கிரயம் வாங்காதவர்கள்; (இப்படிப்பட்ட) அவர்களுக்கேதாம் தங்களுடைய ரக்ஷகன்மாட்டுத் தங்களுடைய (நன்மையும் மேன்மையுமாய) பிரதிபலனுண்டு. (இது தாமதமாக நடைபெறுமென் றெண்ணற்க!) நிச்சயமாகவே அல்லாஹ் கணக்கி(ன் விசாரணையி)ல் தீவிரமானவனா யிருக்கிறான்.

199. ஏ நன்னம்பிக்கைகொண்டவர்காள்! (நீங்கள் பரிபூரண ஜயத்துக்குரிய மேன்மையை யடையவேண்டுமாயின், சகல காரியங்களுக்கும் மூலமா யிருந்துவரும் ஒருசில காரியங்களை அத்தியாவசியமாகச் செய்து முடித்தல் வேண்டும். அவையாவன: நன்மையான வழியிலே எப்படிப்பட்ட கஷ்ட நஷ்டங்கள் வந்து நேர்ந்தபோதினும்) பொறுமையா யிருங்கள்; இன்னம் (இதனை உங்கள் மட்டில் வைத்துக்கொள்ளாது) ஒருவருக்கொருவர் பொறுமை(யை அமலில் செய்து) காட்டுங்கள்; இன்னம் (நீங்கள் பிரிந்துபோகாமல் ஒரு சேரக்) கட்டுப்பாடாயிருங்கள்; இன்னம் (நீங்கள் எண்ணிய வண்ணம்) ஜயம் பெறுகிறவர்களாக நீங்க ளாகும்பொருட்டு அல்லாஹ்வுக்கே அஞ்சி (அவன் சத்திய போதனைகளின்படியே) நடந்துகொள்ளக் கடவீர்களாக.

The Guardian Press, 21, Anderson Street, Madras.—9-1-1938.